ICC WORLD TWENTY20 SRI LANKA 2012
நியூஸிலாந்து | இங்கிலாந்து
பாகிஸ்தான் | இந்தியா
பல்லேகல பிற்பகல் 3.30 | பிரேமதாஸ இரவு 7.30
உதயனின் தினம் ஒரு பரிசு பக்கம் 18

# உதயன்

www.onlineuthayan.com

60: பக்கங்கள் சுடர் 27 கதிர் 302 வள்ளுவர் ஆண்டு 2043 புரட்டாதி 07 ஞாயிற்றுக்கிழமை (23/09/2012) UTHAYAN - A Lively National Tamil Daily விலை ரூபா 30.00

## உள்ளக அறிக்கையை தயாரித்தது ஐ.நா.

கொழும்பு,செப் 23
இலங்கைக்குப் பயணம் செய்துள்ள ஐ.நா மனித உரிமைகள் சபை ஆணையாளரின் பிரதிநிதிகள், இலங்கை தொடர்பிலான உள்ளக அறிக்கை ஒன்றைத் தயாரித்துள்ளனர்.இலங்கை வெளியுறவுத் துறை அமைச்சின் பேச்சாளர் ஒருவர் இதனை தெரிவித்தார்.
இந்த அறிக்கை ஐக்கிய நாடுகள் சபைக்கு மட்டுப்படுத்தப்பட்ட ஒன்று என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
மனித உரிமைகள் பிரதிநிதிகள் இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு பயணம் மேற்கொண்டிருந்தமை
பார்க்க பக்கம் 4

# ஐ.நா. பொதுச் சபையில் இலங்கைக்குக் கண்டம்

## பிரிட்டனின் ஆதரவுடன் மற்றொரு தீர்மானம் நிறைவேறும் சாத்தியம்

ஜெனிவா,செப்ரெம்பர் 23
ஐ.நா. பொதுச்சபையின் 67ஆவது கூட்டத் தொடரில், இலங்கைக்கு எதிரான மனித உரிமைகள் தீர்மானம் ஒன்றைக் கொண்டு வருவதற்கான முயற்சிகள் தீவிரமாக இடம் பெறுவதாக இராஜதந்திர வட்டாரங்களை மேற்கோள்காட்டித் தகவல்கள் வெளியாகியுள்ளன. பிரிட்டனின் ஆதரவுடனேயே இந்தத் தீர்மானம் கொண்டு வரப்படவுள்ளதாகவும் அந்தத் தகவல்கள் கூறுகின்றன.

**பொதுச் சபைக் கூட்டத்தின் ஒரு பகுதியாக நடைபெறும் மனித உரிமைகள் கூட்டத்தின் மூன்றாவது அமர்விலேயே இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்து நிறைவேற்ற முயற்சிகள் நடப்பதாகத் தெரியவந்துள்ளது.**

ஐ.நா. பொதுச் சபையின் 67ஆவது கூட்டத் தொடர் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகி எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 19ஆம் திகதி முடிவடைகிறது.இந்தக் கூட்டத் தொடரிலேயே இலங்கையின் மனித உரிமை விவகாரம் பற்றிய தீர்மானம் ஒன்றைக் கொண்டுவ்ரும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்
பார்க்க பக்கம் 4

## கூட்டமைப்புடன் நேர்மையான பேச்சுக்களை ஆரம்பியுங்கள்

### மஹிந்தவிடம் இந்தியா வலியுறுத்து

புதுடில்லி,செப் 23
தமிழ் தேசியக் கூட்டமைப்புடனான பேச்சுக்களை நேர்மையுடன் மீண்டும் ஆரம்பிக்க வேண்டும் என்பதையே இந்திய அரசு விரும்புவதாக தெரிவிக்கப்படுகிறது.
ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பிரதமர் மன்மோகன் சிங்கைச் சந்தித்த போது, இது தொடர்பில் வலியுறுத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.
தமிழ் மக்கள் தொடர்பில் பொறுப்புக் கூறக்கூடிய கட்சியாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு காணப்படுகிறது. இந்த நிலையில் கூட்டமைப்புடன் நேர்மையான பேச்சுக்களை நடத்துவதன் ஊடாகவே இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு
பார்க்க பக்கம் 4

# வடக்கு - கிழக்கில் 85,000 படையினர்

## 'இந்து' ஊடகம் தகவல்

புதுடில்லி,செப் 23
இலங்கை இராணுவப் பிரிவு ஒன்றில் 6000 தொடக்கம் 7000 வரையான இராணுவத்தினர் காணப்படுகின்றனர். இதன்படி குறைந்தது 85ஆயிரம் முதல் 86 ஆயிரம் இராணுவத்தினர் இலங்கையின் வடக்கு-கிழக்கில் முகாமிட்டுள்ளனர் என மதிப்பிட முடியும். இதில் இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள அதிரடிப் படை மற்றும் கடற்படை, விமானப்படை உள்ளடக்கப்படவில்லை.
இவ்வாறு நிருபாமா சுப்பிரமணியன் இந்தியாவில் இருந்து வெளியாகும் 'இந்து' ஊடகத்தில் எழுதியுள்ள செய்திக்கட்டுரையில் தெரிவித்துள்ளார்.
அதன் முழு விவரம் வருமாறு:-
தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட போரானது நிறைவடைந்து மூன்று ஆண்டுகள் கடந்த நிலையில், தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழும் இலங்கையின் வடக்கு-கிழக்கில் இலங்கை இராணுவத்தின் 19 பிரிவுகளில்
பார்க்க பக்கம் 4

**2** யாழ்ப்பாணம், வவுனியா மாவட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட முதியவர்களுக்கான பொதுசன மாதாந்தக் கொடுப்பனவு வழங்கும் நிகழ்வு அந்தந்த மாவட்டங்களில் நடைபெற்றன.

**5** மஹிந்த ராஜபக்ஷவின் கவர்ச்சியில் தமிழ் மக்களை மட்டுமன்றி முஸ்லிம் மக்களையும் ஏமாற்றித்தன்னையும் ஏமாற்றி மயங்கிப் போயுள்ளார் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம்.

**17** கொழும்பு என்.சி.சி. அக்கடமி அணிக்கும், யாழ்.இந்துக் கல்லூரி அணிக்கும் இடையிலான 25 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் ஆட்டமொன்றில் யாழ்.இந்துக் கல்லூரி அணி 61 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

## பூநகரியில் 1452 ஏக்கரை விழுங்குகிறது படைத்தரப்பு

கிளிநொச்சி,செப்.22
கிளிநொச்சி பூநகரிப் பிரதேசத்தில் 1452 ஏக்கர் நிரலப்பரப்பை அதாவது பூநகரியின் நிலப்பரப்பின் நான்கில் ஒரு பகுதியை ஆக்கிரமிப்பதற்கான முயற்சிகளை இராணுவம் மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.
கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரிப் பிரதேசத்தில் உள்ள 18 கிராம அலுவலர் பிரிவுகளிலும் உள்ள 42 கிராமங்களிலும் ஆங்காங்கே நிலை கொண்டுள்ள இராணுவத்தினரின் பாவனைக்கு பூநகரிப் பகுதியில் 1452 ஏக்கர் நிலப்பரப்பை உரித்தாகுமாறு படைத் தலைமையகம் கோரிக்கை விடுத்து வருகின்றது. இந்த நிலப் பகுதியானது பூநகரியின் மொத்த நிலப்பரப்பில் நான்கில் ஒரு பகுதியாக உள்ளது.
பார்க்க பக்கம் 4

## முக்கிய மருந்து வகைகளுக்கு தட்டுப்பாடு

கொழும்பு,செப் 23
அரச வைத்தியசாலைகளிலும் அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்திலும் முக்கிய மருந்துகளுக்குத் தட்டுப்பாடு நிலவுவதாக அகில இலங்கை சுகாதார சேவைச் சங்கம் தெரிவித்துள்ளது.
இதய நோய், காக்கை வலி,
பார்க்க பக்கம் 4

## ஜனநாயகமும் சட்டமும் இலங்கையில் சீர்குலைவு

### தயாசிறி குற்றச்சாட்டு

கொழும்பு,செப் 23
மாலக்க சில்வாவினால் இராணுவ மேஜர் ஒருவர் தாக்கப்பட்டதாகக் கூறப்படும் விவகாரமானது நாட்டின் ஜனநாயகமும் சட்டத்தின் ஆட்சியும் சீரழிந்துள்ளமைக்குத் தெளிவான அறிகுறியாகும் என ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர கூறியுள்ளார்.
''நபர் ஒருவரை அமைச்சர் மேர்வின் சில்வா மரத்தில் கட்டியமை, துமிந்த சில்வா மற்றும் பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திர விவகாரம்,
பார்க்க பக்கம் 4

## இலங்கை திரும்பும் தமிழ் அகதிகள் பாகிஸ்தான் புலனாய்வுப் பிரிவில்

### இந்தியா பற்றிய தகவல்களைத் திரட்ட

புதுடில்லி,செப் 23
போர் முடிவுக்கு வந்த பின்னர் இலங்கைக்குத் திரும்பும் தமிழ் அகதிகளை, பாகிஸ்தானின் ஐ.எஸ்.ஐ. புலனாய்வுப் பிரிவின் முகவர்கள் ஆட்சேர்ப்புச் செய்வதற்குத் தீவிரமாக முயற்சிப்பதாக, தமிழக அரசின் புலனாய்வுச் சேவை, இந்தியாவின் மத்திய புலனாய்வுப் பிரிவுக்குத் தகவல் அனுப்பியுள்ளது.
ரைம்ஸ் ஒவ் இந்தியா இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.
ஐ.எஸ்.ஐயுடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தில் தஞ்சாவூரைச் சேர்ந்த தமீம்
பார்க்க பக்கம் 4

# மனிக்பாமில் எஞ்சியுள்ள மக்களை வற்றாப்பளையில் குடியமர்த்த திட்டம்

## சொந்த மண் பறிபோகுமா என ஏங்கும் குடும்பங்கள்

யாழ்ப்பாணம், செப்.23
வவுனியா மனிக்பாம் முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ள எஞ்சியுள்ள குடும்பங்களை முல்லைத்தீவில் வேறு இடங்களில் தற்காலிகமாக குடியமர்த்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நேற்று முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் மற்றும் இராணுவ அதிகாரிகள் மனிக்பாம் முகாமுக்குச் சென்று குறித்த மக்களுடன் கலந்துரையாடி இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.
இதன்படி நாளை திங்கட்கிழமை இந்த மக்கள் வற்றாப்பளை மகாவித்தியாலயத்துக்கு அழைத்துச்செல்லப்பட்டு அங்கு விசேடமாக அமைக்கப்படும் முகாமில் இரண்டு மாதங்களுக்கு தங்க வைக்கப்பட்டு அதன் பின்னர் அவர்களது சொந்த இடத்தில் குடியமர நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என நேற்று முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் தம்மிடம் உறுதி அளித்துள்ளதாக மனிக்பாம் முகாமில் தங்கியுள்ள கேப்பாபுலவைச் சேர்ந்த மக்கள் உதயனிடம் தெரிவித்தனர்.
இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த முகாம் மக்கள் 'நாங்கள் குறிப்பிட்ட சிலரே
பார்க்க பக்கம் 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரவிப் பாஞ்சானில் மக்கள் குடியமர முடியாத நிலை

கிளிநொச்சி, செப்.23

கிளிநொச்சி பரவிப்பாஞ்சான் காணிகளை மீளக்குடியேறுவதற்கு வழங்க முடியாது என்றும் இப்பகுதி மக்களை வேறு இடங்களுக்கு குடியேறுமாறும் இராணுவமும் கரைச்சிப் பிரதேச செயலாளரும் கட்டாயப்படுத்தி வருவதாக இப் பகுதிகளைச் சேர்ந்த குடும்பங்கள் தெரிவித்துள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சிப் பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் உள்ள பரவிப்பஞ்சான், மருதநகர் கிழக்கு ஆகிய பகுதிகளில் சுமார் 156 குடும்பங்களுக்குச் சொந்தமான 442 ஏக்கர் நிலப்பரப்பை இராணுவம் ஆக்கிரமித்து வைத்துக் கொண்டு அப் பகுதி மக்கள் மீளக்குடியமர்வதை தடுத்து வருவதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

பரவிப்பஞ்சான் பகுதியில் 412 ஏக்கர் நிலப் பகுதியிலும் மருதநகர் கிழக்கு பகுதியில் 30 ஏக்கர் காணிகளிலும் மீளக்குடியேற வேண்டிய சுமார் 156 குடும்பங்களில் 107 குடும்பங்கள் செட்டிக்குளம் மனிக்பாம் நலன்புரி நிலையத்திலும் ஏனையவர்கள் தொழில்களின் நிமிர்த்தம் உறவினர், நண்பர்களின் வீடுகளிலும் பெரும் சிரமங்களுடன் வாழ்ந்து வருவதுடன் தம்மை தமது சொந்தக் காணிகளில் மீளக்குடியேற அனுமதிக்குமாறும் கோரி வருகின்றனர். இந்த நிலையில் மேற்படி வீடுகளிலும் இராணுவத்தினர் 58 ஆவது, 57 ஆவது படையணிகள் இருந்து வருகின்றன.

மேற்படி இப்பகுதி மக்களை குறித்த காணிகளில் மீளக்குடியேற இராணுவம் அனுமதிக்காததுடன் அந்தக் காணிகள் இராணுவத் தேவைகளுக்கே ஒதுக்கப்பட்டுள்ளன என்றும் கூறப்படுகிறது.

இதேவேளை கரைச்சிப் பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரன் கனகபுரத்தில் உள்ள நலன்புரிநிலையத்திற்குச் சென்று அங்கே உள்ள ஏழு குடும்பங்களைச் சந்தித்து தங்களுக்கு மேலிடத்து உத்தரவு மற்றும் அழுத்தம் காரணமாக நலன்புரி நிலையம் எதனையும் நடத்த முடியாது. எனவே இங்கிருந்து வெளியேற வேண்டும் என்றும் உங்களுக்கு பரவிப்பஞ்சான் காணிக்கு மாற்றீடாக அறிவியல் நகர்ப் பகுதியில் , இரண்டு பரப்பு காணியைத் தருவதாகக் கூறியுள்ளார் என்றும் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை தம்மை இராணுவமும் நலன்புரி நிலையத்தில் இருக்க முடியாது எனவும் உடனடியாக வெளியேறுமாறும் கூறியதாகவும் அந்த மக்கள் கூறினர்.

இந்த நிலையில் பரவிப்பஞ்சான் மற்றும் மருதநகர் பகுதிகளில் கடந்த 1939 ஆம் ஆண்டு தாங்கள் அரச காணியளிப்புச் சட்டத்தின் கீழ் குடியேறியதாகவும் தற்போது தமக்கு வழங்கப்பட்ட உரிமை மறுப்புத் தொடர்பாக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப் போவதாகவும் அந்த மக்கள் மேலும் கூறியுள்ளனர். (த-6)

# சட்டவிரோத படகுச் சேவை நடத்திய இலங்கையர் கைது

கொழும்பு,செப் 23

தலைமன்னாருக்கும் தமிழ் நாட்டின் இராமநாதபுர மாவட்டத்திலுள்ள மண்டபம் பகுதிக்கும் இடையில் சட்டவிரோத படகுச் சேவையை நடத்திய குற்றச்சாட்டில் இலங்கையர் ஒருவர், இந்தியாவின் தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் இந்திய கரையோரப் பாதுகாப்புப் பொலிஸ் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இலங்கையைச் சேர்ந்த 28 வயதுடைய சுரேஷ் என்ற நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். (த)

# முதியோர்களுக்கான உதவு தொகைக் கொடுப்பனவு வவுனியா, யாழ்ப்பாணத்தில் நேற்று ஆரம்ப நிகழ்வு

## சமூகசேவைகள் அமைச்சர் தலைமையில்



வவுனியா, செப்.23

யாழ்ப்பாணம், வவுனியா மாவட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட முதியவர்களுக்கான பொதுசன மாதாந்தக் கொடுப்பனவு வழங்கும் நிகழ்வு அந்தந்த மாவட்டங்களில் நடைபெற்றன. இதில் சமூக சேவைகள் அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா கலந்து கொண்டு முதியவர்களுக்கான கொடுப்பனவுகான வங்கிக் கணக்குப் புத்தகத்தை வழங்கி வைத்தார்.

வவுனியாவில் முதியோர்களுக்கான ஆயிரம் ரூபா வழங்கும் செயற்றிட்டத்தின் ஆரம்ப நிகழ்வு நேற்று வவுனியா தெற்குப் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

வவுனியா மாவட்ட அரச அதிபர் பந்துல ஹரிச்சந்திரு தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் சமூக சேவைகள் அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா முதியவர்களுக்கான கொடுப்பனவுகளுக்கான வங்கிப் புத்தகங்களைக் கையளித்தார்.

வவுனியா மாவட்டத்தில் ஆயிரம் ரூபா கொடுப்பனவு பெறுவதற்கு சுமார் 165 ஆயிரத்து 650 பேர் தகுதி பெற்றிருந்தனர். அவர்களில் முதற்கட்டமாக ஆயிரத்து 495 பேருக்கு கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன.

இதில் செட்டிக்குளம் பிரதேச செயலகப் பிரிவில் 253 பேரும் வவுனியா வடக்குப் பிரதேச செயலகப் பிரிவில் 150 பேரும் வவுனியா தெற்குப் பிரதேச செயலர் பிரிவில் இருந்து 250 பேரும் வவுனியா நகர பிரதேச செயலர் பிரிவில் 707 பேரும் இக் கொடுப்பனவைப் பெற தகுதி பெற்றிருந்தனர்.

இந்த சம்பிரதாய பூர்வ நிகழ்வில் சமூக சேவைகள் அமைச்சினால் செயலாளர் திருமதி இமெல்டா சுகுமார், வவுனியா தெற்குப் பிரதேச செயலர் அ.பரந்தாமன், வவுனியா மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர் எஸ். ஸ்ரீநிவாசன் உட்பட பலரும் கலந்துகொண்டனர்.

யாழ். மாவட்டத்தின் 70 வயதுக்கு மேற்பட்ட முதியவர்களுக்கான பொதுசன மாதாந்த உதவித் தொகை வழங்கும் நிகழ்வு தென்மராட்சி பிரதேச செயலகத்தில் நேற்று நடைபெற்றது. தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி எஸ்.சாந்தசீலன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் சமூக சேவைகள் அமைச்சர் பீரிக்ஸ் பெரேரா, அதன் செயலாளர் திருமதி இமெல்டா சுகுமார், நாடாளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரி அலென்ரின், யாழ். அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் மற்றும் அனைத்து பிரதேச செயலர்களும் கலந்துகொண்டனர்.

ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலும் தெரிவு செய்யப்பட்ட முதியோர்களுக்கான உதவுதொகை கொடுப்பனவுக்கான கணக்குப் புத்தகங்கள் அந்தந்த பிரதேச செயலர்களிடம் இதன்போது கையளிக்கப்பட்டன.

கணக்குப் புத்தகத்திலிருந்து முதியவர்கள் இன்றிலிருந்து தத்தமது பிரிவு அஞ்சல் அலுவலகங்கள் மற்றும் தேசிய சேமிப்பு வங்கி என்பவற்றில் பெற்றுக்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டது. (10-400-9-131)

## இலங்கை நிர்வாக சேவைக்கு 300 பேர்

இலங்கை நிர்வாக சேவைக்குப் புதிதாக 300 உத்தியோகத்தர்களை இணைத்துக் கொள்ளத் தீர்மானித்துள்ளதாக அரச நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

2010ஆம் ஆண்டு இடம்பெற்ற நிர்வாக சேவைப் பரீட்சையில் சித்திபெற்று இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தில் பயிற்சி பெற்ற 88 பேர் பிரதிப் பிரதேச செயலாளர்களாக நியமிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு இணைத்துக் கொள்ளப்படுவோர் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நியமிக்கப்படவுள்ளனர்.

# பொலிஸாருக்கு கட்சி பேதம் கிடையாது சட்டத்தைச் சரியாகப் பேணுவதே கடமை

## யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஸ்ரீகுகனேசன் ஊடகர்களுக்கு விளக்கம்

யாழ்ப்பாணம், செப்.23

தமிழ், சிங்கள, முஸ்லிம் கட்சிகள் அனைத்தும் எனது பார்வையில் ஒன்றுதான். யாழ்.மாவட்டத்தில் இடம்பெறும் ஆர்ப்பாட்டங்கள், ஊர்வலங்களுக்கு அனுமதி வழங்குவது, பாதுகாப்பு வழங்குவதும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் என்ற வகையில் எனக்குரியதே. இவ்வாறு தெரிவித்தார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஸ்ரீ.குகனேசன்.

நேற்று அவரது அலுவலகத்தில் இடம்பெற்ற வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பில் ஊடகவியலாளர்களால் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தில் தமிழ் கட்சிகள் ஒழுங்கு செய்து நடத்தும் ஆர்ப்பாட்டங்கள், ஊர்வலங்களுக்குக் கட்டுப்பாடு விதிக்கப்படுகிறது. ஆனால் வேறு சிங்கள கட்சிகள் ஆர்ப்பாட்டம், ஊர்வலம் நடத்தினால் அதற்குப் பூரண ஆதரவும் அனுமதியும் பாதுகாப்பும் அளிக்கப்படுகிறது.

யாழ்.பஸ் நிலையம் முன்பாக தமிழ்கட்சிகள் நடத்திய ஆர்ப்பாட்டத்தில் பொலிஸாரின் தலையீடு அதிகமாக இருந்தது. போக்குவரத்துக்கு இடையூறு விளைவிக்காதபடி நடத்த வேண்டும் என்று கூறி ஆர்ப்பாட்டக்காரர்களை வீதியின் ஓரமாக நிற்குமாறு நெருக்குதல் கொடுத்தனர்.

அதே பஸ் நிலையம் முன்பாக பிறகட்சிகள் ஆர்ப்பாட்டம் நடத்தியபோது போக்குவரத்து சிலமணி நேரம் முற்றாகத் தடைப்பட்டது. கடைசியாக நடந்த ஆர்ப்பாட்டத்தில் வீதியின் ஒரு வழிப்போக்குவரத்து தடைப்பட்டது. ஆனால் பொலிஸாரின் நடவடிக்கை எடுக்கவில்லை.

யாழ்.ஐந்து சந்தியில் நடந்த ஆர்ப்பாட்டத்தின் போது வீதியில் ரயர்கள் போட்டு எரிக்கப்பட்டு சில மணி நேரம் போக்குவரத்து தடைப்பட்டது. இதன்போதும் பொலிஸார் நடவடிக்கை எடுக்கவில்லை. இதிலிருந்து தமிழ் கட்சிகள் விடயத்தில் பொலிஸார் பக்கச்சார்பாக நடந்து கொள்கின்றனர் என்பதே தெரிகிறது என்று ஊடகவியலாளர்கள் குகனேசனிடம் கேள்வி எழுப்பினர்.

ஊடகவியலாளர்களின் கருத்தை மறுத்த குகனேசன், பொலிஸார் அவ்வாறு பாரபட்சத்துடன் நடந்து கொள்ளவில்லை.

தமிழ், சிங்கள, முஸ்லிம் அனைத்துக் கட்சிகளும் எமது பார்வையில் ஒன்றுதான்.

பொதுமக்களது நலன்களுக்கும், போக்குவரத்துக்கும் இடையூறு விளைவிக்காத வகையில் நடத்தப்படும் ஆர்ப்பாட்டங்கள் ஊர்வலங்களுக்கு மாத்திரமே அனுமதிக்கப்படுகிறது. விதிகளை மீறி நடைபெறும் நிகழ்வுகளுக்கே நாம் தடை விதிக்கிறோம் -என்றார் ஸ்ரீ. குகனேசன். (10-62-4)

# கிளிநொச்சியில் சிவில் சமூகங்கள் முறையாக இயங்க முடியவில்லை

## நேற்றைய கூட்டத்தில் அதன் பிரதிநிதிகள் கவலை

கிளிநொச்சி, செப்.23

கிளிநொச்சி மாவட்டத்தில் போருக்குப் பின்னரான காலத்தில் சிவில் சமூக அமைப்புகள் மீதான இராணுவத்தினரின் அழுத்தங்கள் தொடர்ந்த வண்ணமே உள்ளன. அதுமட்டுமல்லாமல் அரசியல்வாதிகளின் துஷ்பிரயோக நடவடிக்கைகளும் மலிந்து காணப்படுகின்றன. இதனால் சாதாரணமாக கிராம மட்ட அமைப்புக்கள் கூட சுயமான முறையில் இயங்கமுடியாது உள்ளது.

இவ்வாறு மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் நேற்று நடைபெற்ற கிளிநொச்சி மாவட்ட சிவில் சமூக பிரதிநிதிகளுக்கான கூட்டத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் கிளிநொச்சி மாவட்ட சிவில் சமூக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று முற்பகல் 10 மணிக்கு அதன் யாழ். பிராந்திய இணைப்பாளர் ரி.கனகராஜ் தலைமையில்கரைச்சிப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் ஆரம்பமாகி பிற்பகல் ஒரு மணிவரை நடைபெற்றது.

இந்தக் கூட்டத்திலேயே கிளிநொச்சி மாவட்ட சிவில் சமூக பிரதிநிதிகள் மேற்கண்ட பிரச்சினைகளை முன்வைத்தனர்.

எங்குமில்லாதவாறு சிவில் சமூகத்தின் மீதான அழுத்தங்களும், அடக்கி ஒடுக்கும் நடைமுறைகளும் வன்னிப் பகுதியில் காணப்படுகின்றன. இந்த நெருக்கடிக்கான தீர்வுகள் எட்டப்படாது விட்டால் சிவில் சமூக கட்டமைப்பு சீர்குலைக்கப்பட்டுவிடும்.

குறிப்பாக மக்களின் பூர்வீக நிலங்கள் இராணுவத்தினரால் அபகரிக்கப்படுகின்றது. இவ்வாறான அத்துமீறிய செயல்களை தட்டிக்கேட்க முடியாத நிலையிலேயே சிவில் அமைப்புகள் இயங்குகின்றன.

அதுமட்டுமல்லாமல் போரால் பாதிக்கப்பட்டு அவலப்படும் மக்களுக்கான உதவித் திட்டங்கள் வழங்கப்படுவதிலும் அரசியல் பாகுபாடுகள் காணப்படுகின்றன. இதனையும் தட்டிக்கேட்பதற்கு எம்மால் முடியவில்லை.

இவ்வாறான நிலமைகள் நிறுத்தப்பட்டு சிவில் சமூகங்கள் தமது பணிகளை செய்வதற்கு அனைத்துத் தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என இந்தக் கூட்டத்தில் கேட்டுக் கொள்ளப்பட்டது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் கிளிநொச்சி மாவட்ட சிவில் சமூக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் முதல் தடவையாக நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (10-426)

## இலங்கையர் இருவர் சென்னையில் கைது

வெளிநாடுகளில் இருந்து சென்னைக்கு மதுப் போத்தல்களை கடத்தி வந்த இரு இலங்கையர்கள் சென்னையில் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களிடம் இருந்து 3 லட்சம் இந்திய ரூபா மதிப்புள்ள 58 மதுப் போத்தல்களை பொலிஸார் பறிமுதல் செய்தனர். மதுப் போத்தல்களை கடத்தி வந்த கொழும்பைச் சேர்ந்த வியாபாரிகள் பிரேம் ஆனந்த் (வயது-41), திலிப் குமார் (வயது-33) இருவரும் கைது செய்யப்பட்டனர்.(த)

# 85 புகலிடக் கோரிக்கையாளர்கள் இலங்கைக் கடற்படையால் கைது

கொழும்பு,செப் 23

சட்டவிரோதமாக ஆஸ்திரேலியாவுக்குச் செல்ல முயற்சித்ததாகச் சந்தேகிக்கப்படும் 85 பேர் காலியிலிருந்து 60 கடல் மைல் தொலைவில் வைத்து நேற்று முன்தினம் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளதாகக் கடற்படை பேச்சாளர் கோசல வர்ணகுலசூரிய தெரிவித்தார்.

கைது செய்யப்பட்டவர்களில் 75 ஆண்கள் மற்றும் 4 பெண்கள் 6 சிறார்கள் அடங்குவதாக அவர் தெரிவித்தார்.

இவர்கள் தற்போது காலியில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் மேலதிக விசாரணைக்காகக் குற்றப்புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்படவுள்ளனர். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கைவிடப்பட்ட வயோதிபர் அரச இல்லத்தில் சேர்ப்பு

வடமராட்சிகிழக்கு முள்ளியான் ஆலயம் ஒன்றில் கைவிடப்பட்ட நிலையில் அநாதரவாக இருந்த வயோதிபர் ஒருவர் கைதடி முதியோர் இல்லத்தில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று இல்ல அத்தியட்சகர் த.கிருபாகரன் தெரிவித்தார்.

அவர் இது குறித்து மேலும் தெரிவித்ததாவது:-

தாவீதுபிள்ளை முடியப்பு (வயது-86) என்ற வயோதிபரே கடந்த ஒருவார காலமாக மேற்படி ஆலயத்தில் அநாதரவாகக் கைவிடப்பட்ட நிலையில் தங்கியிருந்தார்.

இவருக்கு ஊர் மக்களால் மூன்று நேர உணவு என்பன வழங்கப்பட்டு வந்தது.

வடமராட்சி கிழக்குப் பிரதேச செயலகம் எமது இல்லத்துடன் தொடர்பு கொண்டு இந்த வயோதிபரை இல்லத்தில் ஒப்படைத்தது.

இந்த வயோபதிபரின் உறவினர்கள் உடனடியாக எமது அரச முதியோர் இல்லத்துடன் தொடர்பு கொள்ள வேண்டும் - என்றார். (த-17)

# கால்நடைகளுக்குத் தண்ணீர்

## வேலணை, புங்குடுதீவு, அராலி வெளியில் தொட்டிகள் வைத்து பவுஸர் மூலம் விநியோகம்

*யாழ்ப்பாணம், செப்.23*

*வறட்சி காரணமாக நீரின்றி கால்நடைகள் இறப்பதால் அவற்றைக் காக்கும் முகமாக தற்காலிகத் தண்ணீர் தொட்டிகள் அமைத்து குடிதண்ணீர் வழங்கும் பணி கடந்த இரு நாள்களாக இடம்பெறுகின்றது.*

யாழ்.வணிகர் கழகத் தலைவர் ஆர்.ஜெயசேகரம் முதற்கட்டமாக 16 தொட்டிகளை வேலணை பிரதேச சபைக்கு வழங்கி கால்நடைகளுக்கு தண்ணீர் வழங்குமாறு கோரியிருந்தார்.

இதனையடுத்துவேலணை பிரதேச சபைத் தலைவரது ஏற்பாட்டில் புங்குடுதீவு, அராலி, வேலணை ஆகிய வெளிக ளில் உள்ள கட்டாக்காலி கால்நடைகளுக்கு பவுஸர் மூலம் தண்ணீர் வழங்கும் பணி இடம்பெறுகின்றது.

மேற்படி பணிக்கு இடபங்களையும் பசுக்களையும் பாதுகாக்கும் சங்கத் தலைவர் கே.கங்கைவேணியன் மற்றும் வேலணை விவசாய சம்மேளன செயலாளர் க.குணம் ஆகியோர் முன்வந்துள்ளனர்.

இதே வேளை, கால்நடைகளுக்கு தண்ணீர் வழங்கும் சேவையை முன்னிட்டு யாழ்.அரச அதிபர் சு.அருமைநாயகம் வேலணை பிரதேச சபைக்குப் பாராட்டுத் தெரிவித்துள்ளார். (ம-50)

## பொலிஸ் அதிகாரிகளிடம் முறையிடுவதற்கு ஏற்பாடு

### மக்கள் தினமாக புதன்கிழமை

வலி.வடக்கு, செப்.23

எதிர்வரும் புதன்கிழமை முதல் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர், பிரதிப் பொலிஸ்மா அதிபர்களைச் சந்தித்து பொது மக்கள் தமது முறைப்பாடுகளைச் செய்து கொள்ள முடியும் என்று யாழ்ப்பாணம் பிரதிப் பொலிஸ்மா அதிபரினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் பொது மக்களுக்கும் பொலிஸாருக்கும் இடையே நல்லுறவை உண்டாக்கவும் பொதுமக்களின் குறைகளைக் கேட்டறியும் முகமாகவும் புதன்கிழமைகள் மக்கள் தினமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

புதன்கிழமைகளில் வரும் பொதுமக்கள் பொலிஸாருக்கு எதிரான முறைப்பாடுகள் உட்பட எந்த வகையான முறைப்பாடுகளையும் காலை 9 மணி முதல் பிற்பகல் 3 மணிவரை பொலிஸ் உயர் அதிகாரிகளிடம் நேரில் சென்று முறையிடக் கூடிய வசதிகள் செய்யப்பட்டுள்ளதாகவும் பிரதிப் பொலிஸ்மா அதிபர் எரிக் பெரேரா தெரிவித்துள்ளார். (ம-4-86)

## உசனில் இருந்து பஸ்சேவையை மீண்டும் ஆரம்பிக்கக் கோரிக்கை

தென்மராட்சி, செப்.23

மிருசுவில் உசனிலிருந்து தினமும் காலை 5.30 மணிக்குப் புறப்பட்ட பஸ் சேவையை மீண்டும் ஆரம்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலைக்குச் செல்லும் நோயாளர்களும் ஊழியர்களும் வட பிராந்திய போக்குவரத்துச்சபையின் பொது முகாமையாளரிடம் முறையிட்டுள்ளனர்.

இந்த பஸ்சேவை இடம்பெற்ற காலத்தில் மிருசுவில் தொடங்கி யாழ்ப்பாணம் வரையிலான ஏ-9 வீதியில் யாழ்.போதனா வைத்தியசாலையின் சிகிச்சைப் பிரிவுகளுக்குச் செல்லும் நோயாளர்களும் விடுதிகளில் தங்கியுள்ளோரைப் பார்வையிடச் செல்வோரும் வைத்தியசாலையில் பணியாற்றும் ஊழியர்களும், தீவக பகுதிகளுக்கு வேலைக்குச் செல்வோரும் பயன் பெற்றனர்.

கடந்த இரண்டு மாதங்களாக இந்த பஸ் சேவை நிறுத்தப்பட்டதால் பருவ கால பயணச்சீட்டுப் பெற்றவர்கள் உட்பட அனைவரும் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

தினமும் காலை 6.30 மணிக்கு முன்னர் யாழ்.பஸ் நிலையத்துக்குச் செல்லக் கூடிய வகையில் பஸ் சேவையை நடத்த நடவடிக்கை மேற்கொள்ளுமாறு முறையிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ம-9)

## பெரும்போகச் செய்கைக்கு உரமானியம் வழங்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், செப்.23

சண்டிலிப்பாய் கமநல சேவை நிலையம் ஊடாக வலி.தென்மேற்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட விவசாயிகளுக்கு பெரும்போக நெற்செய்கைக்கான உர மானியம் வழங்கப்படவுள்ளது.

முதற் கட்டமாக மானிப்பாய் மேற்கு விவசாய சம்மேளன பிரிவுக்கு உட்பட்ட 220 விவசாயிகளுக்கு எதிர்வரும் 27, 28 ஆம் திகதிகளில் வழங்கப்பட உள்ளதாக சம்மேளனத் தலைவர் கூறினார்.

விவசாயிகளுக்கான உர மானியம் மூன்று கட் டங்களும் ஒன்றாகச் சேர்த்து ஒரே தடவையில் வழங்கப்படும்.

எனவேவிவசாயிகள்அடையாளத்தை உறுதிப்படுத்தும் பொருட்டு தேசிய அடையாள அட்டை அல்லது விவசாய அடையாள அட்டையுடன் சமுகம் தருமாறு க.முதலியார் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் உரமானியம் 3 கட்டங்களாக வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-50)

## நிகழ்வுகள் இன்று

### அறிமுக நிகழ்வு

சாந்தினி வெளியீட்டகத்தின் கேடயம் மாத இதழ் அறிமுக வைபவம் பிற்பகல் 3 மணிக்கு இணுவில் அறிவாலயத்தில் இடம்பெறவுள்ளது. பிரதமவிருந்தினராக உடற்கல்வி உதவிப்பணிப்பாளர் சண்.தயாளனும், சிறப்பு விருந்தினராக யாழ்.இந்துக் கல்லூரி அதிபர் வீ.கணேசராஜாவும் மக்கள் வங்கியின் முன்னாள் பிராந்திய முகாமையாளர் ஏ.குகதாசனும், கௌரவ விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ பீடாதிபதி க.தேவராஜாவும் கலந்துகொள்வர். (ம-23)

### கண்காட்சி

மறைக் கல்வி ஆண்டை முன்னிட்டு நடைபெறும் மாபெரும் மறைக்கல்வி கண்காட்சி காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5.30 மணிவரை தூய மரியன்னை பேராலயத்தில் இடம்பெறவுள்ளது. (ம-23)

### பரிசளிப்பு விழா

வல்வெட்டித்துறை பழைய மாணவர் சங்கத்தின் அனுசரணையுடன் வல்வை சிவகுரு வித்தியாசாலையின் பரிசளிப்பு விழா பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. பாடசாலை அதிபர் ஆ.சிவநாதன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் கலந்து கொள்வார். (ம-14)

### நினைவு நிகழ்வு

சி.இரத்தினத்தின் இரண்டாம் ஆண்டு நினைவு தின நிகழ்வு மாலை 5 மணிக்கு நவபுரம் கைதடியில் சங்கரன் தங்கராசா தலைமையில் நடைபெறவுள்ளது. (ம-14)

### பொதுக் கூட்டம்

சதாவதானி கதிரைவேற்பிள்ளை சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்க 25 ஆவது வருடாந்தப் பொதுக் கூட்டம் முற்பகல் 10 மணிக்கு தம்பசிட்டியில் உள்ள சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது. சங்கத் தலைவர் க.தங்கராசா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக பருத்தித்துறை பிரதேச செயலர் இ.த.ஜெயசீலன் கலந்து கொள்வார். (ம-8)

★★★

கொடிகாமம் தென்மராட்சி கிழக்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்க வருடாந்தப் பொதுக் கூட்டம் முற்பகல் 10 மணிக்கு சங்கப் பணிமனையில் நடைபெறவுள்ளது. சங்கத் தலைவர் பொ.கனகராசா தலைமையில் நடைபெறும் இந்தக் கூட்டத்தில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் வீ.கே.அருந்தவநாதன் கலந்து கொள்வார். (ம-122)

### பிரிவுபசாரம்

மட்டுவில் வடக்கு கிராம அலுவலராகக் கடமையாற்றி இடமாற்றம் பெற்ற செ.சிவசுப்பிரமணியத்துக்கான பிரிவுபசார விழாவும், புதிதாக இடமாற்றம் பெற்று வந்துள்ள க.ஸ்ரீவிக்னேஸ்வரராசாவுக்கு வரவேற்பு நிகழ்வும் பிற்பகல் 3 மணிக்கு மட்டுவில் கண்ணகை சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஆ.மகேச்சுரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன் கலந்து கொள்வார். (ம-9)

## கப்பூது முருகன் ஆலயத்தில் சிலை, வாகனங்கள் திருட்டு

வலி.வடக்கு, செப்.23

வடமராட்சி கப்பூது பகுதியில் உள்ள முருகன் கோயிலில் இருந்த முருகன் சிலை மற்றும் நான்கு சுவாமி தூக்கும் வாகனங்கள் என்பன திருடப்பட்டுள்ளன.

கடந்த 20 ஆம் திகதி இந்தத் திருட்டு இடம்பெற்றுள்ளதாக நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் ஆலய உரிமையாளரால் முறையிடப்பட்டுள்ளது.

ஆலயத்தில் இருந்த 3 அடி உயரமான முருகன் சிலை மற்றும் நான்கு குதிரை வாகனங்கள் என்பனவே இவ்வாறு திருட்டுப்போயுள்ளன.

முருகன் சிலை பல லட்சக் கணக்கான ரூபா பெறுமதி உடையது எனவும் வாகனங்களின் பெறுமதி இரண்டு லட்சம் ரூபாவுக்கு மேல் என்றும் கூறப்பட்டது.

இந்தத் திருட்டு சம்பந்தமாக நெல்லியடிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இந்த தகவல் தெரிவிக்கப்பட்டது. (ம-86)

## நன்னீர் மீனவர்களுக்கு திறனுயர்வுப் பயிற்சிகள்

யாழ்ப்பாணம், செப்.23

வடமாகாணத்தில் உள்ள நன்னீர் மீன்பிடியில் ஈடுபடுபவர்களுக்கான தலைமைத்துவ திறனுயர்வு பயிற்சிநெறி மாவட்ட ரீதியாக நடைபெற்றதாக வடமாகாண விவசாய, காணி, கால்நடை அபிவிருத்தி நீர்ப்பாசன கடற்தொழில் அமைச்சின் செயலாளர் யூ.எல்.எம்.ஹால்டின் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடமாகாணத்தில் உள்ள நன்னீர் மீனவர்களுக்குப் பயிற்சி வழங்குவதற்காக மாகாணத்துக்கெனகுறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதியிலிருந்து 0.5 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு மாவட்டங்களிலும் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரின் உதவியுடன் மீனவர்களுக்குபயிற்சிவழங்கப்பட்டது.

யாழ்ப்பாணம், வவுனியா, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரின் உதவியுடனும், கிளிநொச்சி மாவட்டத்தில் மாவட்ட செயலகத்தின் ஊடாகவும் பயிற்சி வழங்கப்பட்டது.

ஒவ்வொரு மாவட்டத்துக்கும் ஒரு லட்சம் ரூபா வரையில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு மாவட்டத்திலும், 40 மீனவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. இப்பயிற்சி நெறியில் நிதியைக் கையாளுதல், சட்டங் களைக் கையாளுதல், மீனவ கூட்டுறவு சங்கங்கள் ஊடாகக் கடன் பெற்றுக் கொள்ளல், கூடுதலான மீன் உற்பத்தியை எவ்வாறு பெறுதல் போன்ற பயிற்சிநெறிகள்வழங்கப்பட்டன.

அடுத்து மன்னார் மாவட்டத்துக்கான பயிற்சி நெறிகள் ஆரம்பமாக வுள்ளன எனத் தெரிவித்தார். (ம-13)

## மீளப்பெற்றதை உறுதிப்படுத்தும் 'பி.சி.' படிவப் பகுதி கிடைக்கவில்லை

### மாசேரி கிராம மக்கள் முறைப்பாடு

யாழ்ப்பாணம், செப்.23

தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட மாசேரி கிராம அலுவலர் பிரிவில், 2012 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பெயர்ப் பட்டியல் தயாரிப்பு நடவடிக்கையின் போது 'பி.சி' படிவத்தில் பிரதான குடியிருப்பாளர்களுக்கு வழங்க வேண்டிய விண்ணப்பத்தின் ஒரு பகுதி இரண்டு மாதங்கள் கடந்த நிலையிலும் இன்னமும் கிராம சேவையா[illegible] வழங்கப்படவில்லை என்று [illegible] பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

2012 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பெயர்ப்பட்டியல் தயாரிக்கும் நடவடிக்கைகள் கடந்த ஜூன் மாதம் ஆரம்பமானது. இதன் போது 'பி.சி' படிவம் கிராமசேவையாளரினால் வீடுவீடாக விநியோகிக்கப்பட்டு பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவம் மீளப் பெறப்பட்டது. விண்ணப்பப்படிவம் கிராம சேவையாளரினால் மீளப் பெறப்படும் போது 'பி.சி' படிவத்தில் உள்ள 'மீளப் பெறப்பட்[illegible] உறுதிப்படுத்தும்' பகுதி [illegible] சேவையாளரினால் பிரதான குடியிருப்பாளருக்கு வழங்கப்பட வேண்டும்.

இரண்டு மாதங்கள் கடந்த நிலையிலும் மாசேரி கிராம சேவையாளரினால் குறித்த பகுதி பிரதான குடியிருப்பாளர்களுக்கு வழங்கப்படவில்லை.

இந்த விடயம் தொடர்பில் யாழ்.மாவட்ட செயலக உதவித் தேர்தல் ஆணையாளர் பொ.குகநாதனிடம் கேட்ட போது; இந்தச் சம்பவம் தொடர்பில் சாவகச்சேரி பிரதேச செயலர், கிராம சேவையாளருக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதாக எமக்கு அறிவித்துள்ளார் என்று கூறினார். (ம-5-122)

## குடிநீர்விநியோகம் தடைப்பட்டது

கடந்த இருவாரங்களாக கட்டுடை நவாலிக்கு குழாய் மூலமான குடிதண்ணீர் விநியோகம் தடைப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட தேசவள விவசாயிகள் சம்மேளன தலைவர் க.முதலியார் தெரிவித்துள்ளார்.

சுன்னாகத்தில் உள்ள நீர் நிலைகளில் எண்ணெய் கசிவு ஏற்பட்டதைத் தொடர்ந்து தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை- தண்ணீர் வழங்கும் சேவையை ஒரு நாள்மட்டும்மேற்கொண்டது.

கடந்த இரு வாரங்களாக குடிதண்ணீர் சேவை நிறுத்தப்பட்டுள்ளது என்று கூறப்படுகிறது. தேசிய நீர் வழங்கல் சபை மௌனமாக உள்ளமை குறித்து நாவாலி, கட்டுடை மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (ம-41)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முக்கிய...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
நீரிழிவு ஆகிய நோய்களைக் குணப்படுத்த வழங்கப்படும் மருந்துகளுக்குத் தட்டுப்பாடு நிலவுவதாகச் சங்கத்தின் தலைவர் காமினி குமாரசிங்க தெரிவித்துள்ளார். மருந்து நிறுவனத்தால் இந்த மாதம் கோரப்பட்ட 200 மருந்து வகைகளில் இதுவரை 70 வகை மருந்துகளே கிடைக்கப் பெற்றுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பல்வகை நிறுவனங்களுக்கு மருந்து கொள்வனவு செய்ய அரசு அனுமதி அளித்துள்ளதால் பொது மக்கள் தொடர்ந்தும் பாதிப்பை எதிர்நோக்கி வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (த)

## பூநகரியில்...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...
இவ்வாறு உள்ளூர் படைத் தலைமையகங்களின் கோரிக்கைகளுக்கு மேலாக பூநகரியின் பதினொரு இடங்களில் 280 ஏக்கர் நிலப்பரப்பை கையளிக்குமாறும் கோரிக்கையொன்று விடுக்கப்பட்டுள்ளது.

பூநகரியில் இராணுவத்தினரும் கடற்படையினரும் தாம் நிலை கொண்டுள்ள நிலங்களை ஆக்கிரமிக்கும் நோக்கில் இவ்வாறு கோரிக்கைகளை விடுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனைவிட புதிய செயற்பாடாக வனப்பாதுகாப்பு திணைக்களத்தினூடாக பூநகரி மட்டுவில் நாடு, தெனிகரை ஆகிய கிராமங்கள் வன ஒதுக்குப் பிரதேசம் என பிரகடனப் படுத்தப்பட்டு வர்த்தமானியில் அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. குறித்த இந்தப் பிரதேசங்களான தெனிகரைப் பகுதியில் இந்திய அரசின் நிதியுடனான, வீடுகள் அமைக்கப்பட்டு வழங்கப்படுவதுடன் மட்டுவில் நாடு பகுதி அரச அனுமதியளிப்பு பத்திரங்கள் வழங்கப்பட்ட காணிகள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு கொடும் நில ஆக்கிரமிப்பு அனுமதிகளின் பின்னால் ஒரு நிலப் பறிப்பு விடயமே மேலோங்கியிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. (த-6)

## மனிக்பாமில்...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...
முகாமில் தங்கியுள்ளோம். இங்கு போதிய வசதிகள் எவையும் இல்லை. பாதுகாப்பு இல்லை. நாளாந்தம் திருடர்களின் தொல்லை தாங்க முடியவில்லை. பிள்ளைகளுக்கு சரியான கல்வியை வழங்க முடியவில்லை. இவ்வாறான நெருக்கடியிலேயே முகாமில் வாழ்க்கை நடத்தி வருகிறோம். முல்லைத்தீவு அரச அதிபரும் இராணுவத்தினரும் எம்மை தற்காலிக இடத்தில் மீளக் குடியமருமாறு கேட்டனர். முதலில் நாம் அதற்கு மறுப்புத் தெரிவித்தோம். எங்களை எங்கள் சொந்த இடத்தில் குடியமர்த்துங்கள். அது தான் எங்களுக்கு நீங்கள் செய்யும் உதவியாக இருக்கும் என மன்றாடினோம். அதற்கு அவர்கள் இணங்கவில்லை. ஜனாதிபதியிடம் இருந்து இவ்வாறுதான் உத்தரவு வந்துள்ளது எனக் கூறி இரண்டு மாதங்களில் சொந்த இடத்தில் மீளக்குடியமர வழி செய்வோம் என உறுதி அளித்தனர். இதனையடுத்து நாம் அரச அதிபரின் கோரிக்கைக்கு உடன்பட்டோம். இதன்படி நாளை எங்களை வற்றாப்பளைக்கு அழைத்துச் செல்வதாக அவர்கள் தெரிவித்து விட்டுச்சென்றனர்' என்று அந்த மக்கள் தெரிவித்தனர்.

கதிகாமர் முகாமில் 165 குடும்பங்களைச் சேர்ந்த 531 பேர் உள்ளனர். இதில் 131 குடும்பங்களைச் சேர்ந்த 420 பேர் மந்துவில் பகுதியைச் சேர்ந்தவர்கள். மிகுதி 34 குடும்பங்களைச் சேர்ந்த 111 பேர் கேப்பாபுலவைச் சேர்ந்தவர்கள்.

இந்தச் செயற்பாடு குறித்து கருத்துத் தெரிவித்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கருத்துத் தெரிவிக்கையில்;

முகாமில் தங்கியுள்ள மக்களை சூழ்ச்சிகரமாக இராணுவத்தினரும் அரச அதிகாரிகளும் வெளியில் கொண்டுவந்துவிட்டு முகாமை மூடி வெளியுலகுக்கு மக்களை மீளக்குடியமர்த்தி விட்டோம் என கணக்குக் காட்ட முயற்சிக்கிறது. இதன் அடிப்படையிலேயே முகாமில் தங்கியுள்ள மக்களை வற்றாப்பளைப் பகுதியில் மீளக்குடியமர்த்தி, அவர்களுக்கு இராணுவத்தினர் காட்டும் இடங்களில் புதிய காணி தருவதாகக் கூறி அவர்களது சொந்த இடத்தை அபகரிக்க அதிகாரிகள் முயற்சிக்கின்றனர். இந்தச் செயல் வன்மையாகக் கண்டிக்கத் தக்கது - என்றார். (10-400)

## ஐ.நா...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...
ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பொதுச் சபைக் கூட்டத்தின் ஒரு பகுதியாக நடைபெறும் மனித உரிமைகள் கூட்டத்தின் மூன்றாவது அமர்விலேயே இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்து நிறை வேற்ற முயற்சிகள் நடப்பதாகத் தெரிய வந்துள்ளது.

இது தொடர்பாகப் பிரிட்டன் அரசின் பிரதி நிதிகளைக் கொண்ட குழு வொன்று நியூயோர்க்கில் ஐ.நாவின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடியுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கைக்கு எதிரான இந்தத் தீர்மானம் எதிர்வரும் ஒக்ரோபர் 10 ஆம் திகதி கொண்டு வரப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கிடையே, ஐ.நாவில் இந்தத் தீர்மானத்தை எதிர்கொள்வதற்கான தயார்படுத்தல்களில் இலங்கை அரச அதிகாரிகள் பலரும் மும்முரமாக ஈடுபட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது. (த)

## ஜனநாயக...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...
தற்போது இராணுவ மேஜர் ஒருவர் மாலக்க சில்வாவினால் தாக்கப்பட்டதாக கூறப்படும் விவகாரம் என்பன, சக்திவாய்ந்த நபர்களுடன் முரண்பட வேண்டாம், என்ற செய்தியையே கூறுகின்றன. அப்படி முரண்பட்டால் சட்டம் உங்களுக்கு எதிராகச் செயற்படும். இவ்வாறான செய்தியை கூறும் அளவுக்கு நாடு கீழிறங்கிவிட்டது. ஜனநாயகமும் சட்டத்தின் ஆட்சியும் சீரழிந்துள்ளது'' என அவர் தெரிவித்தார்.

அரசின் அங்கத்தவர்கள் பலரும் தற்போதைய நிலைமை குறித்து ஏமாற்றமடைந்துள்ளதாக அவர் கூறினார்.

''இவ்விடயம் குறித்து நான் நாடாளுமன்றத்தில் உரையாற்றிய பின்னர், என்னிடம் பேசிய அமைச்சர் ஒருவர் தனது மனதிலும் இவ்வாறான கருத்தே உள்ளதாகக் கூறினார். அதைப் பகிரங்கமாக ஏன் அவர் பேசவில்லை எனக் கேட்டபோது போது, அவ்வாறு பேசும் நிலையில் தான் இல்லை எனக் கூறினார். இந்தச் சம்பவமானது சட்டமும் ஒழுங்கும் கீழிறங்கியுள்ள நிலையை வெளிப்படுத்துகிறது'' என தயாசிறி கூறினார். (த)

## கூட்டமைப்பு...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...
காணக்கூடியதாக இருக்கும் என்று இந்தியா தெரிவித்துள்ளது.

கடந்த 2009ஆம் ஆண்டு மே மாதத்துக்குப் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும், அரசுக்கும் இடையில் 18 சுற்றுப் பேச்சுக்கள் இடம்பெற்றுள்ளன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் இணைய வேண்டும் என அரசு வலியுறுத்தி வருகின்றபோதும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அது குறித்து இன்னும் முடிவெடுக்கவில்லை.

எவ்வாறாயினும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும், அரசுக்கும் இடையில் மீண்டும் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படும் பட்சத்தில், அது இனப் பிரச்சினைத் தீர்வு தொடர்பில் தமிழ் மக்களுக்குப் புதிய நம்பிக்கையை ஏற்படுத்தும் என்றும் இந்தியத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஐக்கிய இலங்கைக்குள் தமிழர்களின் பிரச்சினைக்கு தீர்வு காணக்கூடிய திட்டம் ஒன்றை கொண்டுள்ளது.

இதனால் அரசுக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சு நடத்துவதில் எந்தப் பிரச்சினையும் இல்லை என்றும் இந்திய அரசு தெரிவித்திருப்பதாகத் தெரியவருகிறது. (த)

## உள்ளக...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...
மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் அரச தரப்பு உறுப்பினர்களுடன் மேற்கொண்ட சந்திப்புகளின் அடிப்படையில் இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்த குழுவினர் நேற்று இலங்கையில் இருந்து நாடு திரும்பினர். (த)

## இலங்கை...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...
அன்சாரி என்பவர், அண்மையில் கைது செய்யப்பட் டிருந்தார்.

அவர் இலங்கையில் தங்கியிருந்தபோது, ஐ.எஸ்.ஐ. செயற்பாட்டாளரான ஹாஜி என்பவர் இவருடன் தொடர்புகளை ஏற்படுத்தினார்.

இந்தியாவுடன் நன்கு பரிச்சயமானவர்கள் என்பதாலும், சந்தேகமின்றித் தகவல்களைத் திரட்ட முடியும் என்பதாலும் நாடு திரும்பும் தமிழ் அகதிகளை ஐ.எஸ்.ஐ வாடகைக்கு அமர்த்துவதாகப் புலனாய்வு வட்டாரங்கள் தெரிவித்தன.

இலங்கைத் தமிழ் அகதிகளை கண்காணித்து வரும் தமிழக அரச புலனாய்வுச் சேவையான கியூ பிரிவின் புலனாய்வாளர்கள், ஐ.எஸ்.ஐ. செயற்பாட்டாளர் ஹாஜி மற்றும் அவரது உதவியாளர்களான கொழும்பிலுள்ள பாகிஸ்தான் தூதரகத்தின் விசா பிரிவில் பணியாற்றும் சாஜி, அமீர் சுபைர் சித்திக் ஆகியோருக்கு எதிராக வழக்கு ஒன்றைப் பதிவு செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட அன்சாரியின் வாக்குமூலத்தின் அடிப்படையில் இவர்களுக்கு எதிராக முதல் தகவல் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்று தமிழகப் பொலிஸ் அதிகாரி ஒருவர் கூறியுள்ளார். (த)

## வடக்கு...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
16 பிரிவுகள் குவிக்கப்பட்டுள்ளன.

அதாவது யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மூன்று மாவட்டங்களிலும் தலா மூன்று பிரிவுகளும், வவுனியாவில் ஐந்து பிரிவுகளும், கிழக்கில் இரண்டு பிரிவுகளுமாக மொத்தம் 16 பிரிவுகளைச் சேர்ந்த இராணுவத்தினர் தற்போது வடக்கு-கிழக்கில் நிலைநிறுத்தப்பட்டுள்ளனர்.

ஏனைய மூன்று பிரிவுகளைச் சேர்ந்த படையினர் இலங்கையின் தென்பகுதி முழுவதிலும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இவ்வாறு இலங்கைத் தீவு முழுவதிலும் நிறுத்தப்பட்ட இராணுவப் பிரிவுகள் தொடர்பான தகவல்கள் அடங்கிய வரைபடத்தை விளக்கக்காட்சி மூலம் இலங்கை இராணுவத்தின் உள்ளக ஆவணம் ஒன்று இவ்வாண்டு ஜீன் மாதத்தில் குறிப்பிட்டிருந்தது. அதிலிருந்து இன்னமும் எந்த இராணுவப் பிரிவுகளிலும் மாற்றம் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

இந்தத் தகவலை இலங்கையில் இந்திய அமைதி காக்கும் படை கடமையில் ஈடுபட்டபோது பணியாற்றிய இந்தியாவின் முன்னாள் இராணுவ அதிகாரி கேணல் ஆர். ஹரிகரனுடன் தொடர்புகொண்ட 'இந்து' ஊடகம் மதிப்பீடு செய்வதற்காகப் பகிர்ந்துகொண்டது. இலங்கையின் வடக்கு கிழக்கில் குவிக்கப்பட்டுள்ள இராணுவத்தினரின் தொகையானது யுத்தம் முடிவடைந்த பின்னரான காலப்பகுதியில் அதிகம் எனவும், இராணுவத் தாக்குதலுக்குத் தயாராக இருக்க வேண்டிய இராணுவத்தை விட இது அதிகமாக உள்ளதாக, இந்தத் தகவலை ஆய்வு செய்த ஹரிகரன் தெரிவித்துள்ளார்.

இலங்கை இராணுவத்தின் உள்ளக ஆவணத்தில் வடக்கு கிழக்கில் நிறுத்தப்பட்டு இராணுவத்தினரின் சரியான எண்ணிக்கை குறிப்பிடப்படவில்லை. இருந்த போதிலும், இலங்கை இராணுவப் பிரிவுகளில் உள்ள இராணுவத்தினரின் மொத்த எண்ணிக்கையை வைத்து இதனைக் கணிப்பிட்டுக் கொள்ளமுடியும்.

இலங்கை இராணுவப் பிரிவு ஒன்றில் 6000 தொடக்கம் 7000 வரையான இராணுவத்தினர் காணப்படுகின்றனர். இதன்படி குறைந்தது 85,000 முதல் 86,000 இராணுவத்தினர் இலங்கையின் வடக்கு-கிழக்கில் முகாமிட்டுள்ளனர் என மதிப்பிட முடியும். இதில் இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள அதிரடிப் படை மற்றும் கடற்படை, விமானப்படை உள்ளடக்கப்படவில்லை.

தமிழர் வாழும் பிரதேசங்களில் இலங்கை இராணுவத்தினர் தொடர்ந்தும் குவிக்கப்பட்டு, பாதுகாப்பில் ஈடுபடுத்தப்படுவதானது நாட்டில் மேற்கொள்ளப்படும் யுத்தத்தின் பின்னான இன மீளிணக்கப்பாட்டு முயற்சிக்கு குந்தகம் விளைவிக்கும் என நோக்கப்படுகிறது.

தேசிய பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு இலங்கையில் இராணுவத்தினரைக் குவிப்பதற்கான உரிமை உள்ளதாக இலங்கை அரசு தெரிவித்துள்ளது.

மூன்று பத்தாண்டுகால ஆயுதப் போரிலிருந்து மீண்டெழும் ஒரு நாடான இலங்கையில் மீண்டும் ஆயுதக் குழுக்களால் வரக்கூடிய ஆபத்தை எதிர்நோக்குவதற்காக இராணுவத்தினரைப் பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்த வேண்டிய தேவையுள்ளதாக இந்திய பத்திரிகை ஒன்றுக்கான அண்மைய நேர்காணலின் போது ஜனாதிபதி ராஜபக்ஷ தெரிவித்திருந்தார். அத்துடன் டிசம்பர் 2009 இல் யாழ்ப்பாணத்தில் 27,000 படையினர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டதாகவும் ஆனால் ஜீன் 2012இல் இந்த எண்ணிக்கையானது 15,000 ஆகக் குறைவடைந்ததாகவும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையின் வட பகுதிக்கான 'அபிவிருத்தி வேலைக்கு' இராணுவப் படையினர் அத்தியாவசியமாக உள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார். ஆனால் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிக்கான 'அபிவிருத்தியில்' இராணுவத்தினர் பங்களிப்பதானது கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய விடயமாகும்.

''போர் முடிவடைந்த வலயங்களில் இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்த வேண்டுமாயின் இராணுவத்தினர் அகற்றப்பட வேண்டும். பொது நிர்வாகங்களில் இராணுவத்தினர் தலையீடு செய்வது என்பது வேண்டப்படாத ஒன்றாகும்'' என இலங்கையில் உள்ள மக்கள் செயற்பாட்டாளரான அகிலன் கதிர்காமர் தெரிவித்துள்ளார்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையால் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் வடக்கு கிழக்கில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் அகற்றப்பட வேண்டியது முக்கிய பரிந்துரையாக குறிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன் இலங்கை அரசினால் நியமிக்கப்பட்ட கற்றுக் கொண்ட பாடங்களுக்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த வேண்டும் என கடந்த மார்ச் மாதத்தில் கூட்டப்பட்ட ஐ.நா. மனித உரிமைகள் சபையில் வலியுறுத்தப்பட்டது. இந்த ஆணைக்குழுவால் முன்வைக்கப்பட்ட முக்கிய பரிந்துரையில் இலங்கை அரசானது வடக்கு கிழக்கில் நிறுத்தப்பட்டுள்ள இராணுவத்தினரின் நடமாட்டத்தை கணிசமானளவு குறைக்க வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இலங்கை இராணுவமானது பொது நிர்வாகத்தை விட அதிகம் அதிகாரத்தைப் பிரயோகிப்பதாக நல்லிணக்க ஆணைக்குழு முன் பலர் சாட்சியமளித்தனர். வீதிப் புனரமைப்பு போன்ற பல்வேறு அபிவிருத்திச் செயற்பாடுகளில் இலங்கை இராணுவத்தினர் பங்களிக்கின்ற போதிலும், மக்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இவர்கள் செயற்படுவதாகவும் ஆணைக்குழுவிடம் முறையிடப்பட்டது.

பல பத்தாண்டுகாலமாகத் தொடரப்பட்ட யுத்தத்தில் இராணுவத்தால் ஆளுகைக்கு உட்படுத்தப்பட்ட தனியார் காணிகள் தற்போது உயர் பாதுகாப்பு வலயங்களாக மாற்றப்பட்டுள்ளன. இதனால் உண்மையான காணிச் சொந்தக்காரர்கள் தமது நிலங்களில் மீள்குடியேற முடியாத நிலை காணப்படுகின்றது.

சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை இலங்கை எவ்வளவு தூரம் நிறைவேற்றுகின்றது என்பதை மீளாய்வு செய்வதற்காக மனித உரிமைகள் சபையால் நியமிக்கப்பட்ட மூன்று நாடுகளில் இந்தியாவும் ஒன்றாகும். ஸ்பெயின், பெனின் ஆகியன ஏனைய இரு நாடுகளாகும்.

இவ்வாண்டு நவம்பர் மாத முதல் வாரத்தில் ஜெனிவாவில் இலங்கை தொடர்பில் மீளாய்வு செய்யப்பட்ட விடயங்கள் பரிசீலிக்கப்பட்டு விவாதிக்கப்படும். இந்நிலையில் இலங்கை எவ்வளவு தூரம் சபையின் தீர்மானத்தைக் கருத்திற் கொண்டு செயற்படுகின்றது என்பதை ஆய்வு செய்து அறிக்கையிட வேண்டிய பொறுப்பை இந்தியா கொண்டுள்ளது.

கடந்த மூன்று ஆண்டுகளில் இலங்கையுடனான உறவில் விரிசல் ஏற்பட்டதாக இந்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். அத்துடன் தமிழர் பிரச்சினை தொடர்பில் ராஜபக்ஷ அரசு எவ்விதத்திலும் ஈடுபாடு காட்டாது அதனைத் தட்டிக் கழிப்பதாக இந்திய மத்திய அரசு குற்றம் சாட்டியுள்ளது. இந்தியாவுடனான இலங்கையின் நெருக்கம் குறைவடைந்த நிலையில், இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையில் மிக நெருக்கமான உறவு ஏற்பட்டுள்ளது.

மே 2009 இல் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக இலங்கையில் இடம்பெற்ற இறுதிக் கட்ட யுத்தத்தின் போது மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ராஜபக்ஷ அரசு உரிய முறையில் பொறுப்பளிக்கத் தவறியதால் அதனை எதிர்த்து மனித உரிமைகள் சபையால் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை இந்தியா ஆதரித்து வாக்களித்தமை, தமிழ்நாட்டில் இலங்கையை எதிர்த்து எழுந்துள்ள எதிர்ப்பலைகள் இதன் விளைவாக தமிழ்நாட்டுக்குச் சென்றிருந்த இலங்கை யாத்திரிகர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் போன்றன இந்திய இலங்கை உறவின் விரிசலுக்குக் காரணமாக உள்ளன.

இலங்கையின் வடக்கு-கிழக்கில் குவிக்கப்பட்டுள்ள இராணுவத்தை அகற்ற வேண்டும் என இந்தியாவும் அழுத்தம் கொடுத்து வருகின்றது-என்றுள்ளது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்க் கூட்டமைப்புக்கு ஆலோசனை வழங்கும் நிறுவனத்தில் இராணுவப் புலனாய்வு அதிகாரி

கொழும்பு,செப் 23

தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பினால் வாடகைக்கு அமர்த்தப்பட்ட மதியுரை நிறுவனத்தினுள், இலங்கை இராணுவப் புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பணிப் பாளரான பிரிகேடியர் றிஸ்வி சக்கி ஊடு ருவியுள்ளமையானது, தமிழர் நலனில் அக் கறை கொண்டுள்ளோர் மத்தியில் பெரும் அதிர்ச்சியை ஏற் படுத்தியுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்ட மைப்புக்கு மூலோபாய உத் திகள் தொடர்பாக ஆலோச னைகளை வழங்குவதற் காக, அண்மையில் 'வெறைற் றிசேர்ச்' (Verite Research) என்ற மதியுரை நிறுவனம் வாடகைக்கு அமர்த் தப்பட் டது.

வெளிநாட்டு இராஜதந் திரப் பின்னணி யுடனேயே, இந்த மதியுரை நிறுவ னத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பணிக்கு அமர்த்தியிருந்தது.

இந்தநிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் உடன்பாட்டைச் செய்து கொண்ட பின்னர், குறிப் பிட்ட நிறுவனம் இலங்கை இராணுவப் புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளராக இருந்த பிரிகேடியர் றிஸ்வி சக்கியைப் பணிக்கு அமர்த் தியுள்ளது.

பிரிகேடியர் றிஸ்வி சக்கி தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை ஒடுக்குவ தில் தீவிரமாகப் பங்கெடுத்த ஒருவராவார். இவர் 1990களில் கிழக்கில் இடம்பெற்ற தமிழர் களின் படுகொலைகள் மற்றும் காணாமற் போதல்களுடன் நேரடியாகத் தொடர்புடை யவராக இருந்தவர்.

யாழ்ப்பாணம் உள்ளிட்ட வடக்கிலும் இலங்கைப் புலனாய்வுப் பிரிவின் முக்கிய அதிகாரியாகச் செயற்பட்ட பிரிகேடியர் றிஸ்வி சக்கி, விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகிக்கப்பட் டவர்களின் கொலைகள், கடத்தல்களுக்குப் பொறுப்பாக இருந்தவர் எனக் கூறப்படுபவர்.

பாகிஸ்தானில் பயிற்சி பெற்ற இவர், இராணுவப் புலனாய் வுப் பணிப்பாளராக நியமிக்கப்படுவதற்கு முன்னர், பாகிஸ் தானில் உள்ள இலங்கைத் தூதரகத்தில் பாதுகாப்பு ஆலோசகராகவும் பணியாற்றியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

தமிழர்களின் படுகொலைகள் மற்றும் தமிழரின் விடுதலைப் போராட்டத்தை நசுக் குவதில் தீவிரமாகப் பங்கெடுத்த பிரிகேடியர் சக்கியை, குறிப்பிட்ட மதியுரை நிறுவனம் பணிக்கு அமர்த்தியுள்ளது, சந்தேகங்களை ஏற் படுத்தியுள்ளதுடன், தமிழர் நலனில் அக்கறை கொண்டுள்ளோர் மத்தியில் அதிர்ச் சியையும் ஏற்படுத்தியுள்ளது.

மேலும், இந்த மதியுரை நிறுவனத் துடன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உடன் பாடு செய்து கொள்வதில் பின்புலத்தில் இருந்த வெளிநாட்டு இராஜதந்திர வட் டாரங்களுக்கும் இது அதிர்ச்சியை ஏற்படுத் தியுள்ளது.

அதேவேளை பாகிஸ்தானுடன் நெருக் கமான பிரிகேடியர் சக்கி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு மதியுரை வழங்கும் நிறு வனத்தினுள் ஊடுருவியிருப்பது இந்தியா வுக்கும் அதிருப்தியை ஏற்படுத்தியுள் ளதாகவும் இராஜதந்திர வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.(த)

## வன்புணர்வு குற்றச்சாட்டில் இளைஞனுக்கு விளக்கமறியல்

திருநெல்வேலிப் பகுதியில் சிறுமி ஒரு வரை வன்புணர்வு செய்தார் என்ற குற்றச்சாட் டில் இளைஞர் ஒருவர் யாழ்ப்பாணம் பொலி ஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மல்லாகத்தைச் சேர்ந்த 14 வயதுச் சிறுமி வைத்தியசாலைக்கு சென்றுகொண்டிருந்த போது அவரை குறித்த இளைஞன் வன் புணர்வுக்கு உட்படுத்தினார் என சிறுமியின் பெற்றோர் பொலிஸாரிடம் முறைப்பாடு செய் ததையடுத்து திருநெல்வேலி கலாசாலை வீதியைச் சேர்ந்த இளைஞர் கைது செய் யப்பட்டு நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்பட்ட போது அவரை விளக்க மறி யலில் வைக்க உத்தரவு இடப்பட்டுள்ள தோடு சிறுமியை சிறுவர் நன்னடத்தைப் பாட சாலையில் அனுமதிக்கும் படியும் உத்தர விடப்பட்டது. (10 -86)

**கார் விற்பனைக்கு**

HZ-XXXX தொடரிலக்கமுடைய Proton Waja கார் விற்பனைக்கு
தொடர்பு:- 0772284336
(23250) (15-14)

**விற்பனைக்கு**

அலுவலகமென்றில் உபயோகித்த கதிரைகள் (Executive Chair, Midback Chair, Visitor Chair) அலுமாரிகள், T.V Stand, காப்பெட் (Carpet- US made), Display Tables, கேட்டின் (Cartain blinds) உட்கூரைக்கான ஜிப்சம் / Fiber ஓடுகள், AC 1200BRU அலுமினிய பாட்டிசன்கள் (Section bar / Box bar Partation) பெயர் பலகைக்கான பிறேம்கள், அலுமினிய கதவுகள், 29" Sony Waga TV, 21" Sony TV, குளிர்சாதனப் பெட்டி (Fridge) என்பன விற்பனைக்குண்டு
தொடர்பு:- 0752430841

**மீண்டும் யாழ் மண்ணில்**
**நல்லூர் கந்தன் Express**



யாழ்ப்பாணம் - கொழும்பு இடையேயான பஸ் பிரயாணம் வழமைபோல் நாளை முதல் இடம் பெறும் என்பதனை மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்

தொடர்புகள்
COLOMBO
0112445700
0771517407

Jaffna
0772208280
0779353052

(சி/3613) (15-14)

## மீனவர் சடலம் கரையொதுங்கியது

வடமராட்சி, செப்.23

பருத்தித்துறை கடற்பரப்பில் ஆணொருவரின் சடலம் ஒன்று நேற்று அதிகாலை கரையோதுங்கியுள்ளது. இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது நேற்று அதி காலை பருத்தித்துறை கடற்பரப்பில் மீன் பிடியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த தென் னிலங்கையைச் சேர்ந்த மீனவர்கள் குறித்த சடலம் கடலில் மிதப்பதை கண்டு உட னடியாக கடற்படையினருக்கு தகவல் வழங்கியுள்ளனர்.

சடலத்தை மீட்ட கடற்படையினர், அதை பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட பருத்தித்துறை பொலிஸாரால், கடந்த ஞாயிற்றுக் கிழமை வடமராட்சி கடற்பரப்பில் இருந்து மீன் பிடிக்க சென்ற வேளை காணாமல் போன சுப்பர்மடம் பகுதியைச் சேர்ந்த தியாக ராஜா தேவ ராஜா (வயது43) என்ற மீனவரின் சடலமே இதுவென அடையாளம் காணப்பட்டுள்ளது. சடலம் பருத்தித் துறை ஆதார வைத் திய சாலையில் ஒப் படைக்கப்பட்டுள் ளது. பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி திருமதி அன்ரலா மரண விசாரணைகளை மேற்கொண்டு வரு கிறார். (16-8)

## மணி விழா

உடுப்பிட்டி அமெரிக்கமிஷன் கல்லூரியின் மணி விழாவும் 'தர்ம மார்க் கம்' நூல் வெளியீ டும் நாளை பிற் பகல் 3 மணிக்கு கல் லூரியின் திறந்த வெளி அரங்கில் நடை பெறவுள்ளது.

க.சண்முகசுந்தரம் தலைமையில் நடை பெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மராட்சி வலயக் கல் வி[illegible] பணிப்பாளர் சி.நந்தகுமார கலந்து கொள்வார். (16)

**மரண அறிவித்தல்**

**சின்னத்தம்பி மகேந்திரன்**

(யாழ் போதனா வைத்தியசாலை)

தொல்புரத்தைப் பிறப்பிடமாகவும், தற்போது சுண்டுக்குழியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி மகேந்திரன் நேற்று (22.09.2012) சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

148, பழைய பூங்கா வீதி,
சுண்டுக்குழி,யாழ்ப்பாணம்.

தகவல்:
திருமதி மகேந்திரன்
(மனைவி).

**கண்ணீர் அஞ்சலி**



யாழ்.மாவட்ட சாரணர் சங்க உதவி மாவட்ட ஆணையாளர் திரு.சுபேதர் பெர்னாண்டோ (ஊடகவியல்) அவர்களின் மனைவி

திருமதி சுபேதர் ஆரோக்கியநாயகி டயஸ்

அவர்களின் மறைவையொட்டி துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கின்றோம்.

*யாழ்.மாவட்ட சாரணர் கிளைச்சங்கத்தினர்*
*யாழ்ப்பாணம்.*

(23239) (15-14)

**கண்ணீர் அஞ்சலி**

எமது பாடசாலை ஆசிரியர் சுபேதர் பெர்னாண்டோ அவர்களின் அன்பு மனைவி



திருமதி
**சுபேதர் ஆரோக்கியநாயகி ராஜிதா டயஸ்**

அவர்களின் அமரத்துவ செய்தி கேட்டு ஆழ்ந்த கவலையடைகிறோம். அவரது பிரிவால் துயருறும் கணவர் மற்றும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆன்மா சாந்தி யடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்,மாணவர்
யா/புனித சாள்ஸ் ம.வி.

யாழ்ப்பாணம். (சி/23225)(5-6-7)

**மரண அறிவித்தல்**



*திருமதி ஆரோக்கியநாயகி றாஜிதா சுபேதர்*

மன்னார் தாழ்வுப்பாட்டைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் அரியாலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஆரோக்கியநாயகி றாஜிதா சுபேதர் நேற்றுமுன்தினம் (21.09.2012) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் சுபேதர் பெர்னான்டோவின் (ஆசிரியர் - புனித சாள்ஸ் மகாவித்தியாலயம் யாழ்ப்பாணம் , சாரண உதவி மாவட்ட ஆணையாளர் (ஊடகம் Cateb officer) அன்பு மனைவியும் யா.மிக்கேல் டயஸ்-செபமாலை சோசை தம்பதியரின் பாசமிகு மகளும் ஸ்ரான்லி பெர்னான்டோ- மேரி ஜெசிந்தா (முன்னாள் ஊழியர் GTZ) தம்பதியரின் அன்பு மருமகளும், சுகந்தி, செலின்ரா, பிறின்சன், காமினி, யூனேஸ், கஜீதா, கிறீடன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் கிரேசியன், சுதாகரன், சுபாசினி, மேவின், நிஷாந்தினி, சுதர்சனன், றொஸ்னி- சிவமோகன், ஷெரில்-றெஜீவன் மிலாட் ஆகியோரின் அன்பு மைத்துனியும் சுகன்யா, சரன்யா, திவ்யா, செனோஜா, ஜோபிகா, விஜய், எபிஷா, அபியூத் ஆகியோரின் சிறிய தாயாரும் ரியாஷா, ஆன்சைலு, கரின்ஹி, டிபிக்ஷன், சஷேன் ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஆராதனைகள் இன்று (23.09.2012) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று நல்லூடல் யாழ் கொட்டடி பெந்தகோஸ்தே சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*58(120)AV 120AD*
*அரியாலை.*

*தகவல்*
*கணவர்.*

**மரண அறிவித்தல்**

***திருமதி காராளசிங்கம் றோசம்மா***



யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணை கலட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப் பிட மாகவும் கொண்ட திருமதி காரா ள சிங் கம் றோசம்மா நேற்று (22.09.2012) சனிக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை (கட்டட பரிசோதகர்) - இராசம்மா தம்பதியரின் மகளும், காலஞ் சென்றவர்களான கனகசபாவதி (கட்ட டப்பரிசோதகர்) நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற காராள சிங்கம் (கட்டட பரிசோதகர், கட்டட திணைக்களம்) அவர்களின் அன்பு மனை வியும், இந்திராணி, இராசலிங்கம், காலஞ் சென்ற இராசமலர் ஆகியோரின் அன்புச் சகோதரியும், சிகிந்திரன் சுரேஷ்குமார் (சிரேஷ்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, நோவூட்), அனுலா நிர்மலகுமாரி (ஓய்வுபெற்ற ஆசிரியை, யாழ்.இந்து மகளிர் கல்லூரி), றஞ்சித்குமார் (உதவிக்கணக்காளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, செற்சிரிபாய), சியாமினி (ஆசிரியை, யாழ்.வைத் தீஸ்வராக் கல்லூரி), குமுதினி, நந்தினி (முகாமைத்துவ உதவியாளர், யாழ்.மாந கரசபை), நந்தாக்கிருஷ்ணகுமார் (பொறியியலாளர், ஆஸ்திரேலியா) ஆகி யோரின் அன்புத் தாயும், பழனிமலை நாதன் (உதவிப் பணிப்பாளர், மாகாண கணக்காய்வுத் திணைக்களம்), குணரட்ணம் (நிர்வாக உத்தியோகத்தர், மாகாண வீதி, அபிவிருத்தி திணைக்களம்), மகேந்திரநாதன் (மகேந்திரன் ஸ்ரோர்ஸ், கோண்டாவில்), காலஞ்சென்ற விஜயகுமார் மற்றும் புஷ்பராணி, விஜயலட்சுமி, பாமினி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், சைல்லஜென் (பட் டதாரிப் பயிலுநர்), சாருஜா (விவசாயபீடம், யாழ்.பல்கலைக்கழகம்), பிரஜீவன் (நிறைவேற்றுப் பொறியியலாளர் New Valley Shelters ), அபிராம் (விவசாய முகாமைத்துவ தொழில்நுட்ப பீடம்- பெரதெனிய பல்கலைக்கழகம்), நிதர்சன் (இலங்கை வங்கி - வடமாகாண காரியாலயம்), நிஷ்மதா (ஹட்டன் நஷனல் வங்கி - சுன்னாகம்), திவாகரன் றம்யா (தேசிய கல்வியற் கல்லூரி - மட்டக்களப்பு), மாதுர்யா (மாணவி- யாழ்.இந்து மகளிர் கல்லூரி), ஜீவகன் (மாணவன் - யாழ் சென் ஜோன்ஸ் கல்லூரி), நிஷாங்கா (ஆஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

[illegible]லேன், கலட்டி,
[illegible]ணம்.

(23251)(3.14)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதவி வெற்றிடங்கள்

யாழ்.நகரில் அமைந்துள்ள எமது நிறுவனத்தில் பின்வரும் பதவிகளுக்கு வெற்றிடங்கள் உள்ளன.

- Project Officer (Male/ Female, Retired Principals and Teachers Preferable)
- English Teachers (Male/ Female)
- Trainee English Teachers (Male/ Female)
- Course Counselor (Female)

நேர்முகப் பரீட்சைக்கான பதிவுகளுக்கு 0777172660 உடன் தொடர்பு கொள்ளவும்.

International Knowledge Pool
No 19, Thanarajah Building (People's Bank),
Stanley Road,
Jaffna. (சி-23213)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கருகில் லோட்டன் ரோட்டில் 7 பரப்பு காணி வீட்டுடன் விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு-0777-825637/ 0722-422420, ragupk @ y mail.com (சி/3544)

## வாகனம் விற்பனைக்கு

Toyota டொல்பின் Original passenger van
62 - xxxx 110 Long Model Dual AC
Full seats 4 Door cut classed new face
கொழும்பு - 6ல் விற்பனைக்குண்டு.

**CONTACT - 077-3038063/077-3152710**

## காணி விற்பனைக்கு

திருநெல்வேலி மேற்கு, அம்மன் வீதி, பகுத்தறிவகம் ஒழுங்கையில் 2 பரப்புகாணி கிணற்றுப்பங்குடன் உடனடி விற்பனைக்குண்டு.
தொ.பே.: 021 222 5944 (சி/3102)(5-6-7)

## கடந்த வாரம் 142 பேர் பொலிசாரால் கைது

யாழ்ப்பாணம், செப்.23

கடந்த வாரம் மட்டும் பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடைய 142 பேர் கைது செய்யப் பட்டள்ளதாக யாழ்.மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஸ்ரீ.குகனேசன் தெரிவித்துள்ளார்.

யாழ். பொலிஸ் நிலையத்தில் நேற்று நடைபெற்ற ஊடவியலாளர் சந்திப்பின் போதுதே குகனேசன் இவ்வாறு தெரித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் பல்வேறு குற்றச் செயல்களில் ஈடுபட்ட மற்றும் நீதிமன்றங்களில் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட குற்றவாளிகளே இவ்வாறு கைது செய்யப் பட்டுள்ளனர்.

இதில் நீதிமன்றங்களில் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 65 பேரும், மதுபோதையில் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டில் 52 பேரும், அனுமதிப்பத்திரமின்றி மது விற்பனையில் ஈடுபட்ட 12 பேரும், மது போதையில் வாகம் செலுத்திய 8 பேரும், போதைப் பொருள், கஞ்சா விற்பனையில் ஈடுபட்ட 5 பேரும், மற்றும் மாடுகளவாகப் பிடித்த ஒருவருமாக சுமார் 142 பேரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## காணி தேவை

பளை இயக்கச்சி பகுதிகளில் A-9 றோட்டுக்கு அருகில் அமைந்துள்ள உறுதியுடன் கூடிய காணிகள் (25-50 ஏக்கர்) தேவை. தொடர்பு கொள்ளவும். 0770-648160 தரகர்கள் தேவை இல்லை. (சி/3546)

## மணமகள் தேவை

யாழ்.இந்து சைவ போசனம் 1977 ஆம் ஆண்டு கார்த்திகை நட்சத்திரம் (பாவம் 21) கனடாவில் PR உள்ள மணமகனுக்கு அழகிய மணமகள் தேவை.

தொடர்பு;
விளம்பர இல 4402,
C/O உதயன்,
361, கஸ்தூரியார் றோட், யாழ்ப்பாணம். (சி-23220)

# உங்கள் பொறியியல் கனவை நனவாக்கும்...

சர்வதேச அங்கீகாரம் பெற்ற

# பொறியியல்

## கற்கை நெறிகள்



**Civil Engineering**

**Quantity Surveying**

**Electrical & Electronics**


**Motor Vehicle**

**Mechanical**



Electrical & Electronics
கற்கைநெறி 30 ஆம் திகதி ஆரம்பமாக இருப்பதால்
உங்கள் பதிவுகளுக்கு முந்திக்கொள்ளுங்கள்

நீங்கள் எந்த நிலையில் இருக்கின்றீர்கள்?




**0214 666 699**
**0771 067 394**

### எமது மாணவன் தொழில் பெற்ற கதை...

"யாழ் பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்று கொண்டிருக்கும் நான் கடந்த நவம்பர் மாதம் உதயன் பத்திரிகையில் வந்த City & Guilds விளம்பரத்தைப் பார்த்து Diploma in Civil Engineering கற்கை நெறியில் என்னை இணைத்துக் கொண்டேன். மொத்தமுள்ள 6 பாடங்களில் கடந்த June மாதம் நடை பெற்ற பரீட்சையிலே 3 பாடங்களில் தோற்றி இரண்டு பாடங்களில் 'Distinction' தரமும் ஒன்றில் 'Merit' தரத்தினையும் பெற்றுக் கொண்டேன். எஞ்சிய பாடங்களை டிசம்பர் மாதம் தோற்றுவதற்கு தயாராகி வருகின்றேன்.

இந்த நிலையில் இங்குள்ள வெளிநாட்டு NGO ஒன்றில் Field Supervisor பதவிக்கு வெற்றிடம் இருப்பதை அறிந்து அதற்கு விண்ணப்பித்து, நடத்தப்பட்ட நேர்முகத்தேர்வில் நான் தேர்வு செய்யப்பட்டேன். இங்கு குறிப்பிடத்தக்க விடயம் என்னவென்றால் நான் படித்த 3 பாடங்களில் பெற்ற பெறுபேறுகளின் அடிப்படையில் அவர்கள் என்னை தெரிவு செய்தமைதான். இன்று கவர்ச்சிகரமான சம்பளத்துடன் தெல்லிப்பளையில் நடைபெறும் Housing project ஒன்றில் Field supervisor ஆக பணியாற்றுகின்றேன்.

இதே துறையில் Advanced Dip மற்றும் Graduate Dip முடித்து இச் சமுகத்தில் ஒரு Civil Engineer ஆக வருவதே எனது வாழ்வின் இலட்சியமாக காணப்படுகின்றது"

ஜெயந்தன்
யாழ்ப்பாணம்

SMS மூலம் விபரங்களைப் பெற ..
உங்கள் (Name) (Address) (Course) போன்ற விபரங்களை Type செய்து 0777 762 283 க்கு SMS செய்யுங்கள்.

City & Guilds Approved Centre
Approved Center

SCOT

## SKILLS COLLEGE OF TECHNOLOGY

| Nugegoda Campus | Kurunegala Campus | Kandy Campus | Jaffna Campus |
|---|---|---|---|
| No. 102, Stanley Thilakarathna Mw, | No. 252, Puttalam Rd, | No. 511, Peradeniya Road, | No. 207, Navalar Road, |
| Nugegoda. | Kurunegala. | Kandy. | Jaffna. |
| 011 4 696 896 | 037 3 616 868 | 081 4 951 522 | 021 4 666 699 |
| scot@skillsinternational.lk | kurunegala@skillsinternational.lk | kandy@skillsinternational.lk | jaffna@skillsinternational.lk |

## சிறுமியை கடத்திய இளைஞனுக்கு விளக்கமறியல்

ஆனைக்கோட்டை சாவற்காடுப் பகுதியில் 15 வயதுச் சிறுமியை கடத்திய குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் மானிப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சிறுமியை காணவில்லை என அவரின் தாயார் பொலிஸில் முறையிட்டுள்ளார். இதனைஅடுத்து விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் சந்தேகத்தின் பேரில் குறித்த இளைஞனை கைது செய்துள்ளனர்.

இதனை அடுத்து குறித்த சிறுமியையும் இளைஞனையும் சட்ட அதிகாரி முன்னிலையில் ஆஜர் படுத்தப்பட்டதைத் தொடந்து விசாரணைகளின் பின்னர் சிறுமியை சிறுவர் நன்னடத்தை பள்ளியிலும், இளைஞனை விளக்கமறியலில் வைக்கவும் சட்ட அதிகாரி உத்தரவிட்டார். குறித்த இளைஞனை தொடர்ந்தும் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். (86)

உதயன் விளம்பரத் தொடர்புக்கு-
advt@uthayan.com
0215671111

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# மக்கள் நலத் திட்டங்கள் அவர்களைச் சென்றடைய...

சமூக சேவைகள் அமைச்சின் வேலைத் திட்டங்கள் எவை, அவற்றால் பொதுமக்கள் அடையத் தக்க நன்மைகள் எவை, என்பது குறித்து வடக்கு, கிழக்கு மக்களிடத்தில் போதிய அறிவு இல்லை. அமைச்சின் வேலைத் திட்டங்களை அறிந்து கொள்வதில் அவர்கள் ஆர்வம் காட்டுவதும் மிகமிகக் குறைவு. குறிப்பிட்ட அமைச்சு ஆற்றும் பணிகளால் என்னென்ன நன்மைகளைத் தாம் பெற்றுக்கொள்ளலாம் என்பது குறித்த தகவல்களை அறிந்து வைத்திருப்பதிலும் அவர்களிடம் உரிய அக்கறையும் இல்லை எனலாம்.

அதனால் சமூக சேவைகள் அமைச்சின் மக்கள் நலன் நாடிய திட்டங்களை இரண்டு மாகாணங்களிலும் முன்னெடுப்பதில் பல சிரமங்களை எதிர்நோக்க நேரிடுகிறது.

இவ்வாறு கவலை வெளியிட்டிருக்கிறார் சமூக சேவைகள் அமைச்சின் புதிய செயலாளர் திருமதி இமெல்டா சுகுமார். யாழ்ப்பாணம் அரச செயலகத்தில் அண்மையில் அவர் சார்ந்த அமைச்சின் ஏற்பாட்டில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே-

வடக்கு, கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த மக்களுக்கு, மிகக் குறிப்பாக முதியவர்களுக்கு சமூக சேவைகள் அமைச்சின் ஊடாகத் தாம் பெறக்கூடிய பயன்கள், நன்மைகள் குறித்த விவரங்கள் தெரிவதில்லை - என்று செயலாளர் இமெல்டா சுகுமார் கவலை வெளியிட்டார்.

அரசாங்கத்திடமிருந்து மக்களுக்கு, மிகக் குறிப்பாக முதியவர்களுக்கு, வாழ்வாதார வசதிகள் இல்லாதவர்களுக்கு, உதவும் திட்டங்கள் குறித்து, அவற்றைப் பெறுவதற்குத் தகுதியானவர்களுக்குத் தெரியப்படுத்துவதில் அதன் மூலகர்த்தாக்களான அமைச்சினதும் அமைச்சின் அதிகாரிகளினதும் பொறுப்பே மிகப் பெரிய அளவினதாகும்.

மக்களின் வரிப் பணத்தில் தாம் பெறும் ஊதியத்தை, சம்பளத்தை மனதில் கொண்டாவது, அரச சேவையாளர்கள் மக்களுக்குச் சேர வேண்டிய, அவர்களுக்கு நலன் செய்யும் அரச திட்டங்கள், செயற்பாடுகளை உடனுக்குடன் அறியப்படுத்த வேண்டும்.

அதேவேளை –

மக்களும் தமக்கு அரசு செய்யும் நலத் திட்டங்களை அறிந்துகொள்வதில் ஆர்வம் கொள்வதும், புதிதாகத் தமக்குப் பயன்படக் கூடியவற்றைத் தெரிந்துவைத்துக் கொள்வதும் அவசியமே.

மக்கள் நலன் கொண்ட பொதுத் திட்டங்கள் மக்களில் ஒரு சாராரை, ஒரு பகுதியினரை, ஒரு மாவட்டத்தினரை மனதில் வைத்துத் தீட்டப்படுவது மிகமிகக் குறைவு எனலாம். பல சந்தர்ப்பங்களிலும் வடக்கு, கிழக்குத் தவிர்ந்த ஏனைய மாகாணங்களுக்கு விசேட திட்டங்கள், வாக்குவங்கியை மனதில் கொண்டு தீட்டப்படுவதும், செயலாக்கப்படுவதும் நடைமுறையாகிவிட்டது; இயல்பானதாக மாற்றப்பட்டு விட்டது!

எதற்கும் வடக்கு, கிழக்கு வாழ் மக்கள் மத்தியில் தத்தமது தலைமை அமைச்சுகளுடன் நெருங்கிய தொடர்புகளை, உறவுகளை இறுக்கமாக வைத்துக்கொள்வதில் குறிப்பிட்ட இரண்டு மாகாணங்களிலும் பணிபுரியும் அதிகாரிகளே தங்கள் காதுகளை கூர்மையாக்கிக் கொள்வது அவசியம்.

இல்லையேல், தம்மைச் சார்ந்த மக்களுக்கு, சகோதர சகோதரிகளுக்கு, அரசாங்கத்தினூடாகக் கிடைக்கக் கூடிய உதவித் திட்டங்களை, நற்பயன்களை அவர்களுக்குச் சேரவிடாமல் தடுத்த பாவம் தென்னிலங்கை அரசியல் தலைவர்கள், அங்கு பணிபுரியும் பெரும்பான்மை இனத்தவரை விடவும் சொந்த மாகாண அதிகாரிகளையே தேடிச் செல்லும்.

நாட்டு மக்களின் சமூக நலன்சார்ந்த செயற்பாடுகளில் ஈடுபட்டு வரும், அரச திணைக்களங்களில் சுகாதாரத் திணைக்களம், பொலிஸ் திணைக்களம், சமூக சேவைத் திணைக்களம் ஆகிய மூன்றும், முதல் வரிசையில் வகுக்கப்படத் தக்கவை எனக் கொள்ளலாம்.

சமூக சேவைகள் அமைச்சின் வேலைத் திட்டங்களின் பிரகாரம்-

*விசேட தேவை உடையவர்களுக்கு வீடுகளை நிர்மாணிப்பதற்கு என இரண்டரை லட்சம் ரூபா வரையிலும், சுயதொழில் முயற்சிகளை மேற்கொள்வதற்காக இருபத்தையாயிரம் ரூபா வரையிலும் வழங்குவதற்கு அது நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

*எழுபது வயதுக்கு மேற்பட்டவர்களில், அரசு நிர்ணயித்த பிரகாரம் தகுதியுடையோர் மாதாந்தம் ஆயிரம் ரூபா பெற வகை செய்யப்பட்டுள்ளது.

ஆயினும் இந்தத் தகவல்கள் யாழ்ப்பாண மாவட்டத்தில் சிறு வீதத்தினர் காதுகளை மட்டுமே எட்டியிருப்பதாகச் சொல்லப்படுகிறது. அவ்வாறிருக்க கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா மாவட்டங்களில் தகவல் தெரிந்தோர் எண்ணிக்கை மிகக் குறைவாக இருக்கும் என்பதனைக் கணக்கில் வடித்துக் கூற வேண்டியதில்லை.

கிழக்கில் இத் தகவல்கள் பட்டி, தொட்டிகளை எட்டியிருக்கும் என்று எதிர்பார்க்கவும் முடியவில்லை.

*இன்னொரு புறத்தில் நோக்கினால் மூன்று தசாப்தங்களுக்குப் போரினால் பாதிக்கப்பட்ட மக்களை அவர்களின் முந்தைய வாழ்க்கை மட்டத்துக்குக் கொண்டு வருவதற்கு துரித திட்டங்கள் தேவை. அவர்கள் சராசரி, சாதாரண வாழ்க்கை நிலையிலிருந்து அதள பாதாளத்திற்குள் தள்ளப்பட்டுள்ளனர். அவர்களில் மிகப் பலர் எந்தவித வாழ்வாதார உதவிகளும் கிட்டாத கையறு நிலையில், ஏதிலிகளை விட மிக மோசமான வாழ்க்கை நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளனர்.

*குடும்பத்தில் பிள்ளைகளின் உதவிகள் எதுவும் இல்லாதவர்களாக, குடும்பத் தலைவர்களைப் போரிடம் பறிகொடுத்தவர்களாக, அதனால் பறித்து எடுக்கப்பட்டவர்களாக, இளம் விதவைகளாக, தமது பிள்ளைகளின் உணவு, உடை போன்ற வாழ்வாதார, நாளாந்த அடிப்படைத் தேவைகளைத் தானும் பூர்த்திசெய்ய முடியாதவர்களாக, அரை வயிற்றுக்குக் கஞ்சி வழங்க முடியாதவர்களாக, வாழக்கையின் ஓரத்துக்குத் தள்ளிவிடப்பட்டு அல்லாடுகிறார்கள்.

இத்தகைய ஒரு சூழலில், நாட்டின் ஏனைய பகுதிகளை விட, வடக்கு, கிழக்கு மாகாணங்களிலேயே சமூக சேவைகள் அமைச்சின் காலத்திற்கு ஏற்ற, தேவைகளுக்கு ஏற்ற பலவகையான துரித சேவைத் திட்டங்கள் தேவைப்படுகின்றன.

மனிதாபிமான மனிதநேயப் பின்புலங்களைக் கொண்ட குறுகிய கால, நீண்டகாலத் திட்டங்களை வகுத்து வகைப்படுத்தினால் மட்டுமே அவை பாதிக்கப்பட்டவர்களுக்குப் பயன்தரும்.

வெறும் திட்ட மொழிவுகளையும், திட்டங்களையும் செயல்வடிவாக்கி, பாதிப்புற்ற மக்கள் தளத்துக்குக் கொண்டு செல்வதற்கு அரசாங்கமும் அதிகார மட்டத்தினரும் ஒன்றிணைந்து மனமொன்றிச் செயற்பட வேண்டும். அதற்கு இன்னும் எத்தனை காலம்தான் செல்லும்? இது பொறுத்திருந்து பார்க்கும் வகை சார்ந்தது அல்லவே!



# கல்விக்கான நிதி ஒதுக்கீட்டை வெட்டும் செயலுக்கு எதிரான பரந்த போராட்டத்துக்குத் தயாராகுங்கள்

## இலங்கை ஆசிரியர் சங்கத்தின் 55 ஆவது மாநாட்டில் கோரிக்கை

வவுனியா, செப்.23

கல்வித்துறைக்கு முழுத்தேசிய உற்பத்தியில் 6 வீதம் ஒதுக்கப்பட வேண்டும் என்ற சர்வதேச நியமம் உள்ள நிலையில் அரசு அதற்காக 5.8 வீத நிதியையே ஒதுக்கியது.

இதற்கு எதிராக பல்கலைக்கழக விரிவுரையாளர் சம்மேளனம் முன்னெடுத்து வரும் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவிக்கும் இந்த மாநாடு கல்விக்கான ஒதுக்கீட்டை வெட்டும் செயலுக்கு எதிராக சகல சக்திகளையும் ஒன்று திரட்டி பரந்த போராட்டத்துக்குத் தயாராக வேண்டும் என வலியுறுத்தி நிற்கிறது.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் 55 ஆவது மாநாட்டின் மத்திய குழுவின் கோரிக்கையில் இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த மாநாட்டில் மேலும் விடுக்கப்பட்ட கோரிக்கைகள் வருமாறு:-

ஆசிரியர், அதிபர் சம்பளக் குறைபாடுகளை நீக்குவதற்காக இலங்கை ஆசிரியர் சங்கம் வேறு 9 ஆசிரியர், அதிபர் சங்கங்களுடன் ஒன்றாக இணைந்து நடத்திய மாநாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்ட 13 கோரிக்கைகளை வென்றெடுப்பதற்காக கல்வி அமைச்சுக்கு முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியது.

அப்படியிருக்கும் போது அதிகாரிகள் இது சம்பந்தமாக மௌனமாக இருப்பதற்கு எதிர்ப்பை தெரிவிக்கும் இந்த மாநாடு இந்தக் கோரிக்கைகளை வென்றெடுப்பதற்காக பரந்து பட்ட வேலை நிறுத்தம் வரையிலான போராட்டங்களை முன்னெடுக்க முன்மொழிகிறது.

போர் முடிவுற்றதாக அரசு அறிவித்த பின்னரும் வடக்கு, கிழக்கு ஆசிரியர்களின் சேவை சம்பந்தமான பிரச்சினைகள், இடமாற்றங்கள், பதவியுயர்வு விடயங்கள் ஆகியனவுடன் அழிக்கப்பட்ட சுயவிவரக் கோவைகளை உருவாக்கல், ஆசிரியர்களுக்கான வீட்டு வசதிகள் போன்ற பிரச்சினைகள் அப்படியே இருக்கின்றன. இந்த நிலையில் ஆசிரியர்களைத் துன்புறுத்தும் விதமாக அதிகாரிகள் நடந்து கொள்வதை இந்த மாநாடு கண்டனம் செய்கிறது.

தொழிற் பிரச்சினைகளைப் போல, போரினால் இடம் பெயர்ந்த காலத்துக்கான விசேட விடுமுறையை அங்கீகரித்தலுடன், அழிக்கப்பட்ட உடைமைகளுக்கான நஷ்ட ஈட்டை செலுத்துதல், இறந்த ஆசிரியர்களுக்கு அக்கிரஹார காப்புறுதி உட்பட ஏனைய நட்ட ஈடுகளை இடையூறுகள் இன்றி பெற்றுக் கொள்ள அவசியமான வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும்.

பாடசாலைப் பரீட்சைகள் நடைபெறும் காலங்களில் தங்களின் அரசியல் தேவைகளுக்காக தேர்தல்களை நடத்தி பிள்ளைகளின் கல்விக்கு தீங்கு விளைவிக்கும் செயலைக் கண்டிக்கிறோம்.

பிள்ளைகளின் கல்வி உரிமையை ஆட்சியாளரின் அரசியல் செயல்முறைகளுக்காக நசுக்குவதை உடன் நிறுத்துமாறு இந்த மாநாடு வலியுறுத்துகிறது.

பாடசாலைகளில் பிள்ளைகளை அனுமதிக்கும் போதும் வேறு சந்தர்ப்பங்களிலும் பணம் அறவிடுவது தவிர்க்கப்பட வேண்டும் என பல்வேறு சுற்று நிருபங்களின் ஊடாக விளக்கமாக அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இலவசக் கல்விக்கான உரிமையை உறுதி செய்யும்படி இந்த மாநாடு வலியுறுத்துகிறது.

தேசிய ஆசிரியர் இடமாற்றக் கொள்கையை வெளிப்படையாக மீறி தேசிய பாடசாலை ஆசிரியர் இடமாற்றச் சபையைக் கூட்டாது கல்வி அமைச்சரும் செயலாளரும் தங்களின் விருப்பின் படி அரசியல் தேவைகளைப் பூர்த்தி செய்யும் முகமாக செயற்படுத்தும் இடமாற்றங்களை இந்த மாநாடு எதிர்க்கும்.

இதற்காக ஊக்கம் கொடுக்கும் சக்திகளைத் தோற்கடித்து சகல இடமாற்றங்களையும் இடமாற்ற சபையினூடக முறையாக செயற்படுத்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் போன்ற பல்வேறு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

(ம-400)

# பொதுச் செயலராக மீண்டும் ஸ்டாலின்

வவுனியா, செப்.23

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளராக ஜோசப் ஸ்டாலின் மீண்டும் தெரிவு செய்யப்பட்டார். இலங்கை ஆசிரியர் சங்கத்தின் 55 ஆவது பேராளர் மாநாடு நேற்று முன்தினம் வவுனியா முத்தையா மண்டபத்தில் இடம்பெற்றது.

சங்கத்தின் தலைவர் எஸ்.பி.பெர்ணான்டோ தலைமையில் இடம்பெற்ற இந்த மாநாட்டுக்கு இலங்கையின் அனைத்து பகுதிகளையும் சேர்ந்த பெரும் எண்ணிக்கையான ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

இந்த மாநாட்டில் ஒவ்வொரு மாவட்ட ரீதியாக ஆசிரியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராயப்பட்டதுடன் ஆசிரியர்களின் எதிர்கால நலன் கருதி பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

தொடர்ந்து 2012/ 2013 ஆம் ஆண்டுகளுக்கான புதிய நிர்வாகத் தெரிவு இடம்பெற்றது. இதில் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் தலைவராக எஸ்.பி.பெர்ணான்டோ, பொதுச் செயலாளராக ஜோசப் ஸ்டாலின், பொருளாளராக எஸ்.ரி.நிசாந்த ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

உபதலைவர்களாக ஈ.ஜே.லெஸ்லா, வை. ரீம்தின் மற்றும் வசந்தி திசாநாயக்க ஆகியோர் போட்டி இன்றி ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டனர்.

(ம-400)

# சமுர்த்திக் கொடுப்பனவு நேர்முகத் தேர்வு

ஜி.சீ.ஈ.சாதாரண தரப் பரீட்சையில் அதி கூடிய பெறுபேறுகள் பெற்ற சமுர்த்தி முத்திரை பெறும் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு சமுர்த்தி புலமைப் பரிசில் நிதி வழங்குவது தொடர்பான நேர்முகப் பரீட்சை தென்மராட்சியில் நாளை திங் கட்கிழமை காலை 9 மணிக்கு பிர தேச செயலகத்தில் இடம் பெறும்.

சமுர்த்தி அதிகார சபையின் ''சிப்தொர'' புலமைப் பரிசில் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்படும் மாணவர்களுக்கு உயர்தரக் கல்வி பெறும் இரண்டு வருடங்களுக்கு மாதாந்தம் தலா ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ம-9)

# மஹிந்தரின் கவர்ச்சியில் மயங்கியுள்ளார் ஹக்கீம்

## மாநகரசபை முன்னாள் உறுப்பினர் நிஷாந்தன் காரசாரம்

மஹிந்தரின் கவர்ச்சியில் தமிழ் மக்களை மட்டுமன்றி முஸ்லிம் மக்களையும் ஏமாற்றித்தன்னையும் ஏமாற்றி மயங்கிப் போயுள்ளார் ஹக்கீம்.

இவ்வாறு யாழ் மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர் எஸ். நிஷாந்தன் அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதிகூடிய வாக்குகளைப் பெற்றிருந்த போதும் வாக்கு எண்ணும் நிலையங்களில் அரச தரப்பால் பல வாக்கு மோசடி சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. இது பற்றி எம் மக்கள் நன்கு அறிந்துள்ளனர்.

எனினும் தமிழ் மக்களும், முஸ்லிம் மக்களும் சரியான ஒரு கொள்கைக்காகவும், உரிமைகளுக்காகவும் நன்கு சிந்தித்து தமது வாக்குகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கும் அளித்திருந்தார்கள்.

இதன் மூலம் தமிழ் தேசியக் கூட்டமைப்பும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸும் இணைந்து ஒரு நல்லாட்சி உருவாகும் என இவ்விரு சமூகத்தினரும் கடைசிவரை ஆவலுடன் எதிர்பார்த்து கொண்டிருந்தார்கள். ஆனால் முடிவு தலைகீழாக மாறியது.

இந்த அரசு பொய்யானது. சிறுபான்மை இன மக்களை ஒடுக்கி ஆளுகின்றது. எமது நிலங்களை சூறையாடுகின்றது என இன்னும் பல காரணங்களை பல மேடைகளிலும், ஊடகங்களிலும் பறைசாற்றி மக்களை நம்பவைத்து வாக்குகளைப் பெற்று வெற்றியீட்டிய ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ஹக்கீம், இன்று தமது முஸ்லிம் மக்களையும், சகோதர தமிழ் மக்களையும், முஸ்லிம் காங்கிரஸின் பழைய புதிய கட்சித் தொண்டர்கள், அமைப் பாளர்கள் போன்ற எல்லோரையும் எம்மோடு சேர்ந்து ஆட்சி அமைப்பார்கள் என கடைசிவரை நம்பியிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் ஏமாற்றி மஹிந்தவின் கவர்ச்சியில் மயங்கி அற்ப சலுகைகளுக்காக அரசுடன் இணைந்து ஆட்சி அமைத்துள்ளார். இதனால் எம் சமூகத்தினருக்கு பெரும் துரோகம் இழைத்துள்ளார். இதன் பின் விளைவுகள் பல இருந்தாலும் முக்கியமாக தமிழ் முஸ்லிம் மக்களின் உறவுகளுக்கு முற்றுப்புள்ளி வைத்தார் என்றுதான் கூறமுடியும்.

எதிர்வரும் காலங்களில் தமிழ் முஸ்லிம் பிரதேசங்களில் சிங்களக் குடியேற்றம் மிக துரிதமாக நடைபெறப்போகின்றன. கோயில்கள், பள்ளிவாசல்கள் இடிக்கப்பட்டு பௌத்த விகாரைகளாக மாறும் சந்தர்ப்பத்தையும் நாட்டின் இனப் பிரச்சினை இடப்பிரச்சினை தொடர்பாக எமது அரசோடு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இவர்களுக்கு ஆதரவாக பல சர்வதேச வல்லரசு நாடுகளும் பேச்சுக்களை நடத்திவரும் இந்த வேளையில் விரைவில் ஒரு முடிவு கிடைக்கும்.- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.(ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவிகள், இளம் யுவதிகளை இம்சைப்படுத்தும் இளைஞர் குழு

## மன்னார் உப்புக்குளத்தில் காலை, மாலை வேளைகளில் அடாவடி தட்டிக் கேட்க எவருமில்லையா என மக்கள் விசனம்

மன்னார், செப்.23

மன்னார், உப்புக்குளம் வடக்கு பிரதான வீதியில் கூடுகின்ற இளைஞர் குழுவொன்றினால் பாடசாலை மாணவிகளும், இளம் பெண்களும் இம்சைப்படுத்தப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மன்னார் உப்புக்குளம் வடக்கு பிரதான வீதியில் அமைந்துள்ள தொலைத்தொடர்புக் கோபுரத்திற்கு முன் காலை மற்றும் மாலை நேரங்களில் ஒன்று கூடுகின்ற இளைஞர் குழு அவ்வழியால் செல்லுகின்ற பாடசாலை மாணவிகளுடனும், இளம் பெண்களுடனும் தகாத முறையில் நடந்து கொள்வதோடு பலவந்தமாகத் தொலைபேசி இலக்கங்களைக் கேட்பதாகக் குறித்த பகுதி மக்களும் சம்பவத்தை நேரில் பார்த்தவர்களும் தெரிவிக்கின்றனர்.

மன்னார் உப்புக்குளம் வடக்கு பிரதான வீதியில் தொலைத்தொடர்புக் கோபுரம் ஒன்று அமைந்துள்ளது. இதற்கு சற்று அருகில் பல கடைகளைக் கொண்ட கடைத் தொகுதி ஒன்றும் உள்ளது.

குறித்த பகுதிக்குக் காலை மற்றும் மாலை நேரங்களில் வரும் இளைஞர் குழு ஒன்று அப்பகுதியால் செல்லும் பாடசாலை மாணவிகளையும், யுவதிகளையும் இம்சைப்படுத்துகின்றனர் என்று பலரும் முறைப்பாடு தெரிவிக்கின்றனர்.

அதனைத் தட்டிக்கேட்பவர்களைக் குறித்த இளைஞர்கள் அச்சுறுத்துவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

காலை நேரங்களில் இந்தக் குழுவினர் பாடசாலை மாணவிகளுடன் தகாத முறையுடன் நடந்து கொள்வதோடு குறித்த மாணவிகளைப் பின் தொடர்ந்து பாடசாலை வரை செல்லுகின்றனர்.

மாலை 5 மணியளவில் மீண்டும் அவ்விடத்திற்கு வரும் இந்தக் குழுவினர் குறித்த கடைகளுக்கு முன்பாக நின்று மாலை நேர வகுப்புக்கள் முடிந்து வரும் மாணவிகளுடன் தகராறு புரிவதுடன் குறித்த மாணவிகள் பயணிக்கும் சைக்கிளையும் இடைமறிப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இரவு 8 மணிவரை இந்த இளைஞர் குழுவினர் அவ்விடத்தில் நின்று பெண்களுடன் வன்முறையில் ஈடுபடுகின்றனர்.

இவர்கள் மது அருந்திவிட்டுச் சத்தமிடுவதாகவும் அப்பகுதி மக்கள் மேலும் தெரிவிக்கின்றனர்.

இந்த இளைஞர் குழுவினால் அப்பகுதி மக்களும், அப்பகுதியூடாக வீடு செல்லும் பெண்களும் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

எனவே மன்னார் பொலிஸார் இதில் தலையிட்டு குறித்த இளைஞர் குழுவினரைக் கைது செய்து சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டுமென அப்பகுதி மக்களும் பாதிக்கப்பட்டவர்களும் சம்பவத்தை நேரில் பார்த்தவர்களும் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-12)

# குடிதண்ணீருக்குச் சிரமப்படும் புதுக்குடியிருப்பு பிரதேச மக்கள்

## கிணறுகள் பல பாவிக்க முடியாத நிலை

முல்லைத்தீவு, செப்.23

புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவின் பல கிராம சேவகர் பிரிவுகளிலுள்ள கிணறுகள் துப்புரவு செய்து வழங்கப்படாததால் மக்கள் குடிதண்ணீருக்கு அவதிப்படுகின்றனர்.

இறுதிக்கட்டப் போரின் போது இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியிருந்த புதுக்குடியிருப்புப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மந்துவில் தவிர்ந்த அனைத்துப்பகுதிகளிலும் மக்கள் மீள்குடியமர்த்தப்பட்டுவிட்டனர்.

இப்பகுதியில் காணப்பட்ட குடிதண்ணீர்க் கிணறுகள் பலவற்றையும் போர் காரணமாக மக்கள் பயன்படுத்தாது கைவிட்டதால் பாவனைக்குதவாது சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றன.

சர்வதேச அரசசார்பற்ற நிறுவனத்தினர் மற்றும் மிதிவெடி அகற்றும் குழுவினர் பெரும்பாலான கிணறுகளை இறைத்துத் துப்புரவு செய்து வழங்கினர்.

ஆனால் அண்மையில் மல்லிகைத்தீவு, புதுக்குடியிருப்பு 9 ஆம் வட்டாரம், 10ஆம் வட்டாரம், ஆனந்தபுரம் ஆகிய பகுதிகளில் மக்கள் மீளக்குடியமர்த்தப்பட்ட போதும் அப்பகுதியிலுள்ள கிணறுகள் துப்பரவு செய்து கொடுக்கப்படவில்லை.

இறுதிக் கட்டப் போரின் போது கடும் சண்டை இடம்பெற்ற இப்பகுதியில் வெடிகுண்டுகளின் இரசாயனப் பொருள்கள் குடிதண்ணீரில் கலந்திருக்க வாய்ப்புக்கள் காணப்படுவதாகவும், வேறு வழியின்றி நதக் கிணறுகளுக்குக் குளோரின் இட்டுப் பயன்படுத்த வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாகவும் இப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

புதுக்குடியிருப்புப் பிரதேச சபையின் பவுசர் மூலம் நீரை வழங்கிய போதும் அது சீராக வழங்கப்படுவதில்லை எனவும் மக்கள் தெரிவிக்கின்றனர். (க-400)

# விசுவமடு மகா வித்தியாலயத்தில் பரிசளிப்பு விழாவும் சஞ்சிகை வெளியீடும்

முல்லைத்தீவு, செப்.23


விசுவமடு மகா வித்தியாலயத்தின் வருடாந்தப் பரிசளிப்பு விழாவும், விஸ்வநாதம் சஞ்சிகை வெளியீடும் கடந்த 20 ஆம் திகதி இடம்பெற்றுள்ளன.

பாடசாலை அதிபர் பி.பாலகிருஷ்ணன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வுகளில் யாழ்.பல்கலைக் கழக முதுநிலைத் தமிழ் விரிவுரையாளரான ம. ரகுநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

இந்தப் பாடசாலைகளில் கல்வி பயின்று சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவமாணவியர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்பட்டன.

பரிசில்களைப் பிரதம விருந்தினர் வழங்கினார்.

இந்த நிகழ்வுகளில் முல்லைத்தீவு அரச அதிபர் நா.வேதநாயகன், வலயக் கல்விப் பணிப்பாளர் கோ.வரதராஜமூர்த்தி, புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் சி.ஜெயக்காந்த், வலயக் கல்வி அலுவலகத்தின் கணக்காளர் ஸ்ரீதரன், விசுவமடு இராணுவக் கட்டளைத் தளபதி தனங்கல, பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (க-500)



மல்லாவி மத்திய கல்லூரியில் இடம்பெற்ற சிறுவர்களின் உரிமைகள் தொடர்பான கருத்தரங்கில் கலந்து கொண்ட மாணவ, மாணவிகள். (க-18)

# 49 குடும்பங்கள் மட்டுமே கேப்பாபிலவில் மீள்குடியமர்வு

## இன்னும் 115 குடும்பங்கள் நிர்க்கதி

முல்லைத்தீவு, செப்.23

முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த கேப்பாபிலவு மக்கள் நேற்று முன்தினம் தமது சொந்த இடங்களில் மீள்குடியமர அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இறுதிக்கட்ட போர் இடர்களால் இடம் பெயர்ந்து மெனிக்பாம் ஆனந்த குமாரசாமி, கதிர்காமர் நலன்புரி நிலையங்களில் தங்கியிருந்த சுமார் 49 குடும்பங்களே இவ்வாறு மீள்குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

இவர்கள் அனைவரும் நலன்புரி நிலையங்களில் இருந்து அழைத்து வரப்பட்டு, வற்றாப்பளை மகா வித்தியாலயத்தில் தங்க வைக்கப்பட்டனர். அங்கு வைத்து மீள்குடியமர்வுப் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு உலர் உணவு மற்றும் நிவாரணப் பொருள்கள், மீள் குடியமர்வு கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு தமது சொந்த இடங்களில் மீள்குடியமர அனுமதிக்கப்பட்டனர்.

இவர்கள் அனைவரும் நலன்புரி நிலையங்களில் இருந்து அழைத்து வரப்பட்டு, வற்றாப்பளை மகா வித்தியாலயத்தில் தங்கவைக்கப்பட்டனர்.

இந்தப்பகுதியைச் சேர்ந்த 164 குடும்பங்களில் சுமார் 49 குடும்பங்களே தற்போது மீள்குடியமர அனுமதிக்கப்பட்டுள்ளன. மிகுதி 115 குடும்பங்களும் இதுவரை மீள்குடியமர்த்தப்படவில்லை. இம் மக்களின் சொந்த இடங்களில் இராணுவத் தலைமையகம் அமைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை கடந்த சில தினங்களாகப் பெய்து வரும் மழையால் மீள்குடியமர்த்தப்பட்ட மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (க-400)

# சிங்கள பிரதேச செயலகத்தால் இலக்கிய விழா

வவுனியா, சிங்கள பிரதேச செயலகம் நடத்தும் இலக்கிய விழா அடுத்த மாதம் 4 ஆம் திகதி காலை 8 மணி முதல் இரவு 10 மணி வரை வவுனியா சிங்கள பிரதேச செயலக வளாகத்தில் இடம்பெறவுள்ளது.

வவுனியா சிங்கள பிரதேச செயலாளர் எம்.எஸ்.ஜானக தலைமையில் நடைபெறும் இவ்விழாவுக்கு பிரதம விருந்தினராக வவுனியா மாவட்ட அரச அதிபர் பந்துல ஹரிச்சந்திர கலந்து கொள்வார்.

கலாசார உத்தியோகத்தர் டபிள்யூ.எச்.எம் செனவிரத்னவின் ஒழுங்கமைப்பில் மடுகந்தை, உளுக்குளம், மாமடு ஆகிய பிரதேசங்களைச் சார்ந்த மாணவர்களின் நடன நிகழ்வுகளும் வெளிக்கள உத்தியோகத்தர்களின் கண்காட்சியும், பிரதேச செயலக கலை இலக்கியப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில் வழங்கலும் மூத்த கலைஞர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வும் இடம்பெறவுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [illegible] பெறும். (க-402)

# போதியளவில் ஆசிரியர்கள் இல்லை புதுக்குடியிருப்பு றோ.க. பாடசாலையில்

## முக்கிய பாடங்களை கற்பிக்க முடியாத நிலை

முல்லைத்தீவு, செப்.23

முல்லைத்தீவு வலயத்திலுள்ள புதுக்குடியிருப்புக் கோட்டத்தைச் சேர்ந்த புதுக்குடியிருப்பு றோமன் கத்தோலிக்க பாடசாலைக்கு முக்கிய பாடங்களுக்கான ஆசிரியர்கள் நியமிக்கப்படாமையால் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ளன என்று பெற்றோர் விசனம் தெரிவித்துள்ளார்.

கடந்த கால இடர்களால் இடம்பெயர்ந்த இந்தப் பாடசாலை மூன்றாம் தவணையுடன் தனது சொந்த இடத்தில் மீண்டும் இயங்க ஆரம்பித்துள்ளது. பாடசாலைக் கட்டடத்தின் பெரும்பகுதி சேதங்களுக்குள்ளாகியுள்ள போதும் வித்தியாலய அதிபரின் முயற்சியால் பெற்றோர் அபிவிருத்திச் சங்கத்தின் உதவியுடன் தரம் 01- முதல் 11 வரையான வகுப்புக்கள் இடம்பெற்றுவருகின்றன.

இப்பாடசாலையில் முன்னர் 14 ஆசிரியர்கள் கடமையாற்றிய போதும் தற்போது 09 ஆசிரியர்களே கடமையாற்றி வருகின்றனர். இப்பாடசாலையைச் சேர்ந்த சிலர் வேறு பாடசாலையில் தற்காலிக இணைப்புப் பெற்றுக் கடமையாற்றி வருகின்றனர். பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு மூன்று வாரங்களாகிய போதும் கணிதம், வரலாறு, சங்கீதம், நடனம் மற்றும் தமிழ் போன்ற பாடங்களுக்கு ஆசிரியர்கள் எவரும் நியமிக்கப்படவில்லை

ஆரம்பப்பிரிவில் 100 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்கின்ற போதும் இரண்டே இரண்டு ஆசிரியர்களே கடமையாற்றுகின்றனர். அவர்கள் தரம் 1- முதல் 03 வரையான வகுப்புக்களைச் சேர்ந்த சுமார் 60 மாணவர்களையும் ஒன்றாக வைத்தும், ஏனைய தரம் 4-5 வரையான மாணவர்களை ஒன்றாக வைத்தும் கற்பித்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவர்களில் ஒருவர் யாழ்ப்பாணத்திலிருந்து வருகை தருவது குறிப்பிடத்தக்கது. இந்த இரண்டு ஆசிரியர்களில் ஒருவர் தவிர்க்க முடியாத காரணத்தால் விடுமுறை எடுக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டால் அதிபரின் பாடு திண்டாட்டம் தான் என அதிபரின் நிலையை நேரில் அவதானித்த சமூக நலன் விரும்பி ஒருவர் தெரிவித்தார். (க-400)

# அதிபர் பதவி வெற்றிடம்

நெளுக்குளம், செப்.23

வவுனியா செக்கட்டிப்புலவு அ.த.க. பாடசாலையில் அதிபர் பதவி வெற்றிடம் உள்ளதாக [illegible] வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி எஸ்.அன்ரன் சோமராஜா தெரிவித்[illegible] சேவை தரம் 2-I அல்லது 2-IIஐ சேர்ந்தவர்கள் இப்பதவிக்காக விண்ணப்பிக்கலாம் எனவும் குறைந்தது மூன்று வருடங்களாவது சேவையாற்றக் கூடியவர்களுக்கே இப்பதவி வழங்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (க-402)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞாயிறு தோறும் யாழிலும் வலம் வருகிறது

## சுடர் ஒளி
வாரவெளியீடு




இவ்வாரம்.....

★ பொம்மை ஆட்சிக்குத் துணை போய் முஸ்லிம் மக்களை அடகு வைத்துவிட்டது முஸ்லிம் காங்கிரஸ்
- தமிழ்க் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் அதிரடிப் பேட்டி

★ எமது வியூகத்தின்படியே முஸ்லிம் காங்கிரஸ் தனித்துப் போட்டியிட்டது.
- அமைச்சர் பஸில் பரபரப்புப் பேட்டி

★ தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவைச் சந்திக்கத் தயாராகிவிட்டேன்.
- அமைச்சர் மேர்வின் சில்வாவின் விசேட செவ்வி

★ வடக்கின் வசந்தத்துடன் மோதத் தயாராகும் அரபுலக அமெரிக்க வசந்தம்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கிழக்கில் அரசுக்கு அளித்த ஆதரவு சரியா, தவறா என்பதை எடுத்துக் காட்டும் கட்டுரைகள், பல்சுவை அம்சங்கள் நிறைந்த 'சுடர்ஒளி' வார வெளியீட்டை ஞாயிற்றுக்கிழமை எதிர்பாருங்கள்.

**பிரதிக்கு முந்துங்கள்**



உதயன் விளம்பரத் தொடர்புக்கு-
advt@uthayan.com
0215671111



## வேலை வாய்ப்புக்கள்

*We need you*

உங்களுக்கு விருப்பமா எங்களுடன் இணைந்து 40,000/- or மேல் உழைக்க

*We will train you until you succeed*

**VACANCIES**
- Management Trainee
- Customer Service
- Trainee Administrator and Accountants

தகமை O/L 6 Pass Age 19-28

அழைக்க:
0779994807
0778213839

RG ads



## Metro Travels & Tours (PVT) LTD

விசேட விமானக் கட்டணங்கள்

| | |
|---|---|
| Colombo-Chennai-Colombo | 18200 |
| Colombo-Tiruchirapally-Colombo | 18500 |
| Colombo-Doha | 23500 |
| Colombo-London | 62500 |
| Colombo-Toronto | 91000 |
| Colombo-Singapore-Colombo | 31500 |
| Colombo-kualalumpur-Colombo | 31500 |
| Colombo-Frankfurt | 62500 |
| Colombo-Milan | 59500 |
| Colombo-Rome | 60000 |
| Colombo-Paris | 62500 |
| Colombo-Zurich | 70000 |



All Taxes included, credit card Accepted with a surcharge & Travel insurance,
Above Fares Are Subject to seat Availability
Terms & Conditions Apply.

மேலதிக தொடர்புகளுக்கு

**METRO TRAVELS & TOURS (PVT) LTD**
(Branch Office) No - 272/1, Stanly Road, Jaffna
Tel : 021 2224647, 021 2219424
Office Hours : Weekend From 8.30 am to 5.00 pm
Saturday From 9.00 am to 1.30pm
New Branch Office : No - 34, New Bus Stand Complex, Vavuniya. Tel : 024 222 6800/024 222 6801

(அ/3386)(5-6-7)



## Aircom E
**Travelss & Tours**

**இலவசம்:**
எங்கள் தொடர்புகளூடாக பணமாற்றம் செய்பவர்களுக்குரிய கட்டணமும், ஒரு கப் இலவசம்




WESTERN UNION | MMBL Money Master

Head Office :
No. 2A, Ratnam Road, Colombo - 13.
Tel : 4617109, 7538635
Fax : 0094-11-2336446

(3601)(5-6-7)

Branch :
No. 06, Charambiady Lane,
Off Stanley Road, Jaffna.
Tel : 021 2219113

E-mail : aircom46@hotmail.com



நம்பிக்கையானது...
உறுதியானது....

**City Tower**
Your Dream Home....
20,2nd lane,Dehiwala.

# தெஹிவளையில்

ரம்மியமான சூழலில் உங்களுடைய கனவு இல்லம் அமைந்தால்....கற்பனைசெய்யுங்கள்

ஏற்கனவே கட்டுமானப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது

MMW




இன்னும் ஒரு சில வீடுகள் மாத்திரமே உள்ளன!!

தாமதிக்காமல் உடனே அழையுங்கள்



**0777 368 764**
**0777 786 440**



## Civi Mec Construction(Pvt)Ltd
**Office** : 156,1/1,W.A Silva Mawatha,Wellawatte,Sri Lanka.
**E-Mail** : info@civimec.com | **Web** : www.civimec.com | **Hotline** : 0777 763 148 | **Tel** : 011 2367878 | **Fax** : 011 2367818


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாலன் மில்

தேங்காய் எண்ணெய், நல்லெண்ணெய், கொப்பறா, எள், சூரியகாந்தி விதை போன்றவற்றை 3 கிலோ முதல் 3000 கிலோ வரை தனித்தனி இயந்திரத்தில் அரைத்து எண்ணெய்யாக உடன் ஊற்றித் தரப்படும்.

பாலன் மில்
மாவடிச் சந்தி, வட்டுக்கோட்டை
T.P : 021 3212624 (23121)(5-6-7)

## வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணம், மாதகல் அந்தோனியார் ஒழுங்கையில் அமைதியான சூழலில் அழகான சகல வசதிகளையும் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு.
குறிப்பு: பண்டகசாலை (Stores), நிறுவனங்கள் (Companies), காரியாலயம் (Office) சாலச் சிறந்தது. வாகன தரிப்பிட வசதி உண்டு.
தொடர்பு: 077 7404 680, 071 6326 601 (23074) (45.6.7)

## காணி விற்பனைக்கு

கச்சாய் கோவிற்பற்று வெள்ளாம் போக்கட்டியில் (பூசாரிதோட்டம்) 60 பரப்பு தென்னந்தோட்டக் காணி விற்பனைக்குண்டு.
(பகுதிகளாகவும் விற்கப்படும்)
தொடர்பு: 077 8435 336
078 3720 353
(21527) (6.7.45)

## இறைச்சிக்கோழி விற்பனை

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்யப்பட்டு விற்பனையாகின்றது. தினமும் காலை 6 மணி தொடக்கம் மாலை 8 மணிவரை திறக்கப்படும்
நல்லூர் பாம் சென்ரர்
#19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர், யாழ்ப்பாணம்.
(22973)(6-7-45)

## காணி விற்பனைக்கு

நீர்வேலி வடக்கு கிளாஸ் தொழிற்சாலைக்கு அருகில் பருத்தித்துறை வீதியில் 2ஆம் காணி நிலப்பரப்பு 10 விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: மா. புவனேந்திரன்.
தொ.பே: 021 222 7228
க. மகாலிங்கம்
கரந்தன் வீதி, நீர்வேலி. தொ.பே: 021 223 0072.
(23028) (6.7.10)

## வித்தியாசமான புதுமையான வேலைவாய்ப்பு (நிலையான தொழில் வாய்ப்பு) வாருங்கள் விமானத்தில்/கப்பலில் தொழில் புரிய

* வெல்டர்ஸ் /தச்சன்/ மேசன் / சாரதிகள் ஏனைய சாதாரண வேலையாளர்கள் தேவை.
* கெடரின் / சுத்திகரிப்பு/ நம்பிக்கையான காசாளர் போன்ற பதவிகளுக்கும்
* 25000/=-50,000/= வரையான வேலைவாய்ப்பு
* 18 - 55 வயதெல்லையுடைய ஆண்கள் / பெண்கள் அனுபவமில்லாதவர்களுக்கு பயிற்சியுடன் வேலைவாய்ப்பு கல்விச்சான்றிதழ்கள் தேவையில்லை.

தொடர்புகளுக்கு : 071 3460295, அனுராதபுரம்
(20891)(6-7-8)

## எதிர்பார்ப்புக்கள் நிறைந்த வாழ்க்கையை வெற்றிகொள்வதற்கு எம்முடன் இணையுங்கள்

எமது பிரதான கைத்தொழிற்சாலைக்கு ஜாம்/பிஸ்கட்/குளிர்பானம்/ லோஜேயன்/ பன்டா/Paint/டைல்ஸ்/PVC/கிளவுஸ்/ டயர்/ ஐஸ்கிறீம்/ சொக்லட் உற்பத்திகள் மற்றும் உற்பத்தி/ பொதியிடல்/ லேபல்/ ஒழுங்குபடுத்தும் பிரிவுகளுக்கும் மேற்பார்வையாளர்களுக்குமான வேலை வாய்ப்பு
* வயது 17 - 50 இற்கு இடைப்பட்ட பெண்கள் / ஆண்கள்
* தரம் 6 முதல் O/L, A/L வகுப்புகளில் கல்வி கற்றிருத்தல் வேண்டும்
* சம்பளம் 20,000/= முதல் 35,000/= வரை
* உணவு தங்குமிடம் / உட்பட அனைத்து வரப் பிரசாதங்களும்
* நண்பர்கள்/திருமண தம்பதிகள் ஒரே ஆயத்தனத்தில் சமுகமளிக்கும் தினத்திலிருந்து வேலை செய்ய சந்தர்ப்பம்

தொடர்புகளுக்கு : 071 3460295, அனுராதபுரம்
(20890)(6-7-8)

## மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ 1986 மகம் 30 பாவம் B.A. சகல வசதிகளும் கொண்ட விவாகரத்தான மணமகளுக்கு மணமகன் தேவை.
தொடர்பு: 011 236 3710, 077 367 1062 (23084) (5-6-7)

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம் 1976 உத்தரம், 1ஆம் பாதம், 8இல் செவ்வாய், 37 பாவம் கொண்ட லண்டன் PR உள்ள மணமகனுக்கு படித்த அழகான மணமகள் தேவை.
தொடர்பு: 077 785 9487, 021 490 8129 (23085) (5-6-7)

## மழை பொழிந்தாலும் பொழியாவிட்டாலும் நாங்கள் தொடர்ந்து வேலை/ தகுதிகளுக்கு ஏற்ப நிரந்தர தொழில் வாய்ப்பு

* Heavy வெயிக்கிள் சாரதிகள்/லைட் வெயிக்கிள் சாரதிகள்
* மேசன்மார்கள் /Helpers/வெல்டிங் வேலையாளர்கள்/ Paint கலவையாளர்கள், /Tiles வேலையாளர்கள்
* யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, வவுனியா, திருகோணமலை, மன்னார், அம்பாறை, அநுராதபுரம், கொழும்பு, மாத்தளை.
* உங்களுக்கு வசதியான அண்மை பிரதேசங்களில் தொழில் செய்யமுடியும்/வயதெல்லை இல்லை.
* வேலை அர்ப்பணிப்புக்களுக்கு அமைவாக 50,000/= வரை
* ஒவ்வொருநாளும்/செலவுகளுக்கான பணம்/நாள் சம்பளம்/உணவு/தங்குமிட வசதிகள்.

தொடர்பு: 071 346 0295 அநுராதபுரம்
(20892)(5-6-7)


# UNIVERSITY OF JAFFNA
# INVITATION FOR BIDS

## COMPLETION OF Construction of Buildings at Ariviyal Nagar Complex, Kilinochchi, Faculty of Agriculture, University of Jaffna

1. **The Chairman, Procurement Committee of University of Jaffna,** now invites sealed bids from eligible and qualified bidders.

   This shall be a **measure and pay** contract.

2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure.

3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of building construction with the Institute for Construction Training and Development (ICTAD).

4. Bids shall be accompanied by a Bid Security as per the information given in the table.

| Bid ID | Description of work | Estimated Cost | Contract period | Minimum Required Grade | Required Bid Security | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | Security Amount | Valid Period |
| YA/CWP/ AG-KLN/ 2012–B4 | Completion of Construction of Department of Biology at Ariviyal Nagar, Kilinochchi, Faculty of Agriculture | Rs. 33.0 Million | 280 Calendar Days | C5/M6 | Rs. 500,000.00 | 7th January 2013 |
| YA/CWP/ AG-KLN/ 2012–B5 | Completion of Construction of Boys' Hostel at Ariviyal Nagar, Kilinochchi, Faculty of Agriculture | Rs. 39.0 Million | 280 Calendar Days | C5/M6 | Rs. 500,000.00 | 7th January 2013 |
| YA/CWP/ AG-KLN/ 2012–B6 | Completion of Construction of Girls' Hostel at Ariviyal Nagar, Kilinochchi, Faculty of Agriculture | Rs. 20.0 Million | 150 Calendar Days | C6/M7 | Rs. 200,000.00 | 7th January 2013 |

5. Interested bidders may obtain further information from **the Deputy Registrar, Capital Works & Planning Unit, University of Jaffna, Thirunelvely, Jaffna** and view the Bidding Documents at the same address on any working day from **9:00hrs to 16:00 hrs.**
   Contact numbers are: Phone. **021 2219201**, Facsimile: **021 2219201**.

6. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Deputy Registrar, Capital Works & Planning Unit, University of Jaffna, Thirunelvely, Jaffna** from the **24th of September, 2012** until **8th of October, 2012** from **9:00 hrs to 15:00 hrs and** upon payment of a non-refundable fee of **Rupees five thousand (Rs. 5,000.00) for each work.**

7. Sealed Bids shall be delivered or sent by registered post to **The Chairman, Procurement Committee of University of Jaffna, P.O Box 57, Thirunelvely, Jaffna** to reach **on or before 14.00 hrs on the 16th of October, 2012.** Bids will be opened soon after closing, at **14.15 hrs on the 16th of October 2012** at the same venue in the presence of the bidders' representatives who choose to attend.

8. Bids shall be valid for a period of **91 Days** from the date fixed for closing of Bids or any extended period.

9. All Bids shall be accompanied by a Bid Security which shall be;

   - in the form included in the Section 09 in the Bidding document.
   - in favour of ***"Vice Chancellor, Chairman, Procurement Committee, University of Jaffna."***
   - issued by one of the agencies indicated in the clause 16.0 of the Schedule.

10. Pre bid meeting will be held at the Ariviyalnagar Complex, Kilinochchi at **10.30 hrs on the 5th October, 2012**

Vice Chancellor
Chairman, Procurement Committee,
University of Jaffna,
P.O Box 57, Thirunelvely,
Jaffna.

(C/3456) (6,7,10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடும் கடைக்கட்டடமும் விற்பனைக்கு

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி, மணிக்கூட்டு வீதிச்சந்திக்கு மிக அருகில் இரண்டு பரப்புக்காணியில் மூன்று மாடி வர்த்தகக்கட்டடமும் நான்கு அறைகள் கொண்ட வீடும் உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:077 7262653

(23127)(6.7.8)

## LL.B (UK) கற்கை நெறி

யாழில் சட்டக் கல்வியை வழங்கும் ஒரே கல்வி நிறுவனம்

Prince City Campus இன்
EdHat IHD in Law Leading to LL.B (UK)

புதிய பிரிவுகளுக்கான பதிவுகள் நடைபெறுகிறன.



- ★ உலக தரம் வாய்ந்த கற்கை நெறி.
- ★ இலங்கை மற்றும் UK பாடவிதானங்களை உள்ளடக்கியது.
- ★ யாழ்ப்பாணத்தில் 3 வருடங்களையும் பூர்த்தி செய்யலாம்.
- ★ இலகு தவணை கொடுப்பனவு முறை
- ★ இலவசமான ஆங்கிலம் மற்றும் தகவல் தொழில் நுட்ப கற்கை திட்டங்கள்.

(23114) (6,7,10)

**Prince City Campus**

இல. 275, மணிக்கூட்டு கோபுர வீதி (Clock Tower Road), யாழ்ப்பாணம்.
தொ.பே: 021-492 3855 Hotline: 0775949 272

## காணி விற்பனைக்கு

பொற்பதி வீதியோடு மூன்று பரப்பு காணியில் அமைந்த வீடு விற்பனைக்கு உண்டு

தொடர்புகளுக்கு :
077-4083958

(23114)(6-7-10)

## கல்வி

தரம் 6 முதல் O/L வரை கணிதம் பலவருட அனுபவமிக்க ஆசிரியரால் வீடு வந்து சிறந்த முறையில் கற்பிக்கப்படும். டிசெம்பர் O/L பரீட்சை எடுக்கும் மாணவருக்கு கடந்த 5 வருட Past Papers முழுமையாக மீட்டல் செய்யப்படும்

தொடர்பு:077 937 0228

(23120)(5-6-7)

## வீடு வாடகைக்குண்டு

யாழ் நகர மத்தியிலிருந்து 1km தூரத்தினுள் மேல் மாடி வீடு வாடகைக் குண்டு. 10 அறைகள், வாகனத்தரிப்பிட வசதிகள் உண்டு. நிறுவனங்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு:077 781 3646

(23135)(5-6-7)

## வாகனம் விற்பனைக்கு

PD-70xx இலக்கமுடைய DAIHATSU HIJET Japan van உடன் விற்பனைக் குண்டு.
5 மாதங்களிற்கு முன்பு பதியப்பட்டது. 2007 Model Fulloption,power shatter, five door, new tyre மற்றும் லீஸிங் வசதியுடன் உள்ளது. விலை பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு: 077 739 7770

(23136)(5-6-7)


## விநியோகஸ்தர்கள் தேவை

யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய பிரதேசங்களுக்கு போத்தலில் அடைக்கப்பட்ட குடிதண்ணீர், விநியோகம் செய்யும் நிறுவனத் திற்கு விநியோகஸ் தர்கள் தேவை. 20லீ போத்தல் மற்றும் ஏனைய பொதிகளும் உண்டு. ஆர்வம் உள்ளவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
077 791 4272,075 8532451

(23137)(5-6-7)

## கார் விற்பனைக்கு



Model- Chevrolet- Beat
Reg.No. WP-KR xxxx 2012 பதிவு செய்யப்பட்டது. 6500km Done. விலை பேசி தீர்மானிக்கலாம்.

தொடர்பு: Mr.Fernando
Hospital Rd, Mannar. 077 346 0649

(23073)(5-6-7)

## வீடு வாடகைக்கு

இருபாலைச் சந்திக்கு அருகில் சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்குண்டு.

தொடர்பு:நந்தன் - 021 223 0600

(23202)(5-6-7)

## வான் விற்பனைக்கு

WP HS xxxx எனும் தொடரிலக்க முடைய ஹயஸ்(டொல்பின்) வான் விற்பனைக்குண்டு. (டுவல் ஏசி, நீள மொடல்,அஜஸ்மன் சீற், எலோ வீல்)

தொடர்பு:நந்தன் - கொக்குவில்
077 873 6777, 077 664 6630

(23203)(5-6-7)

## கடை விற்பனைக்குண்டு

இல. 259, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: செ.ஏரம்பநாதன், திருச்செல்வம் வீதி,கோண்டாவில்.
077 605 7591

(23138)(5-6-7)

## வைத்தியம்

உடைவு முறிவு, மூட்டுக்கள், மூட்டுவாதம், பக்கவாதம்,. தசைநெரிவு நாள்ப்பட்ட நோவு விசேஷமாக முள்ளந் தண்டு சம்பந்தமான நோய்களுக்கு சித்த ஆயுள் வேத முறைப்படி சிகிச்சைகள் அளிக்கப்படும். நாள்கள் ஒவ்வொரு வியாழன் வெள்ளிக்கிழமைகளில் காலை 9 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை. பதிவுகளை முன்கூட்டியே செய்யவும்.

தொடர்புகளுக்கு : 077 6544338
இடம் : யாழ். சிவன் கோவிலடி வைத்தியசாலை, கோப்பாய் வடக்கு, கோப்பாய்.
(கோப்பாய் A.G.A காரியாலத்திற்கு முன்பாக)
வைத்தியர் : Dr.சோமசுந்தரம், T.விஜயன் Reg No:8688

(23144)(6-7-8)

## விற்பனைக்கு

31 H.P பிளக்ஸ்ரோன் எஞ்சின் விற்பனைக்கு உண்டு. (BLACKSTON ENGINE)

இராசம் அரிசி ஆலை
மின்சார நிலைய றோட், சுன்னாகம்.

(6-7-10)

## மணமகள் தேவை

1979 ஆம் ஆண்டு பிறந்த 12இல் செவ்வாய் பாவகிரகம் 58¼ உடைய மணமகனுக்கு 12,8,4,2 செவ்வாயுடைய மண மகள் தேவை.

தொடர்பு:077 602 3002

(23123)(5-6-7)

## மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பம், 79, பூசம், 1ஆம் பாதம், மொத்த கிரகபாவம் 35½, 5-5'' உயரம் லண்டனில் கல்வி கற்று தொழில் புரியும் (PR இல்லை) மணமகனுக்கு லண்டன் அல்லது ஜேர்மனியில் PR உள்ள தாய்-தந்தையாருடன் சேர்ந்துவாழும் படித்த அழகிய மணமகள் தேவை. உறவினர்கள் விண்ணப்பிக்கவும்.

விளம்பர இல. 4401
மே/பா.உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(23122)(5-6-7)

## கார் விற்பனைக்கு

KA தொடரிலக்கமுடைய மாருதி கார் 60000km ஓடியது. தனிப்பாவனையிலுள்ளது. விற்பனைக் குண்டு.

வாங்கிய வருடம்: 2006,
வாங்கிய விலை: 810000/=,
விற்கும் விலை: 1050000/=
(இவ்விலை மாறாது)

தொடர்புகளுக்கு:
077 841 8344

(23073)(5-6-7)

## ஆஸ்திரேலியா 5 வருட விசா ஆலோசனை

குடும்பவிசா, 2 வருடங்களில் PR பெறலாம்.
சட்டரீதியான ஆலோசனைகளிற்கு (புதன் கிழமைகளில் திறக்கப்படமாட்டாது)
திசைகாட்டி பிறைவேற் லிமிட் (PV 82703)
37, சிவகுருநாதர் வீதி, பிறவுண்வீதி, யாழ்ப்பாணம்.
0212219016
(தொலைபேசி மூலம் வியாபார விசாரணைகள் இடம் பெறும்)



(23071)(3.6.14)

## வீடு வாடகைக்கு

மானிப்பாய் கனகசபை றோட்டில் 3 பரப்பு, 3.5குளியில் அமைந்த சகல வசதிகளும் கொண்ட 7 அறை மாடி வீடு வாடகைக்கு உண்டு. தரகர் தேவையில்லை.

தொடர்பு:077 199 1275

(23032)(5-6-7)

## உடனடி வேலைவாய்ப்பு

எமது நிறுவனத்தின் சாவகச்சேரி, நெல்லியடிக்கிளைகளில் பின்வரும் பதவிகளுக்குப் பொருத்தமான தகைமையுடைய, அனுபவமுள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

தகுதி அனுபவத்தின் அடிப்படையில் சம்பளம் வழங்கப்படும்.

1. **Computer Lecturer / Instructors**
2. **Office Helper**

7 நாள்களுக்குள் விண்ணப்பிக்கவும். மேலதிக விவரங்களுக்கு:

**Gateway**
Centre for ICT Education

55, Point Pedro Road, Nelliyady.
Phone : 021 2262395, Fax : 021 226 2789
E - mail : gatewayfn@Sltnet.lk,
recruitment.gatewayneli@gmail.com

## ALLIANCE FRANCAISE DE JAFFNA

**The Only Official French Language Centre in Jaffna**

*Learn French the French Way*

French Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட, சர்வதேச தரம் வாய்ந்த, யாழ்ப்பாணத்திலுள்ள ஒரே ஒரு பிரெஞ்சு மொழிக் கல்வி நிறுவனமாகிய Alliance Francaise de Jaffna ஊடாக பிரெஞ்சு மொழி வகுப்புகள் நடத்தப்படுகின்றன. France மற்றும் பிரெஞ் பேசப்படும் நாடுகளுக்கு செல்வோர், மாணவர்கள் மற்றும் மொழி ஆர்வமுள்ள எவரும் கற்றுக்கொள்ளலாம்.

வகுப்புக்கள் : சனி, ஞாயிறுகளில்...

புதிய பிரிவுகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன. அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் உடன் பதிவுகளை மேற்கொள்ளவும்

61, Kachcheri-Nallur Road, Jaffna. Phone: 021-2228093
E-mail: alliancejaffna@yahoo.com

(றக்கா வீதியும் கச்சேரி-நல்லூர் வீதியும் இணையும் சந்தியில் அமைந்துள்ள மாடிக் கட்டடம்)

மேலதிக விவரங்களை நேரில் / தொலைபேசியினூடாக பெறலாம்.

(23108)(6.7.10)

## யாழ்.மண்ணில் இலவச காது பரிசோதனை

உலக செவிப்புலனற்றோர் தினத்தை முன்னிட்டு கொழும்பிலிருந்து யாழ். மண்ணிற்கு வருகை தரும் விசேட குழுவினர் 22 ஆம் திகதி முதல் 30 ஆம் திகதி வரை ஜெ.எம்.விக்கிரமாராச்சி அன்ட் கம்பனியில் இலவசமாக காது பரிசோதனைகளை (audiogram (PTA), Tympanometry, Reflexometry, ABR, OAE) மேற்கொள்ளவுள்ளனர். இதில் கலந்துகொண்டு பயனடையுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

wish Cochlear™ LANKA COLLEGE OF AUDIOLOGY

**தொடர்புகளுக்கு:**
**இல.229, 231, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.**
**தொ.பே.இல. 021 221 9288, 0777511260**

## முதற் தடவையாக வட மாகாணத்தில் வவுனியா நகரின் Sunbeam Tours பெருமையுடன் அறிமுகப்படுத்தும் அதி உயர் வேதனம் பெறும் விமான பொறியியல் பட்டப்படிப்பு.

- * உயர்தரம் முடித்து விட்டீர்களா?(Yes) ....
- * உயர் தரத்தில் கணிதப்பிரிவில் மூன்று பாடங்களில் (S) சித்தி பெற்றிருக்கின்றீர்களா?(Yes)...
- * உலகில் அதிக வேதனம் பெற வேண்டும் என்ற ஆசை ஆர்வம் இருக்கின்றதா?(Yes)...

**Yes..... Yes..... Yes.....**

இதுவே உங்கள் பதிலாக இருந்தால் இப்பவே
விமானப் பட்டப் படிப்பொன்றை மேற்கொள்ள **Call** பண்ணுங்க........
வடபுலம் வாழ் தமிழ் பேசும் மாணவர்களே!

நீங்கள் உயர் தரத்தில் கணிதப் பிரிவில் கல்வி கற்றுவிட்டு மேற்படிப்பு ஒன்றினைத் தொடர்வதற்காக காத்திருக்கின்றீர்களா?
அப்படியென்றால் நீங்கள் தெரிவு செய்யும் துறையும் சரியான தெரிவும்.
விமானப் பொறியியல் பட்டப்படிப்பே



ukraine ல் உள்ள
**(Kharkov Aviation Institute)**

தேசிய விமான பொறியியல் பல்கலைக்கழகம் உயர்தர கற்கை நெறிக்கு இப்போதே விண்ணப்பியுங்கள்.
சாதாரணதரம், உயர்தரத்தில் கணித பிரிவில் 3 (S) சித்தியுடன் இந்த மேற்படிப்பை நீங்கள் மேற்கொள்ளலாம்.

04 வருடகாலம் (Bachelor Degree)+1 ½ வருட காலம் (Master Degree)

நீங்களும் நான்கு வருட கால விமான பொறியியல் பட்டப்படிப்பை மேற்கொள்வதன் மூலம் உலகில் எப்பாகத்திலும் அதி உயர் வேதனத்துடன் தொழில் ஒன்றை பெற்றுக் கொள்ள முடியும்.

**Sunbeam Tours**
No:107, First Floor, Bus Stand Complex, Vavuniya.
T.P: 024-7538050 / 077-7166601

(20889) (6.7.10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 04.10.1925 இறப்பு 23.09.2011



அமரர்

## சிசிலியா இம்மானுவேல் (குணம்)

ஆண்டு ஒன்றல்ல எத்தனை ஆண்டுகள்
சென்றாலும் உங்கள் நினைவுகள்
எங்கள் நெஞ்சை விட்டகலாது.

என்றும் நினைவுடன்
குடும்பத்தினர்.

பாலாவி வீதி,
கரம்பன்,ஊர்காவற்றுறை. (23105)(5-6-7)

# ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம் 10.02.1928

மறைவு 04.10.2011



அமரர்

## இரா.சண்முகரத்தினம்

(கொல்லங்கலட்டி,தெல்லிப்பழை)
(இளைப்பாறிய அதிபர்,ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரி,புத்தூர்)

திதி:பூர்வபக்க அட்டமி 23.09.2012

ஆண்டு ஒன்று சென்றாலும் ஆறவில்லை என் துயரம்.

தற்காலிக முகவரி:
30, கடையிற் சுவாமி வீதி,
நீராவியடி, யாழ்ப்பாணம். (22930)(5-6-7)

மனைவி
அருள்நாயகி.

# நுளம்பு வலைகள் விநியோகம்

தென்மராட்சிப் பிரதேசத்தில் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவால் கிராம அலுவலர் பிரிவு ரீதியாக நுளம்பு வலைகள் மக்களுக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

சுகாதாரத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட நுளம்பு வலைகள் கடந்த வாரம் சரசாலை வடக்கு, எழுதுமட்டுவாழ் வடக்கு , கரம்பகம் ஆகிய பிரிவுகளைச் சேர்ந்த மக்களுக்கு விநியோகிக்கப்பட்டன. நாளை திங்கட்கிழமை தென்மட்டுவில் கிராம மக்களுக்கான நுளம்பு வலைகள் தேனொளி முன்பள்ளியில் விநியோகிக்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-9)

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமக

# 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 08.08.1943

மறைவு 26.09.2009



அமரர்

## கொங்காதரன் ஆச்சாரி வசந்தமல்லிகா

தாயே!
மூன்றாண்டுகள் ஓடிவிட்டன நீங்கள் மறைந்து.
எத்தனை ஆண்டுகள் சென்றாலும் மறையாது உங்கள் நினைவுகள்

314,காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம். (23145)(5-6-7)

குடும்பத்தினர்.

# வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 25.08.2012 சனிக்கிழமை சிவபதமடைந்த

## அமரர். திருமதி இராசையா சரஸ்வதி

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை(24.09.2012)திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் வருகைதந்து அன்னாரின் ஆத்மாசாந்திப் பிரார்த்தனையிலும், தொடர்ந்து முற்பகல் 11.00 மணியளவில் 74, பலாலி வீதி "ராஜா பிளாசா" இல்லத்தில் நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.


ஞானவைரவர் வீதி, மதவடி,
பலாலி வீதி,
கோண்டாவில் கிழக்கு.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்
(ராஜா பிளாசா)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 02 ★ 06 ★ 1946 இறப்பு 22 ★ 09 ★ 2011

பிறப்பு 19 ★ 06 ★ 1948 இறப்பு 08 ★ 10 ★ 2011





## மாணிக்கம் சண்முகராசா

திதி : 10.10.2012

## திருமதி சண்முகராசா நாகம்மா

திதி : 26.09.2012

அன்பாலும் பண்பாலும் எம்மையெல்லாம்
வையத்துள் சிறப்புற வாழ வழி அமைத்த
எம் அன்புத் தெய்வங்களே
வாழ்விலும் சாவிலும் இணைபிரியாது
வாழ்ந்து காட்டிய அன்புத்தெய்வங்களே
ஆண்டு ஒன்று சென்றாலும்
எம் மனதில் பசுமை உணர்வுகளோடு
என்றும் நீவிர் வாழ்ந்து கொண்டிருக்கிறீர்கள்

தர்சினி ஸ்ரோர்ஸ்,
54, நவீன சந்தை, வவுனியா. (சி/3479)(6.8)

பிள்ளைகள், பேரமக்கள்

# நெஞ்சைவிட்டகலா நினைவுகளுடன் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

வையத்துள் : 20 - 12 - 1944 தெய்வத்துள்: 27 - 07 - 2012



திருமதி காமாட்சி கனகசபை

வையத்துள் : 18 - 08 - 2005 தெய்வத்துள்: 20 - 08 - 2012



அமரர் செல்வன் பிறேமகுமார் ஜிலக்சன்

எமது குடும்பத்தின் ஒளிவிளக்குகளின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (23.09.2012) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும். இந்த நிகழ்விலும் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும், தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(இவ்வழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்)

அம்மா என்று அழைத்த தெய்வமே
ஆறிடுமோ எங்கள் துயரம் உற்றதுணைக்கு
பேரனையும் அழைத்து சென்றாயோ - அம்மா
ஊர்போற்ற வளர்த்தீர்கள் அம்மா - எம்மை
ஓம் என்ற சொல்லுக்கு மறுவார்த்தை இல்லையென
ஓங்கி ஒலித்திட எம்மை வளர்த்தீர்கள் அம்மா
இன்று காணுகின்றோம் பேரனுடன் கண்ணாடிக்குள்
நிழற்படமாய் அம்மா...

இன்புமுடன் உங்களது ஆத்மாக்காக இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

ஓம்சாந்தி! ஓம்சாந்தி!! ஓம்சாந்தி!!!

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்குகள் அணைந்தவேளை செய்தியறிந்து உடன் ஓடி வந்து துயரில் பங்கு கொண்ட அயலவர்கள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள், தொலைபேசி வாயிலாகவும், தந்திகள் மூலமும் தமது அனுதாபத்தை தெரிவித்த வெளிநாட்டு உறவினர்கள், நண்பர்கள், அஞ்சலிப்பாக்கள், மலர்வளையங்கள், வெளியிட்ட அன்புள்ளங்கள், நோயுற்று இருந்த போது சிகிச்சையளித்த வைத்தியர்கள், தாதிமார்கள், அவர்களுடன் தோளோடு தோள் கொடுத்த அனைவருக்கும் இறுதி நிகழ்வில் கலந்து கொண்டு அஞ்சலி உரைகள் நிகழ்த்திய பேராசிரியர்கள், திணைக்களத் தலைவர்கள், கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், விவசாய சம்மேளன தலைவர்கள், பெரியார்கள், இறுதி நிகழ்வில் கலந்து கொண்ட அன்புள்ளங்கள் அனைவருக்கும் எமது மனம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

"நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது
அன்றே மறப்பது"

நீங்கா நினைவுகளுடன்:
கணவர், பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

…ானந்த வித்தியாலய வீதி,
கோப்பாய் வடக்கு, கோப்பாய். (23103)(6.7.10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மல்டிலக் ஆடம்பர கப்பல் சவாரி வெற்றியாளர்களின் சுற்றுலா



இலங்கையின் முன்னணி வஸ்ணப்பூச்சு உற்பத்தியாளராகிய மல்டிலக் கம்பனியினர் Multilac Luxury Cruise Sawari வெற்றியாளர்கள் 63 பேர்களை பாங்கொக், மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்கு உல்லாச சுற்றுலா பயணத்திற்கு அழைத்துச் சென்றிருந்தனர். 2011 நத்தார், 2012 சித்திரைப்புத் தாண்டின் அதிர்ஷ்டசாலிகளான இவ் வெற்றியாளர்கள் மல்டிலக் ஆடம்பரக் கப்பல் சவாரி மேம்பாட்டுத்திட்டத்தினை 2012 ஒகஸ்ட் 26-29 வரையிலான மூன்று இரவுகளும் நான்கு பகல்களும் கொண்ட இனிய சுற்றுலாவை நன்கு அனுபவித்தனர். 63 வெற்றியாளர்களும் உணவு உட்பட அனைத்து செலவினங்களையும் கம்பனியே ஏற்றுக் கொண்ட நிலையில் சுற்றுலாவை நன்கு அனுபவித்துள்ளனர். மேலும் சிங்கப்பூரில் செலவு செய்வதற்கென ஆளுக்கு சிங்கப் பூர் டொலஸ் 250 பணத்தையும் மல்டிலக் இந்த வெற்றியாளர்களுக்கு வழங்கியிருந்தது.

2012 ஒகஸ்ட் 26 ஆம் திகதி வெற்றியாளர்கள் சிங்கப்பூருக்கு சுற்றுலா ஆரம்பித்து மதிய உணவும் கடைச் சுற்றுலாவுமாக கலகலத்திருந்தது. அன்றைய தினமே குழுவினர் ஆடம்பரக் கப்பலில் ஏறிக் கொண்டு முதலில் பாங்கொக் பின்னஸ் மலேசியாவுக்கு சுற்றுலா சென்றபின் 29 ஆம் திகதியன்று மீண்டும் சிங்கப்பூர் திரும்பினர். சிங்கப்பூர்கடைத் தெருக்களையெல்லாம் உல்லாசமாக சுற்றியதுடன் விளையாட்டுப் பொருள்கள், சொக்ளற் வகைகள், மின்சார உபகரணங்கள் என்பவற்றையும் கொள்வனவு செய்திருந்தனர். மேலும், புக்கற், சிங்கப்பூர் லங்காவி ஆகிய பகுதிகளில் சென்று காட்சிகளையும் பார்த்து மகிழ்ந்தனர்.

சென்ற இடங்களில் எல்லாம் வெற்றியாளர்கள் ஈடுபட்ட வேடிக்கைகளுக்கு புறம்பாக அந்த ஆடம்பரப் பயணிகள் கப்பலின் உள்ளே விளையாட்டுக்கள், மினி சினிமா காட்சி ஏற்பாடுகள், மாயாஜால காட்சிகள், நடன நிகழ்வுகள், விருந்து வகைகள் உள்ளிட்ட ஏராளமான பொழுது போக்கு அம்சங்கள் காணப்பட்டன. மல்டிலக் ஆடம்பரக் கப்பல் சவாரி நிகழ்வானது மல்டிலக் நிறுவனத்தையும் விசுவாசம் மிக்க வாடிக்கையாளர் வட்டத்தினையும் நெருங்கி உறவாடுவதற்கான மிகச்சிறந்த வாய்ப்பை வழங்கியுள்ளது. இதனால் கம்பனி நாடு முழுவதிலுமுள்ள தனது வாடிக்கையாளருடன் மிகுந்த நட்புறவினை பேணுவதாக பெருமையடைகின்றது. எதிர்காலத்திலும் தனது வாடிக்கையாளருடன் நெருக்கமான உறவுகளை வளர்க்கக்கூடிய மேம்பாட்டு நிகழ்வுகளை கம்பனி முன்னெடுக்கும்.

தனது வாடிக்கையாளருடன் நிலைத்து நிற்கும் உறவை வைத்துக் கொள்வதில மல்டிலக் பேரார்வம் கொண்டுள்ளது. எமது நோக்கம் இலாபத்தைச் சுருட்டிக் கொள்வதன்று. ஆனால் இலங்கையர் சமூகங்களுக்கு முக்கியமான உலகின் வளங்களையும் அறிமுகம் செய்து வலுப்பெறச் செய்தலேயாகும்.

எவ்வாறாயினும், ஒரு முற்றிலும் இலங்கையரினதான நிறவனம் என்னும் வகையில் இலாபத்தை ஈட்டுவதை மட்டுமே கருத்திற் கொண்டதாக அன்றி, இலாபங்களையும் அவற்றிற்கு வாய்ப்புப் பெற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வதற்கான விருப்புகளையும் கொண்டது என்பதை வெளிக்காட்டும் ஒரு வழியாகவும் இது இருக்கிறது. (த)

## இலங்கை சந்தையில் நுழையும் பிர்லா ரோட்மெக்ஸ் டயர்கள்

றிச்சர்ட் பீரிஸ் டயர் நிறுவனம் உலகப் புகழ் பெற்ற பிர்லா ரோட் மெக்ஸ் மோட்டார் சைக்கிள் மற்றும் முச்சக்கர வண்டிகளுக்கான டயர்களை இலங்கையில் அறிமுகம் செய்துள்ளது.

இந்தியாவின் முன்னணி டயர் உற்பத்தி நிறுவனமான பிர்லா நிறுவனத்தின் மூலம் இத்தாலி நாட்டின் தொழில்நுட்பத்துக்கு அமைவாகத் தயாரிக்கப்படும் டயர்கள் வெவ்வேறு அளவுகளில், ரியுப் கொண்ட, ரியுப் அற்ற பல்வேறு விதங்களில் விற்பனைக்கு வந்துள்ளன.

பாதுகாப்பான பயணத்தை உறுதி செய்யும் வகையில், முன் மற்றும் பின் டயர்களுக்கு விசேடமாக அமைந்த தயாரிப்புகள் காரணமாக, இந்தியா உள்ளடங்கலாக பல நாடுகளில் மோட்டார் சைக்கிள் செலுத்துபவர்களின் அபிமானத்தை வென்ற டயர் வகையாக இது அமைந்துள்ளது.

இதற்கமைவாக இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் முன்னணி மோட்டார் சைக்கிளின் முதல் டயராக இந்த டயர் வகை காணப்படு வதும் விசேட அம்சமாகும்.

பிர்லா ரோட் மெக்ஸ் மோட்டார் சைக்கிள் டயரை இலங்கையில் அறிமுகம் செய்யும் நிகழ்வு அண்மையில் றிச்சர்ட் பீரிஸ் டயர் நிறுவனத்தின் பொது முகாமையாளர் பிரதீப் சமரதுங்க அவர்களின் பங்களிப்புடன் நடைபெற்றது.

இந்நிகழ்வில், நாட்டின் முன்னணி டயர் விநியோகத்தர்களுக்கு பிர்லா ரோட் மெக்ஸ் டயர்களை விற்பனை செய்வதற்கான அங்கீகாரம் உத்தியோக பூர்வமாக வழங்கப்பட்டது.

## முதியோருக்கு மக்கள் வங்கி வழங்கும் இந்திய தல யாத்திரை வாய்ப்பு

யாழ்ப்பாணம்,செப்.23

மக்கள் வங்கியினர் முதியோர்களுக்கான ''பரிணத்த'', மூத்தோர் சேமிப்பு கணக்கு வைத்திருப்பவர்களுக்கான இந்திய தல யாத்திரை மேற்கொள்ள அழைத்துச் செல்லவுள்ளது.

நாட்டில் உள்ள 55 வயதுக்கு மேற்பட்டவர்கள் எதிர்வரும் டிசெம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் ''பரிணத்த'' சேமிப்புக் கணக்கொன்றில் ரூபா 75 ஆயிரம் அல்லது அதற்கு மேற்பட்ட நிலுவையைக் கொண்டிருக்கின்ற ''பரிணத்த'' சேமிப்பு கணக்கு வைத்திருப்பவர்கள், அந்த நிலுவையை 2013.06.30 ஆம் திகதிவரை ஆறு மாதங்களுக்கு அவ்வாறே கணக்கில் பேணி வைத்திருந்தால் இந்திய திருத்தல யாத்திரைக்காக நடத்தப்படுகின்ற விசேட சீட்டிழுப்புக்கு தகைமை பெறுகின்றனர்.

சீட்டிழுப்பின் மூலம் தெரிவு செய்யப்படுகின்ற 25 அதிர்ஷ்டசாலிகள் தாம் விரும்பியவாறு இந்தியாவில் பின்வரும் திருத்தலங்களில் ஒன்றுக்கு யாத்திரை மேற்கொள்ள சந்தர்ப்பம் உண்டு.

பௌத்த பக்தர்கள்- 'புத்த காயா' உள்ளிட்ட மத திருத்தலங்களுக்கும், கிறிஸ்தவ பக்தர்கள் 'வேளாங்கண்ணி தேவாலயத்துக்கும், இந்து பக்தர்கள் 'திருப்பதி' ஆலயத்துக்கும், முஸ்லிம் பக்தர்கள் 'இந்தியாவில் விரும்பும் திருத்தலத்திற்கும் அழைத்துச் செல்லப்படவுள் ளனர்.

சீட்டிழுப்பின்மூலம் தெரிவு செய்யப்படுகின்ற அதிர்ஸ்டசாலிகளுக்கிடையில் யாராவது ஒருவர் இந்தியாவில் யாத்திரை மேற்கொள்ள விரும்பாவிட்டால், அவருக்கு ரூபா 75 ஆயிரம் பணப் பரிசு வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (த-9)

## வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மொபிடெலின் 'லக்கி வரம்' பரிசு




இலங்கையின் தேசிய தொலைத்தொடர்பு சேவையான மொபிரெல், எக்கணமும் மக்களின் உள்ளுணர்வுகளைப் புரிந்து, மக்களின் தேவைகளை உணர்ந்து சேவையாற்றுவதுடன், தன்தொலைத் தொடர்புச் சேவையினால் அனைத்து மக்களின் உள்ளங்களையும் தன்வசம் ஈர்த்துப் பிணைத்துள்ளது.

எனவே இம்முறை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வாழும் மக்களின் எதிர்பார்ப்பு களையும், கனவுகளையும் அவரவர் எண்ணப்படி நிறைவேற்றும் நோக்கில், அவர்களின் எதிர்கால வாழ்க்கையின் நலன் கருதி சுய தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுத் தருவதற்காகவும், வாழ்க்கை வசதிகளை உயர்த்திக் கொள்வதற்காகவும், அவர்களுக்கு அவசியமான பரிசுகளை வழங்குவதற்காக பரிசுக் குவியல்களை வழங்கும் மொபிரெலின் 'Lucky Vara' சீட்டிழுப்பினை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில்வாழும் மக்களுக்காக ஆரம்பித்துள்ளது.

இச்சீட்டிழுப் பானது 2012 ஜூலை மாதம் முதல் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இச் சீட்டிழுப்பானது மாகாண மட்டத்திலும், மாவட்ட மட்டத்திலும் நடைபெறும்.

எந்தவொரு மொபிரெல் முற்கொடுப்பனவு இணைப்பினதும் பாவனையா ளர்கள் தமது இணைப்பை ரூபாய் 50/- அல்லது அதற்கு மேல் ரீலோட் அல்லது ரீ சார்ஜ் செய்தாலும் மாகாண மட்டத்திலான மும் மாதச் சீட்டிழுப்பிற்கு தகுதி பெறலாம். மொபிரெலின் புதிய முற்கொடுப் பனவு வாடிக்கையாளர்கள் அம் மாதத்திற்குரிய, மாவட்ட மட்டத்திலான மாதாந்தச் சீட்டிழுப்பிற்குத் தகுதி பெறலாம்

முதலாவது பரிசாக, டிராக்டர் அல்லது லொறி அல்லது காரினையும், இரண்டாவது பரிசாக, முச்சக்கர வண்டி, மற்றும் மூன்றாவது பரிசாக, மோட்டார் சைக்கிள் அல்லது தங்கப் பவுண்களையும் வெல்லலாம். மாதாந்தச் சீட்டிழுப்பில் கையடக்கத் தொலைபேசிகள், சைக்கிள்கள், லப்டொப்கள் மற்றும் இலவச அழைப்புக் காலத்தையும் வெல்லலாம்.

மேலும் கடந்த ஜூலை மாத சீட்டிழுப்பில் மட்டக்களப்பு, அம்பாறை, திரு கோணமலை, கந்தளாய், வாழைச்சேனை ஆகிய பிரதேசங்களில் இருந்து வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

## 'ஜயஸ்ரீ' சீட்டிழுப்பில் வெற்றி பெற்றவர்கள்

தென்மராட்சி,செப்.23

மக்கள் வங்கியின் 'ஜயஸ்ரீ' மாதாந்த சீட்டிழுப்பின் மே, ஜூன் ஆகிய மாதங்களில் கிளை ரீதியாக வெற்றியாளர்களின் விவரங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

சாவகச்சேரி மக்கள் வங்கியின் வாடிக்கையாளர்களின் விவரம் வருமாறு:-

மே:- சி.சுதாகர்-கோப்பாய் தெற்கு, பி.மிறோஜா-கச்சாய் வீதி, கொடிகாமம், எஸ்.சிவபாதசுந்தரம்-மீசாலை கிழக்கு.

ஜூன்:- எஸ்.அனுசுயா-கைதடி நுணாவில், ரி.மகேஸ்வரி-சண்முகம் வீதி, சாவகச்சேரி, பீ.பியசேன- பாபரக ஹகந்த அளவத்வல.

மே மாத ஜயஸ்ரீ சீட்டிழுப்பின் எல்.ஈ.டி.தொலைக்காட்சிப்பெட்டி வெற்றியாளர் நாகமுத்து இரவிச்சந்திரன்-நாவற்காடு வரணி. (த-9)



வடமகாணத்தில் சிறந்த வாடிக்கையாளர் சேவையில் 2ஆம் இடத்தைப் பெற்றுக்கொண்ட இலங்கைவங்கி காரைநகர் திணைக்கள சான்றிதழை கொழும்பு கிறான்ட் ஓறியன்ஸ் ஹோட்டலில் இடம்பெற்ற நிகழ்வில் இலங்கை வங்கியின் வட பிராந்திய உதவிப் பொது முகாமையாளர் கே.ஈ.டி. சுமணசிறி இலங்கை வங்கி காரைநகர் கிளைமுகாமையாளர் இ.சிவகுமாரிடம் கையளிக்கிறார். இலங்கை வங்கி காரைநகர் கிளை உதவி முகாமையாளர் எஸ்.நவகிருஸ்ணராசா மற்றும வங்கி உத்தியோகத்தர் அருகில் உள்ளனர். (த-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நித்தியசுகத்தை நோக்கி... உதயன் வைத்தியமலர் 83

# ஒழுங்கான நீச்சல் பயிற்சி ஆயுளை அதிகரிக்கும்

உலகில் அறியப்பட்ட உடற்பயிற்சிகளில் நீச்சலே உடல் ஆரோக்கியத்திற்கு மிகவும் சிறந்தது என்கிறது விஞ்ஞானம்! ஒரு மணிநேர நீச்சலில் உடலின் அத்தனை தொகுதிகளும் பழுது பார்க்கப்பட்டு அவற்றின் தொழிற்பாடு சீராகி விடுகிறது. இன்று எம்மை அச்சுறுத்தும் நீரிழிவு, கொலஸ்ரோல், இதயநோய்கள், உயர் குருதியமுக்கம் என்று அத்தனைக்குமே ஒழுங்கான நீச்சல் பயிற்சி ஒரு சிறந்த நிவாரணி! இன்றைய நிலையில், வெகு சீக்கிரத்தில் வீட்டுக்கு ஒரு நீரிழிவு நோயாளி என்ற "பெருமை" இலங்கை போன்ற ஆசிய நாடுகளில் ஏற்படும் என்று ஆய்வுகள் அபாயமணி அடிக்கின்றன. இதற்குக் காரணம் எமது ஒழுங்கற்ற உணவுப் பழக்கங்களும், வாழ்க்கை முறையும் தான் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. இந்தப்பழக்க வழக்கங்கள், அதிகரித்த உடற்பருமனை ஏற்படுத்துகின்றன. அதிகரித்த உடற்பருமன், எல்லா நோய்களுக்கும் நுழைவாயிலாகி, இறுதியில் சொர்க்க வாசலையே காண்பித்து விடுகிறது! இந்தப்பழக் கவழக்கங்களை மாற்ற முடியாதவர்கள் (பல வழிகளையும் கையாண்டு தோற்றுப் போனவர்கள். மாற்ற வேண்டும் என்பதை மட்டும் மாற்றமில்லாமல் சொல்பவர்கள்- அதாவது நம்மில் பெரும்பான்மையானோர்), ஆகக் குறைந்தது நீச்சலையாவது ஒழுங்காகச் செய்தால் நல்லது என்பது விஞ்ஞானிகள் கருத்து. நீச்சலில் கிடைக்கும் எல்லாப் பயன்களையும் தரையில் செய்யும் ஏனைய உடற்பயிற்சிகளில் முழுமையாகப் பெறமுடிவதில்லை.

எமது பிரதேசத்தைப் பொறுத்தவரையில், நீச்சல் பெரியளவில் பிரபல்யமடையாததற்கு, அதற்குரிய வளங்கள் இருக்காமையும் ஒரு காரணமாக இருந்தது. ஆனால் கொழும்பு போன்ற பிரதேசங்களைப் பொறுத்த வரையில் சிறுவயதிலிருந்தே நீச்சலைப் பழக்கத் தொடங்கி விடுகிறார்கள். யாழ்ப்பாணத்தில் தற்போது யாழ்.மத்திய கல்லூரியில் சிறந்த ஒரு நீச்சல் தடாகம் உள்ளது. அதுதவிர ஏனைய சில தனியார் தாடகங்களும் உள்ளன. ஆனால் நீச்சல் பழகுவதற்கு நீச்சல் தடாகங்கள் தான் அவசியம் என்றல்ல. ஆழம் குறைந்த பாதுகாப்பான கடற்கரைப் பிரதேசங்களிலும் ஒரு சிறந்த பயிற்றுவிப்பாளர், உயிர் காப்பாளர் இருக்கும் பட்சத்தில், நீச்சல் பயிற்சியினை மேற்கொள்ளலாம். அத்துடன், எமது வீடுகளில் கூட இடம் இருக்கும் பட்சத்தில் சிறிய நீச்சல் தடாகங்களை அமைத்துக் கொள்ளலாம். அது எதிர்கால சந்ததியின் ஆரோக்கியத்திற்கான முதலீடாக அமையும்.

நீச்சல் ஒரு Aerobic வகையைச் சேர்ந்த, அதாவது ஒழுங்கான சந்தத்துடன் கூடிய சீரான சுவாசத்தின் உதவியோடு செய்யப்படும் உடற்பயிற்சி யாகும். நீச்சலின் போது உடலும் உள்ளமும் புத்துணர்ச்சி பெறுவதால் நீந்துபவருக்கு நீச்சல் மீதான ஆர்வம் அதிகரிக்கிறது. இது ஒரு சுழற்சி வட்டமாக மாறுவதால், எமது உடலும் உள்ளமும் உச்ச வினைத்திறனுடன் இயங்குவதற்கான ஆரோக்கியம் தானாகவே கிடைத்து விடுகிறது. ஒழுங்கான நீச்சல் பயிற்சியின் மூலம் நாம் பின்வரும் பயன்களை அடைய முடியும்.

1.கழுத்தளவு நீரில் ஒரு மனிதன் மிதக்கும் போது, 90 வீதம் உடல் நிறை நீரினால் தாங்கப்படுவதால், உடலிலுள்ள மூட்டுக்களில் வழமையாகப் பிரயோகிக்கப்படும் அழுத்தம் குறைந்து, தசைகளும் மூட்டுக்களும் இலகுவாக இயங்க முடிகிறது. நீங்கள் நீந்தாவிட்டாலும் கழுத்தளவு நீரில் நின்று சில உடற்பயிற்சிகளைச் செய்தாலே மூட்டு சம்பந்தமான பல நோய்களைத் தவிர்க்கலாம் என்பது மூட்டு வாதத்திற்கான (Arthritis) உலக அமைப்பின் அறிவுரை.

2.தரையில் ஓடும்போது காற்றில் ஏற்படும் எதிர்ப்பை விட பன்னிரண்டு மடங்கு அதிக எதிர்ப்பு நீந்தும் போது நீரினால் முழு உடலுக்கும் ஏற்படுகிறது. இது எமது தசைகளின் வலிமையையும், இழுவிசையையும் (Tone) அதிகரிக்க உதவுகிறது. நீச்சல் என்புகளின் வலிமையையும் அதிகரிப்பதால், மாதவிடாய் நின்ற பின் பெண்களுக்கு ஏற்படும் என்பு சம்பந்தமான நோய்களுக்கு நீச்சலே சிறந்த நிவாரணம் என்கின்றனர் விஞ்ஞானிகள்.

உடற்பயிற்சிக் கூடத்தில் உடற்பயிற்சி செய்யும்போது, குறித்த ஒரு உடற்பகுதி/ தசை மட்டுமே குறித்த நேரத்தில் பயிற்சிக்கப்படும். நீச்சலில் முழு உடலும் ஒரே நேரத்தில் சம்பந்தப்படுவதால் முழு உடலினதும் நெகிழ்வுத் தன்மை (Flexibility) அதிகரிக்கிறது. ("குனிய நிமிர ஏலாமல் கிடக்கு" என்று சதா புலம்புபவர்கள் கவனிக்க)

4.நீச்சலின் போது எமது இதயத்தசை நாங்கள் பலமடைவதுடன் குருதியைப் பம்பும் திறனும் அதிகரிக்கிறது. அமெரிக்க இருதய நோய்ச்சங்கத்தின் அறிக்கையின்படி, தினமும் 30 நிமிடங்கள் நீச்சலில் ஈடுபடுபவர்களில் இருதய நோய் ஏற்படும் வாய்ப்பு 30-40 வீதத்தால் குறைந்து விடுகிறதாம்!

5.சாதாரண நீச்சலில் (Free Style) ஒவ்வொரு 10 நிமிடத்திற்கும் 100 கலோரி சக்தி பயன்படுத்தப்படுவதால், உடல் நிறையைக் குறைக்க/ கட்டுப்பாட்டில் வைத்திருக்க மிகவும் இலகுவான முறையாக உள்ளது. செலவிடும் சக்தியின் அளவு நீச்சல் பாணிகளுக்கு ஏற்ப வேறுபடுகிறது.

6.ஆஸ்துமா நோயாளிகளுக்கு உடற்பயிற்சி செய்வதற்குப் பயம் இருக்கலாம். ஆனால் நீச்சல் அவ்வாறல்ல. நீச்சல் தடாகத்திலுள்ள ஈரலிப்பான காற்று, நீந்தும் போது ஆஸ்துமா தூண்டப்படுவதைத் தவிர்க்க உதவுகிறது. அத்துடன் நீச்சலானது நுரையீரலின் கொள்தகவை (Capacity) அதிகரித்து நோய் அறிகுறிகளைக் குறைக்கிறது.

7.கொலஸ்ரோல் அதிகரிப்பினால் பாதிக்கப்பட்டவர்களில் LDL வகைக் கொலஸ்ரோலின் அளவைக் குறைப்பதும், HDL வகைக் கொலஸ்ரோலின் அளவை அதிகரிப்பதும், இதயத்தின் ஆரோக்கியத்திற்கு இன்றியமையாதது. நீச்சல் ஒரு சிறந்த Aerobic வகைப் பயிற்சியாதலால் இவை இரண்டையும் இலகுவாகச் செய்துவிடுகிறது.

8.கிரமமாக நீச்சலில் ஈடுபடுபவர்களில் , உடலில் மேலதிக குளுக்கோஸ் தொடர்ந்து பயன்படுத்துவதால், நீரிழிவு நோய் ஏற்படும் வாய்ப்பு குறைகிறது. ஒவ்வொரு வாரமும் 500 கலோரியை செலவழித்தால் நீரிழிவுக்கான வாய்ப்பு 6 வீதம் குறையும் என்கிறது ஓர் ஆய்வு. நீரிழிவு நோயாளர்களில், நீச்சல் போன்ற உடற்பயிற்சிகள் இன்சுலின் ஓமோனுக்கான உணர்திறனை அதிகரிக்கச் செய்து நோய்க்கட்டுப்பாட்டிற்கும் உதவுகிறது.

9.எல்லாவற்றுக்கும் மேலாக, உள ஆரோக்கியத்தையும் உற்சாகத்தையும் வழங்குவதில் நீச்சலுக்கு நிகரான உடற்பயிற்சி இல்லை என்கின்றன ஆய்வுகள். எமக்கு மகிழ்ச்சி ஏற்படும்போது உடலில் சுரக்கும் Gdorphin எனும் ஒரு இரசாயனம், நீச்சலின் போது தானாகவே சுரக்கிறதாம். மேலும், மூளையில் Hippo campus என்ற பகுதியில் நடைபெறும், கலங்களைப் புதுப்பிக்கும் செயற்பாடு (Neurogenesis) நீச்சல் போன்ற உடற்பயிற்சிகளால் துரிதப்படுகிறதாம்! ஆக உற்சாகமாக வாழ, நீச்சல் ஒரு சிறந்த பொழுதுபோக்கு!

10.அதிகநாள் வாழ யாருக்குத்தான் ஆசை இல்லை. அமெரிக்காவில் நடந்த ஆய்வில், நீச்சல் பயிற்சி செய்பவர்களின் இறப்பு வீதம் ஏனையவர்களுடன் ஒப்பிடும் போது 50 வீதத்தால் குறைவாக இருந்தது! இது ஒன்றே போதும், நீச்சலின் பயன்பாட்டை வளர்க்க! ஆகவே சந்தோஷத்திற்காகவேனும் நீந்தப் பழகுங்கள்.

யாழ்ப்பாணத்தில் முறையாக நீச்சல் பயிற்சிக்கான வசதி வாய்ப்புகள் உருவாகி வரும் சூழ்நிலையில் அவற்றைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்ளுங்கள். யாழ்.மத்திய கல்லூரியில் அமைந்துள்ள நீச்சல் தடாகத்தில், பல பெற்றோர்கள் தம் பிள்ளைகளுக்கு நீச்சல் பயிற்சி வழங்குவதைக் காணக்கூடியதாக உள்ளது. இது வரவேற்க வேண்டிய ஒன்று. அத்துடன் அங்கு பெண்களுக்காக பிரத்தியோக நேரமும் ஒதுக்கப்பட்டுள்ளது. நாம் உணவுக்கடைகளில் குளிர்பானங்களுக்கும் ஏனைய தேவையற்ற உணவுகளுக்கும் செலவு செய்யும் பணத்தை இவ்வாறான இடங்களில் செலவிடலாம். எனவே சொன்னது போல, பாதுகாப்பான கடற்கரை அல்லது வீட்டில் அமைக்கப்பட்ட பெரிய தடாகங்களும் நீச்சல் பயிற்சிக்கு உகந்தவையே.

நீச்சலின் போது எப்போதும் கருத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள்.

1.நீச்சல் பயிற்றுவிப்பாளரும், உயிர்காப்பாளரும் இல்லாது எந்தஒரு சந்தர்ப்பத்திலும் தடாகத்தில் இறங்கக் கூடாது. (இதுவே அண்மையில் துரதிஷ்டவசமாக ஒரு மாணவனின் உயிரைப் பறித்தது.)

2. நீச்சல் பழகுபவர்கள் எப்போதும் தடாகத்தின் மிக ஆழம் குறைந்த பகுதியிலேயே இறங்குவதுடன் , தற்பாதுகாப்பு அங்கி அல்லது உபகரணத்தை உடன் வைத்திருக்கவும்.

3.எக்காரணம் கொண்டும் மதுபோதையில் இருக்கும் போது தடாகத்தினுள் இறங்காதீர்கள். அது ஆழம் மிகக் குறைந்த பகுதியாக இருந்தால் கூட!

ஆக மொத்தத்தில், நீச்சலை வரவேற்போம். எமது இளைய சந்ததியைப் பயிற்றுவிப்போம்! ஆரோக்கியமான சமுதாயத்திற்கு வழி சமைப்போம்.

கதிரேசப்பிள்ளை தர்சன்
மருத்துவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாதவிலக்கு ஓய்தல் (Menopause)

ஒரு பெண்ணின் மாதவிலக்கு சாதாரணமாக 45-55 வயதிற்கிடையில் நிரந்தரமாக நின்றுகொள்ளும்.

மாதவிலக்கு ஓயும் போது என்ன நேர்கின்றது. மாதவிலக்கு நிற்கும் காலம் நெருங்கும் போது ஒரு பெண்ணின் ஜனன உற்பத்தி உறுப்புக்களில் பல மாற்றங்கள் நிகழ்கின்றன. பாலியல் ஓமோன் திரவம் உண்டாவதும் சூல் வெளிப்படுதலும் படிப்படியாக குறைந்து கொண்டு போகும். இதனால் மாதவிலக்கு வட்டத்தில் ஒழுங்கின்மை ஏற்படலாம். ஓமோன் திரவம் குறைவடைந்ததும் நிரந்தரமாக மாதவிலக்கு ஏற்படுதலும் நின்றுவிடும்.

மாதவிலக்கு நிற்கும் காலம் நெருங்கும் போது மாதவிலக்குடன் இரத்தப் போக்கு அதிகமாக அல்லது நீண்ட நாள்களுக்கு ஏற்படுமேயானால் வைத்திய ஆலோசனை பெறுங்கள்.

**மாதவிலக்கு ஓயும் போது காணப்படும் அறிகுறிகள்:**

அநேகமான பெண்களுக்கு மாதவிலக்கு நிற்கும் காலம் நெருங்கும் போதோ அல்லது அதன் பின்போ ஒரு மாற்றமும் தெரிவதில்லை. மாதவிலக்கு மட்டும் நிற்கும் சில பெண்களுக்கு பாலியல் ஓமோன் திரவம் குறைவடைவதால் கீழ்க்காணும் அறிகுறிகள் தென்படலாம்.

**உடல் ரீதியான மாற்றங்கள்**

★உடலில் உஷ்ணமும் எரிவும் இருப்பதாக உணர்வர்.

★இது அநேகமான உடலின் மேல் பகுதியில் உண்டாகும். சில வேளைகளில் இதனுடன் அதிகமான வியர்வையும் ஏற்படும். இதனால் நித்திரைக்கும் பங்கம் ஏற்படலாம்.

★யோனிப் பாதையில் திரவமற்ற தன்மையால் பாலுறவு கஸ்டமாகும். பாலுறவு விருப்பமின்மை ஏற்பட இது காரணமாகின்றது.

★உடலில் உள்ள எலும்புகள் பலவீனமடையலாம். இதனால் மெதுவாக விழுந்தாலும் கூட எலும்பு முறிவு ஏற்பட இடமுண்டு.

★அதிகமான களைப்பு

★மூச்செறிதல்

★உடல் எடை கூடுதல்

★தும்மும் போது, இருமும் போது சிறுநீர் வெளியேறல்

**உளரீதியான மாற்றங்கள்**

★பதட்டமடையும் தன்மை

★மனதில் ஆறுதலின்மை

★தூக்கம் வராமை

★எதிலும் கவனம் செலுத்த முடியாமை

★மனத்தளர்ச்சி

**மாற்றத்துக்கு எப்படி எம்மைத் தயார் செய்வது**

★உடலில் உஷ்ணமோ அல்லது எரிவோ தெரியும் போது நீங்கள் செய்து கொண்டிருக்கும் வேலையை ஒரு நிமிடம் நிறுத்தி ஆறுதலாக ஓர் இடத்தில் உட்காருங்கள். இறுக்கமான உடையணிந்திருந்தால் அவற்றை தளர்த்தி மின்விசிறி மூலமோ அல்லது வேறு வழியிலோ காற்றை வீசச் செய்யுங்கள்.

★பாலுறவு கொள்ளும் போது கஸ்டம் தெரிந்தால் வைத்திய ஆலோசனையின் பேரில் பொருத்தமான கிறீம் அல்லது பூச்சு மருந்தைப் பாவியுங்கள்.

★எப்பொழுதும் போசாக்குள்ள உணவை உட்கொள்ளுங்கள். கூடுதலாக சீனி, எண்ணெய், கொழுப்பு, உப்பு கலந்த உணவு வகைகளைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

★தானாகவே சிறுநீர் வெளியேறுதலை விசேடமான உடற்பயிற்சி மூலம் கட்டுப்படுத்திக் கொள்ளலாம். இது தொடர்பாக வைத்தியரின் ஆலோசனையைப் பெறுங்கள்.

★ஒழுங்கான உடற்பயிற்சியில் ஈடுபடுங்கள். இதனால் உங்கள் எலும்பின் பலவீனத்தைக் கட்டுப்படுத்தலாம். அத்துடன் உங்கள் எடையையும் கட்டுக்குள் பேண முடியும்.

★மன உளைச்சலை தவிர்த்துக் கொள்ளுங்கள். உங்கள் பிரச்சினை பற்றி மற்றவர்களுடன் பேசுங்கள். உங்களுக்கு தென்படும் மாற்றங்கள் பற்றி உங்கள் கணவருடன் பேசுங்கள்.

★ஒழுங்காக வைத்திய பரிசோதனை செய்து கொள்ளுங்கள். இதனால் ஆரம்பத்திலேயே மார்பகங்களில் அல்லது கர்ப்பப்பை, பாலியல் உறுப்புகளிலே புற்றுநோய் ஏற்படுவதைக் கண்டறிய முடியும்.

★மாதவிலக்கு நிற்கும் காலத்தில் ஏற்படும் பிரச்சினைகளுக்கு ஓமோன் சிகிச்சை முறைகளும் உண்டு. இதை வைத்தியரின் ஆலோசனையுடன் மட்டுமே பெறல் வேண்டும்.

**மாதவிலக்கு நின்ற பின்பு**

★மாதவிலக்கு நின்ற பின் ஒரு பெண்ணிற்கு குழந்தையை பெற்றுக்கொள்ள முடியாதென்றாலும் அது பாலுறவு வாழ்க்கையின் முடிவல்ல.

★கர்ப்பம் ஏற்படும் என்ற பயமே இல்லாது பாலுறவில் ஈடுபடும் சந்தர்ப்பம் உங்களுக்கு இந்தக் காலத்தில் கிட்டுகின்றது.

★மாதவிலக்கு நின்ற பின் ஒரு பெண்ணிற்கு பலவிதமான உள, உடல் ரீதியான அசௌகரியங்கள் ஏற்படுமென்றாலும் அவை தொடர்பான நல் விளக்கத்தைப் பெறுவதன் மூலம் அவ் அசௌகரியங்களைக் குறைத்துக் கொள்ள முடியும். அவசியமான வைத்திய ஆலோசனை பெறலாம்.

வி.சுகன்யா
தாதியக் கல்லூரி, யாழ்ப்பாணம்

Visalam Wide and Beyond

# மாணவர்களுக்காக இப்போது யாழ். நகரில் VISALAM MINDS

## Post Graduation

Get a better Title and Salary

| | | |
|---|---|---|
| IT | PGDCA, MCA | |
| Management | PGDBA, MBA | |
| Law | PGD Law | |
| Math | PGDM | |

## Under Graduation

| | | |
|---|---|---|
| IT | S/W Eng N/W Eng. Multimedia, Visual Communication & BIT | |
| Management | Business Mgt Finance Mgt, HRM, Marketing, Banking Mgt. | |
| Maths | Statistics, Mathematics | |
| Life Science | Bio Medical, Chemistry, Micro Biology | |
| Allied Science | Pharmacy, Nursing, Physiotherapy. MLT, Dietician/ Nutritionist | |
| Law | LLB | |

**Free Courses**
French/German,
Driving / Swimming,
Catering / Beautiy Culture,
Wiring/Hardware
Tennis/ Badminton
Caterning / Culinary
&
Many More

## TOP - UP Degree

| | | |
|---|---|---|
| IT | BSc, BCA | Top - Up Your HND s (EDEXCEL / SRILANKA) With Degree |
| Management | BBA, B.com | |
| Maths | B.Sc | |

## External Degree

| | | |
|---|---|---|
| IT | BIT | Earn a BIT With extra Curriculums added to |
| Management | BBA, B.com | |

## Diploma

| | | |
|---|---|---|
| IT | S/W Eng. N/W Eng. Multimedia, Visual Communication | ALL Diplomas are eligible for Top - Up degree |
| Management | Business Mgt., Finance Mgt., HRM Marketing Mgt., Banking. | Well equipped Lab and high end Instruments |
| Maths | Statistics, Mathematics | |
| Life Science | Bio Medical, Chemistry, Micro Biology, Psychology, Counselling & Psychology | Leading to BSc. and Medicine in Europe/ India |
| Allied Science | Pharmacy, Nursing, Physiotherapy, MLT | Part time Jobs Hands on Trainning |
| Law | Law | |
| Language | English | |
| Teaching | DTLLS PreSch./Primary Edu. | |

## Professional

| | | |
|---|---|---|
| IT | CRM. Cloud Computing, Data - Securities, QA/ Testing, Business Analysist | Affordable Cost & Scholarships |
| Management | CIM, LEAN - Six Sigma, Risk Management, Capital Mgt, Sustainability Mgt, Co - oprate | |
| Maths | Data Analysist, Actuarial Science | Updated & addtional learning recourses |

## Vocational

| | | |
|---|---|---|
| IT | Ethical hacking, SEO/SMM,CMS | |
| Management | BPO, Leadership & Personal mgt, Soft Skills Devt. devt, Book Keeping - AAT | Immediate job placement on successful completion |
| Language | English - Pronounce , Sinhala, French, German | UK Experienced Lecturers |
| Others | Jewellery making, Gemmology, Radio anchoring, Beauty culture ,Catering, Tailoring, Fashion Designing, Dress, | Make your own Business |
| | Masonary, Carpentry, Welding, Plumbing, DIY - Beginner, DIY - Surviver, DIY - Proficient Life in the UK | Earn 1000s a day |

## School

| | | |
|---|---|---|
| ICT | Tuition from grd 6 to grd 12, Program- | Free Hardware training |
| EDEXCEL | Tuition from grd 6 to grd 12 | Learn Programming Basics at a minimum Fee |

## Kids

| | | |
|---|---|---|
| English | Pronounce, Elocution, Beginner English | Learn to pronounce and master English |
| Maths | Maths - abc, Maths Building, ABACUS | Get off to a good start in math |
| ICT | Computer Science , Digital literacy, IT | Become a little IT Engineer |

Visalam Wide and Beyond **Visalam Holdings (Pvt) Ltd**
MINDS | SOLUTIONS | CARES | PLACEMENTS
Phone : 021 221 9695 Mobile : 075 979 9695 127/1 Temple Road, Jaffna, Sri Lanka Email : admin@visalamholdings.com Web : www.visalamholdings.com
(சி/3459)(6.7.8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


உதயன் விளம்பரத் தொடர்புக்கு— advt@uthayan.com 0215671111

## விற்பனைக்கு

டொல்பின் VAN விற்பனைக்குண்டு.
தொடர்பு : 077 2673858
(23216)(6,7,8)

Pharmacist Licence ( பாமசிஸ்ட் அனுமதிப்பத்திரம்) வாடகைக்கு / குத்தகைக்கு கொடுக்க விரும்புபவர்கள் 072 3061588 என்னும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.
(23215)(6-7-8)

## கண்ணீர் அஞ்சலி



**சொஸ்ரியாம்பிள்ளை ஜோசப்** (பொன்ராஜா)

அவர்கள் நேற்று முன்தினம் (21.09.2012) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

மத்தியூஸ் றோட், யாழ்ப்பாணம்.

நண்பன்
ஜே.றெபோட்
(கராஜ் உரிமையாளர்)

(23218)(5-6-7)

## டில் பெரிய சுவைக்கு உணவுகள்

### DIL FOODS (pvt) DISTRIBUTORS

முன்னணியில் திகளும் DIL FOODS என்ற வியாபார பெயர் உடைய உணவு/வாசனைத் திரவியங்கள் யாழ். குடா நாட்டில் சந்தைப்படுத்த வினியோகஸ்தர்கள் தேவை. தெரிவு செய்யப்படும் முகவர்களுக்கு:-

- ★ கவர்ச்சியான கொமிஸன் கொடுக்கப்படும்.
- ★ மாதாந்த வாகன கொடுப்பனவு
- ★ தாபன வியாபார பிரதிநிதி
- ★ தாபன எழுத்து பொருள்களும் பிரசார சேவையும்

ஆகக் குறைந்த தேவைகள்:

- ★ ரூ. 500,000/= பணம் வைப்பதற்கு தகுதியிருத்தல் வேண்டும்.
- ★ களஞ்சிய வசதி.
- ★ வாகன வசதி
- ★ போதியளவு வியாபாரத்துக்கான முதல்.

Contact No.
யோகேந்திரன் - 0777189325
Thoufic Mohomed - 0718688273

**DIL FOODS (PVT) LTD.**
QUALITY PULSES SPICES & DRY FOODS
Templeburg Industrial Zone,
Stage II, Panagoda,
Homagama, Sri Lanka.
Phone : 0115664273, 0114870356 Fax; 0112751000
Email: dilfoods@sltnet.lk Web:www.dilfoodslanka.com
(23208) (6,7,10)

- தபால் மூலம் -

## ஆறு மாத கால டிப்ளோமா

**Course Length - Six Month**

SEPT.'2012 TO FEB.'2013

24

தமிழ் மொழி மூலம்

| | |
|---|---|
| Dip. in Psychology | - உளவியல் டிப்ளோமா |
| Dip. in Office Administration | - காரியாலய நிர்வாக டிப்ளோமா |
| Dip. in Human Resources Management | - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Civil Engineering | - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா |
| Dip. in Business Management | - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Banking Management | - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Sales & Marketing Management | - விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் மு. டி. |
| Dip. in Health & Hospital Management | - சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை மு. டி. |
| Dip. in Nursing Administration | - தாதியர் நிர்வாக டிப்ளோமா |
| Dip. in Educational Management | - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Montessori | - மொண்டிசூரி டிப்ளோமா |

**கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்**

● கல்முனை ● மட்டக்களப்பு ● திருகோணமலை ● புத்தளம் ● வவுனியா ● மன்னார் ● யாழ்ப்பாணம் ● கண்டி ● கொழும்பு ● ஹட்டன் ● அனுராதபுரம் ● நுவரெலியா

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர், முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.

**Mobile: 0777 140 844, 071 803 48 48**

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி

Country Co-ordinator
MARUTHUR . A. HASSEN
(B.Sc. Psychology, M.Sc. Psychology)

**ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES**
24, 1st FLOOR, SUPERMARKET COMPLEX, MAIN STREET, SAINTHAMARUTHU-07.
Web: www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org
Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848

விண்ணப்ப முடிவுத் திகதி : 28.09.2012

(சி/3551)

## வரணியில் காணி எல்லைத் தூண்கள் பிடுங்கி வீசப்பட்டன

காணி எல்லைக்கு போடப் பட்ட கொங்கிறீட் வேலித் தூண்கள் ஒரே இரவில் அடித்து முறிக்கப்பட்டு வீழ்த்தப்பட் டுள்ள சம்பவம் வரணிப் பிர தேசத்தில் அண்மையில் இடம்பெற்றுள்ளது. இந்தச் சம்பவம் பற்றி தெரியவருவ தாவது, குறித்த காணியின் உரிமையாளர்தனது காணியை துப்புரவு செய்து வேலிக்கு கதியால்கள் போடப்பட்டு கல்தூண்கள் நட்டு முள்ளுக் கம்பி அடித்து எல்லைப்படுத்தி யுள்ளார். இருந்தும் சிறிது நாள்களின் பின்பு இரண்டு பக்க வேலிகளின் தூண்கள் அடித்து முறிக்கப்பட்டுள்ள நிலையில் வேலிகள் சாய்ந்து வீழ்ந்து கிடந்துள்ளது.

இந்தச் சம்பவம் வரணி வடக்கு வாழைத் தோட்ட சந்தியில் இடம்பெற்றுள்ளது. இந்தச்சம்பவத்தில் ஈடுபட் டவர்கள் யாரென்று இது வரை அடையாளம் காணப்பட வில்லை. (3-122)

## அதிபர்களுக்கான 100 மணிநேர பயிற்சிநெறி

யாழ். வலயக் கல்வி அலு வலகத்தில் வாழ்க்கைத் திறனொன்றான ஆங்கிலம், ஜனாதிபதி செயல் முனைப் புத் திட்டத்தின் கீழ் 100 மணி நேர அதிபர்களுக்கான பயிற்சி நெறி நடைபெறவுள் ளது. பயிற்சிநெறி எதிர்வரும் 28 ஆம் திகதி வெள்ளிக் கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஆசிரியர் வள நிலை யத்தில் ஆரம்பமாகவுள்ளது என யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (3)

## நௌரு தீவுக்குச் செல்ல விரும்பாத 18 பேர் இலங்கை திரும்பினர்

அகதிகள் தஞ்சம் கோரிய 18 இலங்கையர்களை நாடு கடத்தியுள்ளதாக ஆஸ்திரேலியா தெரிவித்துள்ளது.

இலங்கை உள்ளிட்ட நாடுகளில் இருந்து புகலிடம் கோரி வருவோரை நௌரு தீவுகளுக்கு அனுப்பி வைக்க ஆஸ்திரேலிய அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

எனினும் நௌரு தீவுக் குச் செல்ல விருப்பம் தெரி விக்காத 18 இலங்கை அகதி கள் சுய விருப்பின் பேரில் இலங்கைக்கு திருப்பி அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக ஆஸ்தி ரேலிய குடிவரவு அமைச்சர் கிறிஸ் பொவுன் தெரிவித் துள்ளார்.

ஆஸ்திரேலிய நேரப்படி நேற்றுக் காலை 8.15 மணி அளவில் குறித்த இலங்கைப் புகலிடக் கோரிக்கையா ளர்கள் கொழும்பு நோக்கி விமானம் மூலம் புறப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (3)

### சண்டிலிப்பாயில் நடத்தப்பட்ட

## நடமாடும் சேவை மூலம் 970 பேர் பயனடைவு

நவாலி, செப்.23

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் அண்மையில் இடம்பெற்ற பிறப்பு, இறப்பு திருமணம் சம்பந்தமான நடமாடும் சேவையின்மூலம் 970 பேர் பயனடைந்துள்ளனர்.

இந்த நடமாடும் சேவை யின்மூலம் இந்தப் பிரிவில் நீண்ட காலமாக ஆவணங் களைப் பெற்றுக்கொள்ள முடியாமல் இருந்தவர்களை வடக்கு மாகாண பதிவாளர் விசாரணைகளை மேற் கொண்டு ஆவணங்களை உடனுக்குடன் வழங்கியுள் ளார்.

இவற்றில் உத்தேச வயது அத்தாட்சிப்பத்திரம் 341, காலங்கடந்த பிறப்பு34, காலங்கடந்த கல்யாணப் பதிவு 30, காலங்கடந்த இறப்பு பதிவு 11, சாதாரண பிறப்பு பத்திரம் 502, சாதாரண திருமணப் பதிவு 52 ஆகும்.

இதேபோன்று தேசிய அடையாள அட்டையை இதுவரை பெற்றுக்கொள் ளாதவர்களுக்கு கொழும்பி லிருந்து வருகை தரும் ஆள்பதிவுத் திணைகளத் தினரால் யு.என்.டி.பியின் அனுசரணையுடன் தேசிய அடையாள அட்டைகள் வழங்கப்படவுள்ளன என்று சண்டிலிப்பாய் பிரதேச செய லாளர் எஸ். முரளீதரன் தெரி வித்துள்ளார். (3-100)

## விண்ணப்பம் கோரல்

இலங்கை திறந்த பல் கலைக்கழக யாழ்ப்பாண பிராந்திய நிலையத்தினால் குறுகியகால சான்றிதழ் கற்கைநெறிக்கான விண் ணப்பங்கள் கோரப்பட் டுள்ளன.

மனிதவள முகாமைத் துவம், தொடர்பாடலுக்கான ஆங்கிலம், தொடர்பாடலுக் கான தமிழ் ஆகிய மூன்று கற்கை நெறிகளுக்குமே விண்ணப்பங்கள் கோரப் பட்டுள்ளன.

இந்தக் கற்கைநெறிக ளுக்கு 18 வயதுக்கு மேற் பட்ட இருபாலாரும் விண் ணப்பிக்கலாம். விண்ணப் பங்களை யாழ். திறந்த பல்கலைக்கழகப் பிராந்திய நிலையத்தில் பெற்றுக் கொள்ளலாம் என யாழ். பிராந்திய இணைப்பாளர் தெரிவித்துள்ளார். (3)

## சிறுவர் தினப்போட்டிகள்

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு கரவெட்டி கோட் டப் பாடசாலைகளுக்கிடை யிலான சர்வதேச சிறுவர் தின போட்டி நிகழ்வுகள் நடை பெறவுள்ளன. கட்டுரை, கவிதை, ஓவியம், பேச்சுப் போட்டி எனநடைபெறவுள்ளன. இந்தப் போட்டிகள் கரவெட்டி கோட்டக்கல்விப் பணிப் பாளர் திரு.சி. நற்குணலிங் கம் தலைமையில் வதிரி திரு இருதயக் கல்லூரியில் எதிர் வரும் 27 ஆம் திகதி வியாழக் கிழமை பிற்பகல் 2.15 மணிக்கு நடைபெறவுள்ளன. இதற் குரிய விண்ணப்பப் படிவங் களை நாளைமறுதினம் செவ் வாய்க்கிழமைக்கு முன்ன தாக அனுப்பிவைக்குமாறு கேட் கப்பட்டுள்ளனர். (3-253)

## காரைநகர் மாணவர்க்கு சமயப் பரீட்சை

காரைநகர், செப்.23

காரைநகர் மணிவாசகர் சபையினால் காரைநகர் பாட சாலை மாணவர்களிடையே நடத்தப்படும் சமய பாடப் பரீட்சைக்கான விண்ணப் பங்கள் கோரப்பட்டுள்ளன.

தரம் 2 தொடக்கம் தரம் 11 வரையான வகுப்பு மாண வர்களிடையே நடத்தப்பட உள்ள இந்தப் பரீட்சைக்கான விண்ணப்பங்களைப் பாட சாலை அதிபர்கள் ஊடாக சமர்ப்பிக்குமாறு மணிவாசகர் சபையின் தேர்வுச் செய லாளர் க.நேத்திரானந்தன் கேட்டுள்ளார்.

இந்தப் பரீட்சை அடுத்த மாத இறுதியில் நடத்தப்பட உள்ளது. இந்தப் பரீட்சை களில் முதல் மூன்று இடங் களைப்பெறும் மாணவர் களுக்குத் தங்கப் பதக்கங் களும் தரம் ரீதியாக முதல் ஐந்து இடங்களைப் பெறும் மாணவர்களுக்கு புத்தகப் பரிசில்களும் சான்றிதழ்க ளும் வழங்கப்படவுள்ளது.

எதிர்வரும் டிசெம்பர் மாதம் ஈழத்துச் சிதம்பரத்தில் நடைபெறவுள்ள மணிவாசகர் விழாவில் வைத்து இந்த மாணவர்களுக்கான பரிசில் களும் சான்றிதழ்களும் வழங் கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (3-250)

## பிடிக்கப்படும் கட்டாக்காலிகள் மூன்று தினங்களுக்குள் ஏலத்தில்

**அனைத்துப் பிரிவு களிலும் கட்டாக்காலி கால்நடைகள் பிடிக் கப் படவுள்ளதால் வளர்ப்பு கால்நடைகளைக் கட்டி வளர்க்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.**

தென்மராட்சி, செப்.23

தென்மராட்சி பிரதேசத் தில் கட்டாக்காலிகளாக அலையும் கால்நடைகளைப் பிடிக்கும் பணிகள் சாவ கச்சேரி பிரதேச சபையினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அண்மையில் தென்ம ராட்சி பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற விவசாயக் குழுக் கூட்டத்தில் எடுக் கப்பட்ட முடிவுகளின் பிரகாரம் கட்டாக்காலி கால்நடைகள் பிடிக்கப்பட்டு வருகின்றன.

இந்த நடவடிக்கை முதல் கட்டமாக தென்மராட்சி தெற்கு தனங்களப்பு பகுதி யில் ஆரம்பிக்கப்பட்டுள் ளது. இந்தப் பிரதேசத்தின் அனைத்து இடங்களிலும் கட்டாக்காலியாக அலையும் கால்நடைகளே பிடிக் கப்பட்டு மூன்று தினங் களுக்குள் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

அதேநேரம் கடந்த வெள் ளிக்கிழமை தொடக்கம் பிரதி திங்கள், புதன், வெள்ளி ஆகிய தினங்களில் கட்டாக்காலி மாடுகள் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன என்று பிரதேச சபைத் தலைவர் சி. துரைராஜா அறிவித்துள்ளார். அனைத்துப் பிரிவுகளிலும் கட்டாக்காலி கால்நடைகள் பிடிக்கப்படவுள்ளதால் வளர்ப்புக் கால்நடைகளைக் கட்டி வளர்க்குமாறு அறி விக்கப்பட்டுள்ளது. (3-9)

---

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**நாளை**

புரட்டாதி - 08 திங்கட் கிழமை 24.09.2012

திதி: நவமி பி.இ. 01.29 வரை

நட்சத்திரம்: பூராடம், பி.ப 03.59வரை

சுபநேரம்: 12.02- 01.32 வரை

ராகுகாலம்: 07.32- 09.02 வரை

**மேடம்:** மறதியால் பிரச்சினைகள் வந்து நீங்கும். குடும்பத்தில் உள்ளவர்கள் யாரும் தன்னைப் புரிந்து கொள்ளவில்லை என ஆதங்கப்படுவீர்கள். வியாபாரத்தில் புதியவர் களை நம்பி ஏமாற வேண்டாம். உத்தியோகத்தில் யாரையும் பகைத்துக் கொள்ளாதீர்கள். எதிர்பார்ப்புகள் தாமதமாகி முடியும் நாள்.

**இடபம்:** சவாலான வேலை களையும் சாதார ணமாக முடிப்பீர்கள். மூத்த சகோதர வகையில் உதவிகள் கிடைக்கும். விலை உயர்ந்த பொருட் கள் வாங்குவீர்கள். வியாபாரத்தில் தன லாபம் உண்டு. உத்யோகத்தில் அதிகாரியின் ஆதரவு கிடைக்கும். திறமைகள் வெளிப்படும் நாள்.

**மிதுனம்:** குடும்பத்தினருடன் சுப நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். வழக்கில் திருப்பம் ஏற்படும். உங்களால் மற்றவர்கள் ஆதாயமடைவார்கள். உத்தியோகத்தில் உய ரதிகாரிகள் அதிசயிக்கும் படி நடந்து கொள்வீர்கள்.

**கடகம்:** புதிய கோணத்தில் சிந்தித்து பழைய சிக்கலைத் தீர்ப்பீர்கள். பிள்ளைகள் குடும்ப சூழ்நிலை அறிந்து செயற்படுவார்கள். வியாபாரத்தில் புதியவேலையாட்கள் அமை வார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களுக்கு உதவுவீர்கள். நினைத்தது நிறைவேறும்.

**சிங்கம்:** பால்ய நண்பர்கள் உதவுவார்கள். தாயாருக்கு மருத்துவ செலவுகள் வரக் கூடும். வெளியூர் பயணங்களால் அலைச்சல் இருந் தாலும் ஆதாயமும் உண்டு. வியாபாரத்தில் வேலையாள்கள் மதிப்பார்கள். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும்.

**கன்னி:** உங்கள் பேச்சில் அனுபவ அறிவு வெளிப்படும். உடன்பிறந்தவர்கள் உங்கள் நலனில் அதிக அக்கறை காட்டுவார்கள். அர சால் ஆதாயம் உண்டு. வியாபாரத்தில் பழைய பொருள்கள் விற்பனையாகும். உத்தியோகத்தில் சில நுணுக்கங்களைக் கற்றுக் கொள்வீர்கள்.

**துலாம்:** கடந்த இரண்டு தினங்களாக இருந்த அலைச்சல், பதற்றம், கோபம் யாவும் நீங்கும். குடும்பத்தில் நிம்மதி உண்டு. பாதியில் நின்ற வேலைகள் முடியும். வியாபாரத்தில் புதிய முயற்சிகள் பலிதமாகும். உத்தியோகத்தில் உங்கள் உழைப்புக்கு அங்கீகாரம் கிடைக்கும்.

**விருச்சிகம்:** முக்கிய அலுவல்களை மற்ற வர்களை நம்பி ஒப்படைக்காமல் நீங்களே செய்து முடிப்பது நல்லது. முன்கோபத்தைத் தவிர்ப்பது நல்லது. வியாபாரத்தில் வேலையாள்களுடன் போராட வேண்டிவரும். உத்தியோகத்தில் அலட்சியம் வேண்டாம்.

**தனுசு:** ஒன்றுக்கும் மேற்பட்ட வேலைகளை இழுத்துப்போட்டு பார்க்கக் கூடும். பிள்ளை களை அன்பால் அரவணைத்துப் போங்கள். யாரிடமும் உணர்ச்சிவசப்பட்டு பேசாதீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களிடம் விவாதம் வேண்டாம். தடைகளைத் தாண்டி முன்னேறும் நாள்.

**மகரம்:** குடும்பத்தாரின் ஆதரவு பெருகும். விசேடங்களை முன்னின்று நடத்துவீர்கள். பயணங்கள் திருப்தி கரமாக அமையும். நட்பு வழியில் நல்ல செய்தி கேட்பீர்கள். புதிய தொழில் தொடங்கும் முயற்சி வெற்றி அடையும். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும்.

**கும்பம்:** உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். பிள்ளைகளால் மதிப்புக் கூடும். பிரபலங்கள் உதவுவார்கள். மற்றவர்களுக்காக சில பொறுப்புகளை ஏற்பீர்கள். வியாபாரம் சூடுபிடிக்கும். உத்தியோகத்தில் தைரியமாக முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள்.

**மீனம்:** பணவரவு திருப்தி தரும். எதிர் பாராத இடத்திலிருந்து உதவிகள் கிடைக்கும். நண்பர்கள் உதவுவார்கள். வியாபாரத்தில் சில [illegible] கொள்வீர்கள். அலுவலகத்தில் மரியாதைக் கூடும். திடீர் திருப்பங்கள் நிறைந்த நாள்.

## சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 3 | | | | | | 4 |
| | 9 | 5 | 1 | 7 | | | 8 | 2 |
| | 7 | | 3 | 4 | | | 9 | |
| | | | | 3 | | | 7 | |
| 8 | 6 | | | 2 | | | 3 | 1 |
| | 3 | | | 5 | | | | |
| | 1 | | | 8 | 4 | | 5 | |
| 7 | 4 | | | 6 | 5 | 9 | 1 | |
| 6 | | | | | | 8 | | |

### சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 1 | 4 | 8 | 5 | 6 | 7 | 2 | 3 |
| 8 | 6 | 2 | 3 | 7 | 4 | 5 | 9 | 1 |
| 3 | 7 | 5 | 2 | 1 | 9 | 6 | 8 | 4 |
| 4 | 5 | 9 | 1 | 6 | 2 | 8 | 3 | 7 |
| 7 | 2 | 3 | 4 | 8 | 5 | 9 | 1 | 6 |
| 6 | 8 | 1 | 7 | 9 | 3 | 4 | 5 | 2 |
| 1 | 9 | 8 | 6 | 2 | 7 | 3 | 4 | 5 |
| 5 | 3 | 6 | 9 | 4 | 1 | 2 | 7 | 8 |
| 2 | 4 | 7 | 5 | 3 | 8 | 1 | 6 | 9 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத் தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங் கள், பகுதிகள், உபசது ரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண் கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப் பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக் குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவ லாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர் வே. அன்பழகன் அவர்களின்

## தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2013
## வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன

யாழ்ப்பாணத்தில்
அன்பொளி கல்வியகம்
யாழ். இந்துக்கல்லூரி வீதி,
யாழ்ப்பாணம்.

சாவகச்சேரியில்
அன்பொளி கல்வி நிலையம்
தபாற்கந்தோர் வீதி,
சாவகச்சேரி.

அனுமதிகளை 24.09.2012 திங்கட்கிழமையிலிருந்து 28.09.2012 வெள்ளிக்கிழமை வரை பிற்பகல் 3.00 மணி தொடக்கம் பிற்பகல் 5.30 மணிக்குள் முற்கூட்டியே பதிவு செய்து கொள்ளவும்.

குறிப்பு :- பெற்றோர் கலந்துரையாடலுடன் வகுப்புக்கள் ஆரம்பிப்பது பற்றிய மேலதிக விபரங்கள், நேர அட்டவணை நேரில் வழங்கப்படும்.

சின்ன விழி அசைத்துச் சிரித்துவரும் சித்திரங்களை
அள்ளி அணைத்து அரிய கல்வியினை மகிழ்வுடனே ஊட்டிடுவோம்.

இயக்குநர்கள்

(சி/3499)

## தவறிவிட்டது

ஆட்டோ NPQD 3576 நம்பர் இலக்கத் தகடு வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ் வரும் தொ.பேசிஇலக்கத்திற்கு தொடர்பு கொள்ளவும்.
T.P.: 077 674 5549, 077 288 0804

## அமெரிக்க வீஸா லொத்தர்.

50,000 அமெரிக்க வீஸாக்கள் லொத்தர் மூலம். எமது புத்தகத்தின் வழிகாட்டலில் (3steps only)5 நிமிடத்துள் இலவசமாக விண்ணப்பியுங்கள். விலை ரூ.375/=

BBS.Netting:3/14,PINWATTA ROAD, DEHIWALA. 077 581 1106
(சி/3543) (5-6-7)

## கொமினிகேசன் உரிமையாளரா?


உங்கள் நிறுவனத்தின் அயலிலுள்ள மக்களுக்கு Internet மூலம் அமெரிக்க வீஸா (PR Visa) லொத்தருக்கு விண்ணப்பித்துக் கொடுப் பதன் மூலம் பணம் சம்பாதிக்க முடியும். முழுவிவரங்களுக்கு அழைக்கவும்.

BBS.Netting:077 581 1106 (சி/3542) (5-6-7)

# நீங்காத நினைவுகள்

## அமரர் கந்தையா ரவீந்திரா

(முன்னாள் டெனிஸ் அகதிகள் பேரவை உத்தியோகத்தர்)



மறைந்து விட்ட ஓர் உறவின்நீங்காத நினைவுகள்
உதிர்ந்து விட்ட பூவின் உலராத வாசனை
இழந்த அன்பானவரின் நீங்காத பொழுதுகள்
இதயம் துடிக்கும் வரை மாறாது நினைப்பு
இயற்கையின் அழைப்பு மீறமுடியாத பயணம்
காலம் இழப்பின் காயத்தை மாற்றும்
காலம் கடந்தாலும் நீங்காது நினைவுகள்
நம்மைவிட்டுப் பிரிந்த நம் ரவிக்கு ஒரு நினைவஞ்சலி

நீ வருவாயென்ற ஆவலில் காத்திருக்கின்றோம்
கண்களிலெல்லாம் கனவுகளோடு
பசுமை நிறைந்த நினைவுகளுடன்
பாடித் திரிந்த பறவைகள் நாம்
பழகிக் கழித்த தோழர்களே
பறந்து (பிரிந்து) செல்கின்றோம் என கூறாமல் கூறி
நிரந்தரமாக எம்மைவிட்டுப் பிரிவீர் என நாம் கனவிலும் எண்ணவில்லை
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல ஆண்டவரை வேண்டி நிற்கும்.

அன்னாருடன் சேவையாற்றிய அன்பு உறவுகள்:
டெனிஸ் அகதிகள் பேரவை (DRC) யாழ்ப்பாணம்

(23153)(6,7,8)

## After A/L

## நீங்களும் சட்டத்தரணி ஆகலாம்.

குறுகிய காலத்தில், குறைந்த செலவில், மிக இலகுவாக



சட்டக்கல்லூரி அனுமதி 2013
LAW ENTRANCE

திறந்த பல்கலைக்கழக சட்டக்கற்கை நெறி அனுமதி 2013
LLB ENTRANCE

வகுப்புகள் ஆரம்பம்

வகுப்புகளி நடைபெறும் இடங்கள்
கொழும்பு / யாழ்ப்பாணம் / கண்டி / வவுனியா / மட்டக்களப்பு / கல்முனை / புத்தளம் / மாவனல்ல

பிரபல விரிவுரையாளர்களினால்.

GREENWICH COLLEGE
34, Galle Road, Dehiwala,
Tel: 2713214, 2726237.
E: info@greenwich.lk
W: www.greenwich.lk
(சி/3540)

மேலதிக விபரங்களுக்கு: 0718600443 / 0777701992 / 0723794370

## SALE

TOYOTA HIACE
DOLPHIN 54 xxxx
தொடர்பு 077 480 1734

## காணி விற்பனைக்கு

அளவெட்டி அலுக்கைச் சந்தையிலிருந்து அம்பனைக்கு போகும் றோட்டில் (அளவெட்டி மத்தி) 5 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0114949234

Study in
## GEORGIA (Europe)

Minimum qualification G.C.E. (O/L)

Hotel Management (Duration 1 year) — Rs. 350,000/- Course Fee

No IELTS · No Interview · No Bank Balance

flex Institute
4, IBC Road, Wellawatte, Colombo 6.
Hotline: 077-761346
Email: flexinstitute@sltnet.lk
www.flexinstitute.lk

## BBC ஆங்கில மொழி மூல பாலர் பாடசாலை

11 வது வருடத்தில்

| வயது 2+ முதல் வயது 3+ வரை | வயது 3+ முதல் வயது 4+ வரை | வயது 4+ முதல் வயது 5+ வரை |
|---|---|---|
| Play Group | Montessori | Pre School |

கற்பித்தல் முறை:

★ சர்வதேச ரீதியாக அங்கிகரிக்கப்பட்ட Dr. Maria Montessori + Canadian ECE Method
★ தமிழ் கட்டாய பாடம்.
★ ஆங்கில மொழி மூல கற்பித்தல்
★ சிறார்களின் திறமைகளை வெளிக் கொணரும் நிகழ்ச்சிகளில் சகலரும் பங்கு பெறுவார்.
★ விளையாட்டுப் போட்டி. English Concert, முத்தமிழ் விழா, சித்திரக்கைவேலைக் கண்காட்சி, Graduation Ceremony.

பாலர் பாடசாலை வளாகங்கள்

| | |
|---|---|
| நல்லூர்: 140, கோயில் வீதி. | நீர்வேலி: 1ஆவது மைல் கல் இராச வீதி |
| கோப்பாய்: பருத்தித்துறை வீதி கோப்பாய் மத்தி | சாவகச்சேரி: சாவகச்சேரி Hindu Collgee Primary School அருகாமை |
| மானிப்பாய் 1: 252, ஆலடிச்சந்தி, யாழ் வீதி. | அச்சுவேலி: ஆதார வைத்தியசாலை அருகாமை |
| மானிப்பாய் 2: சங்கரப்பிள்ளை வீதி. (மானிப்பாய் இந்துக்கல்லூரி வீதி) | சங்கானை: பிரதேச செயலகம் அருகாமை (நிகர வைரவர் கோயிலடி) |
| சுன்னாகம்: Lakshmi Cottage புதிய நீதிமன்றம் அருகில் K.K.S வீதி | புலோலி: ஸ்ரீ பத்மநாதன் இல்லம் மந்திகை |

## சனி, ஞாயிறு மற்றும் வார நாட்களில் ஆங்கில வகுப்புகள்

Certificate in English — இலக்கணம், பேச்சுத்திறனை வளர்ப்பதற்கு
Diploma in English — G.C.E (O/L), (A/L) பூர்த்தி செய்தோர் ஆங்கில அறிவை வளர்ப்பதற்கு
ESOL A1, A2 — Sponsor Scheme ஊடாக வெளிநாடு செல்ல விரும்புவோருக்கு
IELTS — உயர் கல்வி கற்கவும், வெளி நாடு செல்ல விரும்புவோருக்கும்

பாடசாலை மாணவர்களுக்கான ஆங்கில வகுப்புகள்
★ Pre Foundation
★ Foundation
★ Level 1,2,3,4

பாடசாலை பாடத்திட்டத்திற்கமைய ஆங்கில பாடநெறிகள்

(சி/3423)

BRITISH BUSINESS COLLEGE
140, கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
Tel:021 222 5796, 077 362 7055
Where Students Come First

British Council இனால் அங்கிகரிக்கப்பட்ட பரீட்சை பதிவு நிலையம்.

## SEP. 22,23 Saturday & Sunday

## BBC சிறார்களின் MEGA கல்வி, கலை கண்காட்சி

அனுமதி இலவசம்

யாழ் குடாநாட்டில் 10 வளாகங்களைக் கொண்டு இயங்கிவரும் பிரபல தனியார் ஆங்கில மொழி மூல பாலர் பாடசாலையும், விசேட ஆங்கிலக் கல்விக்கான வகுப்புக்களை நடாத்தி வரும் BBC இன் கல்வி, கலை கண்காட்சிக்கு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இடம் : Rajathurai Block, யாழ் மத்திய கல்லூரி
திகதி : 22.09.2012 சனிக்கிழமை
23.09.2012 ஞாயிற்றுக்கிழமை
நேரம் : காலை 8.30 முதல் - மாலை 4.30 வரை

எமது சிறார்களின் கல்விச் செயற்பாடுகளைப் பார்வையிட்டு நீங்களும் பயன் பெறுங்கள்.

(சி/3422)

BRITISH BUSINESS COLLEGE
140, கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
Tel:021 222 5796, 077 362 7055

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## A/L பௌதிகவியல்/ இணைந்த கணிதம் தமிழ் /ஆங்கில மொழிகளில் 2013, 2014, 2012 A/L repeat

பிரபல கல்லூரிகளில் சிறப்பாக கற்பித்து அனுபவம் பெற்று சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற ஆசிரியரால் 20 வருட வினாத்தாள் உட்பட ஏராளமான பயிற்சிகளுடன் மேற்படி பாடங்கள் தனிப்பட்ட முறையில் கற்பிக்கப்படும். பெற்றோர் தொடர்பு விரும்பத்தக்கது.

விவரங்களுக்கு: ஆசிரியர்
**R.பாலசுப்பிரமணியம்** B.Sc(Cey) Dip.Ed
**42/1, இந்துக் கல்லூரி ஒழுங்கை, நீராவியடி, யாழ்ப்பாணம்.**
T.P-0776648751, 0775178727

## வாகனம் விற்பனைக்கு

அதி சொகுசு பஸ் விற்பனைக்கு
40+1 seat Leyland Bus முதற் பதிவு April 2012
கொழும்பு - யாழ்ப்பாணம் Bus route permit
0726710361
(சி/3545) (15-14)

## கார் விற்பனைக்கு

Cherry QQ, 840 cc அழகான பச்சை நிறக்கார் விற்பனைக்குண்டு. ஒன்றரை வருட பாவனையிலுள்ளது. KK இலக்கமுடையது. பதினொரு லட்சத்துக்கு மேல். வங்கி உத்தரவாதமும் பெற்றுத் தரலாம். இன்றும் நாளை திங்களும் கீழ்குறிப்பிட்ட விலாசத்தில் பார்வையிடலாம்.

R. திருச்செல்வம்
**பெர்னான்டஸ் கெஸ்ட் ஹவுஸ். 655, நாவலர் வீதி, நல்லூர்.**
Tel: 0776-145491 / 021-3218434.

## காணி விற்பனைக்கு

*Jaffna.* கைதடிக்கும், நாவற்குழிக்கும் இடையில் வயோதிபர் மடம். நவீல்ட் பாடசாலை என்பவற்றுக்கு எதிராக உள்ள V.C லேனில் A9 றோட்டிலிருந்து 300M தூரத்தில் 39.7 பேர்ச்சஸ் காணி விற்பனைக்குண்டு. (சி/3548)

தொடர்புகளுக்கு
**0773935316 / 0777342070**

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவகுடும்பம் UK PR 1978 விசாகம் 1980 பூசம் HND பட்டதாரி மணமகனுக்கு மணமகள் தேவை.
தொடர்பு: யாழ், வவுனியா-0778501013

## காணி விற்பனைக்கு

யாழ். மாநகரசபைக்குட்பட்ட யாழ் போதனா வைத்தியசாலை கிழக்கு, பருத்தித் துறை வீதி 1 ஆம் ஒழுங்கை யில் அமைந் துள் ள 3¼ பரப்புக் காணி விற்பனைக்குண்டு
தொடர்புக்கு:
0778263717, 0214909415
(23204) (15-14)

## அன்பொளி கல்வியகம்

யாழ். இந்துக்கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்.

**2013இல் தரம் 4 (தற்போது தரம் 3)**

**மாணவர்களுக்கான வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.**

அனுமதிகளை 24.09.2012 திங்கட்கிழமையிலிருந்து 28.09.2012 வெள்ளிக்கிழமை வரை பிற்பகல் 3.00 மணி தொடக்கம் பிற்பகல் 5.30 மணிக்குள் முற்கூட்டியே பதிவு செய்து கொள்ளவும்.

சின்ன விழி அசைத்துச் சிரித்துவரும் சித்திரங்களை
அள்ளி அணைத்து அரிய கல்வியினை மகிழ்வுடனே ஊட்டிடுவோம்.
(சி/3500) இயக்குநர்

# இந்தியத் திருத்தல யாத்திரை

**இந்த யாத்திரைகள் 05.01.2000 ஆண்டு காலமான என் மனைவியின் வேண்டுகோளிற்காக சேவை நலன் கொண்டு குறைந்த செலவில் நடாத்தப்படுகின்றது.**

இது தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகா, கேரளா, பாண்டிச்சேரி ஆகிய ஐந்து மா நிலங்களிலுள்ள பிரசித்திபெற்ற புண்ணிய வரலாற்று சிறப்பு மிக்க குறிப்பாக, மலைக்கோட்டை வினாயகர், பொற்கோயில், திருப்பதி, குருவாயூர், மைசூர் சாமுண்டீஸ்வரி, 9 நவக்கிரக ஆலயங்கள் தனித்தனியாக சிதம்பரம் உட்பட பஞ்சபூத திருத்தலங்கள் ஆறுபடை வீடுகள், மேல் மருவத்தூர், சுசீந்திரம், கன்னியாகுமாரி, தஞ்ஞாவூர், நாமக்கல் ஆஞ்சினேயர்கள், இராமேஸ்வரம், தோணியப்பர், மீனாட்சி, சுந்தரேஸ்வரர் உட்டபட 60க்கு மேற்பட்ட ஆலயங்களை தரிசிப்பதுடன் மைசூர், பிருந்தாவனம், மைசூர் பேலஸ், ஊட்டி, பூம்புகார், பாண்டிச்சேரி பீச், மரீனாபீச்சும் காணலாம். நாட்கள் 24 யாத்திரீகர்கள் 10 பேர் ஆரம்பம் 10.10.2012.

தங்களிடம் பெற்றுக்கொள்ளும் ரூபாவிற்கு எமது சேவை இருவளி விமான ரிக்கட், கொழும்பிலிருந்து ஏயர்போட் போகவும் திரும்பி வரவும். வாகன வசதி யாத்திரை தொடங்கி முடியும் வரை 24 நாட்கள் A.C., V.D.O. AUDIO உள்ள சொகுசு வாகன வசதி. காலையும் இரவும் காப்பி, டிபன், மதியம் தரமான சைவ உணவு (சாதம்) ஹோட்டல்களில் 1 நாளைக்கு ஒருவருக்கு 1 லீற்றர் மினரல் வாட்டர், 2 பேருக்கு 2 கட்டில் மெத்தை, குளியல் அறையுடன் கூடிய சுகாதா-ரமான றூம்கள் எடுத்து தங்க வைக்கப்படுவீர்கள். முக்கியமாக இரவு 10 மணிக்கு மேல் வண்டி ஓடப்படமாட்டாது. வயதானவர்களுக்கும், ஆண்கள், பெண்கள் தோஷ நிவர்த்தி செய்பவர்களுக்கும் முன்னுரிமை உண்டு.

செல்லுமிடங்களில் குரூப்பாக எடுக்கும் புகைப்-படங்கள் 60 படமும், அல்பமும் ஊர் திரும்பும்போது தரப்படும். யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய இடங்களிலிருந்து 6 பேருக்கு மேல் வருபவர்களுக்கு கொழும்பு எயர்போட்டிலிருந்து திரும்பிச்செல்ல எமது செலவில் வாகன வசதி ஏற்பாடு செய்து தரப்படும்.

10 பேர் சேர்ந்தால் 15 நாள் யாத்திரையும் உண்டு. விருப்பமுடையவர்கள் முன்னதாகவே பதிவு செய்யவும்.

**மேலதிக விபரங்களை கேட்டு அறிந்து கொள்க.**
**கட்டண விபரம் கேட்டு அறிந்துகொள்க!** (சி/3531)

**கலாநிதி T. ஸ்ரீரெங்கநாதன்**
No. 66/2 - 3/2, Joseph Dias Lane, Colombo-15.
Tel : 0777 680102, 0724 - 222989, 0777 864061 Web : www.sridevipilgrims.com

சென்ற யாத்திரையில் கலந்துகொண்டவர்கள் மட்டக்களப்பில்
**K. ராஜகோபால்**
**Tel : 065 3653719**
N. Vakson - Tel : 065 2225285, 077 6159685

சென்ற யாத்திரையில் கலந்துகொண்டவர் யாழ்ப்பாணத்தில்
திருமதி. A. பரமேஸ்வரி - Tel : 0777 565779
திருமதி. பாலரோஷினி - Tel : 0778 690231
திருகோணமலை
திரு. T. சிவபாலன் - Tel : 0777 293271

## வேலையாள்கள் தேவை

யாழ். நகரின் மாநகர சபைக் குட்பட்ட வீதிகளை புனரமைக்கும் கம்பனிக்கு வேலையாள்கள் தேவைப் படுகின்றனர்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி
**V.V. Karunaratne & company**
**12A Temple Road Lane**
**Jaffna.**
**T.P:- 0711712003**
(23150) (15-14)

## ABANS FINANCE PLC
## VACANCIES

நாம் இலங்கை மத்திய வங்கியின் நாணய சபையினால் அனுமதி பெற்ற,கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலையத்தில் பட்டியல்படுத்தப்பட்ட ஒரு நிதிக் கம்பனியாகத் திகழ்வதுடன் A-(lka) (Fitch Rating Lanka Ltd) தரச்சான்று பெற்ற அபான்ஸ் குழுமத்தின் ஒரு அங்கமாகும். நாம் பின்வரும் பதவிவெற்றிடங்களை நிரப்புவதற்காக விண்ணப்பங்களைக் கோருகின்றோம்.

**SENIOR EXECUTIVES / EXECUTIVES / TRAINEE EXECUTIVES – MARKETING (JAFFNA BRANCH – CHUNNAKAM)**

SENIOR EXECUTIVE – MARKETING
நிதித்துறையில் குறைந்தபட்சம் 5 வருட முன்அனுபவம்

EXECUTIVE – MARKETING
நிதித்துறையில் 2-3 வருட முன்அனுபவம்

TRAINEE EXECUTIVE – MARKETING
பாடசாலையை விட்டு விலகியவர்களுக்கும் நிதித்துறையில் தம்மை இணைத்துக்கொள்ள விரும்புபவர்களுக்கும்

**தகைமைகள்**
- க.பொ.த. உயர் தரத்தில் சித்தி
- கணனி தொடர்பான அறிவு
- சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றிருத்தல்
- சிறந்த ஆளுமை,திறமை மற்றும் தன்னம்பிக்கையைக் கொண்டிருத்தல்

தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்களுக்கு சிறந்த ஊதியமும் இதர சலுகைகளும் வழங்கப்படுவதுடன் தொழில் நிலையில் முன்னேற்றத்துக்கான வாய்ப்புக்களும் வழங்கப்படும்.

உங்களை சிபார்சு செய்யக்கூடிய இரு உறவினரல்லாதவர்களது விபரங்களுடன் விபரமான சுய விபரக்கோவையுடன் உங்களது விண்ணப்பங்களை ஏழு (07) நாட்களுக்குள் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

Head of Branches,
Abans Finance PLC,
No. 400, Galle Road,
Colombo – 03, Fax : 011-2375517

Abans FINANCE (சி/3498)

## விற்பனைக்கு

நவாலி வடக்கு நாச்சிமார் வீதியில் அமைந்துள்ள வீட்டுடன் கூடிய 6½ பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு
தொடர்பு: சி. சிவகுமார்
நாச்சிமார் வீதி, நவாலி வடக்கு, மானிப்பாய். தொ.பே: 077 8349953

## வீடு வாடகைக்கு

திருநெல்வேலி வளாக ஒழுங்கையில் பலாலி வீதியை அண்மித்ததாக பெரிய வீடு, சகல வசதிகளுடனும் வாடகைக்கு உண்டு.
தொடர்பு:
0714468174, 0772200928, 021222 1956.

## சுஜித் என்ரபிறைஸஸ் டச்சு வீதி, சாவகச்சேரி விற்பனை பிரதிநிதி தேவை

எமது நிறுவனத்துக்கு அனுபவமுடைய விற்பனைப் பிரதிநிதி உடனடியாகத் தேவை. மாதாந்தம் 35000 ரூபா தொடக் கம் 40000 ரூபா வரை சம்பாதிக்கலாம். காலை 7.30 மணி தொடக் கம் காலை 8.00 மணி வரை சான்றிதழ்களுடன் நேரில் வரவும்.

தொடர்பு:- 0774422098
(சி/3496)(15/14)

# வெற்றிக்கான பாதை

FMCG | Plantation | Health Care | Packaging | Travel & Tourism | Hydro Power

SUNSHINE HOLDINGS PLC

Ranked among the top Sri Lankan companies in terms of profitability and returns on investment, Sunshine Holdings is a diversified group of companies with over 15,000 employees and an annual turn over of Rs.10 billion.

இது உங்களுடைய தேநீர் கோப்பையா?

## விற்பனை பிரதிநிதி

சன்ஷைன் ஹோல்டிங்ஸ் என்பது பல்வேறுபட்ட குழுமங்களை உள்ளடக்கிய 13,000 தொழிலாளர்களை கொண்ட ஆண்டிற்கு ரூபாய் 10 பில்லியன் மொத்த விற்பனை அளவீட்டைக் கொண்ட நிறுவனம் இலங்கையில் இலாபத்திலும் முதலீட்டிற்கான வருமானம் ஈட்டுதலிலும் முதன்மைப்படுத்தப்பட்டநிறுவனங்களுள் ஒன்றாகும்.

வட்டவல சந்தைப்படுத்தல் நிறுவனம் என்பது உலகம் பிரசித்தி பெற்ற இந்தியாவின் டாடா குழுமத்துடன் ஒருங்கிணைந்து செயலாற்றும் வரையறுக்கப்பட்ட வட்டவல பெருந்தோட்டம் (பொது) கம்பனியின் துணை நிறுவனமாகும். இலங்கையின் முதல் தர தேயிலை தோட்டங்களில் 19 தோட்டங்களையும், இறப்பர் மற்றும் பனையெண்ணெய் தோட்டங்களையும் வட்டவல பெருந்தோட்ட நிறுவனம் தன்னகத்தே கொண்டுள்ளது. நுகர்வோர் பொருட்களின் சந்தையில் உறுதியாக தெரிவு செய்யப்படுவதோடு மட்டுமல்லாது நாம் சந்தையில் அடையாளப்படுத்தப்பட்ட தேயிலைகளான செஸ்டா மற்றும் வட்டவல கஹட்ட ஆகியவற்றில் மூலம் இலங்கையில் இரண்டாவது பெரிய தேயிலை நிறுவனம் என்ற இடத்தையும் வகிக்கிறோம். அது மட்டுமல்லாது ஒலியேட் மரக்கறி எண்ணெய் "செஸ்ட்" குடிநீர் போத்தல் என்பவற்றையும் விற்பனைப்படுத்துகிறோம்.

நீங்கள் 26 வயதுக்கு குறைந்தவராகவும் விற்பனைப்படுத்தலில் சாதனை ஈட்டியதோடு உற்சாகமாக பங்களிப்பவராகவும் இருப்பின் உங்களுடைய உத்தியோகத்தை மேம்படுத்துவதோடு நிறுவனத்தால் பராமரிக்கப்படும் வாகனத்தையும் ஓட்டிச் செல்வதற்கு உரிய சந்தர்ப்பம் இதுவேயாகும் !!

ஆங்கிலத்திலும் கணிதத்திலும் சித்தியடைந்தவராகவும் ஆங்கிலம் மற்றும் சிங்களம் அல்லது தமிழில் சிறப்பாக உரையாடக் கூடியவராகவும் இருத்தல் அவசியம். இனிமையான மற்றும் திறம்பட செயற்படும் ஆளுமைத் திறன் மட்டுமல்லாது நம்பிக்கையளிக்கக் கூடிய தோற்றம் உடையவராகவும் இருத்தல் அவசியம்.

விற்பனை மற்றும் சந்தைப்படுத்தலில் மிகச் சிறப்பான ஒரு எதிர்காலத்தையும் மருத்துவ காப்புறுதி, ஆண்டின் செயற்பாட்டுக்கான ஊக்கச் கொடுப்பனவுகள் மேலும் பல ஊக்கத் தொகைகளையும் பெற்றுக் கொள்ளமுடியும்.

இந்த விளம்பரத் திகதியிலிருந்து 7 நாட்களுக்குள் விண்ணப்பிக்கவும். உங்களுடைய CV யுடன் சமீபத்திய கடவுச்சீட்டு அளவிலான புகைப்படத்தையும் உறவினரல்லாத நடுவர் இருவரின் தொடர்பு கொள்ள வேண்டிய விவரங்களையும் குறிப்பிட்டு அனுப்பவும்.

உறையின் இடதுபுற மேற்பக்கத்தில் விண்ணப்பிக்கும் வேலைத்தலைப்பை தெளிவாக குறிப்பிடுதல் அவசியம். (சி/3534)

முகாமையாளர் - மனிதவளம்
வட்டவள சந்தைப்படுத்துதல் நிறுவனம்,
7ம் மாடி, BOC மர்ச்சண்ட் டவர்
எண். 28, செண். மைக்கேல் வீதி, கொழும்-3.
மின்னஞ்சல் : wmlcareers@zesta.lk

Zesta | Olate | Zest!

## வெற்றிடங்கள் LMRB

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் ஆரம்பிக்கப்பட்டுள்ள 2 நிலையங்களில் சந்தை ஆராய்ச்சி துறையில் மேற்கொள்ளப்படும் பாரிய வேலைத்திட்டங்களில் பல வெற்றிடங்கள் உள்ளன.

**நிரந்தர பதவிகள்**
- கள நிறைவேற்று அதிகாரிகள்
- சிரேஷ்ட மேற்பார்வையாளர்கள்

**ஒப்பந்த அடிப்படையிலான பதவிகள்**
- கள ஆய்வாளர்கள், கள ஆய்வு வேலைகளை கையாளும் சிறிய மற்றும் பெரிய குழுக்கள்

**கவர்ச்சியான சம்பளம் வழங்கப்படும்**

விண்ணப்பதாரிகள் தங்களது விண்ணப்பத்தினை கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். கடித உறையின் மேல் மூலையில் நீங்கள் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிடவும்,மின்னஞ்சல் மூலம் அனுப்புபவர்கள் விடய தலைப்பில் நீங்கள் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிடவும். விண்ணப்ப முடிவு திகதி 2012.10.12

**Field Manager,**
**69/4, Maya Avenue, Colombo 06.**
**(விலாசீதா கட்டிடத்துக்கு எதிரில்)**
**administration.field@lmrbint.com**
**(தொ.இல.: 011- 5235782) மேலதிக விபரங்களுக்கு இத் தொலைபேசி இலக்கத்தை தொடர்பு கொள்ளவும்.** (சி/3538)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உடனடி வேலைவாய்ப்பு

எமது நிறுவனத்தின் கட்டுமான வேலைத்திட்டங்களில் பணிபுரிய பார இயந்திர இயக்குநர்கள் (JCB,Excavator, Road Roller, Skid loader Operators ) உடனடியாகத் தேவைப்படுகின்றார்கள். தகுதியுள்ளவர்கள் கீழ்வரும் முகவரியில் அமைந்துள்ள எமது அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**ETM**

கரந்தன் வீதி, ஊரெழு.
தொ.பே. இல: 0213215377

(சி/3607)(3.6.7)

## மரண அறிவித்தல்

*அம்பலவிமுருகன் நிர்மலன்*



காரைநகர், சிவன்கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அம்பலவிமுருகன் நிர்மலன் நேற்று (22.09.2012) சனிக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் அம்பலவிமுருகன்-தேவராணி தம்பதியரின் அன்பு மகனும் சண்முகம், அரிஹரன் ஆகியோரின் அன்பு சகோதரனும் காலஞ்சென்றவர்களான கனகரத்தினம்- இரத்தினம்மாவின் பேரனும் அவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (23.09.2012) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாம்பலோடை இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சிவன் கோயில்-*
*காரைநகர்*

(23246) (15-14)

*தகவல்:*
*ஆ.அம்பலவிமுருகன் (தந்தை)*




## மரண அறிவித்தல்

### *திருமதி கமலாதேவி கணேசநாதன்*

தம்பசிட்டி, புலோலி மேற்கைப் பிறப்பிடமாகவும் கரணவாய் வடக்கு, உடுப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கமலாதேவி கணேசநாதன் நேற்று (22.09.2012) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வினாசித்தம்பி கணேசநாதனின் (ஓய்வு பெற்ற பிரதம எழுதுநர்) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான தியாகராசா தம்பதியரின் (ஓய்வு பெற்ற ஆங்கில ஆசிரியர்) அன்பு மகளும், நிர்மலாதேவி, தில்லைநாதன் (உப அதிபர் - விவேகானந்தா கல்லூரி - கொழும்பு), Dr. இரகுநாதன் (கால்நடை வைத்திய அதிகாரி-சாவகச்சேரி), Dr.கேதீஸ்வரநாதன் (களுபோவில - வைத்தியசாலை), கோகிலநாதன் (பொறியியலாளர் - பொஸ்வாண), Dr. வைகுந்தன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயும், தர்மகுலசிங்கம், பகீரதி, இரஞ்சினி (உதவித் திட்டமிடல் பணிப்பாளர் - பிரதேச செயலகம் தென்மராட்சி), கௌரி, இரஞ்சினி, பிரியங்கா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும், சுகந்தன், முகுந்தன், ஜெயந்தன், நிஷாந்தன், தேனுசாயினி, குருசாயினி, சாயி கணேசன், மைத்ரேயி, தாட்சாயினி, பிருதுவி, சாயிபிரணவன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கரணவாய் வடக்கு,
உடுப்பிட்டி.

(சி/9376)(3.6.7)

தகவல்:
பிள்ளைகள்.

## மணமகள் தேவை

இந்து (Uk citizan) ye 39 றோகினி நட்சத்திரம் Uk இல் சொந்த வியாபாரம் புரிபவர் விவாகரத்து பெற்றவர்.
**T.P NO: 00447908707555** (23249) (15-14)

## காணி விற்பனைக்கு

திருநெல்வேலி விவசாயப் பண்ணைக்கு அண்மையில் பலாலி வீதியிலிருந்து 300 மீற்றர் தூரத்தில் 2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

(22778)(9.14) தொடர்பு: 0777037058

## காணி விற்பனைக்கு

யாழ் மாநகரசபை எல்லைக்குள் 1½ பரப்பு காணியும் வீடும் விற்பனைக்குண்டு
*தொடர்புகளுக்கு:- 0772845035*

(23231) (15-14)

## Personal Classes

தரம் 6,7,8 & 9 மாணவர்களுக்கான கணித, விஞ்ஞான வகுப்புக்கள் ஆங்கில மற்றும் தமிழ்மொழி மூலங்களில் யாழ்ப்பாணத்தில் உள்ள வீடுகளுக்கு மட்டும் நேரில் வந்து கற்பிக்கப்படும். இம்முறை PROVINCIAL LEVEL EXAM ற்கு தோற்றும் மாணவர்களுக்கு 10 வருட Past Papers உடனடியாக மீட்டல் செய்து விடப்படும்.

தொடர்புகளுக்கு: 0771022564

(23232)(3.14)

## தேவை

கல்வியங்காட்டில் இயங்கும் கல்வி நிறுவனம் ஒன்றிற்கு பெண் வேலையாள் தேவை
*தொடர்புகளுக்கு:-*
*0772832968*

(23246) (15-14)

## நினைவஞ்சலி

இளைப்பாறிய இ.போ.ச. நடத்துநர்
கோண்டாவில் திரு.வைரமுத்து இராசசிங்கம்
மட்டுவில் சந்திரபுரம்.

நெஞ்சகம் நீங்கா குஞ்சரமே நிலையான
மனமின்றி நீர் பிரிதல்கண்டு மலையான எம்
மனது அலைபோல ஆச்சே விலைகூறும்
பொருள் அல்ல உமது ஆவி நிலையான
பிறவியினை அடைதல் வேண்டும்.

சகோதரன்
வை.கார்த்திகேசு
கிளுவானை ஒழுங்கை கோப்பாய்.

(23237)(3.14)

## சாவகச்சேரியில் சிங்களம்

சிங்களம் பேச, எழுத, வாசிக்க மிகவும் இலகுவான முறையில் கற்பிக்கப்படும்

புதிய பிரிவுகள் ஆரம்பம்
01.10.2012
திங்கள்/செவ்வாய்
காலை 6.30 - 07.30
07.30 - 08.30

### ஸ்ரீ மாஸ்டர்

பாட நெறி முடிவில் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ் வழங்கப்படும்

இலண்டன் ஸ்ரீ கனக துர்க்கையம்மன்
கணினி பயிற்சி நிலையம்
114, டச்சு வீதி, சாவகச்சேரி
(சுடர் மல்ரி சென்ரரில் பதிவுகள் மேற்கொள்ளவும்)
தொ.இல: 0773144902

(23248)(3.14)

## 59 ஆம் நாள் நினைவஞ்சலி

எமது வலயக்கல்வி அலுவலகத்தில் சேவைக்கால ஆசிரிய ஆலோசகராகக் கடமையாற்றும் திரு.க.பிரபாகரன் அவர்களின் அன்புத்தாய்

*அமரர்*
*காமாட்சி கனகசபை*

அவர்கள் 27.07.2012 அன்று இறைபதம் அடைந்ததையிட்டு துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

*வலயக்கல்வி அலுவலகம்,*
*தீவகம், வேலணை*

(சி/3610) (15-14)

## மரண அறிவித்தல்

திருமதி
### அன்னம்மா சுந்தரலிங்கம்



உடுப்பிட்டி வடக்கு, வன்னிச்சி அம்மன் கோயிலடியைப் பிறப்பிடமாகவும், இல. 13ஏ, 5/5, பெட்றிகா றோட், வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னமா சுந்தரலிங்கம் நேற்று (22.09.2012) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம்-மனோன்மணி தம்பதியரின் அருமை மகளும், காலஞ் சென்றவர்களான தம்பு- தங் கம்மா தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற சுந்தரலிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான பூமணி, ராசையா (உதவி வைத்தியர்) மற்றும் துரைச்சாமி (Consultant-CECB) தவராசா (நீர்வேலி) ஆகியோரின் அருமை சகோதரியும், காலஞ்சென்றவர்களான இராஜரட்ணம், தங்கரட்ணம் மற்றும் உருக்குமணி(நாவலடி), விமலாவதி, புஸ்பம்(நாவலடி), அருளேஸ்வரி (கொழும்பு), சந்திரிக்கா (நீர்வேலி), ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று(23.09.2012) ஞாயிற்றுக்கிழமை யும், நாளை திங்கட்கிழமையும் பொரல்ல ஜெயரட்ண மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை (24.09.2012) திங்கட் கிழமை பி.ப.4.00 மணியளவில் கனத்தை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(சி/3552)(5-6-14)

தகவல்:
ம.துரைசாமி

## உடனடி வேலைவாய்ப்பு

சிறியரக வாகனங்களை உற்பத்தி செய்து நாடு முழுவதும் விற்பனை செய்யும் நிறுவனம் ஒன்று தனது விற்பனை நடவடிக்கைகளை வடமாகாணத்தில் (யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு) விரிவு படுத்த உள்ளமையால் வாகன விற்பனையில் ஆர்வமிக்க இளைஞர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

(சாரதி அனுமதிப்பத்திரம் அவசியமானது. மோட்டார் சைக்கிள் சொந்தமாக வைத்திருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

0770665725, 0714565252, 0711112222

(23217)(3.6.7)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 23 | 15 |
| 04 | 10 |
| 1928 | 2010 |

*அமரர் இராமலிங்கம் கந்தையா*
*(ஓவசியர்)*

எங்கள் குடும்ப விளக்காய் வாழ்ந்திட்ட எங்கள் தெய்வமே எந்த உறவுகள் இருந்தாலும் உங்களுக்கு ஈடாகுமா எம்மை விட்டுப் பிரிந்து இரண்டாண்டுகள் ஆனாலும் உங்கள் நினைவுகள் என்றென்றும் எம்முடனே நிலைத்திருக்கும்.

**உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.**

4 ஆம் வட்டாரம்,
நெடுந்தீவு

(23212) (15-14-6)

*மனைவி, பிள்ளைகள்,*
*மருமக்கள்,*
*பேரப்பிள்ளைகள்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாகனங்கள் வாடகைக்கு

யாவும் நியாய விலையில் உடன் நாடுங்கள்

* New Toyota Prado Jeep (Full Option)
* 28 seater new Toyota coaster bus.
* Mini Bus * Wedding Cars



சிறப்புத் தளபாடங்கள் வாடகைக்கு
(Luxury கதிரைகள் மேசைகள் போன்றவை)



Small medium and large halls வாடகைக்கு
சிற்றுண்டிகள், மதிய இராப்போசன உணவுகளுடன்





Tilko Jaffna City Hotel
70/6, K.K.S Road,
Jaffna
T.P - 077-6943 479
077-7696 443

TILKO

---

ஓம் ஸ்ரீ சாயிராம்

இலங்கை ஸ்ரீ சத்திய சாயி சேவா நிறுவனம் நடத்தும்

**சர்வமதப் பிரார்த்தனையும் மகா ம்ருத்யுஞ்ஜய சாந்தியாகமும்**

இடம் : சத்தியசாயி பாடசாலை, சோதி வேம்படி வீதி, மானிப்பாய்
காலம் : 25, 26, 27 - 09 -2012 (செவ்வாய், புதன், வியாழன் மூன்று தினங்களில்)

**சர்வமதப்பிரார்த்தனை**

**25.09.2012 செவ்வாய் காலை 8 மணி**

**கலந்துகொள்வோர்:**

* நல்லை ஆதீன முதல்வர் - ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்
* யாழ். நாகவிகாராதிபதி - வண. மீகஹய ஐந்துரே சிறிவிமலதேரர்
* யாழ். ஆயர்இல்ல - வண.பிதா ஜஸ்ரின் ஞானப்பிரகாசம்அடிகள்
* வட்டுக்கோட்டை ஆயர்இல்ல - வண.பிதா எஸ்.ஆனல்ட் அவர்கள்
* யாழ். சிவலைப்பள்ளிவாசல் இமாம் - அப்துல் அசீம் மௌலவி
* யாழ். சின்மய மிசன் சுவாமிகள் - ஜாக்கிரத் சைத்தன்ய அவர்கள்

தொடர்ந்து காலை 8.45 மணிக்கு மகா ம்ருத்யுஞ்யாகம் இணுவில் சிவஸ்ரீ தா. மகாதேவக்குருக்களின் ஆசிகளுடன் மயிலணி சிவஸ்ரீ சோ. ரஜதகிரீசக்குருக்கள் தலைமையில் யாழ்ப்பாணத்திலுள்ள சிறப்புமிகு சிவாச்சாரியர்கள் கலந்து கொண்டு நடத்திவைப்பார்கள்

* முதல் நாள் கணபதிஹோமமும்
* இரண்டாம் நாள் நவக்கிரகஹோமமும்
* மூன்றாம்நாள் மகா ம்ருத்யுஞ்ஜய ஹோமம், லக்ஷ்மி ஹோமம், காயத்திரி ஹோமம், சாயி காயத்திரிஹோமம், சுமங்கலிப் பிரார்த்தனை என்பன நடைபெறும்.

★ மூன்று நாள்களும் ஒரு மணியளவில் மதியபோசனத்துடன் நிகழ்வுகள் நிறைவடையும். அனைவரையும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு வேண்டுகின்றோம்.

இயக்குநர்
ஸ்ரீசத்தியசாயி பாடசாலை, மானிப்பாய்.

(23154)(8.14)

தலைவர்,
வட பிராந்திய சத்தியசாயி
நிறுவனங்களின் இணைப்புக்குழு.

---

**வேலையாள் தேவை**

யாழ்ப்பாணத்தில் உள்ள கோல்டன் இராசையா மோட்டோர்ஸ் கடைக்கு பெண் விற்பனையாளர் தேவை.
T.P : 077 6141928

---

**தச்சுவேலை தெரிந்தவர்கள் தேவை**

கோப்பாய் பகுதிக்குள் இருப்பவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு:- 0779615090

(23231) (16-14)

---

**வீடு விற்பனைக்குண்டு**

உடுவில் கிழக்கு இணுவிலில் கற்பகப் பிள்ளையார் கோயிலடியில் ஒன்றரைப் பரப்பு காணியும் வீடும் விற்பனைக் உண்டு.
தொடர்புக்கு: 0773316541

(23222)(3.14)

---

**மணமகள் தேவை**

யாழ்.களபூமி காரைநகர் இந்து கௌரவ குடும்பம் 1986 இல் பிறந்த அனுசம் 2 ஆம் பாதம் 2 இல் செவ்வாய் வியாபாரம் புரியும் மணமகனுக்கு தகுந்த மணமகள் தேவை தொடர்பு.
0771042898 (23227)(3.8.14)

---

**தரம் - 09 - G.C.E. (O/L)**

கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்கள் (தமிழ்/ ஆங்கில) மொழி மூலமும்
**G.C.E. (A/L), B.A.**
அரசியல், வணிகக்கல்வி பட்டதாரி ஆசிரியரினால் தனிப்பட்ட ரீதியாகவோ, குழுவாகவோ கற்பிக்கப்படும்.
தொடர்பு : 075 0497577

(23226)(8.14)

---

**வீடு வாடகைக்கு உண்டு**


யாழ்.பல்கலைக்கழகத்திற்கு முன்பாக, பிறவுண் வீதியில் அனைத்து வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. நிறுவனங்களும் விரும்பத்தக்கது, யாழ்.பல்கலைக்கழக மாணவர்களுக்கு Room வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 0212221587, 0772229285

(23229)(3.14)

---

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

கடந்த 10.08.2012 வெள்ளிக்கிழமை அன்று சிவபதம் அடைந்த எங்கள் குடும்பத் தலைவர்



## அமரர் ஐயம்பிள்ளை மார்க்கண்டு

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் கடந்த (21.09.2012) வெள்ளிக்கிழமை கீரிமலைத் தீர்த்தக் கரையில் நடைபெற்றன. வீட்டுக்கிருத்தியக்கிரியைகள் இன்று (23.09.2012) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற இருப்பதனால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அவரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கோயில் வீதி,
மல்லாகம்.

(23221)(6.7.8)


குடும்பத்தினர்.

---

# மரண அறிவித்தல்

## விநாசித்தம்பி காசிலிங்கம்

(நியூட்டன் மதுபானச்சாலை முன்னாள் பங்காளரும் தற்போது No.1 மதுபானச்சாலைப் பங்காளரும்)



மண்கும்பான் மேற்கைப் பிறப்பிடமாகவும், 64/4A, பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட விநாசித்தம்பி காசிலிங்கம் நேற்றுமுன்தினம் (21.09.2012) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விநாசித்தம்பி - கனகம்மா தம்பதியரின் அன்புப் புதல்வரும் காலஞ்சென்றவர்களான இரத்தினம்-நாகரத்தினம் (கரம்பன் கிழக்கு) தம்பதியரின் அன்பு மருமகனும் பரமேஸ்வரியின் (தேவி) அன்புக் கணவரும், பிரதீபா (34th batch faculty of Medicine, University of Jaffna), மிதுராஜானி (2010 A/L Bio J.H.L.C.), சரண்ராஜ் (2013 A/L Maths J.H.C.) ஆகியோரின் அருமைத் தந்தையும், அன்னலெட்சுமி, பத்மநாதன், சாந்தலிங்கம், படியலிங்கம், சந்திராதேவி ஆகியோரின் அருமைச் சகோதரனும், காலஞ்சென்ற திருநாவுக்கரசு, லில்லிமலர், தங்கநாயகி, கருணா, ஞானசம்பந்தன் காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம், தியாகராசா, கேதீஸ்வரி, சரஸ்வதி, சறோஜினிதேவி ஆகியோரின் மைத்துனரும், சுசீலாதேவி (Canada) ஈஸ்வரி, அருளானந்தம், திருஞானம் ஆகியோரின் அன்புச் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.09.2012) ஞாயிற்றுக் கிழமை மு.ப. 11.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

64/4A, பொற்பதி வீதி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

(23224)(5-6-7)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பு என்.சி.சியை வென்றது யாழ்.இந்து


உதயன்

யாழ்ப்பாணம்,செப்.23
கொழும்பு என்.சி.சி. அக்கடமி அணிக்கும், யாழ்.இந்துக் கல்லூரி அணிக்கும் இடையிலான 25 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் ஆட்டமொன்றில் யாழ்.இந்துக் கல்லூரி அணி 61 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

கடந்த வாரம் ஸ்ரான்லிக் கல்லூரி மைதானத்தில் ஆட்டம் இடம்பெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற யாழ்.இந்துக் கல்லூரி அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.


அதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்.இந்துக் கல்லூரி அணி 25 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 4 இலக்குளை இழந்து 168 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் யாழ்.இந்துக் கல்லூரி அணி சார்பில் உதயன் 13 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் அடங்கலாக ஆட்டமிழக்காது 88 ஓட்டங்களையும், கஜாணந் 6 பவுண்டரிகள் அடங்கலாக ஆட்டமிழக்காது 41 ஓட்டங்களையும் நிசோதன் 16 ஓட்டங்களை பெற்றுக் கொண்டுத்தனர்.

கொழும்பு என்.சி.சி. அக்கடமி சார்பாக செனால், வசின் ஆகியோர் தலா ஒரு இலக்கை வீழ்த்தினர்.

**துடுப்பாட்டத்தில் யாழ்.இந்துக் கல்லூரி அணி சார்பில் உதயன் 13 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் அடங்கலாக ஆட்டமிழக்காது 88 ஓட்டங்களைப் பெற்றார்**

169 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கொழும்பு என்.சி.சி. அக்கடமி அணி 21.5 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 107 ஓட்டங்களை மட்டும் பெற்றுக்கொண்டது.


கஜானந்

இதில் விம்ஸ்ரா 33 ஓட்டங்களையும், குமீட் 21 ஓட்டங்களையும், சன்டீப் 11 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் யாழ்.இந்துக் கல்லூரி அணி சார்பாக ராகுலன் 4 இலக்குகளையும், பானுகோபான் 2 இலக்குகளையும் கைப்பற்றினர். (23)

# இன்றைய ஆட்டங்கள்

கலட்டி நியூஸ்ரார் விளையாட்டுக்கழகம் நடத்தும், நியூஸ்ரார் பிறிமியர் வெற்றிக் கிண்ணத்திற்கான ரி-20 கிரிக்கெட் சுற்றுப்போட்டித் தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறுகின்ற ஆட்டங்களில் பங்கு பற்றும் அணிகளின் விவரங்கள் வருமாறு-

காலை 8.30 மணி
கே.ஸி.ஸி.ஸி. வி.க எதிர் ஸ்ரான்லி வி.க
முற்பகல் 11 மணி
ஸ்ரீகாமாட்சி விளையாட்டுக்கழகம் எதிர் பற்றிசியன் வி.க
பிற்பகல் 2.30 மணி
நியூஸ்ரார் வி.க எதிர் ஜொலிஸ்ரார் வி.க

* * *

தரணிதீபம் விளையாட்டுக் கழகம் வருடாந்தம் நடத்தும் மென்பந்துக் கிரிக்கெட் தொடரின் இறுதியாட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு தரணிக்குளம் கணேசா மகாவித்தியாலய மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இறுதியாட்டத்தில் கற்குளம் பகலவன் வி.க எதிர்த்து தரணிதீபம் வி.க மோதவுள்ளது.

* * *

அரியாலை ஸ்ரீ கலைமகள் சனசமூக நிலையத்தில் 66 ஆண்டு நிறைவை முன்னிட்டு முதல் நாள் நிகழ்வாக இன்று காலை 6 மணியளவில் ஆண், பெண் இருபாலாருக்குமான சைக்கிள் ஓட்டப் போட்டி இடம்பெறவுள்ளது.

* * *

யாழ்.மாவட்ட ஹொக்கிச் சங்கம் நடத்தும் ஹொக்கிச் சுற்றுப் போட்டித் தொடரின் அரையிறுதி ஆட்டங்கள் இன்று ஞாயிற்றுக் கிழமை யாழ். பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் இடம் பெறவுள்ளன. அரையிறுதி ஆட்டத்தில் மோதவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு

காலை 8 மணி
யாழ்.பல்கலைக்கழக அணி எதிர் சென்றலைட்ஸ் புளூஸ் (அணி)

காலை 9 மணி
யாழ்.ஸ்ரார் வி.க எதிர் ஓல்கோல்ட்ஸ் வி.க

அரையிறுதி ஆட்டத்தில் வெற்றிபெறும் அணி மாலை நடைபெறும் இறுதியாட்டத்தில் மோதவுள்ளன. (23-86)

# கலக்கினார் ஜெரிக்ஸன் வென்றது சென். பற்றிக்ஸ்

குருநகர், செப். 23
ஜெரிக்ஸனின் துல்லியமான பந்து வீச்சில் கலக்க சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி, 262 ஓட்டங்களால் சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரியை வெற்றிகொண்டது.

15 வயதுப் பிரிவு ஆண்களுக்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டித்தொடரின் இரண்டாம் சுற்றுக்கான ஆட்டம் கடந்த வாரம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது. சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி அணி மோதிக்கொண்டது.

நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அதற்கமைய சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி 50 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 7 இலக்குகளை இழந்து 295 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி சார்பாக துடுப்பாட்டத்தில் ஜே.கொலின்ஸ் 65 ஓட்டங்களையும், ஆர்.கிரிசாந்தன் 61 ஓட்டங்களையும், பி.பி. நிலோஜன் 46 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.



296 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி அணி 17.3 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 33 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக்கொண்டது.

பந்துவீச்சில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி சார்பாக எஸ்.ஜெறிக்ஸன் 5 இலக்குகளையும், ஜே.கொலின்ஸ், சி.டானியல் ஆகியோர் தலா 2 இலக்குகளையும், எஸ்.அகிபன் ஒரு இலக்கைகயும் கைப்பற்றினர். (23-51)

# தேசிய உதைபந்து அணிக்கான வீரர்கள் தெரிவுக்குப் போட்டி

யாழ்ப்பாணம்,செப்.23
இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனமும், விளையாட்டுத்துறை அமைச்சும் இணைந்து தேசிய உதைபந்தாட்ட அணிக்கான வீரர்களைத் தெரிவு செய்வதற்கான போட்டிகளை முதற்கட்டமாக பிரதேச செயலக பிரிவுகளுக்கு இடையே நடத்தி வருகின்றன.

இந்த வகையில் கோப்பாய் பிரதேச செயலகப் பிரிவில் பதிவுசெய்யப்பட்ட கழகங்களின் 21 வயதுப் பிரிவுக்குட்பட்ட அணிகளுக்கு இடையிலான உதைபந்தாட்டப் போட்டிகள் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை புத்தூர் எவரெஸ்ட் மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

மேற்படி போட்டியில் 12 விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றவுள்ளன என்று விளையாட்டு உத்தியோகஸ்தர் அகலியா தெரிவித்தார். (த-23)

## தேசிய மட்ட பளு தூக்கலில் யாழ். மத்தி வீரர் சாதனை

கொழும்பு ஆனந்தாக் கல்லூரியில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற அகில இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்டப் பளுதூக்குப் போட்டியில் 17 வயதுப் பிரிவு ஆண்களுக்கான போட்டியில் யாழ்.மத்திய கல்லூரி வீரன் ஐ.சாந்தகோபி முதலாமிடத்தைப் பெற்று தங்கப்பதக்கத்தைப் பெற்றுள்ளார்.

இவர் 85 கிலோ எடைப்பிரிவில் 120 கிலோ எடையைத் தூக்கி முதலாமிடத்தைப் பெற்று தங்கப்பதக்கத்தைப் வென்றார். (23-86)




# அல்வாய் மனோகராவின் இறுதியாட்டம் இன்று


வதிரி டயமன்ஸ் வி.க


மணற்காடு சென். அன்ரனிஸ் வி.க

யாழ்ப்பாணம்,செப்.23
அல்வாய் மனோகரா சனசமூக நிலையத்தில் 85ஆண்டு நிறைவை முன்னிட்டு பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுசரனையுடன் அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகம் நடத்திய உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரின் இறுதியாட்டமும் பரிசளிப்பு நிகழ்வும் இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3 மணிக்கு அல்வாய் மனோகரா சனசமூக நிலையத்தின் தலைவர் ந.துரைராஜா தலைமையில் இடம்பெறவுள்ளது.

மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் திக்கம் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

இறுதியாட்டத்தில் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மணற்காடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

இன்றைய நிகழ்வுகளுக்கு பிரதம விருந்தினராக சுங்க அத்தியட்சகர் த.யோகலிங்கமும், கௌரவ விருந்தினராக பிரசித்த நொத்தாரிசும், சட்டத்தரணியுமாகிய ஞானலோயினி சிவஞானமும், விசேட விருந்தினராக பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் தலைவர் டி.எம் . வேதாபரணம், அல்வாய் கிராம அலுவலர் தயானந்தா, பருத்தித்துறை உதைபந்தாட்ட மத்தியஸ்தர்சங்கத் தலைவர் அருளானந்தசோதி, கரவெட்டி விளையாட்டு உத்தியோகஸ்தர் இ.அனுராகாந்தன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (த-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இன்றைய ஆட்டம்

ICC WORLD TWENTY20 SRI LANKA 2012

| நியூஸிலாந்து | இங்கிலாந்து |
|---|---|
| பாகிஸ்தான் | இந்தியா |
| பல்லேகல | பிரேமதாஸ |
| பிற்பகல் 3.30 | இரவு 7.30 |

### 2012 ஆம் ஆண்டு உலகக் கிண்ண ரி-20 ஆட்டம்

இலங்கை எதிர் தென்னாபிரிக்கா நாணயச் சுழற்சி: இலங்கை

முடிவு: தென்னாபிரிக்கா 32 ஓட்டங்களால் வெற்றி ஆட்டநாயகன்: ஏ.பி.டி.வில்லியர்ஸ்

தென்னாபிரிக்கா

| பெயர் | ஆட்டமிழப்பு முறை | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| லெவி | c முனவீர b குலசேகரா | 04 | 04 | 0 | 0 |
| அம்லா | st சங்கக்காரா b ஹேரத் | 16 | 09 | 3 | 0 |
| பிளஸிஸ் | c ஜீவன் மெண்டிஸ் b பெரேரா | 13 | 11 | 0 | 0 |
| டீ வில்லியர்ஸ் | c ஜீவன் மெண்டிஸ் b மலிங்க | 30 | 13 | 1 | 2 |
| டுமினி | ஆட்டமிழக்காமல் | 12 | 05 | 1 | 1 |
| அல்பி மோர்கல் | ஆட்டமிழக்காமல் | 00 | 00 | 0 | 0 |
| பெகார்டின் | | | | | |
| கலிஸ் | | | | | |
| போத்தா | | | | | |
| ஸ்ரெய்ன் | | | | | |
| மோர்னி மோர்கல் | | | | | |
| உதிரிகள் | | 03 | | | |

| பெயர் | O | R | W | M | TOTAL - 78/4 (7) |
|---|---|---|---|---|---|
| குலசேகரா | 1 | 09 | 1 | 0 | 1-4 (லெவி). |
| மலிங்க | 2 | 27 | 1 | 0 | 2-27 (அம்லா). |
| ஹேரத் | 2 | 21 | 1 | 0 | 3-65 (டீ வில்லியர்ஸ்). |
| மத்தியூஸ் | 1 | 08 | 0 | 0 | 4-68 (பிளஸிஸ்) |
| பெரேரா | 1 | 12 | 1 | 0 | |

இலங்கை

| பெயர் | ஆட்டமிழப்பு முறை | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| மஹேல ஜெயவர்தன | c பெகார்டின் b ஸ்ரெய்ன் | 04 | 06 | 1 | 0 |
| டில்ஷான் | run out (டீ வில்லியர்ஸ்) | 00 | 00 | 0 | 0 |
| டில்ஷான் முனவீர | c பெகார்டின் b அல்பி மோர்கல் | 13 | 14 | 1 | 0 |
| சங்ககாரா | c டீ வில்லியர்ஸ் b கலிஸ் | 13 | 11 | 1 | 0 |
| திஸ்ஸர பெரேரா | c டுமினி b ஸ்ரெய்ன் | 01 | 03 | 0 | 0 |
| ஜீவன் மெண்டிஸ் | ஆட்டமிழக்காமல் | 07 | 05 | 1 | 0 |
| திரிமன்னே | ஆட்டமிழக்காமல் | 05 | 03 | 0 | 0 |
| மத்தியூஸ் | | | | | |
| குலசேகரா | | | | | |
| மலிங்க | | | | | |
| ஹேரத் | | | | | |
| உதிரிகள் | | 03 | | | |

| பெயர் | O | R | W | M | TOTAL - 46/5 (7) |
|---|---|---|---|---|---|
| மோர்னி மோர்கல் | 2 | 09 | 0 | 0 | 1-4 (டில்ஷான்). |
| ஸ்ரெய்ன் | 2 | 10 | 2 | 1 | 2-8 (ஜெயவர்தன). |
| போத்தா | 1 | 09 | 0 | 0 | 3-30 (சங்ககாரா). |
| கலிஸ் | 1 | 09 | 1 | 0 | 4- 32 (பெரேரா). |
| அல்பி மோர்கல் | 1 | 08 | 1 | 0 | 5-40 (பெரேரா) |

c - பிடியெடுப்பு b - பந்துவீசியவர் st - ஸ்ரொம்

உதயன்
தினமும்
வெல்லுங்கள்



ரூபா.
2000
கேள்வி 6

# அசத்தியது ஆபிரிக்கா

அதிரடியாகத் துடுப்பெடுத்தாடி ஓட்டங்களைக் குவித்த தென்னாபிரிக்க அணி பந்து வீச்சிலும் அசத்தி இலங்கை அணியை தோற்கடித்தது. மழை காரணமாக 7 பந்துப் பரிமாற்றங்களாகக் குறைக்கப்பட்ட ஆட்டத்திலேயே இலங்கை அணி தோல்வியைத் தழுவியது.

நான்காவது உலகக் கிண்ணத் தொடரின் 7 ஆவது ஆட்டம் அம்பாந்தோட்டையில் நேற்று நடைபெற்றது. இதில் தென்னாபிரிக்க, இலங்கை அணிகள் மோதின. ஆட்டம் ஆரம்பமாவதற்று முன்னரே கடுமையான மழை பெய்ததால் ஆட்டம் நீண்ட நேர தாமதத்தின் பின்னர் ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தது.

தென்னாபிரிக்காவின் ஆரம்ப இணைப்பை முதலாவது பந்துப் பரிமாற்றத்திலேயே இலங்கை அணி தகர்த்தது. இருந்தும் அம்லாவின் அதிரடியும் தொடர்ந்து வந்த டீ வில்லியர்ஸின் அதிரடியையும் இலங்கையால் சமாளிக்க முடியவில்லை. இலங்கை அணியில் மாயாஜால சுழற்பந்து வீச்சாளர் அஜந்த மெண்டிஸ் இணைக்கப்படாமலே இலங்கை அணி களமிறங்கியது.

தென்னாபிரிக்க அணி தொடர்ந்து போட்டுத் தாக்கிய போதும் இலங்கை அணி அவர்களது ஓட்ட எண்ணிக்கையை கட்டுப்படுத்த உருப்படியாக எந்தத் திட்டங்களையும் வகுக்கவில்லை. இதனால் தென்னாபிரிக்க அணி சுலபமாக 7 பந்துப் பரிமாற்றங்களில் 4 இலக்குகளை இழந்து 78 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

மிகச் சவாலான இலக்கை இலங்கை அணி விரட்டத் தொடங்கியது. ஆரம்பத்திலிருந்தே ஆபிரிக்காவின் சீறி வரும் வேகப் பந்து வீச்சை கணித்து ஆட இலங்கை வீரர்கள் திணறினர். அத்துடன் ஓட்டம் பெறுவதையே குறிக்கோளாக கொண்டிருந்ததால் அவசரப்பட்டு இலக்குகளை தேவையில்லாமல் இழந்தனர். இலங்கை அணி தனது உச்சக் கட்ட போராட்ட குணத்தை வெளிப்படுத்திய போதும் அது தென்னாபிரிக்க அணியை வெற்றி கொள்வதற்கு போதுமானதாக அமையவில்லை.

இலங்கை அணியால் 7 பந்துப் பரிமாற்றங்களின் நிறைவில் 5 இலக்குகளை இழந்து 46 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக் கொள்ள முடிந்தது. இதன் மூலம் 32 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தென்னாபிரிக்க அணியிடம் தோல்வியைத் தழுவியது. ஆட்டநாயகனான டீ.வில்லியர்ஸ் தெரிவானார். இலங்கை, தென்னாபிரிக்க அணிகள் அடுத்த சுற்றுக்குள் தெரிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5)

டீவில்லியர்ஸ்



ஒருநாள் கிரிக்கெட் தொடரில் அதிகூடிய இலக்குகளைக் கைப்பற்றியவர் யார்?

........................................

பெயர்– ........................................

முகவரி–........................................

........................................

உதயனில் வெளியாகும் கூப்பனை மாத்திரம் கத்தரித்து 24.09.2012 ற்கு முன்னர் அனுப்புதல் வேண்டும்.

உதயனின் யாழ். அலுவலகம், நெல்லியடி, சாவகச்சேரி, கரடிப்போக்குச் சந்தி, வவுனியா, மன்னார் ஜோதி புத்தகசாலை, சிவசாந்தி தேநீர்ச்சாலை-தாழ்வுப்பாடு அலுவலகங்களில் வைக்கப்பட்டுள்ள பெட்டியில் கூப்பனை இடலாம்.

இந்தப் பக்கத்துக்கு அனுசரணை:

LCD, LED TV கள் REPAIRING

(பழுது பார்க்கப்படும்)



* சகல வகையான LCD, LED TV களும் உடனுக்குடன் பழுது பார்த்துத்தரப்படும்.
* LCD, LED T.V களிற்கு தேவையான உதிரிப்பாகங்களை எம்மிடம்பெற்றுக்கொள்ளலாம்.
* சகல வகையான T.V களும் உடனுக்குடன் பழுதுபார்த்துத் தரப்படும்.

Barnabas
247, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம் [ஸ்ரீதர் தியேட்டர் அருகில்]

மதன் எலக்ரோனிக்ஸ்,
சுதுமலைச்சந்தி, மானிப்பாய்.

(S.14)

### 2012 ஆம் ஆண்டு உலகக் கிண்ண ரி-20 ஆட்டம்

மேற்கிந்தியத்தீவுகள் எதிர் ஆஸ்திரேலியா நாணயச் சுழற்சி: மேற்கிந்தியத்தீவுகள்

முடிவு: 17 ஓட்டங்களால் ஆஸ்திரேலியா டக்வேர்த் லூயிஸ் முறைப்படி வெற்றி ஆட்டநாயகன்: வொட்ஸன்

மேற்கிந்தியத்தீவுகள்

| பெயர் | ஆட்டமிழப்பு முறை | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| டுவைன் ஸ்மித் | b ஸ்ராக் | 02 | 05 | 0 | 0 |
| கெய்ல் | c & b வொட்ஸன் | 54 | 33 | 5 | 4 |
| சார்ள்ஸ் | b கிறிஸ்ரெய்ன் | 16 | 12 | 2 | 1 |
| சாமுவேல்ஸ் | c வோனர் b ஹொக் | 50 | 32 | 3 | 4 |
| டுவைன் பிராவோ | b குமின்ஸ் | 27 | 21 | 1 | 1 |
| பொலாட் | c ஹஸி b வொட்ஸன் | 10 | 08 | 2 | 0 |
| சமி | c வோனர் b ஸ்ராக் | 12 | 07 | 1 | 1 |
| ராம்டின் | b ஸ்ராக் | 03 | 02 | 0 | 0 |
| ராம்போல் | ஆட்டமிழக்காமல் | 00 | 00 | 0 | 0 |
| சுனில் நரைன் | ஆட்டமிழக்காமல் | 04 | 01 | 1 | 0 |
| பிடல் எட்வேட்ஸ் | | | | | |
| உதிரிகள் | | 13 | | | |

| பெயர் | O | R | W | M | TOTAL - 191/8 (20) |
|---|---|---|---|---|---|
| வொட்ஸன் | 4 | 29 | 2 | 0 | 1-8 (டுவைன் ஸ்மித்). 2-47 (சார்ள்ஸ்). |
| ஸ்ராக் | 4 | 35 | 3 | 0 | 3-93 (கெயில்). |
| குமின்ஸ் | 4 | 41 | 1 | 0 | 4-140 (சாமுவேல்ஸ்). |
| கிறிஸ்ரெய்ன் | 3 | 29 | 1 | 0 | 5-162 (பொலாட்). |
| ஹொக் | 4 | 30 | 1 | 0 | 6-171 (டுவைன் பிராவோ). |
| மக்ஸ்வெல் | 1 | 17 | 0 | 0 | 7-187 (சமி). 8-187 (ராம்டின்) |

ஆஸ்திரேலியா

| பெயர் | ஆட்டமிழப்பு முறை | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| டேவிட் வோணர் | c ராம்டின் b பிடல் எட்வேட்ஸ் | 28 | 14 | 3 | 2 |
| வொட்ஸன் | ஆட்டமிழக்காமல் | 41 | 24 | 2 | 3 |
| மைக் ஹஸி | ஆட்டமிழக்காமல் | 28 | 19 | 3 | 1 |
| கம்ரான் வைட் | | | | | |
| பெய்லி | | | | | |
| மக்ஸ்வெல் | | | | | |
| வேட் | | | | | |
| கிறிஸ்ரெய்ன் | | | | | |
| ஹொக் | | | | | |
| குமின்ஸ் | | | | | |
| ஸ்ராக் | | | | | |
| உதிரிகள் | | 03 | | | |

| பெயர் | O | R | W | M | TOTAL - 100/1 (9.1) |
|---|---|---|---|---|---|
| பிடல் எட்வேட்ஸ் | 2 | 16 | 1 | 0 | 1-30 (வோணர்). |
| ராம்போல் | 1.1 | 23 | 0 | 0 | |
| சுனில் நரைன் | 2 | 16 | 0 | 0 | |
| சமி | 2 | 15 | 0 | 0 | |
| சாமுவேல்ஸ் | 1 | 22 | 0 | 0 | |
| டுவைன் பிராவோ | 1 | 08 | 0 | 0 | |

c - பிடியெடுப்பு b - பந்துவீசியவர் st - ஸ்ரொம்

# வந்தார் வருண பகவான் வென்றது ஆஸ்திரேலியா





கிரிக்கெட் ரசிகர்களால் பரபரப்பாக எதிர்பார்க்கப்பட்ட 'ரி-20' ஆட்டம் மழை காரணமாக பாதியில் குழம்பியது. இதன் முடிவு டக்வேர்த் லூயிஸ் முறைப்படி வழங்கப்பட்டு ரசிகர்களை ஏமாற்றி விட்டது.

உலகக் கிண்ண 'ரி-20' தொடரில் எட்டாவது ஆட்டம் கொழும்பு ஆர். பிரேமதாஸா மைதானத்தில் நேற்ற இரவு நடைபெற்றது. ஆஸ்திரேலிய அணியும் மேற்கிந்தியத்தீவுகள் அணியும் பலத்த எதிர் பார்ப்புக்களுக்கு மத்தியில் மோதிக் கொண்டது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மேற்கிந்தியத்தீவுகள் அணி முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது.

அதிரடி நாயகன் கெய்ல் மற்றும் ஸ்மித் ஜோடி ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாகக் களமிறங்கியது. பலராலும் எதிர்பார்க்கப்பட்ட கெயில் ஆரம்பத்தில் அமைதிகாத்தார். சுமாரான தொடக்கத்துடன் மேற்கிந்தியத்தீவுகளின் ஆட்டம் அமைந்தது. ஸ்மித் ஆரம்பத்திலேயே வெளியேற்றப்பட்டார்.

ஆட்டத்தின் மூன்றாவது பந்துப் பரிமாற்றத்தில் கெயில் 5 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் கொடுத்த பிடியெடுப்பை வொட்ஸன் தவறவிட்டார். அதன் பின்னர் ஆட்டத்தின் ஐந்தாவது பந்துப் பரிமாற்றத்தில் அதிரடி தொடங்கியது. அடிக்கின்ற பந்துகள் பவுண்டரி எல்லையை உயர்ந்து தாண்டிக் கொண்டேயிருந்தது. கெய்லின் முழக்கத்துக்கு இணையாக சார்ள்ஸும் சிறிது நேரம் அடித்தாடினார்.

கெய்ல் அதிரடியாக சிக்ஸர்கள் விளாச அரங்கமே அதிர்ந்தது. 26 பந்துகளில் கெய்ல் அரைச்சதத்தைக் கடந்தார். தொடர்ந்தும் துரதிர்ஷ்டவசமாக வொட்ஸனின் பந்து வீச்சில் அவரிடமே பிடி கொடுத்து கெய்ல் வெளியேறினார். அதன் பின்னர் நுழைந்த சாமுவேல்ஸ், கெய்ல் விட்டுச் சென்ற பணியை செவ்வனே செய்தார். அரங்கத்தில் அதிரடிகளுக்கு மாத்திரம் குறைவிருக்கவில்லை.

சாமுவேல்ஸ் 37 பந்துகளில் அரைச்சதம் கடந்து வெளியேறினார். மேற்கிந்தியத்தீவுகளின் வீரர்கள் களமிறங்குவதும் அதிரடியாக ஆடுவதும் வெளியேறுவதுமாக இருந்தனர். மேற்கிந்தியத்தீவுகள் அணி இறுதிப் பந்து வரையில் தனது அதிரடி ஆட்டத்தை கைவிடவில்லை. இறுதியில் 20 பந்துப் பரிமாற்றங்களில் 8 இலக்குகளை இழந்து 191 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

கலைத்தடிப்பதில் சற்றும் சளைக்காத ஆஸ்திரேலிய அணி இமாலய இலக்கை விரட்டக் களமிறங்கியது. வோணர் இரண்டாவது பந்துப் பரிமாற்றத்திலேயே தனது வேலையைக் காட்டினார். 22 ஓட்டங்களை ஒரே பந்துப் பரிமாற்றத்தில் வாரி வழங்கியது மேற்கிந்தியத்தீவுகள் அணி. அடுத்த பந்துப் பரிமாற்றத்தில் வோணர் சர்ச்சைக்குரிய முறையில் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து ஹஸி நுழைந்தார். அதன் பின்னர் சிறிது நேரம் அரங்கில் அதிரடி இல்லை. இருப்பினும் சிறிது நேரத்திலேயே வொட்ஸன் வெளுக்கத் தொடங்கினார். சாமுவேல்ஸும் தனது பந்துப் பரிமாற்றத்தில் 22 ஓட்டங்களை வாரி வழங்க ஆஸ்திரேலிய அணி பலமான நிலையை அடைந்தது.

அத்துடன் இந்தத் தொடரில் 'பவர் பிளேயில்' அதி கூடிய ஓட்டங்களைப் பெற்ற அணி என்ற பதிவையும் தனதாக்கியது. ஆஸி. அணி வெற்றியிலக்கை விரைவாக நெருங்கிக் கொண்டிருக்கையில் வருணபகவான் யாருடைய அழைப்புமின்றி களமிறங்கினார். 9.1 பந்துப் பரிமாற்றங்களில் அணி ஓர் இலக்கை மாத்திரம் இழந்து 100 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் வருணபகவானின் குறுக்கீடு காரணமாக ஆட்டம் தடைப்பட்டது. இறுதியில் டக்வேர்த் லூயிஸ் முறைப்படி ஆஸ்திரேலிய அணி 17 ஓட்டங்களால் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. ஆட்டநாயகனாக அசத்திய வொட்ஸன் தெரிவானார். (5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மேலைப் புலோலி ஸ்ரீ முருகன் ஆலய மகாகும்பாபிஷேகம் ஆவணி ஓணம் அன்று இடம்பெற்றது. இதன்போது சமயச் சொற்பொழிவு நிகழ்த்திய சிவஸ்ரீ நாகலாதரக் குருக்கள் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்படுகிறார். (ம)




நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தில் அண்மையில் இடம்பெற்ற தெய்வீக இசையரங்கில் சங்கீத வித்துவான் ஏ.கே.கருணாகரனின் கச்சேரி இடம் பெறுகிறது. (ம)



கட்டைவேலி - நெல்லியடி ப.நோ.கூ. சங்கத்தின் ஜூலை மாதத்துக்குரிய நுகர்வோர் ஊக்குவிப்பு வழங்கலும் பணியாளர் சந்திப்பும் இடம்பெற்றபோது நெல்லியடி கூட்டுறவு நகர் முகாமையாளர் பொ.பொன்ராஜனிடமிருந்து பரமதாஸ் சுரேகாந் ஊக்குவிப்பு பரிசைப் பெற்றுக் கொள்கிறார். (ம-8)



சண்டிலிப்பாய் மணிமோகன் முன்பள்ளிச் சிறார்களின் விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வலி.தென்மேற்குப் பிரதேச சபைத் தலைவர் ஜெபநேசன் மற்றும் விருந்தினர்கள் ஊர்வலமாக அழைத்து வரப்படுகின்றனர். (ம-86)



ஆழ்வார் கலைக்கூடத்தின் 'விளைவு' குறும்படத்தின் ஆரம்ப நிகழ்வு அண்மையில் வேவிலந்தை முத்துமாரி அம்மன் ஆலயத்தில் பூசை வழிபாடுகளுடன் ஆரம்பமாகியது. (ம-253)



ஐயாயிரம் பாடசாலைகளைப் புனரமைப்புச் செய்யும் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட காரைநகர் தோப்புக்காடு மறைஞான சம்பந்தர் வித்தியாலய புனரமைப்பு பணிக்கான ஆரம்ப நிகழ்வு அண்மை யில் இடம்பெற்றது. பாடசாலை அதிபர் திருமதி எஸ்.தேவராசா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் காரைநகர் பிரதேச செயலர் திருமதி தே.பாபு, காரைநகர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் பு. ஸ்ரீ விக்னேஸ்வரன், காரைநகர் பிரதேச சபை உறுப்பினர் வீ.கண்ணன் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (ம-250)



காரைநகர் கிழவன்காடு கதிர்காம சுவாமி ஆலய அலங்காரத் திருவிழாவில் சொற்பொழிவு நிகழ்த்திய ம.கணநாதனுக்கு ''செந்தமிழ் செல்வன்'' என்னும் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. ஆலய பிரதம குரு ஆ.சங்கரநாராயண குருக்கள், புலவர்மணி வே.குமாரசாமி ஆகியோர் பொன்னாடை போர்த்து பட்டச் சான்றிதழ் வழங்கினர். (ம-250)



சர்வதேச இந்துமத குருபீடம் யாழ். மாவட்டத்தில் நடத்திய ஆன்மிகப் பெருவிழாவில் பிரம்மஸ்ரீ சிவ.வை.நித்தியானந்த சர்மா, எஸ்.தண்டபாணிகதேசிகர், மிருதங்க வித்துவான் து.இராஜன் ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர். இந்த நிகழ்வில் நடிகர் சரத்பாபுவும் கலந்துகொண்டார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கெய்லின் சிக்ஸர் ரகசியம்




சர்வதேச கிரிக்கெட் போட்டியில் இமாலய சிக்ஸர்களை அடித்து ரசிகர்களை உற்சாகப்படுத்தும் அதிரடித் துடுப்பாட்ட வீரர் கிறிஸ் கெய்ல், தனது அதிரடி ஆட்டம் குறித்து தெரிவித்துள்ளார்.

மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் அணியின் அதிரடி துடுப்பாட்ட வீரர் கிறிஸ் கெய்ல், நேற்று முன்தினம் தனது 33 ஆவது பிறந்தநாளை கொண்டாடினார். இவரது இமாலய சிக்ஸர்களுக்கு, ரசிகர்களிடையே தனி மரியாதை உண்டு.

இந்த நிலையில் கிரிக்கெட் போட்டியில் சரியான உடல் சமநிலை கொண்ட எந்த வீரருக்கும், அதிரடியாக துடுப் பெடுத்தாடுவது எளிது என்று கிறிஸ் கெய்ல் தெரிவித்துள் ளார்.

இது குறித்து அவர் கூறுகையில், ஒரு கிரிக்கெட் வீரரின் முக்கிய திறமையே அவரது உடல் சமநிலை தான். கிரிக்கெட் போட்டியில் அதிரடியாக ஆடி பல சிக்ஸர்களை அடிக்க வேண்டுமானால், சிறந்த உடல் சமநிலையை பெற்றிருக்க வேண்டும்.

இந்தக் காலத்தில் சிக்ஸர் அடிப்பது என்பது ஒரு பெரிய காரியம் அல்ல, எல்லா வீரர்களும் சிக்ஸர் அடிக்கிறார்கள். முதலில் ஆடுகளத்தில் நிலைத்து விட்டால், அதன் பின்பு பந்துவீச்சாளர்களை எதிர்த்து அதிரடியாக ஆடுவது எளிது - என்றார். (5)

# சச்சினின் ஆட்டம் எப்போது அடங்கும்

டெஸ்ட் கிரிக்கெட்டில் இன்னும் ஒன்று அல்லது இரண்டு ஆண்டுகளுக்கு சச்சின் நீடிப்பார், என்று பிரைன் லாரா கணித்துள்ளார்.

இந்திய அணியின் 'மாஸ்டர் பட்ஸ்மன்' சச்சின் (வயது -39). சர்வதேச போட்டியில் 100 சதம் உட்பட பல்வேறு சாதனைகள் படைத்த இவர், நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் 'ஹட்ரிக்' போல்டானார். இதையடுத்து இவர் ஓய்வு பெற வேண்டுமென்ற கோரிக்கை வலுத்தது.

இது குறித்து மேற்கிந்தியத்தீவுகள் அணியின் முன்னாள் அணித் தலைவர் லாரா கூறியதாவது:

சச்சின் 'ரி-20' போட்டியில் இருந்து, ஏற்கனவே விலகி விட்டார். ஒரு நாள் போட்டியில் கவனம் செலுத்துகிறாரா என்று தெரியவில்லை. ஆனால், டெஸ்டில் விளையாடும் திறமை இன்னும் இவரிடம் உள்ளது. அடுத்த ஒன்று அல்லது இரண்டு ஆண்டுகளுக்கு நீடிப்பார்.

தனது 16 ஆவது வயதில் கிரிக்கெட் வாழ்க்கையை தொடங்கினார். நான் ஓய்வை அறிவித்து, ஐந்து ஆண்டுகளான பின்பும், தொடர்ந்து விளையாடி வருகிறார். சர்வதேச கிரிக்கெட்டில் 25 ஆவது ஆண்டை நெருங்கும் இவரை எண்ணி, இந்தியர்கள் பெருமைப்பட வேண்டும். பல முறை காயங்களால் பாதிக்கப்பட்டுள்ளார். இருப்பினும், அதிக ஓட்டங்கள் சேர்த்தவர்கள் பட்டியலில் உச்சத்தில் இருக்கிறார். இவர் விடைபெறும் போது, உலக கிரிக்கெட் நிச்சயமாக ஒரு திறமையானவரை 'மிஸ்' பண்ணும். (5)

# சேவாக்குக்கு வக்காளத்து வாங்கும் ஜெயசூரியா

சமீபத்திய தொடர்களில் சேவாக் சோபிக்காததற்கு வயது ஒரு தடையல்ல என்று இலங்கை அணியின் முன்னாள் அணித் தலைவர் ஜெயசூரியா தெரிவித்துள்ளார்.

இந்திய அணியின் அதிரடி தொடக்க வீரர் வீரேந்திர சேவாக் (வயது - 33) இந்த ஆண்டு விளையாடிய 9 ஒரு நாள் போட்டியில் ஒரே ஒரு அரைச்சதம் மட்டும் அடித்துள்ளார். மூன்று சர்வதேச 'ரி-20' போட்டியில் அதிகபட்சமாக 23 ஓட்டங்கள் மட்டுமே எடுத்துள்ளார்.

ஆப்கானிஸ்தானுக்கெதிரான 'ரி-20' உலகக் கிண்ண லீக் ஆட்டத்தில் 8 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தார். இதனால் நெருக்கடிக்கு ஆளானார்.

இது குறித்து இலங்கை அணியின் முன்னாள் அணித்தலைவர் சனத் ஜெயசூரியா கூறுகையில், சேவாக் போன்ற 'மட்ச் வின்னர்கள்' ஒன்று அல்லது இரண்டு போட்டியில் சோபிக்கத்தவறினால், வயது ஒரு காரணம் என்று குறை கூறுகின்றனர். கிரிக்கெட் விளையாடுவதற்கு வயது ஒரு தடையல்ல. உடற்தகுதியும், திறமையும் இருக்கும் பட்சத்தில் எந்த வயதிலும் போட்டியில் பங்கேற்கலாம்.

சேவாக் விளையாடிய அனைத்துப் போட்டியிலும் 80 அல்லது 100 ஓட்டங்கள் எடுக்கவில்லை என்றும் குறைந்த பட்சம் 70 ஓட்டங்கள் எடுத்த நிறைய போட்டியில் இந்திய அணிக்கு வெற்றி கிடைத்துள்ளது எனவும் கூறியுள்ளார். (5)


## கிருபா லேணர்ஸ்

அரச அங்கிகாரம் பெற்ற A தர கனரக சாரதிப் பயிற்சிப் பாடசாலை

- குறிப்பிட்ட காலப்பகுதியில் விரைவாக சாரதி அனுமதிப் பத்திரம் வழங்கப்படும்.
- வான், முச்சக்கரவண்டி, உழவு இயந்திரம் (டெக்ரர்) அனுமதிப்பத்திரம் உள்ளவர்கள் இரண்டு வருடம் பூர்த்தி ஆனால் கனரக வாகன (AD) சாரதி அனுமதிப்பத்திரம் பெறமுடியும்.
- கனரக வாகன (AD) சாரதி அனுமதிப்பத்திரம் பெற அசோக் லேடன் பஸ் மூலம் இலகுவான பயிற்சி பெறலாம்.
- தவணைமுறைக் கட்டணம்.
- எழுத வாசிக்க தெரியாதவர்களுக்கு விசேட வீடியோ வகுப்பு நடைமுறை.

தலைமைக்கரியாலயம்
226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே- 0212224353, 0214923200, 0714546952, 0777225292

சுன்னாகம் 0212242022 0714546956
கிளிநொச்சி 0212285505 0714546955
சாவகச்சேரி 0214923202 0212270700
நெல்லியடி 0213006550 0214923201
விசுவமடு 0213201515 0714546955

(சி/3611)(3.14)



German, Swiss மொழிகள் தமிழ் மொழி பெயர்ப்புடன் Gothe Institutr exam க்கு ஏற்றவாறு நடைபெறுகின்றது.
தொடர்பு: 10, Palaly Road, Jaffna.
Miss. Kajenthini 0771604823
(23240)(3.14)



## Study, Work & Live in UK

# எவ்வித முற்பணமும் இல்லாத வீசாவை பெற்றுக்கொண்டபின்னரான பணப்பரிமாற்றம்.(full package)





• இவ்வாறான முறையில் கடந்த சில மாதங்களில் 15மாணவர்கள் சென்றுள்ளார்கள். அவர்களில் சிலர்........






கல்லூரிக்கட்டணம் மற்றும் sponsor ஏற்பாடுகளிற்கு எமது நிறுவனமே பணத்தை செலவுசெய்கின்றது.

City & Guilds நிறுவனத்தில் ஆசிரிய பயிற்சிபெற்று தரச்சான்றினைப் பெற்ற, மேல்மாகாண பிரபல ஆசிரியரின் வழிகாட்டலில் "ESOL A1, B1" வகுப்புகள் நடைபெறுகின்றன.

சனி, ஞாயிறு ( 9.30am-5.30pm வரை)

WEC World Education Consultancy — City & Guilds Approved Center
Sangathanai Chavakachcheri.
CONTACT: 077-9265447



## வேலைக்கு ஆள்கள் தேவை

எமது ஸ்தாபனத்திற்கு விற்பனையாளராக கொழும்பில் தங்கி இருந்து வேலை செய்வதற்கும், யாழ்ப்பாணக் கிளைக்கும் ஆள்கள் தேவை. (கொழும்பில் தங்குமிட வசதி செய்து கொடுக்கப்படும்).
தொடர்பு:-
11A. ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
0778208085
(23206)(3.6.14)



## இந்திய சாஸ்திரியார் வருகை

யாழ்ப்பாணப் புண்ணிய பூமிக்கு மீண்டும் வருகை தந்துள்ளார்
ஓம் சக்தி அருள் வாக்கு பெற்ற பரம்பரை ஜோதிடர்
S.N. குமாரசாமி
கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத்தடை, கல்வித்தடையா, குழந்தை பாக்கியம் மற்றும் புதிய தொழில் தொடங்க வேண்டுமா? தொழில் முன்னேற்றம் இல்லையா, குடும்பப் பிரச்சினையா? வெளிநாடு செல்லத் தடையா?, மனஉளைச்சலா ?
எந்தப்பிரச்சினைக்கும் நேரில் சந்திக்கவும்
(காலை 9 மணி முதல் மாலை 5 மணிவரை)
பீப்பில்ஸ் இன் (PEOPLE INN)
இல.112/1, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
(பிள்ளையார் ஹோட்டல் முன்பாக)
T.P: 072 6816681, 0726816691
(20772) (15-14)



## Microsoft Excel






**Finance Excel**

பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் ICSL, CIMA, ACCA, HNDA, AAT மற்றும் வர்த்தகத்துறை சார்ந்தவர்களுக்குரியது

**Advance Excel**

வர்த்தக துறையினர் மட்டுமல்லாது அலுவலகங்களில் microsoft excel இனை பாவிக்கும் பாவனையாளர்கள் உங்கள் வேலையினை இலகுபடுத்திக் கொள்ள இது மிகவும் உதவியாக அமையும்.

**Basic Excel**

microsoft excel இனை அடிப்படையில் இருந்து கற்பிக்கப்படும். microsoft office இல் சான்றிதழ் பெற்ற போதிலும் போதிய பயிற்சியினை பெறாதவர்கள் இதில் இணைந்து 50 இற்கும் மேற்பட்ட பயிற்சியினை பெற்று அடிப்படையான விடயங்களை கற்க முடியும்.

Student Support Center
பருத்தித்துறை வீதி,
கல்வியன்காடு, யாழ்ப்பாணம்.
0776169470
our goal is make excel casual users into power users
(23110)(3.14.6)



CIMA கல்வி @ CAPSTONE
0771 250 350
No. 154,A/1, Navalar Road, Jaffna.



## விற்பனைக்கு

புதிய நிலையில் உள்ள HONDA CD 200 Road master (HX - xxxx Electronic, oil cooler, plating, Red colour) உடனடி விற்பனைக்கு
தொடர்பு: 0776784455
(23201)(3.14)



## மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம் 1984 இல் பிறந்த, 8 இல் செவ்வாய் 50 பாவமுடைய, லண்டனில் வசிக்கும் பட்டப் படிப்பு முடித்து தொழில் புரியும் மணமகளுக்கு தகுந்த படித்த மணமகன் தேவை.
தொடர்பு:-
004747944944
mathusena@yahoo.com
(23606)(3.6.7)



## காணி விற்பனை

K.K.S வீதி, றொட்டியாலடி ஒழுங்கை (பெற்றோல் நிலையத்திற்கு முன்) $6\frac{3}{4}$ பரப்பு காணி உடன் விற்பனைக்கு உண்டு
T.P: 0770773694
(23211)(3.14.6)


## காணவில்லை





கைதடி தெற்கைச் சேர்ந்த வரதலக்சுமி கணேமூர்த்தி என்பவரை நேற்ற (22.09.2012) தொடக்கம் காணவில்லை இவரைக் கண்டவர்கள் உடன் தொடர்புகொள்ளவும்.
தொடர்பு :
077 5797716
(சி/3609)(8.14)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 23.09.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











# சூரியகாந்தி

உதயன்

ஞாயிறு சிறப்பம்சம்

01

உதயன் 23 செப்ரெம்பர் 2012 ஞாயிற்றுக்கிழமை பக்கங்கள்: இருபத்தெட்டு


# தீர்ந்து போகாத்



ஔண்யன்

காலம் முழுதும் கண்ணீரை உற்பவிக்கும் கரும்புகை போல எந்தப் பயனும் இல்லாமல் அலை படுவதை விடவும் கணப்பொழு தேனும் தீப் பொறியாய் மின்னி பிறர்க்கு ஒளி கொடுத்துவிட்டு மறையும் ஆன்மாக்கள் இன்ன மும் இருக்கவே செய்கின்றன.

இந்த ஆன்மாக்களுக்கு, ஒரு மணிநேர உண்ணாவிரதத்தோடு தன் வாரிசுகளுக்கு அமைச்சுப் பதவி கேட்கத் தெரியாது. பணத் துக்காக உடலில் பெற்றோலை ஊற்றுவது போல பாசாங்கு பண்ணத் தெரியாது. அரசியல் தலை வர்களின் சுயநல ஊளையிடல் களுக்காக வாலாட்டத் தெரியாது. அவர்களுக்குத் தெரிந்ததெல்லாம் பிறர் துன்பத்தைப் போக்கத் தன்னை ஆகுதியாக்குதல் மட்டுமே.

விஜயராஜும் அப்படிப்பட்ட ஒரு துயரேந்திதான். இந்தத் துயரேந்தி 3 வருடங்களுக்கு முன்னர் முள்ளி வாய்க்காலில் தன் இனத்தவர்கள் சாக்குழிக்குள் தள்ளப்பட்டதை எண்ணி கடைசிவரை பொருமிக் கொண்டே இருந்தான். ''இன வெறியர்களுக்கு இங்கிடமில்லை'' என்று உறுமவும் செய்தான்.

முத்துக்குமார், செங்கொடி வரிசையில் தீயை தன் ஆயுதமாக எடுத்தான். ஒரு நெருப்பை இன்னொரு நெருப்பு தின்னமுடியாது. விஜயராஜின் இலட்சியத் தீயை பொசுக்க பெற்றோல் நெருப்புக்கு ஆற்றலில்லை. அரைகுறையோடு அவனை விட்டுத் தூர ஓடிப்போனது.

உடல் எங்கும் வெந்து தணிந்த விழுப்புண்களோடு, பக்கத்தில் சாவு சம்மணமிட்டு உட்கார்ந் திருந்தபோதும், உரத்துச் சொன் னான்,

''என் உயிர் ஆயுதம் இன வெறிப் போர் புரிந்த மஹிந்தவை திருப்பி அனுப்பும். அவர்களுக்கு இங்கு இடமில்லை.''

*முன்னை இட்ட தீ முப்புரத்திலே*
*பின்னை இட்ட தீ தென்னிலங்கையில்*
*அன்னை இட்ட தீ அடி வயிற்றிலே*
*விஜயன் இட்ட தீ எங்கும் மூளவே!*

★★★

ஐம்பூதங்களிலும் அதி கூடிய அழிவை நிகழ்த்தக் கூடியது அக்கினிதான். கண் இமைக்கும் பொழுதிலேயே எதிர்ப்பட்ட எல்லாவற்றையும் எரித்துச் சாம்ப லாக்கிவிட்டுத்தான் அது ஓயும். இந்துக்களின் முழுமுதற் கடவுளரின் அழித்தல் தொழிலை அக்கி னிக் கையே குறிக்கிறது.

அழித்தலின் குறிகாட்டியான அக்கினியே ஆக்கத்துக்கும் முதற் காரணி. கல்லை உரச புறப்பட்ட முதற் பொறிதான் மனிதனை செவ்வாய் வரையும் விண்கலம் அனுப்ப வைத்திருக்கிறது. தீயை ஆயுதமாகப் பிரயோகிக்கும் பழக்கம் தொன்றுதொட்டே எல்லா நாகரிகங்களினதும் வரலாற்றுப் பக்கங்களை நிறைத்து வைத் திருக்கிறது.

தமிழ் இனத்தின் பத்தினித் தெய்வம் எனப்படும் கண்ணகி கூட தன் கோபத்தின் ஆயுதமாக அக்கினியையே கையில் எடுத் தாள்; மதுரையை எரித்தாள். அந் தப் பேரழிவுதான் கோவலன் மீதான களங்கத்தைப் போக்கியதோடு, அவளின் கற்பின் வெம்மையையும் உலகறியச் செய்தது.

இலங்கை நோக்கிய படை யெடுப்புக்கு முன்னர் தூதனாக வந்த அனுமனின் வாலில் இரா வணன் மூட்டிவிட்ட சிறுபொறி தான் இலங்கைத் தீவின் பெரும் பகுதியைத் தீக்குளிக்க வைத்தது. அதன் தழும்புகள் இன்றைக்கும் 'சீதஎலிய' பகுதியில் ஆறாமல் இருப்பதாக நம்பப்படுகிறது.

அனுமன் தூதனாக வந்[illegible] பல்லாயிரம் ஆண்டுகளுக்குப் பின்னர் 1987 இல் மீண்டுமொரு படையெடுப்பு இந்தியாவிலிருந்து. அப்போது எந்த ராவணனும் எந் தச் சீதையையும் சிறைப்பிடித்து வைத்திருக்கவில்லை. ஆனாலும் சிறைப்பட்டிருந்த தமிழர்களை மீட்பதாகக் கூறி வந்திறங்கியது இந்தியப் படை. உடலெங்கும் புறாக்களின் இறகுகளை பிடுங்கி அவற்றில் இருந்த ரத்தத் திட்டுக ளோடு இறக்கைகளை கட்டிக் கொண்டு அமைதித் தூதுவர்கள் என்று தம்மைத் தாமே பிரகடனம் செய்து கொண்டார்கள்.

இறகுகளுக்குள் ஒளிந்திருக் கும் ஆயுதங்களையும், சூனியப் பேய்களையும் இனங்கண்டு கொண்ட மறவர் படை, பேயை ஓட்ட தீயைக் கையில் எடுத்தது.

[illegible] நல்லூர் பற்றி எரிந்தது. வெம்மை தாள முடியாமல் சமாதானச் சூனி யக்காரர்களின் புன்னகை ஏந்திய போலி முக மூடிகள் உருகத் தொடங்கின. பார்த்தீபனின் பசித் தீ வேள்வியின் முடிவோடு மூண் டது போர்த் தீ.

அக்கினிக் குஞ்சுகளை கண்டு பிடிக்க, அவர்கள் ஒளிந்திருந்த பொந்துக்குள் புகுந்த படை வெந்து போனது. நொந்துபோய் சொந்த நாட்டுக்கே ஓடிப்போனது.



காலம் சுழன்றுகொண்டே இருந்தது. தோற்ற அவமான நெருப்பு பாரதத்தின் மனதில் கனன்றுகொண்டே இருந்தது. ஈழத் தமிழரை கருவறுக்க தரு ணம் பார்த்துக் காத்திருந்தது. பேரு ழிக் காலத்தில், போர் அரக்கர்களு டன் கை கோர்த்தது. கடலோர சதுப்பு நிலத்துக்குள் தமிழர்களின் உரிமைத் தீயை குழி தோண்டிப் புதைத்தது.

இலட்சியத் தீ ஒரு மனிதனின் மரணத்தோடோ காலத்தின் மறக் கடிப்போடோ அழியக்கூடியதல்ல. அது பரவிக் கொண்டே போனது. ஈழத்தின் வடக்கு கிழக்கில் மாத் திரமே எரிந்துகொண்டிருந்த பெரு நெருப்பு புலம் பெயர் தேசங்களிலும், தமிழகத்திலும் மூளாசி எரியத் தொடங்கியது. குடத்திலிட்ட விளக்கு குன்றின் மேல் தீபமானது.

எந்த நாட்டுக்குள்ளும் குடும்ப ஆட்சிக்காரர்கள் கால் வைக்க முடியாதபடி எல்லா நிலங்களும் இந்தப் பெரு நெருப்பால் தகிக்கத் தொடங்கின. இராக் கால திரு

**27 ஆம் பக்கம் பார்க்க..**

*''ஈகச்சுடரை ஏற்றும்பொழுது எரியும் சுடரில், தீ நாக்குகளின் அபூர்வநடனத்தில் தோன்றும் அற்புதமான படிமத்தில், நான் ஒரு தரிசனத்தைக் காண்கிறேன்.*

*அக்கினியாக பிரகாசித்தபடி ஆயிரமாயிரம் மனித தீபங்கள், நெருப்பு நதிபோல ஒளிகாட்டி, வழிகாட்டிச் செல்லும் ஓர் அதிசயக்காட்சி திடீரென மனத்திரையில் தோன்றி மறையும். மாவீரர்களே எமது சுதந்திரப் பயணத்தின் வழிகாட்டிகள், அவர்களது வாழ்வும் வரலாறும் எமது இலட்சிய உறுதிக்கு உரமேற்றுபவை, அவர்களே எமக்கு ஒளி காட்டிகள். நாமும் எமது இதயங்களில் இலட்சிய நெருப்பை மூட்டிக்கொள்வோம்.*

*- புலிகளின் தலைவர் பிரபாகரன்*
*26.11.2000*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இலங்கை ஜனாதிபதியின்

# இந்திய பயணம்

சந்திரசேகர ஆஷாத்

இந்தியாவிலுள்ள சாஞ்சியில் நிறுவப்படவுள்ள ஒரு பௌத்த பல்கலைக்கழகத்துக்கு அடிக்கல் நாடும் விழாவில் கலந்துகொள்வதற்காக இலங்கையின் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்தியாவுக்கான ஒரு பயணத்தை மேற்கொண்டுள்ளார். அதேசமயத்தில் இந்தப் பயணத்தின்போது இவர் இந்திய ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் ஆகியோரைச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தியுள்ளார்.

ஒரு நாட்டின் தலைவர் இன்னொரு நாட்டுக்குப் பயணம் செய்வது அப்படியொன்றும் புதிய விடயமுமல்ல வழமைக்கு மாறான நடைமுறையும் இல்லை. ஆனால் இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையிலான தெளிவற்ற அரசியல் பொருளாதார உறவுகள் இலங்கைத் தமிழ் மக்களின் இனப் பிரச்சினை தொடர்பாகத் தொடர்ச்சியாக இலங்கை, இந்திய அரசுகள் மேற்கொண்டு வரும் அலட்சியப் போக்கு தொடர்ந்தும் இடம்பெற்று வரும் இலங்கை அரசின் இன ஒடுக்கு முறை நடவடிக்கைகள் என்பன தொடர்பில் ஒரு அதிருப்தியான நிலை தொடரும் வேளையில் இந்தப் பயணம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அண்மையில் தமிழகத்துக்குப் பயணம் செய்து நிகழ்ச்சிகளை நடத்தவிருந்த கலாசாரக் குழு, விளையாட்டுக்குழு என்பன தமிழக அரசால் வெளியேற்றப்பட்டன. அது மாநில அரசின் அனுமதி பெறப்படாத காரணத்தால் மேற்கொள்ளப்பட்டதாக கூறப்பட்டபோதிலும் இலங்கைப் படையினருக்கு இந்தியாவில் பயிற்சி கொடுக்கக் கூடாது எனத் தமிழக முதல்வர் ஜெயலலிதா கொடுத்த அழுத்தம் புறக்கணிக்கப்பட்டதன் எதிர்விளைவு எனவே கருதப்பட்டது. அது மட்டுமன்றி தமிழகத்துக்கு வந்த இலங்கை யாத்திரிகர்கள் வழிபாடு நடத்த முடியாமல் திருப்பியனுப்பப்பட்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இலங்கைப் படையினருக்கு இந்தியாவில் பயிற்சி வழங்குவது தொடர்பாகத் தமிழகத்தில் உள்ள அனைத்துக் கட்சிகளும் தமது எதிர்ப்பைத் தெரிவித்தபோதும் அது அலட்சியப்படுத்தப்படுகிறது. அது தொடர்பான எதிர்ப்புக்களும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களும் இன்றுவரை தொடர்கின்றன. இப்படியான ஒரு சாதகமற்ற சூழலில்தான் இலங்கை ஜனாதிபதியின் இந்தப் பயணம் பற்றிய அறிவிப்பு வெளியானது. இது தமிழக மக்களுக்கு விடுக்கப்பட்ட ஒரு சவாலாகவே கருதப்பட்டது.

இலங்கையில் தொடரும் இன அழிப்பு, இன ஒடுக்குமுறை நடவடிக்கைகள் காரணமாகவும் இந்திய மீனவர்கள் கடலில் வைத்து இலங்கைக் கடற்படையினரால் கொல்லப்படுவது, படுகாயப்படுத்தப்படுவது, மீன்பிடி உபகரணங்கள் சேதப்படுத்தப்படுவது தொடர்பாகவும் தமிழக மக்கள் கொதிப்படைந்துள்ள இவ்வேளையில் இலங்கை ஜனாதிபதியும் இந்தப் பயணத்தை அனுமதித்த இந்திய அரசும் தமிழக மக்களின் உணர்வுகளை படுமோசமான முறையில் அவமானப்படுத்தி விட்டதாகவே அவர்கள் கருதினர்.

எனவே இலங்கை ஜனாதிபதியின் பயணத்தை எதிர்த்துத் தமிழகமெங்கும் போராட்டங்கள் வெடித்தன. ம.தி.மு.க., விடுதலைச் சிறுத்தைகள், நாம் தமிழர், தமிழ் வாழ்வுரிமை அமைப்பு என்பன ஆர்ப்பாட்டங்களைத் தொடர்ந்து நடத்தின. தி.மு.க. தலைவரும் முன்னாள் முதலமைச்சருமான கருணாநிதி, தமிழக முதல்வர் ஜெயலலிதா ஆகியோர் தமது எதிர்ப்பையும் கண்டனங்களையும் வெளியிட்டனர். அது மட்டுமன்றி சேலத்தில் தமிழ் உணர்வாளராகிய ஓட்டோ சாரதி ஒருவர் தீக்குளித்து உயிர் துறந்துள்ளார்.

ஒட்டு மொத்தத்தில் முழுத் தமிழகமும் மஹிந்தவின் வருகைக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கியது. இந்த எதிர்ப்புக்களையெல்லாம் பொருட்படுத்தாத மன்மோகன் சிங் அரசு மஹிந்த ராஜபக்ஷவைப் பெரும் ஆரவாரமாக வரவேற்றது. இந்திய அரசின் பலத்த பாதுகாப்பு அவருக்கு வழங்கப்பட்டது.

மஹிந்தவின் வரவுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாக ம.தி.மு.க. தலைவர் வை.கோ தலைமையில் மத்திய பிரதேசம் நோக்கி பஸ்களில் புறப்பட்ட ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொண்டர்கள் மகாரஷ்ரா மாநில எல்லையில் தடுத்து நிறுத்தப்படவே அவர்கள் அங்கேயே தங்கள் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்து விட்டனர்.

> இலங்கை ஜனாதிபதியின் இந்தப் பயணத்தை அனுமதித்த இந்திய அரசின் செயல், தமிழக மக்களின் உணர்வுகளை படுமோசமான முறையில் அவமானப் படுத்தி விட்டதாக அமைகின்றது. மஹிந்த ராஜபக்ஷவைப் பொறுத்தவரையில் ஒரு சாதகமான விளைவையும் இந்திய மத்திய அரசைப் பொறுத்தவரையில் பாதகமான விளைவுகளையுமே ஏற்படுத்தியுள்ளது

**ஞாயிறு காரம்**

இலங்கைக்கு வந்து விருந்துண்டு களித்துவிட்டு தமிழர் சிங்களப் பகுதிகளிலும் சிங்களவர், தமிழ்ப் பகுதிகளிலும் குடியேறினால் இலங்கையின் இனப்பிரச்சினை தீர்ந்துவிடும் என்ற அரிய கண்டுபிடிப்பைச் சொல்லிச் சென்ற ஜனதா கட்சித் தலைவர் சுப்பிரமணிய சுவாமி மஹிந்த ராஜபக்ஷ முப்பது வருடங்கள் நிலவிய பயங்கரவாதத்தை ஒழித்த வீரபுருஷர் எனவும் அவருக்கு இந்தியாவின் பாரதரத்னா விருது வழங்கப்பட வேண்டும் எனவும் பரிந்துரை செய்தார். மஹிந்த 30 நாள்களுக்குள் நாற்பதினாயிரம் தமிழ் மக்களைக் கொன்று சாதனையீட்டிய வீரபுருஷர் என்பதை ஏன் சொல்ல மறந்தாரோ தெரியவில்லை.

அரசியலில் கோமாளிகள் நிறையவே உண்டு. ஆனால் நயவஞ்சகக் கோமாளி என்றால் இவரை விட வேறு நபர்களைத் தேடிப்பிடிப்பது வெகுசிரமம்.

ஆனால் தமிழகம் உட்பட இந்தியா முழுவதுமுள்ள 100 கோடி மக்களுக்குத் தலைமை தாங்கக் கூடிய இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் வெளியிட்ட கருத்துக்களை எவரும் அப்படி அலட்சியப்படுத்திவிட முடியாது. அவர் ஆங்காங்கே சில அசம்பாவிதங்கள் நடந்தாலும் இலங்கை இந்திய உறவு எப்போதும் இறுக்கமாகவே இருக்கும் எனத் தெரிவித்துள்ளார்.

இந்தியப் பிரதமர் தமிழ் நாட்டு மக்களின் உணர்வுகளை எவ்வளவு தூரம் அலட்சியப் படுத்துகிறார் என்பது மட்டுமா அவமானப்படுத்துகிறார் என்பதற்கும் ஒரு நல்ல உதாரணமாகும். தமிழகம் பரந்த எதிர்ப்புணர்வு சில அசம்பாவிதங்கள் எந்தளவுக்கு நிலை தாழ்த்தப்பட்டுள்ளது என்பதை நாம் கவனத்தில் எடுக்காமல் விட முடியாது.

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் இந்தப் பயணம் ஒரு அடிக்கல் நடும் விழா தொடர்பானது எனக் கூறப்பட்டபோதிலும் இதன் விளைபலன்களை எவ்விதத்திலும் குறைத்து மதிப்பிட்டு விடமுடியாது.

இது மஹிந்த ராஜபக்ஷவைப் பொறுத்தவரையில் ஒரு சாதகமான விளைவையும் இந்திய மத்திய அரசைப் பொறுத்தவரையில் பாதகமான விளைவுகளையுமே ஏற்படுத்தியுள்ளது. அண்மையில் இடம்பெற்ற சீன இராணுவத் தளபதியும் உயர் மட்ட அரச பிரதிநிதியும் அவருடைய கூட்டத்தினரும் இலங்கைக்குப் பயணம் செய்து பல்வேறு இராணுவ முகாம்களுக்கும் சென்று கலந்துரையாடல்களை நடத்தியமை பிரதான அரசியல் பீடமான மக்கள் காங்கிரஸ் தலைவர் பயணம் செய்து இங்குள்ள அரசியல்வாதிகளுடன் கலந்துரையாடியமை போன்ற விடயங்கள் இலங்கையின் போக்கு தொடர்பாக இந்தியாவுக்குச் சில சந்தேகங்களை ஏற்படுத்தியமை தவிர்க்க முடியாதது. அது மட்டுமன்றி இலங்கையர் ஒருவர் இந்தியாவில் இலங்கை இராணுவத்தினர் பயிற்சி பெறும் வெலிங்டன் படை முகாம் உட்பட பல இராணுவத் தகவல்களுடன் பிடிபட்டமையும் அவர் அந்தப் படங்களை இலங்கையில் உள்ள பாகிஸ்தான் தூதுவராலயத்தில் பணிபுரியும் இருவருக்கு வழங்கவே எடுத்தார் எனவும் இந்திய உளவு நிறுவனமான றோ ஒரு கருத்தை வெளியிட்டிருந்தது. இது இந்தியாவுக்கு இலங்கை மூலமாக ஆபத்து ஏற்படக் கூடும் என்ற ஒரு தோற்றப்பாட்டை ஏற்படுத்தியிருந்தது.

இதன் காரணமாக எழக்கூடிய சந்தேகங்களையும் நெருடல்களையும் சமாளிக்கவும் இலங்கை இந்திய உறவுகள் இன்னும் நெருக்கமாய் உள்ளன என்ற தோற்றப்பாட்டை ஏற்படுத்தவும் இந்தப் பயணத்தை மஹிந்த பயன்படுத்திக் கொண்டார்.

அதுமட்டுமன்றி மீள்குடியேற்றம், அபிவிருத்தி, வடமாகாணத் தேர்தல் எனச் சில விடயங்கள் தொடர்பாகச் சில கருத்துக்களைக் கூறி இந்தியாவைத் திருப்திப்படுத்த முயன்றுள்ளார். அதுமட்டுமன்றி கிழக்கு மாகாணத் தேர்தலை வைத்துக் கொண்டு கிழக்கு மக்கள் தனது பக்கமே எனவும் தெரிவித்துள்ளார்.

அதாவது இலங்கை, இந்திய விவகாரங்கள் தொடர்பாக இந்திய ராஜதந்திர மட்டத்தில் சில கேள்விகளை எழுப்புவதற்கு முன்பாகவே அவர் வெற்றிகரமாக அவற்றைச் சமாளித்துவிட்டார்.

அதேவேளையில் காவிரி நீர்ப்பிரச்சினை, கூடங்குளம் அணுமின் நிலையம் போன்ற விடயங்களில் தமிழகத்தின் எதிர்ப்பையும் நம்பிக்கையீனத்தையும் சம்பாதித்துள்ள இந்திய மத்திய அரசு தமிழகத்தின் ஒட்டுமொத்த வெறுப்புக்கு மஹிந்த பயணம் மூலம் உள்ளாகியுள்ளது.

ஏற்கனவே ஊழல், மோசடி, டீசல் விலை உயர்வு, சில்லறை வர்த்தகத்தை வெளிநாட்டு நிறுவனங்களுக்கு வழங்கல் போன்ற விடயங்களால் மக்களின் பெரும் எதிர்ப்பையும் சந்தித்துவரும் இந்திய மத்திய அரசு, இப்போது தமிழகத்தின் எதிர்ப்பின் மூலம் பெரும் நெருக்கடியைச் சந்தித்துள்ளது.

எப்படியிருப்பினும் இலங்கை ஜனாதிபதியைப் பொறுத்தவரை இந்தப் பயணம் ஒரு தற்காப்புக் கவசமாக அவருக்குச் சாதகமான ஒரு நிலைமையை உருவாக்கியுள்ளது. இந்திய மத்திய அரசுக்கோ இது மேலும் மேலும் நெருக்கடிகளையே பரிசாக வழங்கியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நா.குழுவினர் கிளப்பிய சந்தேகம்

ஐ.நா. குழுவினர் வடக்கு உட்பட பல பகுதிகளுக்கும் ஒரு வாரகாலப் பயணத்தை மேற்கொண்டிருந்தனர். இவர்களது வருகை ஆரம்பத்திலிருந்தே சர்ச்சைகளுக்கு வித்திட்டிருந்தது. சிங்களப் பேரினவாத அமைச்சர்கள் இவர்களை இலங்கை வருவதற்கு அனுமதிக்கக் கூடாது என்று கூக்குரலிட்டனர்.

■ உசிலமணி

தமிழீழ விடுதலைப் புலிகள் தாயகத்தில் அழிக்கப்பட்டதாக இலங்கை அரசு அறிவித்த பின்னர், தமிழ் மக்களுக்கு இருக்கின்ற ஏகோபித்த நம்பிக்கை சர்வதேசம்தான்.

சர்வதேசம் எமது பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கும், எமக்கான விடுதலையை சர்வதேச சமூகம் பெற்றுத்தரும் என்று தமிழர்கள் இப்போது நம்ப ஆரம்பித்திருக்கிறார்கள். போர்க் குற்ற விசாரணைகள் முதல் கொண்டு இலங்கை அரசுக்கு எதிராக ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வரையில் நடந்த எல்லாமே சர்வதேசத் தலையீட்டுக்கான அறிகுறிகளே என்று தமிழர்கள் நம்புகிறார்கள்.

அதனால்தான் எந்தவொரு இராஜதந்திரிகளும் இலங்கைக்கோ அல்லது தாயகப் பிரதேசங்களுக்கோ வருகை தரும்போதும் மக்களின் எதிர்பார்ப்புகள் அதிகரிக்கின்றன.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளர் நாயகம் நவநீதம்பிள்ளையின் அலுவலக அதிகாரிகள் இலங்கை வந்திருந்த போதும் தமிழ் மக்களிடம் இந்த வகையிலான எதிர்பார்ப்பு மேலோங்கி இருந்ததைக் காணமுடிந்தது.

ஐ.நா. குழுவினர் வடக்கு உட்பட பல பகுதிகளுக்கும் ஒரு வாரகாலப் பயணத்தை மேற்கொண்டிருந்தனர். இவர்களது வருகை ஆரம்பத்திலிருந்தே சர்ச்சைகளுக்கு வித்திட்டிருந்தது. சிங்களப் பேரினவாத அமைச்சர்கள் இவர்களை இலங்கை வருவதற்கு அனுமதிக்கக் கூடாது என்று கூக்குரலிட்டனர்.

சிங்களப் பேரினவாதிகள் கூக்குரலிடுவதால் ஐ.நா. அதிகாரிகள் எங்களுக்குச் சார்பாக எதையோ செய்யப் போகின்றனர் என்று தமிழ் மக்களும் நம்பியிருந்தனர்.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தின் ஆசிய பசுபிக், மத்திய கிழக்கு வட அமெரிக்க பிரிவுக்குப் பொறுப்பான அதிகாரியான ஹன்னி மெஹாலி மற்றும் சட்டத்தின் ஆட்சி, ஜனநாயகத் தெரிவுக்கான மனித உரிமைகள் அதிகாரி ஒஸ்கார் சோலர்ஸ் ஆகியோர் உள்ளடங்கிய 4 பேர் கொண்ட குழு கடந்த 14 ஆம் திகதி இலங்கைக்கு வந்தது.

இந்தக் குழு வந்ததன் நோக்கம் பலதரப்பட்டவர்களால் பலவாறாக சித்திரிப்புக்குள்ளாகியிருந்தது. இருந்தும் நவநீதம்பிள்ளையின் இலங்கை வருகைக்கு முன்பதாக இங்குள்ள களநிலைமைகளை அறிந்து செல்வதற்காகவே தாம் இங்கு வந்தோம் என்று ஐ.நா. குழுவினர் யாழ். ஆயரிடம் தெரிவித்திருக்கின்றனர். ஆனாலும் இலங்கையில் அதிலும் குறிப்பாக ஈழத் தமிழர்களின் தனிமனித பாதுகாப்பு, தனிமனித உரிமைகள் தொடர்பில் ஆய்வு செய்வதற்கே அவர்கள் வந்தனர் என்று கூறப்படுகின்றது.

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை நடைமுறைப்படுத்தல் மற்றும் மீளக்குடியமர்ந்த மக்களின் தேவைகள் போன்றவற்றை ஆராய்வதும் ஐ.நா. குழுவினது பயணத்தில் உள்வாங்கப்பட்டிருந்தது.

இலங்கையில் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க, பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ ஆகியோரையும் தமிழர் தரப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரையும், முஸ்லிம் அமைச்சர் ரவூப் ஹக்கீமையும் ஐ.நா. குழுவினர் சந்தித்துக் கலந்துரையாடினர்.

ஆனால் அவர்களது வடக்கு வருகையின் பின்னர் தமிழ் மக்கள் மத்தியில் ஐ.நாவின் எதிர்கால செயற்பாடுகள் எப்படிப்பட்டதாக இருக்கும் என்பது தொடர்பில் சந்தேகம் எழுந்துள்ளது. இதற்கான முக்கிய காரணம் தற்போது வந்து சென்றுள்ள ஐ.நா. அதிகாரிகள் இலங்கைப் பாதுகாப்பு அமைச்சின் நிகழ்ச்சி நிரலின் கீழ் இயங்கியமையாகும்.

வடபகுதிக்கு வந்த ஐ.நா. குழுவினர் இலங்கை அரசின் ஏற்பாட்டில் விசேட விமானம் மூலமே வந்தனர். அத்துடன் ஐ.நா. குழுவினது நிகழ்ச்சி நிரல் முழுக்க முழுக்க இலங்கை அரசினால் அதுவும் பாதுகாப்பு அமைச்சினாலேயே தயாரிக்கப்பட்டிருந்தது. அவர்களது சந்திப்புக்கள் சுயாதீனமாகத் திட்டமிடப்பட்டனவா என்பதை உறுதிப்படுத்த முடியவில்லை. ஆனால் அவர்கள் எங்கெல்லாம் சென்றார்களோ அங்கெல்லாம் பாதுகாப்பு அமைச்சின் மூலமேஏற்பாடுகள்செய்யப்பட்டிருந்தன.

ஐ.நா. தனது உறுப்பு நாடு என்ற அடிப்படையில் இலங்கைக்குக் குழுவை அனுப்பியிருந்தது. உறுப்பு நாட்டினது ஏற்பாட்டிலேயே நாட்டினுள் செயற்பட வேண்டும் என்பது நடைமுறையாக இருப்பதால் இலங்கை அரசு தயாரித்த நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் அவர்கள் இயங்கியிருக்கலாம். அமைச்சர் பாலித ஹோகன்னவும், ஐ.நா. குழு இலங்கை அரசு கேட்டுக்கொண்டதற்கு இணங்கவே வருகை தந்ததாகத் தெரிவித்திருந்தார்.

இவர்கள் நேரடியாக வடபகுதிக்கு வருகை தந்து நிலைமைகளை அறிவதை நோக்கமாகக் கொண்டிருந்த போதும் அரசின் நிகழ்ச்சி நிரலுக்கு அமைவாக அவர்களால் அழைத்துச் செல்லப்பட்டதால் மக்களை நேரடியாகச் சந்திப்பதற்கு வாய்ப்புகள் வழங்கப்படவில்லை. யாழ். ஆயர் தவிர்ந்த எல்லாச் சந்திப்புக்களும் அரச அதிகாரிகளுடனானவையாகவே இருந்தன.

மீளக்குடியமர்த்தப்பட்ட மக்களைச் சந்திக்கும் வகையில் அரியாலை நாவலடியில் இந்திய வீட்டுத் திட்டம் வழங்கப்பட்ட பகுதிக்கு ஐ.நா. அதிகாரிகளை அரசின் அதிகாரிகள் அழைத்துச் சென்றனர். யாழ்ப்பாணத்துக்கு அரசின் நிகழ்சி நிரலில் வருகின்ற சகல சர்வதேச இராஜதந்திரிகளுக்கும் இந்த இடத்தை அழைத்துச் சென்று காட்டுவதை அரச அதிகாரிகள் வழக்கமாக்கிக் கொண்டுள்ளனர். ஏனெனில் மீளக்குடியமர்ந்த மக்களுக்கு ஓரளவு வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டிருப்பது இங்குதான்.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அதிகாரிகளையும் ஐ.நா. குழு சந்தித்திருந்தது. அந்தத் தினத்தில் ஆணைக்குழு காணமல் போனோர் தொடர்பிலான விசாரணைகளை நடத்திக் கொண்டிருந்தது. 2006ஆம் ஆண்டு காணாமல் போனவர்கள் தொடர்பில் கொழும்பிலிருந்து வருகை தந்த உயரதிகாரிகளினால் விசாரணை நடத்தப்பட்டது. இது முன்கூட்டியே திட்டமிடப்பட்டதா அல்லது எதேச்சையாக நடைபெற்றதா என்பதைத் தெளிவுபடுத்த முடியவில்லை.

இதனைவிட யாழ். பிராந்திய மனித உரிமை ஆணைக்குழுவினருடனான சந்திப்புக்களை முடித்து விட்டு வெளியே வந்த ஐ.நா. குழுவினரிடம், காணாமல்போனோர் தொடர்பிலான விசாரணைக்கு வந்திருந்த மக்கள் தமது பிள்ளைகளை மீட்டுத்தருமாறு கேட்டுக் கெஞ்சினர்.

குழுவில் இருந்த ஓர் அதிகாரி மாத்திரம் அந்த மக்களது பிரச்சினைகளை என்னவென்று கேட்டார். மக்கள் தமிழில் தெரிவித்ததால் அவருக்குப் புரியவில்லை. அதனால் மொழி பெயர்த்து தரும்படி அருகிலிருந்த ஆணைக்குழுவின் அதிகாரிகளைக் கேட்டனர். அவர்கள் மக்கள் தமது பிள்ளைகளை மீட்டுத்தருமாறு கெஞ்சுவதை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துச் சொல்ல, மக்களைச் சந்திப்பதற்கு தங்களுக்கு நேரம் ஒதுக்கப்படவில்லை என்று ஐ.நா. குழுவினர் கூறிவிட்டனர்.

''உங்களின் பிரச்சினைகள் விளங்குகின்றன. இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் விசாரணையில் நம்பிக்கையில்லாவிட்டால் காணமல்போனோர் தொடர்பிலான ஐ.நா. குழுவின் இணையத்தளம் ஊடாகத் தொடர்பு கொள்ளலாம்'' எனத் தெரிவித்து விட்டு அவரும் சென்று விட்டார்.

இவற்றுக்குப் பின்னரே ஐ.நா. அதிகாரிகள் செயற்படப்போகும் விதங்கள் குறித்து மக்கள் சந்தேகங்களைக் கிளப்பத் தொடங்கியுள்ளார்கள். ஏனெனில், பொதுமக்களைச் சந்திக்க நேரம் ஒதுக்காத ஐ.நா. குழுவினர் இராணுவத்தைச் சந்தித்துப் பேசுவதற்கு நேரம் ஒதுக்கியுள்ளனர்.

இராணுவத்தின் வடக்குக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ஹத்துருசிங்கவை அவர்கள் சந்தித்துக் கலந்துரையாடி இருந்தனர். வன்னியிலும் அவர்கள் இராணுவத்தினருடன் சந்திப்புக்களை நடத்தியிருந்தனர்.

ஐ.நா. குழுவினர், போர் நடைபெற்ற முள்ளிவாய்க்கால், ஆனந்தபுரம் பகுதிகளை பார்வையிட்டுச் சென்றுள்ளனர் என்பது ஆறுதலான விடயமாக இருந்தாலும் அங்கும் மக்களை சந்திக்கவில்லை என்பது நெருடலாகவே இருக்கின்றது.

இங்கு ஐ.நா. குழுவினர் சந்தித்துப் பேசியவர்களில் அரச தரப்பினரையும் இராணுவத்தினரையும் தவிர்ந்த மற்றெல்லோரும், அரசின் தற்போதைய நடவடிக்கைகளுக்கு எதிரான காத்திரமான கருத்துக்களையே தெரிவித்திருந்தனர் என்று அறியமுடிகிறது.

ஐ.நா குழுவினரைச் சந்தித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுகையில், ஐ.நா. குழுவினர் மக்களைச் சந்திக்காது தனியே அரசின் நிரலில் செயற்பட்டிருக்கின்றனர் என்பதைச் சுட்டிக்காட்டி அது தமக்கு ஏமாற்றமளித்திருக்கிறது என்று கூறியிருக்கிறது.

வந்து சென்ற ஐ.நா. குழுவினது அதிகாரம் மட்டுப்படுத்தப்பட்ட தொன்றே. ஆனால் தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் எல்லாமே சர்வதேசம் என்று நம்பும் சூழ்நிலையில் இலங்கை வந்து சென்ற ஐ.நா. குழுவின் நடவடிக்கை அவர்களுக்கு ஏமாற்றமளித்துள்ளது. இலங்கை அரசுடன் முரண்படாமல் அவர்களுடனேயே வந்து தமக்குத் தேவையான தகவல்களைத் திரட்டி உண்மை நிலைமையைச் சொல்லுவார்களா? அல்லது உண்மையாக நடந்து கொள்வார்களா என்பதை அறிவதில் மக்கள் ஆர்வமாக இருக்கிறார்கள்.

# திருத்தி எழுதிய தீர்ப்பு

■ லோ.துஷிகரன்

நாட்டை ஆளும் தலைவர்களும் அரசர்களும் பொதுவாக நீதிவழியில் நின்று ஆட்சி செய்ததனால் அவர்களை நாயகர்களாக இலக்கியங்கள் ஏற்றிப் பாடியுள்ளன. என்றாலும் நாட்டின் தலைவர்கள் என்ன செய்தாலும் அங்கு பணியாற்றுகின்ற அரச உத்தியோகத்தர்கள் அரசனின் கட்டளைக்கு தலைவணங்கி கீழ்ப்படிந்து இருந்தே ஆகவேண்டும். அது நீதியான செயல் என்றாலும் சரி, அநீதியான செயல் என்றாலும் சரி, மக்களும் நாட்டுத் தலைவனின் கட்டளைக்கு உட்பட்டே தீரவேண்டும். இன்றைய ஆட்சியும் விதிவிலக்கல்ல. அதனாலே தான் ''வல்லான் வகுத்து வாய்க்கால்'' என்றார்கள்.

ஆனால் சில கவிஞர்கள் வாய்க்கால் வகுத்த தலைவனைச் சுட்டிக் காட்டக் கூடியதாக இலக்கியம் படைத்துப் புரட்சிகரமானவர்களாகவும் இருந்தனர். அப்படிப்பட்ட ஒரு கவிஞனாக இளங்கோவினைப் பார்க்கலாம்.

அரசியின் சிலம்பை திருடியவன் கோவலன் என நினைத்து கோவலனுக்கு பாண்டியன் நெடுஞ்செழியன் மரணதண்டனை வழங்கிவிட்டான். இதனை அறிந்த கண்ணகி மதுரை வந்து அழுது அலைந்து நீதி கேட்டுப் புலம்பித் திரிந்தாள். இறுதியில் பாண்டியன் அரண்மனைக்கு வந்து வாதாடினாள். தனது கணவன் கோவலன் கள்வனல்ல என்ற நீதியை நிலைநாட்டி உண்மையை உலகறியச் செய்ய அவள் மேற்கொண்ட போராட்டம் மிகவும் சிறப்பானது.

அரச பரம்பரையைச் சாராத ஒரு சாதாரண பெண்ணாகிய கண்ணகி தலைநகர் மதுரை வந்து நீதியை நிலைநாட்டி பாண்டியன் நெடுஞ்செழியனுடன் அரச சபையில் வைத்து வாதாடும் காட்சியைப் படைத்த இளங்கோவின் பார்வை சிறப்பானது. இவளை தமிழரின் முதல் பெண் வக்கீல் எனலாம். ஒரு புரட்சிப் பெண்ணாக மாறிய கண்ணகி ஈற்றில் சிலம்பை உடைத்தெறிகிறாள். அரசியின் சிலம்பினுள் இருந்தவை முத்து, ஆனால் கண்ணகியின் சிலம்பினுள் இருந்த பரல்கள், மாணிக்கம். கண்ணகியின் உடைப்பட்ட சிலம்பினுள் இருந்த மாணிக்கங்கள் சிதறி விழுந்து மன்னன் பாண்டியன் வாயில் பட்டுத் தெறித்தன.

**''கண்ணகி அண்மணிக் காற்சிலம் புடைப்ப**
**மன்னவன் வாய்முதல் தெறித்தது மணியே மணிகண்டு''**

என இளங்கோ பாடினான். இந்த அரண்மனை புரட்சியைக் கண்ட புரட்சிக் கவிஞன் பாரதி

''நெஞ்சை அள்ளும் சிலப் பதிகாரமென்றோர் மணியாரும் படைத்த தமிழ் நாடும்''

என்று பாடினான். இப்படியான நீதிக்கான போராட்டமும் புரட்சிப் பெண்ணும் நாட்டுக்குத் தேவையென பாரதி கனவு கண்டிருந்த காலம் அது.

தெறித்த மாணிக்கங்கள் கோவலன் கள்வன் அல்ல என்பதைத் தெரிவித்து மன்னன் வாயில் பட்டு விழுந்தன. தனது தீர்ப்புத் தவறிவிட்டது என்பதை அறிந்த மன்னனின் வாய் பதறி உளறத் தொடங்குகிறது.

**''பொன் செய் கொல்லன் தன்சொல் கேட்ட யானோ அரசன்? யானே கள்வன்**
**மன்பதை காக்கும் தென்புலங்காவல்**
**என்முதல் பிழைத்தது கெடுக என் ஆயுள்''**

என்று மன்னன் தனது தீர்ப்புக்குக் கூறுவது சிறப்பானது. தமது தீர்ப்பை சரியென நிலைநாட்ட என்னவும் செய்யத் துணியும் நாட்டுத் தலைவர்களுக்கும் இளங்கோ கூறும் காட்சி உன்னத வழிகாட்டலாகக் காணப்படுகிறது. பாண்டியன் கூறும் ஒவ்வொரு வரியினுள்ளும் மறைமுக வேறொரு பொருளும் மறைந்து கிடக்கிறது.

பொன் செய் கொல்லன் தன் சொல் கேட்டேன்'' என்பது பாண்டியன் கூறும் முதலாவது கூற்று. இதனுள் அதன் மந்திரியினதும் அரச சபையினரதும் ஆலோசனைச் சொற்களைக் கேட்கத் தவறிவிட்டேன் என மறைமுகமாகக் கூறும் கருத்தும் உள்ளது. எனவே அரசன் முதலாவது கூற்றினுள் தனது முதலாவது தவறினை நீதியின் முன் வைக்கிறான்.

அடுத்தது ''யானோ அரசன்''? என்று இரண்டாவது கூற்றை முன்வைக்கின்றான். இதனூடாக தான் அரச பதவிக்குத் தகுதி அற்றவன் என்பதைக் கூறுகின்றான் எனவே செங்கோல் ஆட்சியைத் தவறிய மன்னன் அரியணையை அலங்கரிக்கத் தகுதி அற்றவன். எனவே பாண்டியன் தனது பதவியை ''இராஜினாமா'' செய்கிறான்.

''யானே கள்வன்'' என அடுத்ததாகக் கூறுகின்றான் இதிலிருந்து தான் கள்வன் என்று கூறுவதன் ஊடாக அந்தப் பிழையை முற்றுமுழுதாகத் தனிமனிதனாகத் தானே ஏற்றுக் கொள்கின்றான். அத்துடன் கோவலன் கள்வன் அல்ல என்பதையும் மறைமுகமாகக் கூறி, கோவலனை வழக்கில் இருந்து விடுவிக்கிறான்.

அடுத்தது ''கெடுக என் ஆயுள்'' என இறுதித் தீர்ப்பைத் திருந்தக் கூறுகின்றான். கோவலன் கள்வன் அல்ல என்பதால் தான் கோவலனுக்கு தண்டனை கொடுத்தது தவறு என்பதை மன்னன் உணர்க்கிறான். அதுவும் மரணதண்டனை கொடுத்தலே அதற்குப் பரிகாரமான தீர்ப்பாக ''உயிருக்கு உயிர்'' என்ற அடிப்படையில் தீர்ப்பளித்த தனக்கே மரணதண்டனைத் தீர்ப்பைக் கூறினான், வீழ்ந்தான், இறந்தான்.

அரசன் முறையான நீதிபதியாக இருந்து தான் விட்ட தவறுக்குத் தனக்கே தீர்ப்புக் கூறிய நீதிமன்ற நீதிபதி உலகிலே வேறெங்கும் காணமுடியாது. இந்தத் தமிழ் நீதிமன்ற நீதிபதியைப் படைத்த இளங்கோ போற்றுதற்கு உரியவனே. இன்றய நீதி மன்றங்களிலே இப்படிப்பட்ட நீதிபதிகள் தமது ஆசனங்களை அலங்கரிப்பார்களானால் நீதி நீடு வாழும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வசைத்தமிழ் வல்லவர் கருணாநிதி

பழநெடுமாறன்



"சகோதரச் சண்டையால் தான் ஈழத்தில் தோல்வியும் அழிவும் ஏற்பட்டது" என்ற பொய்யை திரும்பத் திரும்ப கருணாநிதி கூறி வருவதைக் கண்டித்து நான் எழுதிய கட்டுரை அவரைப் படாதபாடு படுத்திவிட்டது. உண்மை சுட்டது தான் அதற்குக் காரணம். அதற்குப் பதிலளித்து தனது 'முரசொலி' இதழிலும் பொதுக் கூட்டங்களிலும் கடந்த சில நாள்களாக எனக்குப் பதில் சொல்வதில் தொடர்ந்து ஈடுபட்டிருக்கிறார் கருணாநிதி.

"தி.மு.க.வையும் அதன் தலைவராகிய என்னையும் பாலகாண்டம் முதல் யுத்தகாண்டம் வரை பழிப்பதும் இழித்துப் பேசுவது தவிர வேறு எதையும் கற்றதுமில்லை, கடைப்பிடித்ததுமில்லை. புலிகளுக்கிடையே சகோதரச் சண்டை தூண்டிவிடப்பட்டதற்கும் அதனால் தளபதிகளும் மாவீரர்களும் உயிரிழந்து அந்தப் போரில் பின்னடைவு ஏற்பட்டதற்கும் நெடுமாறன் கும்பல் அங்கும் இங்கும் தூண்டிவிட்டு வேடிக்கை பார்த்ததுதான் காரணம் என்பதை நடுநிலையாளர்கள் நன்கு அறிவார்கள்" எனப் புலம்பியிருக்கிறார் கருணாநிதி.

விடுதலைப் புலிகளும் அவர்களின் தலைவர் பிரபாகரனும் யாருடைய தூண்டுதலின்படியும் செயல்படுபவர்கள் அல்லர். உலகத்தின் மிகச் சிறந்த விடுதலை இயக்கத்தை இவ்வாறு கூறுவது அதைக் கொச்சைப்படுத்துவதாகும். கருணாநிதியால் பேணி வளர்க் கப்பட்ட 'ரெலோ' போன்ற இயக்கங்கள்தான் இந்திய 'றோ' உளவுத்துறையின் தூண்டுதலுக்கு இரையாகி அழிந்தன.

## யார் தொடக்கிய சண்டை?

திம்பு மாநாட்டில் போராளிகள் ஒற்றுமையாக இருந்து முன்வைத்த கோரிக்கையின் விளைவாக ஆத்திரமடைந்த 'றோ' உளவுத்துறை இந்த ஒற்றுமையை சீர்குலைக்கும் வேலைகளை மேற்கொண்டது என்பதையும் அதன் விளைவாகப் போராளிகளுக்கிடையே மோதல் எப்படித் தூண்டிவிடப்பட்டது என்பதையும் எனது முன்னைய கட்டுரையில் ஆதாரபூர்வமாக கூறியிருந்தேன்.

இந்திய அமைதிப்படையின் தளபதி மேஜர் ஜெனரல் ஹர்கிரத்சிங் 'றோ' உளவுத்துறை குறித்து எழுப்பிய குற்றச்சாட்டினையும் 'றோ' உளவுத்துறையின் தலைவராக இருந்த ஏ.கே.வர்மா பிற்காலத்தில் வெளியிட்ட உண்மைகளையும் எடுத்துக் காட்டியிருந்தேன்.

தமிழக சட்டமன்றத்தில் அப்போது முதலமைச்சராக இருந்த கருணாநிதி 'றோ' உளவுத்துறைதான் போராளிக் குழுக்களைப் பிளவுப்படுத்தியது எனப் பகிரங்கமாகக் குற்றம்சாட்டியதையும் சுட்டிகாட்டியிருந்தேன். மேற்கண்ட ஆதாரபூர்வமான தகவல்கள் எதற்கும் அவர் எவ்விதப் பதிலையும் கூறவில்லை. என்மீது வசைமாரி பொழிவதில் ஈடுபட்டிருக்கிறார்.

தி.மு.க. தலைவர் கருணாநிதி வெளியிட்ட நீண்ட அறிக்கையில் எனக்குப் பதில் சொல்வதாக நினைத்துக் கொண்டு மீண்டும் மீண்டும் பொய்யானதும் முன்னுக்குப்பின் முரணானதுமான விவரங்களையே தந்துள்ளார்.

இலங்கையில் போர் மும்முரமாக நடந்தபோது அங்கு உடனடியாகப் போர் நிறுத்தம் கொண்டுவர மத்திய அரசை நடத்தும் கூட்டணியில் அங்கம் வகிக்கும் முக்கியத் தலைவரான கருணாநிதி அதில் அடியோடு தவறிவிட்டார் என்பது என்னுடைய மற்றொரு குற்றச்சாட்டாகும். அதற்குப் பதில் அளிக்கும் வகையில் "மத்திய அரசை மீறி ஒரு மாநில அரசு எந்த அளவுக்கு இது போன்ற பிரச்சினைகளில் தீர்வு காணமுடியும் என்பதில் அரசியல் அதிகார வரம்புகளைப் பற்றி தெளிவான அறிவு படைத்தவர்கள்தான் உணர முடியும்" என்று கூறியுள்ளார்.

ஐந்து முறை முதலமைச்சராக இருந்த ஒருவருக்கு அதிலும் மத்தியில் ஆளுங் கட்சி எதுவோ அதனுடன் எப்போதும் இணைந்து செல்லக் கூடியவருக்கு பிற மாநில முதல்வர்கள் இதுபோன்ற கட்டங்களில் எப்படி நடந்துகொண்டார்கள் என்பது நன்கு தெரிந்திருந்தபோதிலும் அதை மறைப்பதற்கு முயற்சி செய்திருக்கிறார்.

மேற்கு வங்கத்தின் முதலமைச்சராக இருந்த ஜோதிபாசு வங்கதேசத்துடன் நீண்ட நாள்களாக தீர்க்கப்படாமலிருந்த அணைக்கட்டுப் பிரச்சினை குறித்து பேசுவதற்காக டாக்கா சென்று அந்த நாட்டின் பிரதமரைச் சந்தித்துப் பேசி ஒரு சமரசத் தீர்வைக் கண்டார். ஆனால் மாநில முதலமைச்சர் என்ற முறையில் வெளிநாடு ஒன்றின் பிரதமருடன் அவர் உடன்பாடு செய்ய முடியாது. எனவே புதுடில்லி திரும்பி அப்போது பிரதமராக இருந்த தேவகவுடே அவர்களைச் சந்தித்து "இது எங்கள் வங்க மக்களின் பிரச்சினை. இதற்கு இப்படித்தான் தீர்வு காண வேண்டும்" என்று வற்புறுத்தி அவரை வங்க தேசத்துடன் உடன்பாடு செய்ய வைத்தார். இது வரலாறு. ஆனால், ஈழத் தமிழர் பிரச்சினையில் தமிழக அரசு என்ன சொல்கிறதோ அப்படித்தான் இந்திய அரசும் செயற்படவேண்டும் என வற்புறுத்துகிற துணிவோ அல்லது மனமோ கருணாநிதிக்கு இல்லாமல் போனது.

மத்திய அரசு ஈழத் தமிழர் பிரச்சினையில் என்ன நிலைப்பாடு எடுக்கிறதோ அதுதான் எனது நிலைப்பாடு என ஒரு முறையல்ல பல முறை திரும்பத் திரும்பச் சொன்னவர் கருணாநிதி.

இலங்கையில் போர் நிறுத்தம் செய்வதற்கான உடனடி நடவடிக்கைகளை மேற் கொள்ளுமாறு பிரதமரையும், பிரணாப் முகர்ஜியையும் தான் வலியுறுத்தியிருக்கிறார் என்று கருணாநிதி கூறினார். ஆனால் 18-2-2009 அன்று நாடாளுமன்றத்தில் வெளியுறவுத்துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி இலங்கை நிலைமை குறித்து அறிக்கை ஒன்றை அளித்தார். "அந்த அறிக்கையில் போர் நிறுத்தம் செய்யும்படி இலங்கை அரசை இந்தியா வற்புறுத்த முடியாது. ஆனால் இலங்கை அரசு அறிவித்திருக்கும் பாதுகாப்பு வலயங்களுக்கு மக்கள் செல்வார்களானால் அவர்களுக்கு உயிர்ப்பாதுகாப்பு கிடைக்கும்" என்று கூறினார்.

சிங்கள அரசின் இந்த வாக்குறுதியை நம்பிப் பாதுகாப்பு வலயத்திற்குள் வந்த மக்கள் மீது குண்டுகள் வீசப்பட்டு அவர்கள் படுகொலை செய்யப்பட்டனர். மருத்துவமனைகள் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டு அழிக்கப்பட்டுள்ளன. சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தை இலங்கை அரசு நாட்டைவிட்டு வெளியேற்றியுள்ளது. மேற்கண்டவை குறித்தெல்லாம் பிரணாப் முகர்ஜியின் அறிக்கையில் சிறு கண்டனம்கூடத் தெரிவிக்கப்படவில்லை. பிரணாப் முகர்ஜியின் அறிக்கையின் விளைவாக இலங்கையில் போர் நிறுத்தம் என்ற பேச்சிற்கே இடமில்லை என்று அறிவிக்கும் துணிவை ராஜபக்ஷ பெற்றார். ஆனால் தமிழக மக்களை ஏமாற்றுவதற்காக இந்திய அரசு போர் நிறுத்த முயற்சிகளில் ஈடுபட்டிருப்பதாக கருணாநிதி பொய்யான தகவல்களைத் திரும்பத் திரும்பக் கூறினார்.

இலங்கையில் போரை நிறுத்தப் போதிய நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்ற குற்றச்சாட்டுக்கு இதுவரை எந்தத் தலைவரும் கூறாத ஒரு பதிலை கருணாநிதி கூறியிருக்கிறார். "என் மீது புகார் காண்டம் படிக்கும் அந்தக் கூட்டத்தில் உள்ளவர்களை நான் கேட்கிறேன். உங்கள் வாதப்படி நான்தான் எதுவும் செய்யவில்லை. நீங்கள் அப்போது என்ன செய்து கிழித்தீர்கள்? சாகும் வரை உண்ணாவிரதம் என்று அறிவித்து விட்டு இலங்கைத் தமிழர்களுக்காக உயிரை விட்டிருக்க வேண்டியது தானே? அதை ஏன் நீங்கள் செய்யவில்லை?" எனக் கொந்தளிக்கிறார். கோபத்தில் அவர் நிதானம் இழந்திருப்பது நன்கு தெரிகிறது. "ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு" என்ற பழமொழிதான் நினைவிற்கு வருகிறது.

இலங்கைத் தமிழர்களுக்காகத் தங்களது இன்னுயிர்களை அர்ப்பணித்து தீயில் கருகி மாண்ட முத்துக்குமார் உட்பட 17 தமிழர்கள் தமிழ்நாட்டில் உன்னதமான உயிரைத் தியாகம் செய்தபோது, முதலமைச்சராக இருந்த கருணாநிதி, அவர்களின் தியாகத்தைக் கொச்சைப்படுத்தவே முனைந்தார். குடும்பப் பிரச்சினையின் காரணமாகவும் வேறு சொந்தப் பிரச்சினையின் காரணமாகவும் அவர்கள் தற்கொலை செய்துகொண்டார்கள் என இவரின் கீழ் பணியாற்றிய காவல்துறை அதிகாரிகள் அறிக்கைகள் வெளியிட்டார்கள். முதலமைச்சராக இருந்த இவர் அவற்றை ஒருபோதும் கண்டிக்கவில்லை. ஆனால் இப்போது இலங்கைத் தமிழர்களுக்காக உயிரை விட்டிருக்க வேண்டியது தானே எனக் கேட்கிறார். மனிதநேயம் உள்ள யாரும் இத்தகைய கேள்விகளை ஒருபோதும் எழுப்ப மாட்டார்கள்.

01-7-09 அன்று தமிழக சட்டமன்றத்தில் முதல்வர் கருணாநிதி கூறிய வார்த்தைகள் ஒட்டுமொத்த தமிழர்களையும் அதிர்ச்சியடைய வைத்தன.

"ஈழத் தமிழர்களின் வாழ்வாதாரத்தை பெருக்க வேண்டுமேயானால் சிங்கள அரசின் மூலமே அதைச் செய்ய முடியும். எனவே நம்முடைய பேச்சால், நம்முடைய நடவடிக்கையால் சிங்களவர்களுடைய கோபத்தை அதிகரிக்கும் வகையில் எதுவும் செய்துவிடக்கூடாது" என தமிழகத்தின் முதலமைச்சராக இருக்கக் கூடியவர் கூறினார். அதுமட்டுமல்ல, 'தமிழீழ' தனிநாடு இனி சாத்தியமானது அல்ல. சம உரிமையும் சம அதிகாரமும் கொடுக்குமாறு சிங்களரிடம் வேண்டிக் கொள்ள வேண்டும்" என்றும் ஆலோசனை வழங்கியிருக்கிறார்.

உலகத்தின் பலநாடுகள் ராஜபக்ஷ அரசின் மனித உரிமை மீறல்களை மிகக்கடுமையாகக் கண்டனம் செய்யும் கட்டத்தில் அவருக்கு வெண்சாமரம் வீசும் வேலையில் அப்போதைய தமிழக முதலமைச்சர் ஈடுபட்டது வெட்கக் கேடானதாகும்.

2009ஆம் ஆண்டு முள்ளிவாய்க்கால் பகுதியில் ஆயிரக்கணக்கான மக்கள் செத்து மடிந்து கொண்டிருந்தபோது 13-8-2009இல் இவர் என்ன கூறினார்? "இலங்கையில் இப்போது சுமூக நிலை ஏற்பட்டுவிட்ட பிறகும்கூட அந்தப் பிரச்சினையைக் கிளப்பிவிட்டுக்கொண்டிருப்பவர்களை எனக்குத் தெரியும்" எனக் கூறினார்.

ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் படுகொலை செய்யப்பட்டதை சுமூக நிலை என்று அவர் கருதினாரா? அல்லது மூன்று லட்சத்திற்கும் மேற்பட்ட தமிழர்கள் முள்வேலி முகாம்களுக்குள் முடக்கப்பட்டு போதுமான உணவு, மருந்து இல்லாமல் தினமும் 200 பேருக்கு மேல் செத்துக்கொண்டிருந்தார்களே அதை சுமூக நிலை என்று கருதினாரா? தமிழர் பகுதிகளில் சிங்களவரைக் குடியேற்றுவதை சுமூக நிலை என்று கருதினாரா? எது சுமூக நிலை? இவ்வளவு கொடுமைகள் இலங்கையில் நடந்து கொண்டிருக்கும்போது அதைக் கண்டித்து ஒரு வார்த்தை இதுவரை சொல்லாதவர்; இப்போது அங்கு சுமூக நிலை என்று கூறுவதன் மூலம் ராசபக்ஷ நடத்திவரும் அட்டூழியங்களை மறைப்பதற்குத் துணை நின்றார். ஆனால் இப்போது 'டெசோ' மாநாட்டில் ஈழத் தமிழர் நிலை மிக இரங்கத்தக்க நிலையில் இருப்பதாகப் பேசி முதலைக் கண்ணீர் வடித்தார்.

"காய்த்த மரம்தான் கல்லடி படும்" என்பது பழமொழி. "இலங்கையில் போர் நடைபெற்றபோது நான் எதுவும் செய்யவில்லையா? இதோ பட்டியல்" என்று கூறி அனைத்துக் கட்சிக் கூட்டம், மனிதச் சங்கிலி, சட்டமன்றத்தில் தீர்மானம், தி.மு.க. பொதுக்குழுவில் தீர்மானம், பேரணி, அடை அடைப்பும் வேலை நிறுத்தமும் என ஒரு நீண்ட பட்டியலையே அளித்திருக்கிறார்.

எதிர்க்கட்சிகள் செய்ய வேண்டியதை மாநிலத்தில் ஆளுங் கட்சியாகவும், மத்தியில் ஆளுகின்ற கூட்டணியில் அங்கம் வகிக்கிற கட்சியாகவும் இருக்கிற ஒரு கட்சி செய்வது சாதனையா என்ன? எதிர்க்கட்சிகளுக்கு வீதியிலே இறங்கி போராடுவதைத் தவிர வேறு வழியில்லை. ஆளுங்கட்சியினரும் அதே வேலையைச் செய்வது கேலிக் கூத்தாகும். மத்திய அமைச்சரவையில் இவர் மகன் உட்பட தி.மு.க. அமைச்சர்கள் பலர் இருக்கிறார்கள்.

இலங்கையில் போர் நிறுத்தத்தை வலியுறுத்தி அமைச்சரவையில் இவர்கள் போராடியிருந்திருக்க வேண்டும். அங்கு அதை செய்யாமல் முச்சந்தியில் நின்று முழங்குவது பிரச்சினையைத் தட்டிக் கழிப்பதாகும். மக்களை ஏமாற்றுவதாகும். அது மட்டுமல்ல, "மாநில அரசின் பொறுப்பில் இருந்து தி.மு.க. ஏன் விலக வில்லை என்று சிலர் கேட்கிறார்கள். நாங்கள் அப்போது பதவி விலகியிருந்தால் இலங்கை அரசு போரை நிறுத்தியிருக்குமா?" என்றும் கருணாநிதி கேள்வி எழுப்பியிருக்கிறார்.


அவரது நிலையைக் கண்டு பரிதாபப்படுகிறேன். பதவி மீதுள்ள அவரது அடங்காத ஆசை எல்லோருக்கும் தெரிந்ததே. ஆனாலும் ஒரு இனம் திட்டமிட்டு அழிக்கப்படும் போதுகூட பதவி நாற்காலியைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு வாதமிடும் ஒருவரை இப்போது தான் தமிழகம் பார்க்கிறது. பதவி விலகினாலும் எதுவும் நடக்காது எனக்கூறி உலகை ஏமாற்ற முற்படும் அவருக்கு ஒரு நிகழ்ச்சியை நினைவுபடுத்துகிறேன். ஒன்றுபட்ட பம்பாய் மாகாணத்தை மொழிவழியாக மராட்டியம், குஜராத் எனப் பிரிக்க மத்திய அரசு முடிவு செய்தது. பம்பாய் நகரத்தின் மீது இரு தரப்பும் உரிமை கொண்டாடியதால் இரண்டு மாகாணங்களுக்கும் பொதுவான தலைநகரமாகப் பம்பாய் இருக்கட்டும் என பிரதமர் நேரு அறிவித்தார். நேருவின் இந்த அறிவிப்பைக் கண்டு மராட்டிய மக்கள் கொதித்தெழுந்தார்கள். பெரும் போராட்டம் மூண்டது. அப்போது இராணுவத்தை ஏவி அந்தப் போராட்டத்தை ஒடுக்குவதற்கு முயற்சி நடைபெற்றது. இராணுவத் துப்பாக்கிச் சூட்டில் 300 இற்கு மேற்பட்ட மராட்டியர்கள் இறந்து போனார்கள். இந்தப் பதற்றமான சூழ்நிலையில் மத்திய நிதியமைச்சராக இருந்த சிந்தாமணி தேஷ்முக் பிறப்பால் மராட்டியர். எனவே அவரது மனச்சாட்சி அவரை உறுத்தியது. அவர் ஒன்றும் அரசியல்வாதி அல்லர். ரிசர்வ் வங்கியின் ஆளுநராக இருந்த அவரை நேரு நிதியமைச்சராக்கினார். நேருவின் மதிப்பையும் அன்பையும் ஒருங்கே பெற்றவராக இருந்தபோதிலும்கூட தனது மக்கள் சுட்டுக்கொல்லப்படுவதைக் கண்டு வேதனையடைந்தார். "மராட்டிய மக்களுக்கு பம்பாய் நகரம் சொந்தமானது. அதற்காகப் போராடும் எனது மக்களைக் கொன்று குவிப்பதைக் கண்டிக்கும் வகையில் எனது அமைச்சர் பதவியை விட்டு விலகுகிறேன்" எனக் கடிதம் எழுதக்கூடிய துணிவு அவருக்கு இருந்தது. நேரு தமது வாழ்நாளில் என்றும் அடையாத அதிர்ச்சியை அடைந்தார். தேஷ்முக்கின் பதவி விலகல் அவரைச் சிந்திக்க வைத்தது.

இதன் விளைவாக பம்பாய் மராட்டியர்களுக்கே சொந்தம் என நேரு அறிவித்தார். தேஷ்முக் என்ற தனியொரு மனிதன் தனது பதவியைத் தியாகம் செய்ய முன்வந்ததன் மூலம் மராட்டிய மக்களுக்கு பம்பாய் நகரம் கிடைத்தது. இது வரலாறு. 5 முறை முதலமைச்சராக இருந்த கருணாநிதிக்கு தேஷ்முக்கின் தியாக வரலாறு தெரியாமல் இருக்க முடியாது. ஆனால் பதவிமீது அவர் கொண்ட வெறி அவர் கண்களைக் கட்டிப்போட்டுவிட்டது. அந்தக் காலகட்டத்தில் தி.மு.கவின் 17 நாடாளுமன்ற உறுப்பினர்களை நம்பித்தான் மன்மோகன் சிங் அரசு பதவியில் நீடித்தது. தி.மு.கவின் அமைச்சர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் போர் நிறுத்தத்திற்கு இந்திய அரசு ஏற்பாடு

(27 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வல்லரசையே ஆட்டிவைத்த காணொலி





சுகந்தன்

உலகநாடுகளையே பெரும் பரபரப்புக் குள்ளாக்கியுள்ள விடயமாக இன்று உருவெடுத்துள்ளது அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட திரைப்படமான 'இனசென்ஸ் ஒவ் முஸ் லிம்ஸ்' (முஸ்லிம் ஒருவரின் அப்பாவித்தனம்)

இந்தத் திரைப்படத்தை அமெரிக்கரான கலிபோர்னியாவைச் சேர்ந்த நக்கோலா பஸ்ஸி மற்றும் குர்ரானை எரித்த சர்ச்சைக்குரிய டெர்ரி ஜோன்ஸ் ஆகிய இருவரும் இணைந்து தயாரித்தனர் என்று கூறப்படுகிறது.

இந்தத் திரைப்படம் தயாரிக்கப்பட்டு அதன் சில காணொலிகள் தற்போது கூகுள் மற்றும் யூ-ரியூப் இணையத் தளங்கள் வழியிலாக வெளியிடப்பட்டுள்ளன.

இதிலுள்ள காட்சிகள் சுமார் 2,000 ஆயிரம் வருடங்களுக்கு முன்னர் நடந்த சம்பவங்களைச் சித்திரிப்பதாகக் காட்டப்படுகிறது.

இதில் முஸ்லிம் மக்களால் வணங்கப்படுகின்ற - தமது இறுதித்தூதராக அவர்கள் கருதும் முகமது நபி, சிறுவர்களையும் பெண்களையும் கொலை செய்யுமாறு ஏவும் காட்சிகளும் மற்றும் முகமது நபியைப் பெண் பித்தராகக் காட்டும் காட்சிகளும் இடம் பெற்றுள்ளன. அத்துடன் நபி குருதி தோய்ந்த ஆடை மற்றும் குருதியின் ஈரம் காயாத வாளுடன் தோன்றுகிறார்.

இந்தப் படத்தின் சில காட்சிகள் யூ-ரியூப் தளத்தில் வெளியான மறுகணமே உலக நாடு களில் வாழும் முஸ்லிம் மக்க ளது எதிர்ப்புக்கள் கிளம்பி விட்டன.

இந்தத் திரைப்படம் அமெரிக்காவில் வைத்து அமெரிக்கர் ஒருவரால் தயாரிக்கப்பட்டதால் சகல முஸ்லிம் மக்களதும் எதிர்ப்புக்கும் கடும் சீற்றத்துக் கும் இன்று முகம் கொடுக்க வேண் டிய நிலைக்கு அமெரிக்கா தள்ளப்பட்டுள்ளது.

ஏற்கனவே அரபு நாடுகளின் சீற்றத்துக்கு ஆளாகியுள்ள அமெரிக்கா மீது தாக்குதல் நடத்துமாறும் உலகம் பூராகவும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடவேண்டுமெனவும் முஸ்லிம் மக்களுக்கு தீவிரவாத அமைப்புக்களிடமிருந்து அழைப்புகள் விடுக்கப்பட்டன.

இது தொடர்பாக ஹிஸ்புல்லா அமைப்பிலிருந்து வெளியிட்டுள்ள அழைப்பில், "எமது மதத்துக்கு ஏற்பட்ட அவமதிப்பை உலகளாவிய ரீதியிலுள்ள முஸ்லிம்கள் பொறுத்துக் கொள்ள மாட்டார்கள் என் பதைக் காட்ட வேண்டும்" எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த எதிர்ப்புப் போராட்டங்கள் எல்லைமீறி உலகம் முழுவதும் பெரும் வன்முறையாக வெடித்துள்ளன. இந்த வன்முறைப் போராட் டங்கள் உலகம் பூராகவும் உள்ள அமெரிக்கத் தூதரகங்களை வேட்டையாடத் தொடங்கியுள்ளன.

யாவரும் எதிர்பாராத விதத் தில் கடந்த 11ஆம் திகதி இரவு லிபியாவில் இடம்பெற்ற ரொக்கெட் தாக்குதலில் லிபியா வுக்கான அமெரிக்கத் தூதுவர் கிறிஸ்டோபர் ஸ்டீபன்ஸும் மற்றும் தூதரக அதிகாரிகள் மூவ ரும் கொல்லப்பட்டனர்.

நியூயோர்க் இரட்டைக் கோபுரத் தாக்குதல் நடந்து 11 ஆண்டுகள் நிறைவடைந்துள்ள வேளை, அதேதினத்தில் நடத்தப்பட்ட இந்த தாக்குதல் உலகையே பெரும் அதிர்ச்சிக்குள்ளாக்கி இருந்தது.

லிபியாவில் கடாபியின் ஆட்சி அமெரிக்காவால் ஒழிக் கப்பட்ட பின்னர் எஞ்சியுள்ள கடாபியின் ஆதரவாளர்களே இந்த மிலேச்சத் தனமான தாக்குதலை நடத்தியுள்ளதாக அமெ ரிக்கா கருதுகிறது.

அரச அதிகாரிகள் மீது நடத் தப்படுகின்ற இந்தத் தாக்கு தல்களை வன்மையாகக் கண்டிப் பதாகத் தெரிவித்த அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா தூத ரக அதிகாரிகளின் பாதுகாப் பைப் பலப்படுத்தவும் உத்தரவிட்டார்.

ஆரம்பத்தில் லிபியாவி லுள்ள கடாபியின் ஆதரவாளர் களே லிபியாவின் இயல்பு நிலையைக் குழப்ப மேற் கொண்ட சதியாக இந்தத் தாக்கு தல் கருதப்பட்ட போதும் இறு தியாக மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் மூலம் அமெரிக்காவில் வெளியிடப் பட்ட முஸ் லிம்களுக்கு எதிரான திரைப்படத் தின் எதிரொலியே இந்தத் தாக்கு தல் எனத் தெரிய வந்தது.

இந்தத் தாக்குதல் லிபியாவுடன் நிறுத்தப்படாது ஏனைய மத்திய கிழக்கு நாடுகளிலும் நடத்தப்படலாம் என்ற அச்சம் காரணமாக அமெரிக்கா தனது தூதரகங்கள் மீதான பாதுகாப் பைப் பலப்படுத்தியது.

இதன் முதற் கட்டமாக போர்க் கப்பல்களையும் விமானம் தாங்கிக் கப்பல்களையும் அரபு நாடுகளைச் சுற்றி நிறுத்தியது அமெரிக்கா.

எது எவ்வாறாயினும் தற் போது இலங்கை, இந்தியா வென சகல முஸ்லிம்கள் வாழும் நாடு களிலும் அமெரிக்காவில் வெளிப் பட்ட காணொலிக்கு எதிர்ப்புத் தெரிவித்து போராட்டங்களும் கண்டன ஆர்ப்பாட்டங்களும் நடத்தப்பட்டு வரு கின்றன. எனினும் இந்தத் திரைப் படம் தொடர்பாக தனது கருத்தை வெளியிட்டுள்ள அமெரிக்கா

"முஸ்லிம் மதத்தை இழிவு படுத்தும் வகையில் வெளியி டப் பட்ட திரைப்படத்துக்கும் எமது அரசுக்கும் எந்தவித தொடர்பும் இல்லை, சமய நம்பிக்கை களுக்கு அவதூறு ஏற்படுத்தும் செயற்பாடுகளை எமது அரசு வன்மையாகக் கண்டிக்கிறது. இந்தக் காணொலியில் தெரிவிக்கப்படும் கருத்துக்களையும் நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்" என்று தெரிவித்துள்ளது.

அரபு நாடுகள் தம்மீதுள்ள பகையை மதம் சார்பாக வெளிக் காட்டமுனைவதாகவும் அமெரிக்காமேலும்சுட்டிக்காட்டியுள்ளது.

இந்தப் படத்தின் முக்கிய பாத்திரத்தில் நடித்த நடிகை சின்டி லீ. கார்சியா தெரிவிக்கையில் தானும் 80 நடிகர்களும் இந்தப் படத்தில் நடித்தார்கள் என்றும் இந்தப் படம் ஒரு மதத்தை இழிவு படுத்தும் வகையில் தயாரிக்கப்படுவதாக தமக்கு தெரியப்படுத்தவில்லை எனவும் கூறினார். இவர் தமக்குத் தரப்பட்ட திரைக் கதையில் பண்டைக்கால எகிப்தியர்களின் கதையைச் சித்தரிக்கும் சாகசமே படமாக்கப்படுவதாகத் தெரிவிக் கப்பட்டதாகவும் கூறி உள்ளார்.

தாம் நடித்து முடித்த பின் னரே தமக்கு எதுவும் தெரிவிக் காமல் முஸ்லிம் மதத்தை இழிவு படுத்தும் உரையாடல்கள் சேர்க்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரி வித்தார்.

அத்துடன் இந்தப் படத்தை இயக்கிய இயக்குநருக்கு எதி ராக மோசடிக் குற்றத்தின் கீழ் அவர் வழக்குத் தொடர்ந்துள்ளார். எனினும் இந்தப் படத்தின் தயாரிப்பாளர் என நம்பப் படும் நக் கோலோ பாஸ்லி தலைமறைவாகிவிட்டார். எது எவ்வாறாயினும் ஒரு திரைப்படம் உலக வல்லரசாகத் திகழும் அமெரிக்காவையே சீண்டிப்பார்துள்ளது என்று தான் கூறவேண்டும்.

உலகிலேயே அதிகளவான மக்கள் தொகையைக் கொண்டவர்களாக விளங்கும் முஸ்லிம் மக்களின் இந்தப் போராட்டம் இதுவரை சுமார் ஐந்துக்கும் மேற் பட்டோரைப் பலியேடுத்துள்ளமை இங்கு கவனிக்கப்பட வேண்டியதாகும். தமது மதத்தையோ இனத்தையோ தரக்குறைவாக நடத்துவதை யாரும் பார்த்துக் கொண் டிருக்க மாட்டார்கள்.

எந்த மதமும் போற்றப்பட வேண்டியதே. ஆனால் குறித்த ஒரு திரைப்படத் தயாரிப்பு நிறுவனமோ அல்லது திரைப் படத் தயாரிப்பாளரோ செய்த தவறுக்காக ஒரு நாட்டையே குற்றம் சுமத்துவதும் அந்த நாட்டின் அப்பாவி அரச அதி காரிகள் மீது வன்முறையைப் பிரயோகிப்பதும் கூட ஏற்புடையதல்ல. அதற்கும் மேலாக வெளிநாட்டுத் தூத ரக அதிகாரிகளை பலியெடுப்பது எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ளப் பட முடியாததொன்றாகும்.

பிரிட்டன் இளவரசர் வில்லியம்ஸும் அவரது மனைவி கேட் மிடில்ட்டனும் இணைந்து காணப் படும் புகைப்படத்தையே ஊடகங்களில் பிரசுரிக்கக் கூடா தென பிரிட்டன் அரசு உத்தர விட்டுள்ள நிலையில் நபிகளை கீழ்த்தரமாக சித்திரிக்கும் இது போன்ற காணொலிகளை எவ்வாறு அனுமதிப்பது என இஸ் லாமியர்கள் எழுப்பும் கேள்வியிலும் நியாயம் இல்லாமல் இல்லை.

> தமது மதத்துக்கு ஏற்பட்ட அவமதிப்பை உலகளாவிய ரீதியிலுள்ளவர்கள் பொறுத்துக் கொள்ள மாட்டார்கள் என்பதைக் காட்ட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்த எதிர்ப்புப் போராட்டங்கள் எல்லைமீறி உலகம் முழுவதும் பெரும் வன்முறை யாக வெடித்தது. இந்த வன்முறைப் போராட்டங்கள் உலகம் பூராகவும் உள்ள அமெரிக்கத் தூதரகங் களை வேட்டை யாடத் தொடங்கின.



'இன்னொசின்ஸ் ஒவ் முஸ்லிம்ஸ்' திரைப்படத்தில் நபிகள் போன்று வேடமிட்டவர் வாளுடனும் குருதிதோய்ந்த தோற்றத் துடனும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடிமைகளின் மீட்பர்

## ஆபிரஹாம் லிங்கன்

பா.உண்மை

1832. நண்பர்களின் வற்புறுத்தலால் நியூ சேலத்துக்கு மாநிலங்களவைத் தேர்தலில் போட்டியிட லிங்கன் முடிவு செய்தபோது அவருக்கு அரசியல் களம் குறித்து துளிகூட அக்கறை இல்லை. ஆனால் அதைப் பற்றி அவர் கவலைப்படவும் இல்லை.

ஸ்பிரிங்ஃபீல்டிலிருந்து பன்னிரண்டு மைல் தொலைவில் இருந்த பாப்ஸ்வில்லி என்ற ஊரில் தமது முதல் தேர்தல் பிரசார உரையை நிகழ்த்த ஆரம்பித்த போது ஆபிரஹாம் லிங்கனிடம் பயமோ பதற்றமோ இருக்கவேயில்லை.

''கனவான்களே! குடிமக்களே! உங்கள் எல்லோருக்கும் என்னைத் தெரிந்திருக்கும் என்ற நினைக்கிறேன். நான்தான் அந்த எளிமையான ஆபிரஹாம் லிங்கன். இந்தச் சட்டமன்றத் தேர்தலில் வேட்பாளராக நிற்கிறேன். என்னுடைய நண்பர்களின் வேண்டுகோளுக்கிணங்கி நான் போட்டியிடுகிறேன்.

''எனது அரசியல் மிகவும் சிறியது; இனிமையானது. நான் வங்கிகள் தேசியமயமாக்கப் படுவதை ஆதரிக்கிறேன். உள்நாட்டு வளர்ச்சித் திட்டங்களுக்கு நான் எப்போதும் ஆதரவளிப்பேன். கடுமையான விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்துவேன்.

''நான் தேர்ந்தெடுக்கப்பட்டால், உங்களுக்கு மிகவும் நன்றியுடையவனாக இருப்பேன். நீங்கள் எனக்கு வாக்குப் போடவில்லை என்றாலும் அதே நன்றியுடன் இருப்பேன்.''

இப்படித்தான் அமைந்தது அவரது அரசியல் கன்னிப் பேச்சு. அரசியல் சூதுவாதுகளைப் பற்றி அறிந்துகொள்ளாமல் அவர் ஆற்றிய உரையைக் கேட்டவர்கள் ''ஐயோ! பாவம்!'' என்று அவரைப் பார்த்து உச்சுக் கொட்டினார்கள்.

ஆபிரஹாம், உயரமான கரடுமுரடான தோற்றமுள்ள மனிதர். அதற்கேற்றாற்போல் கைத்தறித் துணியில் செய்யப்பட்ட முரட்டுக் கோட்டையும் காற்சட்டையையும் அவர் அப்போது அணிந்திருந்தார். இந்தச் சூழ்நிலையில் அவருடைய உருவத்தை மட்டும் பார்த்து ஓட்டுப் போடுவதென்றால் யாருமே போட மாட்டார்கள். அதுதான் நடந்தது.


அந்தத் தேர்தலில் ஆபிரஹாம் லிங்கன் தோற்றுப் போனார். அவர் பெற்ற மொத்த வாக்குகள் 277. ஒரே ஆறுதல் அவர் அப்போது வாழ்ந்த நியூ சேலம் பகுதியில் இருந்த மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கை 284. அதில் 277 வாக்குகளை அவர் பெற்றிருந்தது பெரிய விஷயம்தான்.

★

தேர்தலில் தோல்வி இருந்தாலும் துவண்டு போகவில்லை லிங்கன். ஆனால் இன்னொன்றை நினைத்து அவர் பயந்து போயிருந்தார். எதிர்காலம். ஆஃபட்டின் கடை இல்லை. செய்வதற்கு வேலையும் இல்லை. என்னதான் செய்வது?

''ஆபிரஹாம் நாம் இரண்டு பேரும் சேர்ந்து ஒரு கடையை ஆரம்பித்தால் என்ன?'' பெர்ரி என்ற லிங்கனின் நண்பர் அந்த யோசனையைச் சொன்னார்.

லிங்கனுக்கு பெர்ரியின் யோசனை பிடித்திருந்தது. ஆனால், முதலுக்கு எங்கே போவது? லிங்கனிடம் ஒரு சதம்கூடக் கிடையாது. இருந்தாலும் இருவருமாகக் கடையை ஆரம்பித்தார்கள். கடன் பத்திரத்தில் கையெழுத்துப்போட்டு கடைக்குத் தேவையான பொருள்களில் பாதியைக் கடன் வாங்கினார்கள். அதுவும் ஆஃபட்டின் கடையைப்போல ஓர் அங்காடிக் கடைதான்.


நியூசேலத்தில் ஆபிரஹாம் ஆரம்பித்த கடை

இந்த இருவரின் கூட்டணி ஒத்துவரவில்லை.

பெர்ரி ஒரு குடிகாரர். சதா குடித்துக் கொண்டே இருப்பார். அவருக்குக் கடையைக் கவனிக்க நேரமே இல்லை. ஆபிரஹாம் லிங்கனோ அதற்கு நேர் எதிரான மனிதர். படிப்பாளி. பத்து கிலோ மீற்றர் தள்ளியிருக்கும் ஒரு ஊரில் யாரிடமாவது புத்தகம் இருப்பதாகக் கேள்விப்பட்டால் கூடப்போதும். ஒரு கணம் கூட தாமதிக்கமாட்டார். உடனே கடையை மூடிவிட்டுப் புத்தகத்தை வாங்கப் புறப்பட்டுவிடுவார்.

இந்த லட்சணத்தில் வியாபாரம் எப்படியிருக்கும்? அதுவுமில்லாமல் ஆபிரஹாம் லிங்கன் மிக மென்மையான மனிதர். யார் கடன் கேட்டாலும் கொடுத்துவிடுவார். அவர்களால் கடனைத் திருப்பித் தர முடியுமா என்றெல்லாம் யோசிக்கமாட்டார். எனவே, கடை முழு நட்டத்தில் ஓடியது. சில மாதங்களில் கடை விற்கப்பட்டது.

நெடுந் தொடர்

கடை விற்கப்பட்டும் கூட ஆபிரஹாமுக்கு அதன் மூலமாக ஒரு டாலர் கூடக் கிடைக்கவில்லை. மாறாக கடன்தான் மிஞ்சியது. இந்தக் கூட்டு வணிகத்தைப் பற்றிப் பிற்காலத்தில் ஆபிரஹாம் லிங்கன் இப்படிக் குறிப்பிட்டார், ''வியாபாரம் மேலும் மேலும் கடனில் சிக்கியது.''

கடையை விற்ற சிறிது காலத்தில், பெர்ரி இறந்து போனார். கடையின் நட்டமெல்லாம் கடனாக ஆபிரஹாம் தலையில் விழுந்தது. அசலும் வட்டியுமாக ஆபிரஹாம் 1,100 டொலர்கள் கடன் கொடுக்க வேண்டியிருந்தது. இந்தக் கடனைக்கூட 'தேசியக் கடன்' என்று வேடிக்கையாகக் குறிப்பிட்டார் லிங்கன்.

18

ஆபிரஹாம் கடன்பட்டது கூட்டு வியாபாரத்தில். அவர் நினைத்திருந்தால், முழுக் கடனுக்கும் தான் பொறுப்பேற்க முடியாது என்று கடன் கொடுத்தவர்களிடம் வாதாடியிருக்கலாம். சட்டத்தின் உதவியை நாடியிருக்கலாம். இது எதையுமே செய்யவில்லை லிங்கன். கடன் தொகைக்கான முழுப் பொறுப்பையும் ஏற்றார். 1847ஆம் ஆண்டு வரை, கொஞ்சம் கொஞ்சமாகப் பணத்தைக் கட்டி, மொத்தக் கடனையும் அடைத்துவிட்டார். அதனால்தான் 'நாணயமான ஆபிரஹாம்' என்ற அடைமொழி அவருக்குக் கிடைத்தது.

ஆபிரஹாம் நட்டத்தில் கடையை நடத்திக் கொண்டிருந்தாலும் நேர்மையையோ நாணயத்தையோ ஒரு போதும் கைவிட்டதில்லை.

ஒரு நாள் கடையை மூடும் நேரம் வந்ததும் அன்றைய வரவு -செலவு கணக்குகளைப் பார்த்தார் லிங்கன். கையிருப்புக் கூடுதலாக இருந்தது. மிக அதிகமில்லை. ஆறு சென்ட்டுகள்தான். எப்படி ஆறு சென்ட்டுகள் பணம் அதிகமாக இருக்கிறது? யோசித்து யோசித்துப் பார்த்தார் லிங்கன். யாரோ அதிகமாகப் பணத்தைக் கொடுத்துவிட்டுப் போயிருப்பது புரிந்தது. யாராக இருக்கும்? யோசித்து யோசித்துப் பார்த்தார் லிங்கன். அதிகம் பணம் கொடுத்துப் பொருளை வாங்கிக் கொண்டு போனது யார் என்பதையும் ஒரு வழியாகக் கண்டு பிடித்துவிட்டார் லிங்கன்.

கடையை மூடும் நேரத்தில் பொருள் வாங்கிப் போன பெண் இரண்டு டொலர், ஆறு சென்ட்டுகள் பணத்தைக் கொடுத்துவிட்டுப் போயிருந்தார். அந்தப் பெண்ணின் பெயர் திருமதி டன்கேன். அந்தப் பெண்ணை ஆபிரஹாம் லிங்கனுக்கு நன்றாகத் தெரியும். அவரது வீடு இரண்டு மைல்கள் தொலைவில் இருந்தது.

லிங்கன் கடையை மூடிவிட்டு நடந்தார். இரண்டு மைல் தொலைவில் இருந்த திருமதி டன்கேன் வீடு நோக்கி.

எங்கள் சொந்தக்கதை
அது பெரும் சோகக் கதை
மந்திரத்தத் கட்டுண்ட
மாயமான்கள் போல
சொந்தங்களெல்லோரும்
ஒன்றாய் ஒருமித்து
உண்டு களித்து
உல்லாசமாய் இருந்தோம்

அந்தப் பொல்லாத பொழுதுகள்
போட்ட நாடகத்தில் எங்கள்
இன்பங்களெல்லாம்
எங்கேயோ போ்யின
இன்று வந்தேறு குடிகளாகி - எம்
சொந்தங்களையும் இழந்து
நாம் அந்தரித்து நிற்பது
எம் அவலக்கதை

அல்லல்கள் சுமந்து மீண்டும் நாம்
எம்மிடம் வந்தாலும்
இன்னல்கள் தொடர்கின்றன
சந்திகளில் மந்திரிகளாய்
குந்தியிருந்தபடி - அவ்வழி
வந்துபோகும் மாதர்களை
நொந்துபோகச் செய்யும்
அந்த மனிதர்களைப் பற்றி
எந்த ''மாயமனிதரிடம்''
சொல்லியழுவது?

நாம் நாமாய் வாழ்ந்திருந்த
அந்தப் பொன்னான பொழுதுகள்
எந்தக் காலம் எம்மிடம் மீளுமோ?
அந்த நாளைக்காண...
அங்கலாய்த்திருக்கிறோம்.

ஜனகா நீக்கிலாஸ்,
கிளிநொச்சியூர்

## எமக்கான பொழுதொன்று!



## தீர்வுப் பொதி

ஊத ஊத ஊதி யேற்ற
வடிவமாக வில்லை
இறப்பர் பலூன்
உற்றுப் பார்த்தால்
துவாரம் தெரிந்தது
அதையிறுக்கி கட்டிக் காற்றை
அடைத்த போது
தடையகன்று ஏற்றம் மிக்க
தோற்றம் பெற்றது
தீர்வுப் பொதிக்கும்
இது பொருந்தும்

க.நாகராசா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய தேவை என்ன?

**வடக்கு, கிழக்கின் பசுமையான பிரதேசங்களெல்லாம் தற்போது வறண்டு போய் கருகிக் காட்சியளிக்கின்றன. மேய்ச்சல் தரைகளும் வறண்டு போய்க் கிடப்பதால் கால்நடைகள் மேய்ச்சல் இன்றி அலைகின்றன. நாட்டில் ஏற்பட்டுள்ள கடும் வரட்சியால் தீவுப் பகுதியில் கால்நடைகள் பெரும் எண்ணிக்கையில் இறந்துள்ளன. நீர் நிலைகளைப் பாதுகாப்பதில் உரிய அதிகாரிகள் காட்டிய அசமந்தப் போக்கே தற்போதுள்ள வரட்சிக்குக் காரணம்.**

■ கல்பனா

அபிவிருத்தின்றபோர்வையில் அரசு நாட்டை வறட்சி நிலைக்கே கொண்டு செல்கிறது. இயற்கைச் சமநிலையை அழித்து அபிவிருத்தியை மேற்கொள்வதே மஹிந்த சிந்தனை.


இந்த நிலையில் இயற்கை கூட எமக்கு எதிரியாகவே மாறிவிட்டது. நாட்டின் மத்திய பிரதேசங்களில் தற்போது பரவலாக மழை பெய்து வருகின்ற போதிலும் வடக்கு, கிழக்கிலும் ஏனைய பகுதிகளிலும் கடுமையான வறட்சி நிலவுகிறது. இதற்கு எல்லாம் இயற்கையின் சாபமே காரணம் என்றும் எண்ணத் தோன்றுகிறது.


இந்த வறட்சி மக்களுக்கு பெரும் பாதிப்பையே ஏற்படுத்தியிருக்கிறது. விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு விவரிக்க முடியாதது. நாட்டில் தற்போது மோசமான வரட்சி நிலவுகின்ற பிரதேசங்களாக கிழக்கு மற்றும் வட மத்திய மாகாணங்களைச் சுட்டிக்காட்டலாம். வடக்கிலும் வறட்சியால் விவசாயச் செய்கைக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. யாழ்ப்பாணம், தீவுப் பகுதியில் தண்ணீருக்குப் பற்றாக்குறை நிலவுகிறது. இப்படியே சென்றால் எரிபொருள்களைப் பெற்றுக் கொள்வதுபோன்று தண்ணீருக்கும் விலை குறிக்கப்பட்டு விற்பனை செய்யப்படும் நிலைமை வந்தவிட்டாலும் அச்சப்படுவதற்கு இல்லை.

மரங்களை அழித்து அபிவிருத்திகளை மேற்கொள்கின்ற போது, அந்த மரங்களை வேறு இடங்களில் நட்டு இயற்கைச் சமநிலையைப் பாதுகாப்போம் என்ற சிந்தனை அரசின் திட்டத்தில் இல்லாமலே போய்விட்டமை வேதனை தரும் விடயம் தான்.

இதனால் சூழலில் மரங்கள் இல்லாமல் குறைவடைந்து நிலம் வறண்ட நிலைக்கே சென்றுள்ளது. அத்தோடு நிலத்தடி நீர் மட்டமும் வெகுவாகக் குறைந்துவிட்டது.

கிழக்கில் மட்டக்களப்பு,





கல்பனா

அம்பாறை, திருகோணமலை போன்ற பிரதேசங்களில் தண்ணீருக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. நெற்களஞ்சியம் என்று போற்றப்படும் கிழக்கு மாகாணம் தற்போது நெற் செய்கையில் பின்னடைவு நிலைக்கே சென்றுள்ளது என்றால் இந்த வறட்சியே அதற்கும் காரணம்.

வட மத்திய மாகாணத்தில் அக்கால மன்னர்களால் அமைக்கப்பட்ட நீர்ப்பாசனக் குளங்கள் யாவும் வற்றிப்போய் விட்டன. நாட்டில் வறட்சி நிலவுகின்ற பிரதேசங்களில் நெல் விதைப்பு வேலைகள் இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை. மழை எப்போது பெய்யும் என்றெண்ணி விவசாயிகள் காத்திருக்கின்றனர். இந்த நிலையில் மழை பொய்த்துப் போய்விடுமோ என்ற ஏக்கமும் விவசாயிகளுக்கு இல்லாமல் இல்லை. பருவம் தவறிய நெற் செய்கை மேற்கொள்ள வேண்டிய நிலையும் ஏற்படலாம் என்றும் விவசாயிகள் தமது ஆதங்கத்தைத் தெரிவிக்கின்றனர்.

நாட்டில் உள்ள சிறிய நீர்ப்பாசனக் குளங்களில் அதிகமானவை வற்றிவிட்டன. பெரிய குளங்களில் நீர்மட்டம் அரைவாசிக்கு மேல் குறைந்துவிட்டது. மேட்டு நிலப் பயிர்ச் செய்கையையும் கடும் வரட்சியால் மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் விவசாயிகளின் நிலைமை பெரும் பரிதாபமாகவே உள்ளது.

அநுராதபுரம், மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை போன்ற மாவட்டங்களிலுள்ள சில பிரதேசங்களில் குடிதண்ணீரைப் பெற மக்கள் பல மைல் தூரம் செல்ல வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். கிணறுகள் முற்றாக வற்றிவிட்டன. பிரதேச சபைகள் பவுசர்கள் மூலம் மக்களுக்கு குடிதண்ணீரை விநியோகிக்கின்றனர். இதனால் குடிதண்ணீரைப் பெற மக்கள் காத்திருக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. ஆனாலும் இந்தக் குடிதண்ணீர் மக்களுக்குப் போதியதாக இல்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

வடக்கு, கிழக்கின் பசுமையான பிரதேசங்களெல்லாம் தற்போது வரண்டு போய் கருகிக் காட்சியளிக்கின்றன. மேய்ச்சல் தரைகளும் வரண்டு போய்க் கிடப்பதால் கால்நடைகள் மேய்ச்சல் இன்றி அலைகின்றன.

நாட்டில் ஏற்பட்டுள்ள கடும் வரட்சியால் தீவுப் பகுதியில் கால்நடைகள் பெரும் எண்ணிக்கையில் இறந்துள்ளன.

நீர் நிலைகளைப் பாதுகாப்பதில் உரிய அதிகாரிகள் காட்டிய அசமந்தப் போக்கே தற்போது வறட்சிக்குக் காணம். அதுமட்டுமன்றி கால் நடைகள் இறக்கவும் இந்த அதிகாரிகள்தான் காரணம் என்று கால்நடை வளர்ப்போன் கவலை தெரிவிக்கின்ற.

இயற்கையான நீரூற்றுக்களைக் கொண்ட பல குளங்களே வரண்டு போயுள்ளன. இந்தக் குளங்கள் ஆழமாக்கப்பட்டு புனரமைக்கப்பட்டால் நீர் ஊற்றெடுக்க வாய்ப்புகள் உண்டு. இவ்வாறு புனரமைக்காது நீர்வளத்தை இழக்க வேண்டிய நிலை தற்போது ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் விவசாயத்தை மட்டும் நம்பியிருக்கும் மக்களின் நிலைமைதான் மிகவும் பரிதாபமாக உள்ளது.

வறட்சி இப்படியே தொடருமானால் விவசாயிகளுக்கு மட்டுமல்ல எதிர்காலத்தில் உணவுக்குத் தட்டுப்பாடுகள் ஏற்படவும் வாய்ப்புகள் அதிகம் உள்ளன.

அன்றைய கால மன்னர்கள் மழைநீரைத் தேக்கி வைப்பதற்குக் கூட பல திட்டங்களை ஏற்படுத்தியுள்ளனர். அந்த வகையில் பராக்கிரமபாகு 'ஒரு துளி நீரையேனும் கடலில் கலக்க விடமாட்டேன் என்று கூறி நீரை தேக்கி வைப்பதற்கான திட்டங்களை ஏற்படுத்தி அதன் மூலம் விவசாயத்துறையை வளர்ப்பதற்கு அயராது பாடுபட்டான்.

ஆனால் இன்றைய அரசு குளங்களைப் புனரமைப்பதற்கான திட்டங்களை வழிவகுத்தும் அதனைச் செயற்படுத்துவது என்பது மிகக் குறைவாகவே காணப்படுகின்றது. ஒட்டு மொத்தத்தில் நீரைத் தேக்கி வைப்பதற்கான எந்தத் திட்டங்களும் நாட்டில் மேற்கொள்ளப்படவில்லை என்றே கூறலாம்.

பல்வேறு துன்ப, துயரங்களைச் சுமந்து வாழும் மக்களுக்கு வறட்சியால் அதிக பாதிப்புகள் ஏற்படாமல் தவிர்க்க இனியாவது அரசு மாற்று நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்பதே இன்றைய அவசியத்தேவை.

## மரங்களாலான உலகை நோக்கி...

இன்றைய நவீன காலத்தில் பசுமை என்பது அழிந்து வரும் ஒரு செல்வம். இதை யாரும் உணர்வதில்லை. பணம், நகரமயமாக்கல், நில அபகரிப்பு, விறகு போன்ற பல காரணிகளுக்காக பசுமை அழிக்கப்படுகிறது, மரங்கள் வேட்டையாடப்படுகின்றன. ஆனால், மனிதன் உணரமறுக்கும் ஒரு விடயம் காற்றில் தேவையான அளவு ஒட்சிசன் இல்லை என்றால் மனிதனால் உயிர்வாழ முடியாது.

ஒரு மரமானது விதையில் இருந்து செடியாக உருமாற்றம் அடைந்து ஒரு மரமாக வளர்ச்சியடைவதற்கு எடுத்துக்கொள்ளும் காலப் பகுதி மிகவும் நீளமானது. ஆனால், அதே மரத்தை வெட்டிச் சாய்க்க மனிதர்கள் எடுத்துக்கொள்ளும் நேரம் சில நிமிடங்களே!

ஒரு மனிதன் எதற்க்காக இரவு நேரத்தில் கண்டிப்பாக தூங்க வேண்டும் என்பதற்கு எங்கள் முன்னோர்களான தமிழ் சித்தர்கள் தங்களின் சித்த வைத்திய குறிப்பில் எழுதிய தகவல்கள் ஆச்சரியமானவை, அதிசயமானவை. அதாவது ஒரு தாவரமானது உயிர் வாயு (ஒட்சிசன் ) வெளியிடும் நேரம் ஒரு நாளில் பகல் பொழுது மட்டுமே. இரவில் தாவரங்கள் வெளியிடுவது காபனீர் ஒட்சைட் வாயு மட்டுமே.

அதனால், இரவு பொழுதுகளில் மனிதன் செயல்பட போதுமான அளவு ஒட்சிசன் கிடைப்பதில்லை. இதனால் இரத்தத்தில் ஒட்சிசன் அளவு குறைகிறது. இந்த நேரத்தில் தூங்காமல் இருக்கும் போது உடலானது அதிகளவான சக்தியை வெளியிடவேண்டி இருக்கின்றது. இதனால் மூப்பு, தலையில் வழுக்கை, உடல் உறுப்புக்கள் பழுதடைதல் போன்ற பல பல நோய்கள் வர வாய்ப்பிருக்கிறதாக சித்தர்கள் கூறியுள்ளார்கள். ஒட்சிசனின் அளவு குறைவானால் மனிதனால் செயற்பட முடியாது என்பதே அதற்கு முக்கிய காரணியாக சித்தர்கள் கூறியுள்ளார்கள். அதை இப்போது பல விஞ்ஞானிகள் ஆதாரபூர்வமாக நிரூபித்துள்ளனர். மரங்களை இன்று மனிதன் பல காரணங்களுக்காக வேட்டையாடுகின்றான். அதன் பின் விளைவுகளை அவன் அறிவதில்லை.

இன்று காலநிலை மாற்றம், மழை பொய்த்து போதல், புதிய தொற்று நோய் பரவல் போன்றவற்றிற்கும் பூமி வெப்பமாகவும் காரணம் மனிதர்களின் மர வேட்டைச் செயற்பாடேயாகும்.

இன்றும் பல நாடுகள், பல சமூக அமைப்புக்கள், தனி நபர் செயற்பாடுகள் பசுமையைப் பாதுகாக்கவாக அமைந்தாலும், ஒரு பக்கத்தால் மரங்கள் தொடர்ச்சியாக வேட்டையாடப்பட்டு வருவது யாவரும் அறிந்ததே..!

இவ்வாறாக மரங்கள் மருந்தாக, மனிதன் உயிர் வாழ ஒட்சிசன் தரும் ஓர் உயிர்வாழும் ஆதாரமாக சேவையாற்றிக் கொண்டிருப்பதை பலர் மறந்துவிட்டுப்



பணத்துக்காகவும், நில அபகரிப்பு மற்றும் நவீனமயமாக்கல் போன்ற பல தேவைகளுக்காகவும் மரங்களை வெட்டிச் சாய்க்கின்றனர். நாங்களே எங்களை பாதுகாத்துக்கொள்ள வேண்டும். நாங்களே உலகையும் பாதுகாக்க வேண்டும். எங்கள் மனித இனம் வாழ வழி செய்ய வேண்டும்!

ஒவ்வொரு கைகளும் இணைந்தால் உருவாக்கலாம் புது உலகத்தை! ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜோதிடத்தில் மேலோட்டமான பார்வை தேவையற்ற குழப்பங்களைத் தரும்

பிரம்மஸ்ரீ - சண்முக-
தியாகேஸ்வரசர்மா
ஜோதிடர், நுணாவில் மத்தி, சாவகச்சேரி

ஜோதிடத்தில் ஆர்வமுடையவர்கள் நம் மத்தியில் அதிகமானவர்கள் இருக்கிறார்கள். எனினும், அதில் ஆழமான பார்வையை அல்லது அதில் கூறப்படும் ஆழமான அர்த்தத்தை அறிய முற்படுபவர்கள் நம்மத்தியில் குறைந்த அளவினரே உள்ளனர்.

இதனால், மேலெழுந்த வாரியாக நட்சத்திரங்களுக்கு கூறப்படுகின்ற பழமொழிகளையோ அல்லது கிரகங்களின் சேர்க்கைகளையோ வைத்துக் குழப்பிக் கொள்கிறார்கள்.

உதாரணமாக "ஆண்மூலம் அரசாளும் பெண்மூலம் நிர்மூலம் என்றொரு பழமொழி இருக்கிறது. இதன் ஆழமான அர்த்தத்தை அல்லது அதில் பொதிந்துள்ள விடயத்தை ஆராய்வது குறைவே, அதில் கூறப்பட்ட விடயம் யாதெனில் "ஆனிமூலம் அரசாளும்; பின்மூலம் நீர்மூலம்" என்பதேயாகும். ஆணாக இருந்தாலும் அல்லது பெண்ணாக இருந்தாலும் ஆனி மாதத்தில் வருகின்ற மூலநட்சத்திரத்தில் பிறந்திருந்தால் அது பௌர்ணமி யோகம் ஆகும். அதே வேளை, மூலநட்சத்திரத்தின் 04ம் பாதத்தினையே பின்மூலம் என்று கூறப்படுகிறது. இப்பாதத்தில் பிறந்தவர் வீரம், தைரியம் நிறைந்தவராகவும், தன்னை எதிர்த்தவரை வெற்றி கொள்ளும் ஆற்றல் நிறைந்தவராகவும், இருப்பார். அதாவது, பின் மூலத்தில் பிறந்த ஒருவர் தன்னை எதிர்ப்பவரை நிர்மூலம் ஆக்கும் சக்தி படைத்தவர் என்பதே அதன் உள்ளார்ந்த அர்த்தம் ஆகும். மூலநட்சத்திரத்தில் பிறந்த ஒரு பெண்ணுக்கு திருமணத்திற்காக வரன் பார்க்கும் போது பெண்மூலம், நிர்மூலம், அது மாமனாருக்கு (கணவனின் தந்தை) ஆகாது என்று பயங்கொள்கிறார்கள். இதனை அந்த நட்சத்திரத்தில் பிறந்த எல்லாப் பெண்களுக்கும் பொருந்தும் என்று கருத்தில் கொள்ள முடியாது, உண்மையிலேயே, மூலநட்சத்திரத்தில் பிறந்து மாமனாருக்கு உரிய 03வது வீட்டில் கேது பகவான் இருந்தாலோ, மாரகஸ்தானமான 4 ஆம், 9 ஆம் வீடுகளில் கேது பகவான் இருந்தாலோ மாமனாருக்கு கண்டத்தை ஏற்படுத்தும் என்று கூறலாம். மற்றும்படி மூலநட்சத்திரத்தில் பிறந்த பெண்ணால் மாமனாருக்கு எந்த விதமான ஆபத்தும் தராது.

அதே போன்று, ஆயிலிய நட்சத்திரத்தில் பிறந்த பெண் மாமியாருக்கு (கணவனின் தாய்) சிறப்பைத் தராது என்ற ஒரு கருத்தும் உண்டு . உண்மையிலேயே ஆயிலிய நட்சத்திரத்தில் பிறந்த பெண்ணுக்கு சந்திரன் ஆட்சி வீடாகிய கடகத்தில் இருப்பார். மாமியார், அப்பெண்ணுக்கோ அல்லது கணவருக்கோ, தாயாராக விளங்கும் ஒருவராகவே இருப்பார். அப் பெண்ணின் ஜாதகத்தில் லக்னத்திலிருந்து 10 வது வீடு மாமியாரைக் குறிக்கும் ஸ்தானமாகும். அந்த பத்தாவது வீட்டில் சந்திரனுடன் பகைக் கிரகங்கள் சேர்க்கை பெற்றால் தான் ஆயிலிய நட்சத்திரத்தில் பிறந்த பெண்ணுக்கு திருமணம் முடிந்தவுடன், மாமியாருக்குத் தோஷம் அல்லது தாக்கம் தரும். உதயலக்கினம் துலாமாக இருக்கும் பட்சத்தில் மேற்படி தாக்கத்தை ஆய்வு செய்ய வேண்டிய நிலை ஏற்படும்.

அதேவேளை, கேட்டை நட்சத்திரத்தில் பிறந்த பெண்ணால் மூத்த மைத்துனருக்கு (கணவனின் மூத்த சகோதரர்) தாக்கத்தைத் தரும் என்ற கருத்தும் உண்டு மேற்படி. நட்சத்திரக் கிரகத்திற்கு 05ம் வீடு தான் மூத்த மைத்துனரைக்குறிக்கும் வீடாகும். இந்த வீட்டில் பாவக்கிரகங்கள் இருந்தாலோ, 05ம் வீட்டிற்கு , 07ம் வீட்டில் பாவக்கிரகங்கள் இருந்தாலோ, மூத்த மைத்துனருக்கு கெடுதல்களைத் தரும்.

அதே போன்று, விசாக நட்சத்திரத்தில் பிறந்த பெண்ணால் இளைய மைத்துனருக்கு (கணவனின் இளைய சகோதரர்) கெடுதலைத் தரும் என்ற கருத்தும் உண்டு. லக்கினத்திற்கு 09 வது வீடு தான் இளைய மைத்துனரைக் குறிக்கும் வீடாகும். அந்த வீட்டில் ராகு, கேது, செவ்வாய் போன்ற பாவக்கிரகங்கள் இருந்தால்தான் இளைய மைத்துனருக்கு ஆயுள் குறைவைத் தரும். அதே வேளை, குரு பகவான் பலமிழந்து இருந்தாலோ பலமுடன் சேர்க்கை பெற்றிருந்தாலோ இளைய மைத்துனருக்குத் தாக்கத்தை தரும். அவ்வாறு இல்லாமல் குருபகவான் பலம்பெற்றிருந்தால், இளைய மைத்துனருக்குச் சிறப்பைத் தரும்.

அடுத்ததாக, கிரகங்கள் செவ்வாயுடன் சேர்க்கை பெறுவது பற்றிய குழப்பங்களும் பலருக்கு இருக்கத் தான் செய்கிறது. ஒருவருடைய ஜாதகத்தில் இடபம், துலாம் ஆகிய ஜெனன லக்னங்களுக்கு செவ்வாய் களஸ்திரஸ் தானாதிபதி ஆகிறார். அவ் ஜாதகருக்கு செவ்வாய் 03ஆம், 04ஆம், 10 ஆம், 11ஆம் இடங்களில் காணப்பட்டால் திருமணம் சிறப்பாக நடைபெறும். கணவர் அல்லது மனைவி மூலம் வீடு, செல்வம், செல்வாக்கு போன்றவற்றை பெறுகின்ற யோகத்தையும் தரும். அதே செவ்வாய் பகவான் 06ஆம், 08ஆம், 12ஆம் இடங்களில் மறைந்து காணப்பட்டால், நற்பலன்களைத் தராது. குறிப்பாக செவ்வாய் சனியுடன் சேர்க்கை

| | | | |
|---|---|---|---|
| | புதன் சுக்கிரன் சூரியன | ராகு | சந்திரன் |
| | ராசி | | லக்கனம் |
| | | | செவ்வாய |
| சனி | கேது | | |

பெற்றால், திருமணம் தாமதம் ஆவதுடன், ஆயுள் முழுவதும் நோயுள்ள வாழ்க்கைத் துணையும் அமையும். செவ்வாய் சூரியனுடன் காணப்பட்டால், திருமணம் தாமதம் ஆவதுடன், தம்பதியருள் இடைவிடாத மனப் போராட்டமும் ஒத்தகருத்தொற்றுமை இல்லாத நிலையையும் தரும். செவ்வாய் இராகுவுடன் சேர்க்கை பெற்றால், எதிர்பாராத வகையில் திருமணம் அமையும் நிலையைத் தரும். ஆனால் வாழ்க்கைத்துணைவர் அல்லது துணைவி முரண்படுவதை விடுத்து தலைமறைவாகிவிடும் நிலையையும் தரும். செவ்வாய், புதனுடன் சேர்க்கை பெற்று காணப்பட்டால் திருமணம் காதல் திருமணமாக அமையும். அதுவும் தாமதமாகவே அமையும். தம்பதியருக்குள் போட்டி பொறாமை போன்றவற்றைத் தந்து விவாகரத்து வரை செல்லும் நிலையையும் தரும். 06ஆம், 08ஆம், 12ஆம் இடங்களில் செவ்வாய் தனித்து நின்று மறையும் போது திருமணம் தாமதம் தருவதுடன், தாம்பத்தியத்தில் திருப்தியின்மையையும் தரும். மேற்குறிப்பிட்ட விடயங்களை செவ்வாய் களஸ்திரஸ் தானாதிபதியாக இருக்கும் போது தான் காணக்கூடியதாக இருக்கும்.

அதே போன்று, லக்கினத்திற்கு 02ஆம் வீடு குடும்பஸ்தானம், 04 ஆம் வீடு சுகஸ்தானம், 08ஆம் வீடு ஆயுள்ஸ்தானம், 12ஆம் வீடு சயனஸ்தானமாக இருக்கும் இடங்களில் செவ்வாய் தோஷம் தருகிறது. மேற்படி வீடுகளில் 02இல் இருக்கும் செவ்வாய் குடும்பவாழ்க்கையில் போராட்டங்களையும் எற்படுத்துவார். திடீர், திடீரென கருத்து முரண்பாடுகளையும் எற்படுத்துவார். பேசக்கூடாத வார்த்தைகளையும் பேசி, துணைவர் அல்லது, துணைவி மனதில் மாறாத காயங்களையும் ஏற்படுத்திவிடுவார். 04 இல் இருக்கும் செவ்வாய் களஸ்திரத்தானத்தை 04ஆம் பார்வையால் பார்ப்பதால், திருமணத்தைத் தாமதப்படுத்துவார். திருமணம் நிச்சயம் செய்த பின்னரும் நின்றுவிடும்படியும் செய்துவிடுவார். அல்லது தாயாரால் திருமணத்தைக் குழப்பும் நிலையைத் தருவார். அதே போன்று, 07 ஆம் வீட்டில் இருக்கும் செவ்வாய் 08ஆம் பார்வையால் குடும்பஸ்தானமான 02 ஆம் வீட்டைப் பார்ப்பார். இதன் மூலம் காதல், களியாட்டம் போன்றவற்றில் ஈடுபடவைத்து அதனால், ஏமாற்றமடையும் நிலையையும் தருவார். அதனால், மனதில், விரக்தி நிலையைத் தந்து திருமணத்தை தாமதப்படுத்தும் நிலையையும் தருவார். 08ஆம் வீட்டில் இருக்கும் செவ்வாய் அடிக்கடி உடல்நலக்குறைவு, பிறப்பு உறுப்பில் நோய் தரும் நிலை, ஊர், ஊராக மாறி மாறி இருக்கும் நிலையையும் தரும் . அதனால், திருமணத்தில் தாமதம் தரும். அதேவேளை, 12ம் வீட்டில் இருக்கும் செவ்வாய் எவர் மீதும் சந்தேகத்தை ஏற்படுத்துவார். எதிலும், நிலையற்ற தன்மையும் ஏற்படுத்துவதால் திருமணம் தாமதம் தரும்.

செவ்வாய் தோஷம் இருப்பவர்கள் இயல்பாகவே உஷ்ணஉடலைக் கொண்டிருப்பர் . அதே போல், காம உணர்வுகளும் அதிகரித்துக் காணப்படும். குருதியின் தன்மையும் அதிக வீரியத்துடன் காணப்படுவதால், ஆண், பெண், இருவருள் ஒருவருக்கு மட்டும் செவ்வாய் தோஷம் இருந்து மற்றவருக்கு இல்லாதவிடத்துதிருமணம் செய்யக்கூடாது. அப்படி திருமணம் செய்தால், தாம்பத்தியத்தில் திருப்தியின்மை, விரும்பத்தகாத சம்பவங்களால் தம்பதியினருக்குள் பிரிவு, நடத்தை விஷயங்களும் மாறிவிடும். குழந்தைப் பாக்கியமும் சிலருக்கு இல்லாமல் போய்விடும். எனவேதான் செவ்வாய் பொருத்தம் சரிவரப் பொருந்துவதில் அக்கறை செலுத்த வேண்டி இருக்கிறது. மேற்படி இடங்களில் செவ்வாய் இருந்தும், தோஷம் தராத நிலையில் இருக்குமானால், மேற்படி தாக்கத்தைக் குறைக்கும்.

அதேவேளை, ஒருவருடைய ஜாதகத்தில் லக்னாதிபதி இருக்கும் இடத்திலிருந்து சுக்கிரன் 08இல் மறைந்தாலோ, 07ஆம் அதிபதி சனியாக இருந்து சனி பகை பெற்றாலோ, அல்லது 02 ஆம் அதிபதி நீசம் பெற்றால், 07 ஆம் அதிபன் பாவக் கிரக சேர்க்கை பெற்றால், சூரியனுடன் செவ்வாய் சேர்க்கை பெற்றால், சுக்கிரனும், 07 ஆம் அதிபதியும் 06 ஆம், 08 ஆம் வீடுகளில் இருந்தால், சனியும், சந்திரனும் சேர்க்கை பெற்றால் 7 ஆம் வீட்டதிபன் நீசம் பெற்றால் [illegible]
[illegible]
றால் திருமணம் காலதாமதம் தரும்.

# எண் மாயா ஜாலம்

| | |
|---|---|
| 1 x 8 + 1 = 9 | 1 x 9 + 2 = 11 |
| 12 x 8 + 2 = 98 | 12 x 9 + 3 = 111 |
| 123 x 8 + 3 = 987 | 123 x 9 + 4 = 1111 |
| 1234 x 8 + 4 = 9876 | 1234 x 9 + 5 = 11111 |
| 12345 x 8 + 5 = 98765 | 12345 x 9 + 6 = 111111 |
| 123456 x 8 + 6 = 987654 | 123456 x 9 + 7 = 1111111 |
| 1234567 x 8 + 7 = 9876543 | 1234567 x 9 + 8 = 11111111 |
| 12345678 x 8 + 8 = 98765432 | 12345678 x 9 + 9 = 111111111 |
| 123456789 x 8 + 9 = 987654321 | 123456789 x 9 + 10 = 1111111111 |

9 x 9 + 7 = 88

98 x 9 + 6 = 888

987 x 9 + 5 = 8888

9876 x 9 + 4 = 88888

98765 x 9 + 3 = 888888


987654 x 9 + 2 = 8888888

9876543 x 9 + 1 = 88888888

98765432 x 9 + 0 = 888888888

ஆச்சரியமாக இல்லையா? இலக்கங்கள் ஒன்றுசேர்ந்து நம்மை வியக்க வைக்கின்றன. வரிசையாக வரும் இந்த இலக்கங்கள் நம்மை வாயைப் பிளக்க வைக்கின்றன.

இங்கே மீண்டும் கவனியுங்கள்.



1 x 1 = 1

11 x 11 = 121

111 x 111 = 12321

1111 x 1111 = 1234321

11111 x 11111 = 123454321

111111 x 111111 = 12345654321

1111111 x 1111111 = 1234567654321

11111111 x 11111111 = 123456787654321

111111111 x 111111111 = 12345678987654321

பிரமிப்பாக இல்லையா?

ஆச்சரியங்கள் தொடருகின்றன. இங்கே மீண்டும் கவனியுங்கள். ஆங்கில அகராதியில் உள்ள 26 எழுத்துக்களையும் வரிசைக் கிரமமாக எழுதுவோம். முதல் எழுத்துக்கு ஒரு புள்ளி என்று தொடங்கினால் கடைசி எழுத்துக்கு 26 புள்ளி கிடைக்கும். எழுத்துக்களும் புள்ளிகளும் இப்படித்தான் வரும்.

A B C D E F G H I J K L M N O P Q R S T U V W X Y Z

1 2 3 4 5 6 7 8 9 10 11 12 13 14 15 16 17 18 19 20 21 22 23 24 25 26.

இனி கடும் உழைப்பு H-A-R-D-W-O- R- K என்ற ஆங்கிலச் சொல்லை எடுப்போம். இதற்கு புள்ளிகள் இட்டால் எப்படியிருக்கும்?

H-A-R-D-W-O- R- K 8+1+18+4+23+15+18+11 = 98

அறிவு K-N-O-W-L-E- D-G-E என்ற சொல்லுக்கு கிடைக்கும் புள்ளிகள்.

11+14+15+23+12+5+4+7+ 5 = 967

இவையெல்லாம் வாழ்வில் மிக முக்கியம் என்பதைக் காட்டும் வகையில் அமைகின்றன அவை புள்ளிகள் 90 ஐ தாண்டுகின்றன. ஆனால் A-T-T-I-T-U- D-E (நடத்தை) என்ற ஆங்கிலச் சொல்லைக் கவனியுங்கள்.

1+20+20+9+20+ 21+4+5 = 100%

இங்கே வருவது 100 புள்ளிகள். கடும் முயற்சி, நல்ல அறிவு என்று எல்லாவற்றையும் தாண்டி , நல்ல நடத்தை மிக மிக முக்கியம் என்பதையே இது தெளிவுபடுத்துகின்றது. நல்ல அறிவாளியாக இருந்தும், முயற்சி திருவினையாக்கும் என்பதைத் தன் தாரக மந்திரமாகக் கொண்டிருப்பினும், நடத்தை சரியில்லாதவர் என்ற பெயரைச் சம்பாதித்து விட்டால், நாலுபேர் மதிக்கும் ஒருவராக அவர் நம்மிடையே நடமாட முடியாது.

சரி.. இறைவனை நேசிப்பது மனிதனுக்கு எவ்வளவு முக்கியம்? கீழுள்ள சொல்லைக் கவனியுங்கள்.

L-O-V-E- O-F- G-O-D இறையன்பு. இதற்குக் கிடைக்கும் புள்ளிகள் 101. நூறையும் தாண்டியது.

12+15+22+5+15+ 6+7+15+4 = 101%

ஒரு சின்னக் கணக்கு.

உங்கள் கடும் உழைப்பும், பேரறிவும் , நல்ல நடத்தையும் உங்களைப் புகழின் உச்சிக்குக் கொண்டு செல்லலாம். சந்தேகமே இல்லை! ஆனால் இறையன்பும் உங்களிடம் இருக்குமானால் உங்களை மிஞ்ச யாருமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெருக்கடிக்குள் மத்திய அரசு

காங்கிரஸ் கட்சிக்கு பெரும்பான்மை குறைந்து விட்டதால் நாடாளுமன்றத்தைக் கூட்டி நம்பிக்கை வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்று எதிர்க் கட்சியினர் வலியுறுத்தி வருகின்றனர்.

## கூட்டணியிலிருந்து விலகினார் மம்தா





யமுனா

எந்த ஒரு விடயத்திலும் முழுமையான வெற்றி பெற வேண்டுமானால் நாம் தனியாக நின்று சாதிக்க முடியும் என்பது மிக சொற்ப அளவு தான். ஆனால் கூட்டணியாகச் சேர்ந்து செயற்பட்டால் அதன் மூலம் கிடைக்கும் பலன் மிகப் பெரிய விடயம். அந்த வகையில் தான் நாட்டை நிர்வகிக்கும் ஆட்சியானது கூட்டணியின் துணையின்றி அதில் சிறந்த நன்மையைப் பெற முடியாது. அதாவது மக்களுக்கு நல்லாட்சி வழங்கமுடியாது. அதே சமயம் அந்தக் கூட்டணியில் பிளவு ஏற்படுமேயானால் அதனைப் போல இழப்பு வேறொன்றும் இல்லை. இந்தநிலை தான் இந்தியாவில் மத்திய அரசுக்கு தற்போது ஏற்பட்ட பேரதிர்ச்சி.

மத்திய ஆட்சியில் இருக்கும் ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசுக்கு ஆதரவு வழங்கும் கூட்டணிக் கட்சியான திரினாமூல் காங்கிரஸ் கட்சி தனது ஆதரவை வாபஸ் பெறுவதாக அறிவித்துள்ளது. இந்த முடிவை அந்தக் கட்சித் தலைவி மம்மா பானர்ஜி அதிரடியாக அறிவித்துள்ளார். இதனால் மத்திய அரசின் பக்க பலம் குறைவடைந்த நிலை ஏற்பட்டுள்ளது.

மத்திய அரசுக்கான ஆதரவு மம்தாவிடமிருந்து நழுவிப் போனமைக்கு காரணம் கடந்த சில தினங்களுக்கு முன்னர் மத்திய அரசுஎடுத்த சிலமுடிவுகள்தான். அதாவது டீசல் விலை உயர்வு மானிய விலை, சமையல் எரிவாயு சிலிண்டர்களுக்குத் தட்டுப்பாடு, சில்லறை வர்த்தகத்தில் அந்நிய நேரடி முதலீட்டை அனுமதிப்பது என மத்திய அரசின் முடிவுகள் தான் திரினாமூல் காங்கிரஸின் ஆதரவை இழக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

மத்திய அரசு அறிவித்த இந்த முடிவுகளுக்கு மேற்கு வங்க முதல்வரான மம்தா அதிருப்தியடைந்து எதிர்ப்புத் தெரிவித்து அந்த முடிவுகளை வாபஸ் பெற வேண்டும் என்று கடும் எச்சரிக்கை விடுத்திருந்தார். அதுமட்டுமல்லாமல் மூன்று நாள் காலக்கெடு விதித்திருந்தார். எனினும் அவரது எதிர்ப்புக்கு மத்திய அரசு அடி பணியவில்லை. எந்த விதமான சாதகமான பதிலும் வரவில்லை. எனவே இதனையடுத்து அடுத்த கட்ட நடவடிக்கை எடுப்பது குறித்து திரினாமூல் காங்கிரஸ் கட்சியின் உயர்மட்டக் கூட்டம் தடல்புடலாக கொல்கத்தாவில் கடந்த செவ்வாய்க்கிழமை காலை கூடியது. அதன்பின்னர் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்தார் மம்தா. இதன் போது மத்திய அரசுக்கான ஆதரவை வாபஸ் பெறுவதாக அதிரடியாக அறிவித்தார். அதுமட்டுமல்லாது பேட்டியின் போது மத்திய அரசை விமர்சித்து காட்டமாக பேசியுள்ளார். தமக்கு குறைந்தளவு மரியாதை கூட மத்திய அரசு அளிக்கவில்லை. அரசின் முடிவுகளில் எம்மிடம் ஆலோசனை கூட நடத்தவில்லை. மேலும் குறைந்தளவு விலை குறைப்பு என்பதை எள்ளளவும் ஏற்றுக் கொள்ளப்படாத விடயம்.

சில்லறை வர்த்தகத்தில் நேரடி அந்நிய முதலீடு இந்தியாவில் மிகப் பெரிய பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய விடயம் என்றும் விளக்கமளித்துள்ளார்.

அதுமட்டுமல் லாமல் மத்திய அரசுக்கு வழங்கப்படும் ஆதரவை வாபஸ் பெறுவதாக அறிவித்ததைத் தொடர்ந்து கடந்த வெள்ளிக்கிழமை அமைச்சர்களும் ராஜினாமாச் செய்வர் என்று அறிவித்தார். போய் விடுவேன் போய் விடுவேன் என்று சொல்லிக் கொண்டிருந்த மம்தா ஒரேயடியாக மத்திய அரசிடமிருந்து விலகிப் போய்விட்டார்.

இந்த நிலையில் திரினாமூல் இலகுவாக ஆதரவை வாபஸ் பெறுவதாக அறிவித்து விட்டு விலகிவிட்டது. ஆனால் இதனால் நெருக்கடிக்குள் சிக்கியது மத்திய அரசுதான். ஏனென்றால் திரினாமூல் காங்கிரஸ் கூட்டணியும் ஆளும் ஐக்கிய முன்னணிக் கூட்டணி அரசுக்கு மிகுந்த பக்கபலமாகத்தான் விளங்கியது. மேற்கு வங்கத்தில் பலம் வாய்ந்த கட்சியாக திரினாமூல் காங்கிரஸ் விளங்குகிறது.

இதனடிப்படையில் மம்தாவின் ஆதரவு வாபஸ் பெற்றதையடுத்து மத்திய அரசின் பலம் 254 ஆகியது. திரினாமூல்கட்சிக்கு19உறுப்பினர்கள் உள்ளனர். ஐ.மு கூட்டணியில் காங்கிரஸ் கட்சிக்கு 206 எம்.பிக்களும் தி.மு.க வுக்கு 18 எம்.பிக்களும் தேசிய வாத காங்கிரஸ் கட்சிக்கு 9 எம்.பிக்களும் இடம்பெற்றுள்ளனர். மேலும் ஏனைய கட்சிகள் சார்பில் 21 எம்.பிக்கள் மத்திய அரசுக்கு ஆதரவளித்து வருகின்றன.

இது இவ்வாறிருக்க மம்தாவின் ஆதரவு வாபஸ் குறித்து காங்கிரஸ் கருத்து வெளியிட்டுள்ளது. கட்சியின் ஜனார்த்தனன் திவேதி, திரிமூனல் காங். கட்சியை இன்னமும் மதிப்பு மிக்க கூட்டணிக் கட்சியாகக் கருதுகிறோம். மம்தா வைத்த கோரிக்கை குறித்து மத்திய அரசுடன் ஆலோசனை நடத்தினோம் என்று காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

மம்தாவின் திடீர் அறிவிப்பை அடுத்து என்ன நடக்கப்போகிறது. ஆட்சிக்கு ஆபத்து வருமா? அல்லது மாற்றுக் கட்சியினர் ஆளும் ஐக்கிய முற்போக்குக் கூட்டணிக்கு வருவார்களா என்றுதான் டில்லியில் பரவலாகப் பேசப்படும் விடயம். குறிப்பாக காங்கிரஸ் கட்சிக்கு பெரும்பான்மை குறைந்து விட்டதால் நாடாளுமன்றத்தைக் கூட்டி நம்பிக்கை வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்று எதிர்க் கட்சியினர் வலியுறுத்தி வருகின்றனர். அந்த வகையில் நாடாளுமன்றத்தைக் கூட்ட ஜனாதிபதி ஆலோசனைப்படி சிறப்பு நாடாளுமன்றக் கூட்டத்தைக் கூட்ட வேண்டும் என்று பாரதிய ஜனதாவின் மூத்த தலைவர் அத்வானி கோரியுள்ளார். இதே வேளை காங்கிஸுக்கு வெளியிலிருந்து ஆதரவு அளிக்கலாமா என்று முலாயம் சிங் தலைமையிலான சமாஜ் வாடிக் கட்சி , மாயாவதியின் பகுஜன் சமாஜ் என்பன ஆலோசித்து வருகின்றன.

எனவே திரினாமூல் காங்கிரஸ் கூட்டணி ஆதரவை இழந்தது மத்தியில் ஆட்சிக்கு பாதிப்பை எதிர் நோக்க வேண்டிய சூழல் உருவாகும் நிலைமைதான் ஏற்படும். எனவே மத்திய அரசின் அடுத்தகட்ட நடவடிக்கையைப் பொறுத்துத்தான் அதன் ஆட்சி நிலைபெறுமா என்பதைத் தீர்மானிக்க முடியும்.

# எதிர்த்து போராடுபவனே நிஜமான வீரன்

அரசியல்வாதிகள் மேடையேறி விட்டால் மடை திறந்த வெள்ளம் போல் பேசுவார்கள். அவர்கள் பேச்சில் ஈட்டிகள் பறக்கும். வாள்கள் மோதும், பீரங்கிகள் முழங்கும். கேட்பவர்கள் அனைவரும் மெய்சிலிர்த்துப் போவார்கள். சிலபேருக்கு உணர்ச்சி என்ற பாம்பு படமெடுத்து ஆடி வீரம் என்ற மாணிக்கத்தை கூட கக்கும்.

அதே அரசியல்வாதி மேடையை விட்டு இறங்கினால் பழம் வெட்டும் கத்தியை கூட கண்டு படபடத்தும் போவார்கள். மேடையில் வந்த வீரம் எங்கே போனது என்று நமக்கு தோன்றும். அவரிடமே உங்கள் வீரமெல்லாம் வெறும் வார்த்தை தானா? நடைமுறையில் கிடையாதா? என்று கேட்டால் சிரித்து மழுப்பி விடுவார்கள். அதற்கு காரணம் என்ன?

மேடை மீது ஏறிவிட்டால் சுற்றிலும் மக்கள் இருக்கிறார்கள். குறைந்தபட்சம் அவர்களை கோபப்படுத்தாதவரை நமக்கு ஏதும் நேராமல் பாதுகாப்பார்கள் என்ற நம்பிக்கைதான் முக்கிய காரணமாக இருக்கிறது.

இப்படி தன்னை நம்பாமல் மற்றவர்களை நம்பும் இயல்பு யாரிடம் இருந்தாலும் அவர்களால் வெற்றி பெற முடியாது. துணிச்சல் மிகுந்தவனே வெற்றியாளனாக, தலைவனாக உயர முடிகிறது. அறிவும், திறமையும் பல அரசியல் வாதிகளிடம் இருந்தும் அவர்களால் முன்னுக்கு வர முடியாமல் இருப்பதற்கு இதுவே மூல காரணமாகும்.

அரசியல் வாதியாக இருக்கட்டும் நிர்வாகிகளாக இருக்கட்டும், வியாபாரிகளாகவே இருக்கட்டும், அவர்கள் அனைவரும் தங்களது துறைகளில் வெற்றியடைய, முடி சூட்டிக் கொள்ள துணிச்சல் என்பது அத்தியாவசிய தேவையாகும்.

என்னிடம் துணிச்சல் இருக்கிறது. செயல் வேகம் இருக்கிறது எல்லாம் இருந்தும் என்னால் வெற்றி பெற முடியவில்லையே என்று சிலர் சொல்வார்கள்.

எங்கு போனாலும் பணம் வேண்டும் சார், பணம் மட்டும் இருந்து விட்டால் ஈடுபடும் காரியங்கள் எல்லாம் வெற்றியாகமுடிந்து விடும் என்று சிலர் பேசுவார்கள்.

பணம், பதவி, திறமை இவையெல்லாம் சும்மா பேச்சுக்குத் தான். எதற்கும் அதிர்ஷ்டம் வேண்டும் என்றும் சிலர் கூறுவார்கள். இத்தகைய கருத்துக்களை கேட்கும் போது இவையும் சரிதானே என்று நமக்கு தோன்றும். இவை சரிதான் ஆனால் இவற்றில் எது மிகவும் சரி என்பதை தீர்மானிக்க வேண்டும்.

விதி, பூர்வ ஜென்ம கர்மா போன்ற மிக பெரிய விஷயங்களை ஓரங்கட்டி வைத்து விட்டு சற்று ஆழமாக சிந்தித்தால் கடவுள் மனிதர் அனைவரையும் சமமாகவே படைத்துள்ளார். ஒவ்வொரு மனிதப் பிறவிக்குள்ளும் வெற்றி என்பது மறைந்து கிடக்கிறது என்பது புலனாகும்.

எவன் ஒருவன் தனது சுய தன்மையை உணர்ந்து தைரியமாக செயல்படுகிறானோ அவனே வெற்றி பெற்றிருப்பதும் தெரியவரும். நமது சுய தன்மை என்ன? நம் திறமை எது? என்பதை உணராமல் வேகமாக வேலைப்பட்டு எந்த பயனும் இல்லை.

நம்மில் பலருக்கு தனக்குள் இருக்கும் தனித்தன்மை என்னவென்று தெரியாது. விவசாயம் செய்வதில் தான் என்னுடைய ஆர்வம். ஆனாலும் நான் வழக்கறிஞருக்கு படித்து விட்டேன். காலையிலேயே அலுவலகம் வந்து இரவு வரை காத்திருக்கிறேன். ஒரு வழக்கு கூட என்னிடம் வரவில்லை. வாழ்க்கையின் பாதியை இப்படியே ஓட்டிவிட்டேன். என்னோடு படித்தவன் எல்லாம் எப்படி எப்படியோ இருக்கிறான். நான் மட்டும் தான் பள்ளத்தில் கிடக்கிறேன். என்னால் ஆர்வமுள்ள விவசாயத்தையும் செய்ய முடியவில்லை என்று உங்கள் நண்பரோ பக்கத்து வீட்டுக்காரரோ புலம்புவதை கேட்டு இருப்பீர்கள்.

அந்த மனிதன் குற்றமென்ன? அவருக்கு பணம் இல்லாததால் முன்னேற முடியவில்லையா? கடவுளின் கருணை என்ற அதிர்ஷ்டம் இல்லாததால் உயர முடியவில்லையா? நிஜமாகவே அவர் முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டை எது என்பதை தீவிரமாக சிந்திக்க வேண்டும். இவரிடம் பணமும் அதிர்ஷ்டமும் இருந்திருந்தால் மட்டும் வெற்றியை பெற்று இருப்பாரா? நிச்சயமாக கிடையாது.


இதற்கு எல்லாம் என்ன காரணம் முடிவு எடுக்க முடியாமையே. முடிவு எடுக்க வேண்டிய நேரத்தில் தயங்குவதும் மயங்குவதும் நம்மை கீழ்மைப்படுத்தி விடும். அப்படியாகி விடுமோ இப்படியாகி விடுமோ என்ற கற்பனையான அச்ச உணர்வே பல நேரங்களில் நம்மை குழப்பிக் குப்புற தள்ளிவிடுகிறது.

எனவே இந்த அச்சத்தை தூர தூக்கிப் போட்டு விட்டு எது வந்தாலும் எந்த கஷ்டம் நேரிட்டாலும் அதை நான் எதிர் கொள்வேன். அதை சமாளிக்க என்னால் முடியும் என்று நினைப்பே தலைவனாகும் தகுதியை கொடுக்கும்.

அபாயத்தை கண்டு பயந்து ஓடுபவன் கோழை, துணிந்து எதிர்த்து போராடுபவனே நிஜமான வீரன். இந்த வீரனைத் தான் கடவுளுக்கும் பிடிக்கும். அவனுக்காக இறைவன் விதியையே மாற்றுவான். எனவே துணிச்சலுடன் பேசுவதை விடுங்கள். துணிச்சலுடன் செயலில் இறங்குங்கள். வெற்றி உங்களுக்காகக் காத்திருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேற்குலகில் இசைத்துறையில் கலக்கிய சிலர்...


மைக்கல் ஜக்சன்

■ ரம்யன்

**பிராங்க் சினெட்ரா**

அமெரிக்காவில் பொப் இசை பிரபல்யமாவதற்கு முந்திய காலத்தில் கொடி கட்டிப் பறந்தவர் மட்டுமல்ல தனக்கென ஒரு பாணியைப் பின்பற்றிக் கொண்டு புகழ் ஏணியின் உச்சியில் திகழ்ந்தவர் பிராங்க் சினெட்ரா. (Frank Sinatra)

உயர் தரப் பாடசாலையில் படித்த காலத்திலேயே கணித பாடத்தை மிகவும் வெறுத்து இசையில்அதிக கவனம் செலுத்தலானார். பொறியியலாளராக வேண்டும் என்ற பெற்றோரின் விருப்பத்துக்கு மாறாக சிறு வயதிலேயே 'கிளப்'களில் பாடி வந்தார். பிற் காலத்தில் பாடல்கள் பாடுவதில் மட்டுமல்ல பாடி நடிப்பதிலும் பிரபல்யமானார். இவர் தனது மகள் நான்ஸியுடன் சேர்ந்து பாடி வெளியிட்ட பாடல் அல்பம் அமெரிக்காவில் மிக பிரபல்யம் பெற்றிருந்தது. 1915 டிசெம்பர் 12 ஆம் திகதி பிறந்த பிரான்சிஸ் அல்பேர்ட் சினேட்ரா 1998 மே 14 ஆம் திகதி லொஸ் ஏஞ்சல்சில் 82 ஆவது வயதில் காலமானார்.

**மெடொன்னா**

மெடொன்னா (Madonna) என்றால் மேற்குலகில் தெரியாதவர்கள் இருக்கமாட்டார்கள்- ஏன் ஆஸிய மற்றும் நாடுகளிலும் கூட மெடொன்னாவுக்கு புகழ் உண்டு. தமது இசை மூலம் மட்டும் அவர் புகழ் பெறவில்லை. வாழ்க்கை முறை மற்றும் அவரிடமுள்ள ஆக்கப்பூர்வமான சந்தைப்படுத்தும் ஆற்றல்களும் காரணம் என்பார்கள். 80 களில் புகழ் ஏணியில் ஏறத் தொடங்கிய மொடென்னா இன்றுவரை மங்காத புகழுடன் திகழ்கிறார்.

இசைத் துறையில் புகழ்பெற்ற மெடொன்னா திரைப்படங்களிலும் கலக்கத் தொடங்கினார். மெடொன்னா லூயில் சிக்கோன் என்ற முழுப் பெயரைக் கொண்ட மெடொன்னா 1958 ஓகஸ்டில் அமெரிக்காவில் பிறந்தார். அவரது தொழில் பற்றிக் குறிப்பிடுகையில் பத்திரிகையொன்று; பாடகர், பாடல் ஆசிரியர், இசையமைப்பாளர் றிக்கோர்ட் தயாரிப்பாளர், படத்தயாரிப்பாளர், பெஷன் அமைப்பாளர், நூலாசிரியர், நடிகை என்று நீண்ட பட்டியலை வழங்கியுள்ளது. பொப்பிசை ராணி என்றழைக்கப்படும் மெடொன்னா பிறக்கும்போது கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்தவராய் இருந்தார். பிறகு பௌத்த சமயத்திலும் சற்று ஈர்க்கப்பட்டிருந்தார். அப்போது யூத சமயப் பிரிவான கபல்லாவைத் தழுவிக் கொண்டு மத மாற்றம் பெற்றுள்ளார். வெள்ளிக்கிழமை இரவுகளில் அவர் நிகழ்ச்சிகளை நடத்துவதில்லை. ஏனென்றால் வெள்ளி இரவுதான் யூதர்களின் முக்கிய சமய தினமாகும்.

**வைட்னி ஹூஸ்ட்ரன்**

வைட்னி ஹூஸ்ட்ரன் Whitney Houston 1977 ஆம் ஆண்டில் இருந்து இசைத் துறையில் புகழ் பெற்று விளங்குகிறார். அவரது தாயார் சிஸ்ஸி ஹூஸ்ட்ரனும் ஒரு பிரபல இசைக் கலைஞரே. ''அவனை எனக்கு நன்றாகத் தெரியும்'' என்ற பாடல் 1987 இல் வைட்னி என்ற அல்பத்தில் இடம் பெற்று சக்கைபோடுபோட்டது.


மெடொன்னா

அவர் ஒரு பாஷன் மொடலாக மட்டுமன்றி சிறந்த நடிகையாகவும் திகழ அவரது உடல்வாகு உதவியாக இருந்தது.

ஆபிரிக்க- அமெரிக்க பெண்ணான வைட்னி ஹூஸ்ட்ரன் இசை உலகில் ஏற்படுத்திய புரட்சியானது அவரைப் போன்ற ஏராளமான அப்ரா - அமெரிக்க பெண்கள் இந்தத் துறையில் வெற்றிகரமாக நுழைந்து புகழ் தேடிக்கொள்ள உதவியது.

1991 ஆம் ஆண்டு இடம் பெற்ற சுப்பர் பவுல் கண்காட்சியில் வைட்னி ஹூஸ்ட்ரன் "ஸ்டார் ஸ்பாங்கிள்ட் பானர்" என்ற அமெரிக்க தேசிய கீதத்தைப் பாடி புகழ் பெற்றார். அது ஒரு தனி பாடலாக வெளியிடப்பட்டது. 2001 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 11 தாக்குலின் பின்னரும் இந்தப் பாடல் தனி பாடலாக வெளியிடப்பட்டது.

1992 இல் வெளியான பொடிகார்ட் என்ற படத்தில் கெவின் கொஸ்ட்னருடன் இணைப்பாத்திரத்தில் நடித்தார். அந்தப் படத்தில் பல பாடல்களையும் பாடினார். வேறு பல படங்களிலும் நடித்து பாடி புகழ் ஏணியில் நிற்கிறார் வைட்னி ஹூஸ்ட்ரன்.

**மைக்கல் ஜக்சன்**
(MichaelJackson)


பிராங்க் சினெட்ரா

பொப்பிசை மன்னன் (The king of pop) என்று புகழப்பட்ட மைக்கல் ஜக்சன் 1958 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 29 ஆம் திகதி அமெரிக்க கலிபோர்னியா மாநிலத்தில் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் பிறந்தார். அவரது தொழில், பாடகர், பாடல் எழுதுபவர், ஒலிப்பதிவுகள் தயாரிப்பவர், ஏற்பாட்டாளர், நடிகர், நாட்டிய தயாரிப்பாளர் என்பன. சிறு குழந்தையாய் இருக்கும் போதே ஜக்சன் பாட ஆரம்பித்து விட்டார். பின்னர் ஜக்சன் என்ற பெயரில் தமது சகோதரர்களையும் சேர்த்துக் கொண்டு ஓர் இசைக் குழுவை ஆரம்பித்தார். பின்னர் அதற்கு 'ஜக்சன் பைவ்' என்று பெயர் மாற்றம் செய்தார். 1960 களில் அவர் பாடிய ஐ வோன்ட் யு பேக் (I want you back) என்ற பாடலுடன் புகழ் ஏணியில் ஏறத் தொடங்கினார். ஜக்சன் பைவ் பெரும் புகழ்பெற்றது. கொட்டு பிதெயார் என்ற தனிப் பாடல் பதிவை 1971 இல் வெளியிட்டார்.

1979 இல் தனது தனி பாடல் அல்பத்தை வெளியிட்டார். அத்துடன் பிரபல தயாரிப்பாளர் குயின்ஸி ஜோன்ஸ் உடன் உறவு ஏற்பட்டது. அதன்பேரில் அவருடன் சேர்ந்து இரண்டு அல்பங்களை வெளியிட்டார்.

**அசை போட ஒரு விடயம் 45**

புகழின் உச்சிக்கு சென்ற ஜக்சன் 1985 ஆண்டளவில் பல கருணை நிலையங்களுக்குத் தாராளமாக நிதி உதவிகளை வழங்கினார். வி.ஆர்.த வேர்ல்ட் என்ற அல்பத்தை ஆபிரிக்க உதவி நிதிகளுக்காக தயாரிப்பில் இணைந்து செயற்பட்டார். எதியோப்பியாவில் ஏற்பட்டிருந்த கடும் பஞ்சத்தின் போது பெருமளவில் பணம் உதவ இந்த அமைப்பு காரணமாய் இருந்தது. கருணை செயற்பாடுகள் மற்றும் பிளாஸ்டிக் அறுவை சிகிச்சையில் அவருக்கு ஏற்பட்டிருந்த ஆர்வம் முதலியவை அவரை ஊடகப் பிரியனாக மாற்றிவிட்டிருந்தது. ஊடகங்களுக்கு அவர் பற்றிய பரபரப்பான செய்திகள் கிடைப்பதாக இருந்தன. அவரது இந்தப் போக்கு ஆபிரிக்க-அமெரிக்க மக்கள் மத்தியில் அவருக்கு எதிர்ப்பைக் கொண்டு வந்தது. தம்மை அதி வெள்ளையராகக் காட்டிக்கொள்ள முயல்கிறார் என்று அமெரிக்கவிலுள்ள ஆபிரிக்க மக்கள் கண்டித்தார்கள்.

ஜக்சன் தனது இசைத் தொழிலை தமது சகோதரர்களுடன் இணைந்தே ஆரம்பித்திருந்தாலும் அவர்களில் எவராலும் அவரது உச்சத்தை அடைய முடியவில்லை. அவரது இளைய சகோதரி ஜெனட் ஜக்சனால் மாத்திரம் ஓரளவு அவருக்கு இணையான அளவுக்கு வர முடிந்தது. ஜக்சனுடன் இணைந்து பல ஆல்பங்களில் பாடி நடித்து அவரும் புகழ் பெற்றார். 2009 ஆம் ஆண்டு ஜூன் 25 ஆம் திகதி 50 வயதில் ஜக்சன் காலமானார்.

**எல்விஸ் பிரெஸ்லி**
(Elvispresley)

இளம் வயதிலேயே இவ்வுலகை விட்டு நீங்க நேர்ந்தாலும் எல்விஸ் பிரெஸ்லி தம் காலத்தில் மேற்குலக இசைத்துறையில் கொடிகட்டி பறந்தவர் என்பார்கள்.

றொக் அன் ரோல் என்ற ஆடல் பாடல் வகையில் ஒரு புதிய பாணியை வெளிப்படுத்தி 50 களிலும் 60 களின் ஆரம்ப காலத்திலும் புகழின் உச்சியில் திகழ்ந்தவர். ஆழமான குரல் அமைப்பும் கவர்ச்சியான தோற்றமும் கொண்டவரான எல்விஸ் உலகம் முழுவதும் பெண்களை கவர்ந்திழுப்பவராய் இருந்தார். இசைத் துறையில் அவர் புகுத்திய புதிய பாணியானது ''எல்விஸ் தவெல்விஸ்'' என்ற பட்டப் பெயரை அவருக்கு பெற்றுக்கொடுத்தது.

எல்விஸ் பல ஆங்கிலப் படங்களில் கதாநாயகனாக நடித்துள்ளார். அவைகளில் ஒன்று கேர்ல்ஸ் கேர்ல்ஸ் கேர்ல்ஸ் (பெண்கள், பெண்கள், பெண்கள்) என்பதாகும்.

1935 ஆம் ஆண்டு ஜனவரி 8 ஆம் திகதி அமெரிக்காவில் தென்னஸி மாகாணத்தில் மெம்பிஸ் என்ற ஊரில் பிறந்த எல்விஸ் பிரெஸ்லி 1977 இல் தனது 42 வயதில் மறைந்தார். இவருடன் இரட்டையாகப் பிறந்த இன்னொரு சகோதரர் சிறுவயதிலேயே இறந்து போனார். பிராமி விருதுகள் பலவற்றை வென்றவரான எல்விஸ் இசைத் திறமைக்கான அமெரிக்க இசை விருதுகள் இவருக்கு மறைந்த பின்னரே கிடைத்தன.

# குழந்தைகளின் உள்ளம் வெள்ளைக் காகிதம்

■ பிறேமினி

குழந்தைகளின் மனம் வெள்ளைக்காகிதம் போன்றது அது கசங்கி விடும் முன்பே நல்லதை எழுதிவிட வேண்டும்' என்பர் அறிஞர்கள். குழந்தைகளின் மனதில் நல்லதை எழுதிவிட வேண்டிய பொறுப்பு பெற்றவர்களின் கைகளிலேயே இருக்கின்றது.

குழந்தைகளின் மூளையில் தகவல்களை முதலில் பதிவு செய்பவர்கள் பெற்றவர்கள் .அதேபோல் குழந்தைகளின் உணர்வுகளையும், ஏக்கத்தையும், தேவைகளையும் முதலில் அறிந்து கொள்பவர்களும் பெற்றவர்களே . பிள்ளைக்குப் பேசக் கற்றுக் கொடுக்கின்றோம். நடக்கக் கற்றுக்கொடுக்கின்றோம் குழந்தையும் நாம் சொல்வது எல்லாவற்றையும் தானும் செய்கின்றது. அதுவே குழந்தையின் மூளையில் பதிவும் ஆகின்றது.

ஒரு குழந்தை விரும்பும் எல்லாவற்றிலும் எது தேவை, தேவையில்லை என்பதை நாம் அனைவருமே அறிவோம். அன்பு, பாசம், அக்கறை, பாதுகாப்பு, இவை இயல்பாகவே எல்லாப்பெற்றோரிடம் இருந்தும் பிள்ளைகளுக்குக் கிடைக்கின்றன. அடுத்தகட்டம் குழந்தை மெல்ல மெல்ல மற்றக் குழந்தைகளுடன் சேர்ந்து விளையாடக் கற்றுக்கொள்கின்றது. இங்கே தான் எல்லாப் பெற்றவர்களும் மிகவும் விழிப்பாக இருக்கவேண்டும். எல்லாக் குழந்தைகளும் ஒரே சூழலில் இருந்து வளர்வதில்லை சில குழந்தைகளது வீட்டில், கோபப்படும் பெரியவர்களோ, கீழ்த்தரமான வார்த்தைகளைப் பயன்படுத்துபவர்களோ, அடிக்கடி அடிபிடி சண்டை செய்து அழுதுகொண்டு இருப்பவர்கள் கூட இருக்கலாம். இந்தச் சூழலில் இருந்து வளரும் குழந்தைகளின் மனம் கசங்கிய காகிதங்களே - இந்தக் குழந்தைகள் சேர்ந்து விளையாடும் போது சிரித்து விளையாடுவார்கள் சில சந்தர்ப்பங்களில் ஒருவர் மீது கோபப்பட்டு அடிக்கின்ற நிலைமை உருவாகும் இங்கே அடிவாங்கிய குழந்தை பெரிதாகச் சத்திமிட்டு அழும், அடித்த குழந்தை கோபத்தோடு நிற்கும் அதைப்பார்க்கும் மற்றக்குழந்தைகள் கைதட்டிச் சிரிக்கும் இங்கே அந்தக்குழந்தை ஏன் அடிக்கிறது, மற்றக் குழந்தை ஏன் அழுகிறது தாம் ஏன் சிரிக்கிறோம் என்ற காரணம் அவர்களுக்குத் தெரியாது. ஆனால் அந்த உணர்வுகள் அவர்களிடமிருந்து வெளிப்பட்டுவிடும்

அடிவாங்கி அழுத குழந்தை அழுதபடியே வீட்டுக்கு வரும் நடந்ததை பெற்றவரிடம் சொல்லும் . இங்கே குழந்தையின் மனதில் பழிவாங்கும் உணர்வோ, அடித்த குழந்தைக்கு திருப்பி அடி வாங்கிக்கொடுக்க வேண்டும் என்ற உணர்வோ அந்தக்குழந்தைக்குத் தெரியாது. ஆனால் இங்கே பெற்றவர்கள் அடித்த குழந்தையின் வீட்டுக்குச் சென்று தகாத வார்த்தைகளால் பெற்றோரையும் திட்டி, பிள்ளையையும் வெருட்டுவார்கள். கோபத்தில் இதைப் பார்க்கும் மற்றப் பெற்றவரும் தமது பிள்ளையை பேசி அடியும் போடுவார்கள். இங்கே தான் பெற்றவர்கள் பழிவாங்கும் உணர்வை இரு குழந்தைகளுக்குள்ளும் இயல்பாகவே புகுத்தி விடுகிறார்கள்.

மாறாக பிள்ளைகளிடம் அன்பை [illegible] சும்மா விளையாட்டுக்குத் தானே அது பிள்ளைக்கு நோகாது .....? எனத் தட்டிக் கொடுக்கும் பெற்றவரும் அதே போல் அடித்த பிள்ளையின் பெற்றவரும் 'உங்களோடு விளையாட ஆவலோடு வந்த பிள்ளையை அடிக்கலாமா? பாரும் பிள்ளை எவ்வளவு அழுகுதெண்டு பாவமில்லையா..... நான் இனி அடிக்கமாட்டன் எண்டு மன்னிப்பு கேட்டு விளையாடுறதுக்குக் கூப்பிடுங்கோ..... ? எனச் சொல்லும் போது பிள்ளைகளுக்கிடையே அன்பு, புரிந்துணர்வு, விட்டுக்கொடுப்புப் போன்ற நல்ல சிந்தனைகள் பதிந்துவிடும்.

பெற்றவர்கள் குழந்தைகளுக்கு முன்னால் சண்டைசெய்வதை கைவிட்டுவிட வேண்டும் ஆனால் இன்று நாம் பலரைக் காண்கிறோம் பிள்ளைகள் இருப்பதையே பெற்றவர்கள் மறந்து அடிபிடிப்பட்டு தகாத வார்த்தைப் பிரயோகங்களைப் பயன்படுத்தி கீழ்த்தரமாக நடந்து கொள்கிறார்கள் இதனால் பிள்ளைகளின் மனதில் கோபம், விரக்தி, பயம்போன்ற உணர்வுகளை பெற்றவர்களே விதைத்து விடுகின்றார்கள்.

இதேபோலவே குழந்தைகளை வைத்துக்கொண்டு புகைப்பிடித்தல், பிள்ளைகளுக்கு முன்னால் மது அருந்துதல் போன்ற செயற்பாடுகளை தந்தைமார் மிக இயல்பாகச் செய்கின்றார்கள். பிள்ளை சிகரெட்டைத் தானும் பிடிக்கவும், மதுவை தானும் அருந்தவும் முனையும் . விளையாட்டாக இதைப் பிள்ளைக்குக் கற்றுக்கொடுக்கவோ, இல்லை பிள்ளை பார்த்து அறிந்து கொள்ளவோ இடம் கொடுக்கும் தந்தையால்தான் பிள்ளை தவறான வழியைக் கற்றுக்கொள்கின்றது.

எனவே பெற்றோர்கள் வெள்ளைக் காகிதமாய் இருக்கும் உங்கள் பிள்ளைகளின் வெள்ளை மனதில்நல்லவற்றைக் கற்றுக்கொடுங்கள். கள்ளம் கபடம் இல்லாத அந்தப்பிஞ்சுகளுக்கு அன்பு, இரக்கம், மனிதநேயம், தயவு, தாட்சண்யம், ஒழுக்கம், நல்ல பண்பாடு என்பவற்றை அவர்களின் மனதில் தூவிவிடுங்கள். அதுவே இந்தச் சமூகத்தில் அவர்கள் வளர்ந்து நல்லவர்களாக, ஒழுக்க சீலராக, சமூகப்பற்றாளர்களாக வளர்த்துவிடும். பெற்றவர்களே! வெள்ளைக் காகிதங்களாய் இருக்கும் உங்கள் பிள்ளைகளில் சிறு கறுப்புப் புள்ளி வருவதாக இருந்தாலும் அதற்கு நீங்களே பொறுப்பு என்பதை புரிந்து நடந்து கொள்ளுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருந்தாத ஜென்மம்

ராகவனுக்கு அந்த ஊரில் கிடைத்த மரியாதை புகழாரம் எல்லாமே அவனை ஒரு நல்லவனாக பெரியவனாக அடையாளம் காட்டியது. அப்படிப்பட்ட கௌரவமானவன், படித்தவன் என்ற பெருமையுடன் வாழ்ந்தவனுக்கு அன்று டாக்டர் கூறிய வார்த்தைகள் அவனுடைய தலையில் இடியாக விழுந்தது. எத்தனையோ தடவைகள் வைத்தியசாலைக்கு போயிருக்கிறான். மனைவியையும் அழைத்துக் கொண்டு போயிருக்கிறான். ஆனால் இன்று....

''படிச்சவன் மாதிரி இருக்கிறீர்கள். நோய் கண்டவுடன் டாக்டரிட்ட வரணும் என்று தோன்றவில்லையா?.. மனைவியை சோதித்த பிற்பாடே அவர் இந்த வார்த்தைகளை சற்றுக் கடுமையாக அவனைப் பார்த்துக் கேட்டார்.

வைத்தியரின் இந்தக் கடுமையான சொற்கள் அவனை ஒரு கணம் உலுப்பிவிட்டது. ''அப்படியென்றால் அவளுக்கு வெறும் காய்ச்சல் மட்டுமில்லை வேறு ஏதாவது....'' என்று சிந்தித்தவன் மிகவும் கலவரமடைந்தவனாக ''ஏன் டாக்டர் ஏதாவது...'' என்று இழுத்தான். அவர் அவனுடைய கேள்விக்குப் பதில் கூறாமலே...

''இந்தக் காய்ச்சல் இவவுக்கு எப்ப வந்தது..'' கேள்விக் கணையைத் தொடுத்தார்.

''ஒரு கிழமையாகக் காய்ச்சலில் இருந்தா. பனடோலையும் குடிநீரையும்... அவன் கூறி முடிக்க முன் வைத்தியர் குறுக்கிட்டு...

''மூன்று நாள்களுக்கு மேலும் உங்க கை வைத்தியத்தை செய்தீர்களே. பனடோலை அதிகமாகப் பாவிக்கக் கூடாது என்று டி.வி., ரேடியோ மூலம் ஆலோசனை கூறி வருகிறோம் நீங்கள் என்னவென்றால்..'' என்று கூறியபடி யோசனையில் ஆழ்ந்தார்.

அவனுக்கு ஒரு நிமிடம் போறது ஒரு யுகம் கழித்த மாதிரி இருந்தது. ''வோர்ட்டில அனுமதிக்கவேண்டும்'' என்று கூறியபடி தாதியை அழைத்தார்.

''வோர்ட் நம்பர் டென்னில் இவவை அனுமதித்து விடுங்கள்'' என்று தாதியிடம் கூறியவர் இவனை நோக்கி... '' இவவை வோர்டில் விட்டுட்டு, என்னென்ன தேவையென்பதை அவர்கள் கூறுவார்கள். அவற்றைக் கொண்டு வந்து கொடுத்து விடுங்கள். சரி ஸிஸ்டர் இவவுக்கு பிளட் டெஸ்ட் முதலில் எடுங்கள். நாளை காலை சலம் சோதிக்க வேண்டும்'' என்று கூறியபடி. அந்த டொக்டர் ஸ்ரெதஸ் கோப்பையும் கழுத்தில் போட்டபடி வோர்ட்டை பார்க்கப் போனார்.

ராகவனுடைய மனைவியை சக்கர நாற்காலியில் ஏற்றிக் கொண்டு அதைத் தள்ளிக் கொண்டு வைத்தியசாலை ஊழியர் முன்செல்ல அதைத் தொடர்ந்து சென்ற ராகவன்அருகே வந்த தாதியரிடம் ''மிஸ் இவவுக்கு என்ன நோய் என்று டொக்டர் சொல்றார்...'' என்று பயத்துடன் கேட்டார்.

''நீங்கள் ஒரு கிழமையாக வீட்டில் வைத்திருந்துவிட்டு இப்ப வந்தீர்கள். நீங்களே கை வைத்தியமும் செய்திருக்கிறீர்கள். அதனாலே உடனடியாக எதுவும் சொல்ல முடியாது. இப்ப அவவுக்கு சேலைன் ஏற்றினால் தான் அவவினால் கொஞ்சம் எழும்ப முடியும். இரத்தம், சலம் எல்லாம் சோதித்த பிற்பாடு தான் எதுவும் சொல்லமுடியும். இப்ப சரியாய் பலவீனமாயிருக்கிறா. இரண்டு மூன்று நாள்களுக்கு வோர்டில் நிற்க வேண்டி வரும்'' என்று அந்தத் தாதி கூறி முடிக்க முன்னர் அவனுடைய மனைவி,

''என்னங்க நான் எப்படி வோர்ட்டில் நிற்கிறது..'' என்று மெதுவாகக் கேட்டாள்.

''நீ பயப்படாத. நான் அடிக்கடி வந்து பாப்பன்'' என்றான் ராகவன்.

''விசிட்டர்ஸ் டைமில நீங்கள் நிற்கலாம். இரவில யார் நிற்கிறது'' அவளுடைய குரலில் இனம் புரியாத வேதனை இழையோடியதை அவதானித்த அந்தத் தாதி, ''அம்மா ஏன் கவலைப்படுகிறீங்கள். இப்படி யோசித்தால் நோய் கூடுமே தவிர வேறொன்றுமில்லை. நாங்கள் எல்லோரும் இருப்போம் தானே..'' மிகமிக அன்பாகக் கூறினாள்.

அவளுடைய பேச்சில் இழையோடியிருந்த பாசம், அன்பை உணர்ந்த ராகவன், ''ஸிஸ்டர் மிக்க நன்றி. ஆஸ்பத்திரியா! அங்கேயிருக்கிற நர்ஸ்மார் நாய்போல எரிந்து விழுவார்கள் என்று வெளியில் கதைப்பார்கள். ஆனால் இங்கு வந்த பிற்பாடுதான் நீங்கள் தாயைவிட நன்றாக அன்பு செலுத்துகிறவர்கள் போல இருக்கிறது.''

''உண்மைதான் ஐயா, என்னதான் நாங்கள் எங்கள் கடமைகளை இதய சுத்தியுடன் செய்தாலும் குறைசொல்லிப் பழகியவர்களுக்கு யாரையும் நல்ல விதமாகச் சொல்ல அவர்களால் முடியாது..'' என்று ஆதங்கத்துடன் கூறியவள் தொடர்ந்து,

''ஐயா! நீங்கள் இவவை வோர்டில் சேர்த்தபின் நீங்கள் இவருக்கு உடுப்புக்கள், தலையணை, சுட்டாறின தண்ணீர், சுடுதண்ணீர் போத்தலுக்குள் தேநீர் விட்டுக் கொண்டு வாருங்கள். பிளேட், கப் போன்றவற்றையும் கொண்டு வாருங்கள்''

''சரி மிஸ்'' என்று கூறவும் அவளை அனுமதிக்க வேண்டிய வோர்ட்டில் விட்டுட்டு ஒரு ஓட்டோவைப் பிடித்துக் கொண்டு வீட்டுக்கு வந்தான். ஓட்டோவுக்கு காசைக் கொடுத்து அனுப்பிவிட்டுக் கதவைத் திறந்து இயந்திர கதியில் செயற்பட்டான். ஆறு மணிக்கு முன்னதாக எல்லாவற்றையும் ஆயத்தப்படுத்தி 'சத்திரிக்கா பாக்' இல் வைத்துவிட்டு சைக்கிளில் ஏற்றிக் கொண்டுபோய் ஆஸ்பத்திரியை அடைந்ததும் பாக்கையும் தூக்கிக் கொண்டு வோர்டுக்கு விரைந்தான்.

''ராணி, என்ன யோசனையில் இறங்கிவிட்டாய்?''

''யோசிக்காமல் என்ன செய்யிறது. இங்கே ஒவ்வொருத்தருக்கும் ஒரு துணை இருக்குது. எனக்கு மட்டும்...'' விம்மல் பொருமலுடன் கூறினாள்.

''இண்டைக்கு ஒரு நாள் தானே. நாளைக்குப் பிள்ளை வந்துவிடுவாள்'' என்றான்.

''அவளுடன் போனில் கதைத்தீர்களா?'' ஆவலுடன் கேட்டாள்.

''இப்பவே உன்ரை முன்னிலையில் கதைக்கிறன்'' என்று கூறியபடி கைத்தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டான்.

''என்னங்க அவள் வராளா'' ஆசை பொங்கக் கேட்டாள்.

''இந்தா அவள் உன்னுடன் பேசப் போறாளாம்'' என்று கூறியபடி தொலைபேசியை அவளிடம் கொடுத்தான். எதிர்முனையிலிருந்து வந்த சொற்கள் அவளுக்கு வேதனை அளித்தது.

''இந்தாங்க அவளுக்குவேலையாம்...'' என்று கூறியபடி அவனிடம் தொலைபேசியை கொடுத்தாள். அவளுடைய கண்களில் கண்ணீர் திரையிட்டிருந்தது.

''இஞ்சை பார், தொழில் என்றால் நினைத்த மாத்திரத்தில் நினைத்தவுடன் விட்டுட்டு வரலாமோ. எத்தனை பேரிட்ட பொமிஷன் வாங்க வேண்டும். படித்த உனக்கே இது பற்றித் தெரியாதா?'' என்று அவளுடைய தலையை அன்புடன் தடவியபடி அவளுக்கு ஆறுதல் கூறினான்.

''நான் அவள் வரவில்லை என்று அழவில்லை. தனித்துப் போனேன்'' என்று இழுத்தாள்.

''இதைப் பற்றிக் கவலைப்பட்டால் வருந்தம் தான் கூடும். சரி நேரமாகுது இனி நான் இங்கே நிற்கேலாது. மணியும் அடித்திட்டுது. அவனும் எல்லாரையும் கலைக்கிறான். போறேன். காலமைக்கு வாரேன்'' என்று கூறியபடி அவளிடம் விடை பெற்றுக் கொண்டு வெளியேறினான் கனத்த இதயத்துடன். வைத்தியசாலையை விட்டு வெளியேறியவன் சைக்கிள் பார்க்கில் உள்ளவனிடம் பணத்தைக் கொடுத்துவிட்டு நிறுத்தியிருந்த சைக்கிளை எடுத்துக் கொண்டு வீட்டுக்கு வந்தான். வீட்டுக்குள் நுழைந்தவன் வேதனையுடன் கதிரையில் சாய்ந்தான். பற்பல யோசனையில் மூழ்கியவன் அப்படியே தூங்கிவிட்டான். ஐந்து மணிக்கு அடித்த அம்மன் ஆலய மணியொலி கேட்டு திடுக்கிட்டு எழும்பியவன் இயந்திர கதியில் செயற்பட்டான். குக்கரைப் பற்ற வைத்து நீரைக் கொதிக்க வைத்து அரைப்பேணி அரிசி மா பாத்திரத்தில் போட்டு கொதிநீர் விட்டு இடியப்பமாவை குழைத்துவிட்டு மிகுதி நீரில் தேநீர் ஊற்றி பிளாஸ்குக்குள் விட்டு வைத்தான். இடியப்பத்தையும் அவித்து சொதியையும் செய்தான். எல்லாவற்றையும் சாப்பாட்டுப் பெட்டியில் வைத்து பிளாஸ்ரிக் கூடைக்குள் வைக்கப் போகும் போது தொலைபேசி அழைப்பு மணி ஓடிச் சென்று சுவிற்சைத் தட்டி,

''ஹலோ'' ஆமாம் நான் தான் ராகவன் பேசுகிறேன்'' என்றான்.

தொலைபேசியில் மறுமுனையிலிருந்து வந்த செய்தியால் நிலை குலைந்துவிட்டான். "இதோ வாறேன்'' என்று கூறியவன் அவசர அவசரமாகக் கதவைப் பூட்டிக் கொண்டு சைக்கிளில் வைத்தியசாலைக்கு விரைந்தான்.

''அங்கே சென்றவன் அவள் இருந்த வோர்டுக்குள் நுழைந்தான். வைத்தியர் நாடித்துடிப்பைப் பார்த்தபடி நின்றிருந்தார். அவருக்கு அருகே இருந்த தாதி இவரைக் கண்டதும்,

''ஐயா வாருங்கள் அவவைக் கூப்பிடுங்கள்'' என்று கூறியபடி வழிவிட்டான். அவன் தன் மனைவியை நெருங்கி ''ராணி என்ன செய்யுது'' என்று சற்று உரத்த குரலில் கேட்டான்.

அவள் கண்களைத் திறந்து அவனைப் பார்த்தாள். இமைகள் அசையவில்லை. பார்வை அப்படியே இருந்தது. ''டாக்டர் என்ன! ஏன் இப்படி...!!!'' என்று குரல் கம்மக் கேட்டான்.

''டாக்டர் அவனை ஏறிட்டு நோக்கினார். ''நோய் கண்டவுடன் வந்திருந்தால் தகுந்த சிகிச்சை கொடுத்திருக்கலாம். நோயின் அறிகுறிகளே உங்கள் கை மருந்தால் சிதைந்து போயிட்டுது. பற்பல டெஸ்ட் எடுத்த பிற்பாடுதான் டெங்கு நோய் எனக் கண்டுபிடிக்கக் கூடியதாக இருந்தது. நோய் முற்றின பின் வந்து நோயாளியைக் காப்பாற்றலாம் என்று நினைப்பதில் எந்தப் பிரயோசனமும் இல்லை'' என்று கூறிவிட்டு அவர் அங்கிருந்து புறப்பட்டுவிட்டார். அவன் பிரமை பிடித்தவன் போல் நின்றிருந்தான்.

''ஐயா எல்லாம் விதிப்படி தான் நடக்கும். இப்படியே நின்றால் காம்ராவுக்குள் (சவச்சாலை) போட்டிடுவோம். நீங்கள் ஒரு வாகனம் பிடித்து வந்து 'பொடி'யைக் கொண்டு போற வழியைப் பாருங்கள் என்று அந்தத் தாதி கூறிய பின்னர்,

''இப்ப வந்துடுறன். காம்ராவுக்குள் போட்டு விடாதேங்கோ'' என்று கூறிவிட்டு வெளியேறி தன் தங்கைக்கு போஃன் செய்து அவளுக்கு விடயத்தைச் சொல்லிவிட்டு ஒரு மோட்டார் வண்டியை பிடித்துக் கொண்டு வந்தான். வைத்தியசாலை சிற்றூழியர்களின் உதவியுடன் வண்டியில் ஏற்றிக் கொண்டு வீட்டையடைந்தான்.

அவன் அன்று முழுக்க அழுதழுது தன் துன்பத்தை வெளிப்படுத்திவிட்டான். அடுத்த நாள் காலை அயல் சனங்கள், உற்றார், உறவினர் எல்லோரும் கூடிவிட்டார்கள். அந்தநேரம் வாசலில் வான் வந்து நின்றது.

(18 ஆம் பக்கம் பார்க்க)

சிறுகதை

எஸ்.எஸ்.லக்ஷ்மி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பக்கம் நிரப்பப்பட்ட பாடு

■ எஸ்.எம்.கோபாலரத்தினம்

நூல்கள் இல்லாமல் வில்லுப்பாட்டு நிகழ்ச்சியுடன் எப்படி நூலை வெளியிடுவது? யாரிடமும் பணம் மாற வழியில்லை என்றும் கவலைப்பட்டார். உடுவில் எம்.பியான வி. தர்மலிங்கம் என்னுடன் நல்ல நட்பு. வேறு வழியில்லை. இருவரும் கந்தரோடைக்கு சைக்கிள்களில் போனோம். ''மதியம் பன்னிரெண்டு மணிக்கு ஈழநாடு அலுவலகம் வருகிறேன் போ'' என்று தர்மர் சொன்னார். சொன்னபடி வந்தார். கேட்டதைத் தந்தார். இடையிடையே அலுவலகத்துக்கும் பொங்கல் பெருநாளில் வீட்டுக்கும் வரும் தர்மர் இரு கால்களையும் மடக்கி கதிரையில் உட்கார்ந்து பகிடிவிட்டுப் பல விடயங்களையும் பேசிச் சிரித்துச் செல்வது வழக்கம். தர்மருக்கு நேர்ந்த முடிவு பெரும் அதர்மம் மட்டுமல்ல அநியாயம், அட்டூழியம், ஆலாலுக்கும் தான். ஆலாலும் பரமசாமியுடன் வீட்டுக்கு வந்து உரையாடுவது வழக்கம்.

மாலையில் லடிஸ் வீரமணி, கண்ணன் குழுவின் பக்கவாத்தியங்களுடன் கண்ணனும் வந்து நிகழ்ச்சி சிறப்பாக நடந்து முடிந்தது. நூல் வெளியீடும் நடந்தது.

வீரகேசரியில் அந்த நாளில் (ஐம்பதுகளில்) பக்கம் நிரப்புவதற்கு செய்தித் தட்டுப்பாடு பெரும் பாடு. மதியம் வரும் ஆங்கில மாலைத் தினசரிகள் ''ரைம்ஸ் ஒவ் சிலோன்'' 'தி ஒப்சேவர்' ஆகியவற்றின் இதழ்களுக்காக பிரதம உதவி ஆசிரியர் ஆர்.வேங்கடராமன் கால்களை படபடவென ஆட்டியபடி கன்னத்தில் கை வைத்துக் காத்துக் கொண்டிருப்பார். இப்போது செய்திகள் மட்டுமல்ல கட்டுரைகளா, படங்களா, விநோத நிகழ்ச்சிகளா எதுவேண்டுமோ அவை எல்லாவற்றையும் தருவது மட்டுமல்ல கேட்காதவைகளையும் கூட தருவதற்கு காமதேனுபோல இருக்கும் கணினி இயந்திரம் அன்றிருக்கவில்லை. வீரகேசரியிலும் சரி பின்னர் ஈழநாடுவிலும் சரி தலைப்புச் செய்திக்கு தினமும் இரவில் தலையைப் பிய்த்துக் கொள்ள வேண்டியிருக்கும்.

பகலில் பக்கம் நிரப்புவதற்கு வாரத்தில் ஒருநாள் கலையரங்கம் என்று சினிமா மற்றும் உள்ளூர் கலை நிகழ்ச்சிகள் ஒரு பக்கம் வெளியிடலாமென்று யோசனை சொன்னேன். நல்ல யோசனை அதை நீங்களே தொடங்கிச் செய்யுங்கள் என்று செய்தி ஆசிரியர் வாஸ் ஐயர் சொல்லிவிட்டார். கலை அரங்கம் தொடங்கிய சில தினங்களில் கொட்டாஞ்சேனை பொலிஸ் நிலையத்துக்கு அருகே கல்லூரி வீதிக்குத் திரும்பும் இடத்திலுள்ள பௌத்த விகாரையுடன் ஒரு பள்ளிக் கூடமும் இருக்கிறது. இந்தக் கல்லூரி மண்டபத்தில் குறிப்பிட்ட தேதி மாலை ஆறு மணிக்கு நடிகவேள் லடிஸ் வீரமணி நடிக்கும் நாடகம் (வீரத் தேவன் என்று நினைக்கிறேன்) நடக்கும் என்றும் இந்த நாடகத்துக்குச் சிறப்பு அதிதியாக தமிழ் நாட்டிலிருந்து திரைப்பட இயக்குநர் நாகராஜன் கலந்து கொள்வாரென்றும் அறிவிக்கப்பட்ட துண்டுப் பிரசுரமொன்றை சிலர் கொண்டு வந்து கொடுத்து கட்டாயம் வரவேண்டும் என்று வற்புறுத்திச் சென்றிருந்தார்கள். நாகராஜன் ரஷ்யா சென்று இந்தியா திரும்பும் வழியில் கொழும்புக்கு வந்திருந்தார்.

நாடகத்தைப் பார்க்கச் சென்றிருந்தேன். அப்போதுதான் நாடக மேடை அமைத்து சீன் (திரை) கட்டிக் கொண்டிருந்தார்கள். மேலே ஒரு மரப்பலகை




மீது நின்று திரையின் ஒரு பக்கத்தைப் பிடித்து இழுத்துக் கட்டிக் கொண்டு நின்றவர் குரல் கொடுத்தபோது நிமிர்ந்து பார்த்தேன். அது நடிகவேள் லடிஸ் வீரமணி. அந்த நாடகத்தின் கதாநாயகன், தயாரிப்பாளர், கதை வசன கர்த்தாவும் கூட அவர் தான் என நினைக்கிறேன். நாடகம் தொடங்கும் என அறிவிக்கப்பட்ட நேரம் அது.

பிரதம அதிதி இயக்குநர் நாகராஜனும் வந்துவிட்டார். குறித்த நேரத்திலிருந்து தாமதமாகி நீண்ட நேரத்தின் பின் நாடகம் தொடங்கி நடந்தது. பொறுமையுடன் நின்று நாடகம் பார்த்துச் சென்றேன். அந்த வாரக் கலை அரங்கத்தில் இந்த நாடகம் பற்றி எழுதியிருந்தேன். நாடகம் பற்றிக் குறையெதுவும் சொல்லவில்லை. சொல்ல இடமிருந்தாலல்லவா. உரிய நேரத்துக்கு நாடகம் தொடங்காதது முதல் திட்டமிடப்படாத செயற்பாடுகள் பற்றிக் குறை சொல்லி எழுதியிருந்தேன். இப்போது போல் வீரகேசரி வாசலில் பாதுகாப்பிருக்கவில்லை.

இது வெளிவந்திருந்த அன்று காலை கொச்சிக்கடையிலிருந்து ஒரு பட்டாளத்துடன் லடிஸ் வீரமணி ஆசிரிய பகுதிக்குள் வந்து கூச்சல் போட்டிருக்கிறார். அந்தநேரம் நான் அலுவலகம் வரவில்லை. பின்னர் லடிஸுக்கும் எனக்கும் நட்பு ஏற்பட்டது மட்டுமல்ல என்னுடன் உறவு முறையும் கொண்டாடினான். அவன் பிறவிக் கலைஞன் தான். ஆனால் கட்டுப்பாடில்லாமலிருப்பது கலைஞனின் பெருமை என்ற நினைப்பு இருந்தது. என் சின்ன மச்சான் மூலம் அவன் கொண்டாடினான். நான் குற்றம் கண்டு எழுதியதை பின்னர் பாராட்டினான். ஆடிவேல் விழாக் காலமோ வேறு ஏதோ ஒரு விழாக்காலம் மக்கள் வீதியில் திரண்டு கூடித் திரியும் சந்தர்ப்பம். கன்னாரத் தெருவில் உயரமான மேடையில் லடிஸ் வீரமணியின் வில்லு வைக்கப்பட்டிருந்தது.

(தொடரும்)

# பெயர்கள் தரும் பாதைகள்... 4

■ இ.சத்தியன், கொக்குவில்

கந்தன்
கார்த்தர்
அனர்த்தன்
அன்பழகன்
சர்வானந்தம்
சரவணபவன்
கமக்காரன்

உணவு
உப்பு குரங்கு பூனை சின்னமணி
திலகவதி திருநாவுக்கரசு
சித்தி புத்தி
பிறவி நிரஞ்சலி
சின்னத்தம்பி சிறி விதி
சிவத்தம்பி சிவகாமி

செல்வநாயகி
நமேனி -எலி
மெஸ்ஸி
செவ்வந்தி
ஜெயலலி - தா

துர்க்கை
ஔவை
கரைக்கால்
அம்பிகை
தெய்வானை

முருகேசு
கதிரவேற்பிள்ளை
லியானடோ டாவின்சி
பிளனேரியா
விபூதி - திருப்பதி
கிருபானந்தவாரியார்
விசுவாமித்திரர்

| | |
|---|---|
| குபேரன் | குசேலர் |
| விவேகானந்தர் | கானமூர்த்தி |
| திலீபன் நியு | பஞ்சமூர்த்தி அசரீரி |
| யெகோவா | காவேரி மணிமேகலை |
| கிரீடம் கீரி | கங்காதேவி |
| ஜெயதேவன்/வி | யெயதேவி |
| தெய்வேந்/ தி | பாலதேவி |
| செவ்வேந்/தி | |

| | | |
|---|---|---|
| சுந்தராம்பாள் | மனிதன் | கண்ணகி |
| வாசுகி- வள்ளுவர் | சத்தியம் | வள்ளி |

| | |
|---|---|
| புத்தர் | அமிர்தம் பார்வதி |
| இயேசுநாதர் | பைபிள் யெகோவா |
| முகமது நபி | வசிட்டர் மரியாள் |
| அருள்நங்கை | ஆசிரியர் |
| மாடு பசு | அமிர்தலிங்கம் |
| அனுமார் | |
| அர்ச்சுனன் | |

**மனித வளத்துக்கு சாதகமான பெயர்வழித் தொகுப்புக்கள்**

| | | |
|---|---|---|
| கந்தன் | வசிட்டர் | அர்ச்சுனன் |
| கர்த்தர் | அதியமான் | அநுமார் |
| அனர்த்தன் | மனிதன் | வள்ளுவர் |
| பக்தன் | மரியாள் | அற்புதன் |
| கண்ணதாசன் | பாக்கியம் | கஜமுகன் |
| கமக்காரன் | ரத்தினம் | சண்முகம் |
| உடல்+ உயிர் | மாணிக்கன்/ம் | வாசுகி |
| சவம்+குளிர் | அமிர்தலிங்கம் | அருள்நங்கை |
| கணவன்+மனைவி | வள்ளிப்பிள்ளை | |
| மாணவர் | ஆசிரியர் | |
| மக்கள் + ஜனாதிபதி | | |
| சாரதா | | |
| நல்லதங்காள் | விபூதி | |
| மலர் | திருப்பதி | |
| ஆண்டாள் | விசுவாமித்திரர் | |
| | கிருபானந்தவாரியார் | |
| | மிகுந்தன் | |
| | திரு - திருமதி | |
| | திருநாவுக்கரசு | |
| கண்ணகி | துர்க்கை | |
| வள்ளி | ஔவை | |
| பார்வதி | காரைக்கால் | |
| சரஸ்வதி | அம்பிகை | |
| லக்ஷ்மி | தெய்வானை | |
| | அகலிகை | |
| ஜெயலலி | தா | |
| நமேனி | எலி | |

| | |
|---|---|
| மெஸ்ஸி | - 24 விவேகானந்தர் |
| செவ்வந்தி | - திலீபன் |
| பெகி | -104 கிரீடம்- கீரி |
| செல்வநாயகி | - யெயதேவன் /வி |

மனித குலத்தின் சுருக்கமான சாதகமான அதிர்வலைகள்

ஒ - லி } { வான - ம்
ஒ- ளி } { உலக - ம் ஓ - ம்- பிரணவம்
{ வையக - ம்

ஓம் என்ற சொல் எவ்வாறு உருவானது?

மேலே கொடுக்கப்பட்டுள்ள தரவுகள் எமக்கு விழிப்புணர்வு. மனித சமுதாயம் முன்னேறுவதற்குச் சாதகமாக அமைந்த சொல் தொகுதிகளைக் கவனிப்போம்.

கடமை } முயற்சி
நம்பிக்கை } உயர்வு }
தாழ்வு

சமாதானம் } கூடுதல் }
அடைக்கலம் } பிரிவு }
சரணாகதி } உறவு }

| | | |
|---|---|---|
| சிவம் | சத்தியம் | சக்தி |
| தியானம் | மனிதன் | அமைதி |
| விரதம் | அமிர்தம் | சமாதி |
| சிவராத்திரி | பைபிள் | நவராத்திரி |
| விநாயகர் | அகிம்சை | சதுர்த்தி |
| | அதியமான் | சஷ்டி |
| | வசிட்டர் | காயத்ரி |

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நனிசுவை பல மிளிரும் தனிப் பாடல்கள்

கம்பர்,புகழேந்தி, இளங்கோ திருவள்ளுவர், ஔவை போன்ற, காலத்தால் அழியாத காவியங் களைச் செய்த கவிப்பெருமக்கள் பற்றி புகழ்ந்து தமிழ் சார்ந்த நிகழ்வுகள் அனைத்திலும், தமிழ்ப் புலம்சார் அறிஞர்கள், எழுத்தாளர்கள், பேச்சாளர்கள் என பலரும் கருத்துக்கள் வழங்குவதை நாம் அறிவோம். ஆனால் 'இலை மறை காய்'களாக இருக்கும் தனிப்பாடல்கள் பற்றி யும், அவற்றைப் பாடிய புலவர் கள் பற்றியும் மிக அரிதாகவே நாம் அறிய முடிகிறது.

தனிப் பாடல்கள் எனப்படு பவை பல்வேறு காலப் பகுதிகளில் வாழ்ந்த புலவர்களால் பல்வே றான சூழ்நிலைகளில் பலதரப்பட்ட பொருள்களில் பாடப்பட்ட உதிரியான (தனிச் செய்யுள்கள்) பாடல்களாகும். இவை பிற் காலத்தில் தொகுக்கப்பட்டு 'தனிப் பாடல் திரட்டு' என்ற பெயரில் நூலுருப்பெற்றன. இவை அவ் வக் காலத்தில் வாழ்ந்த மக்கள தும், புலவர்களதும் வாழ்க்கைக் கோலங்களை வெளிப்படுத்துவ தோடு, புலவர்களின் ஆழ்ந்த கவிப்புலமையையும் வெளிப் படுத்தி நிற்கின்றன.

தனிப் பாடல்கள் பாடிய புல வர்களுள் தனிச் சிறப்புக்குரியவர் புலவர் காளமேகம். கும்ப கோணத் துக்கு அருகிலுள்ள நந்திக் கிரா மத்தைச் சேர்ந்தவரான இவர் எம்முறையிலும், எப்பொருளி லும் விரைந்து பாடும் திறன் மிக்க வராதலால் 'ஆசுகவி' என்றும் காளமேகம் (கரிய மேகம்) பெரு மழை பொழிவது போல தொடர்ச்சி யாகப் பாடிக் கேட்போரைத் திகைக்கச் செய்வதால் 'காள மேகப் புலவர்' என்றும், வசைக் கவிகளைப் பாடுவதில் வல்லவ ரென்பதால் 'வசைபாடக் காள மேகம்' என்றும் அழைக்கப் பட்டார். இவை காரணமாக 'வரத ர்' என்ற இவரது இயற்பெயர் காலப் போக்கில் மறக்கப்பட்டு விட்டது. இவரது பாடல்களில் பெருநயங்களை வெளிப்பொருள் விளங்கக் கூடியவை. சிலேடைக் கவி, வசைக்கவி, நகைச்சுவை, அங்கதச்சுவை, வஞ்சகப் புகழ்ச்சி, வித்துவச் செருக்கு போன்ற பல்வேறுஉணர்ச்சிகள்தொனிக்கும் கவிகள் பாடுவது இவருக்கு கைவந்த கலை. கலைவாணி எங்கேயும் எப்போதும் இவர் நாவில் நர்த்தனம் புரிவாள்.

காளமேகம் கி.பி 15 ஆம் நூற்றாண்டின் நடுக்கூற்றில் வாழ்ந்தவரென அறியக்கிடக் கிறது. இந்தக் காலத்தில் தமிழ் நாட்டின் அரசியல், பொருளா தாரநிலைசெழிப்பற்றதாகஇருந்தது. முற்பட்ட காலங்கள் போலல் லாது மன்னர்கள் தமிழையும், தமிழ்ப் புலவர்களையும் ஆதரிப் பது மிகவும் அருகியிருந்த கால மது. இதனால் புலவர்கள் வயிறு வளர்க்க தனியாள்களையும், அன்ன சத்திரங்களையுமே நம்பி யிருந்தனர். காளமேகம் பிரம்மச் சாரி; நாடோடி வாழ்க்கை வாழ்ந்த இவருக்கும் மடாலயங் களே தஞ்சம்.

தனிப் பாடல்கள் பாடிய புல வர்களுள் தனிச் சிறப்புக்குரிய வர் புலவர் காளமேகம். கும்ப கோணத்துக்கு அருகிலுள்ள நந்திக் கிராமத்தைச் சேர்ந்தவரான இவர் எம்முறையிலும், எப்பொருளி லும் விரைந்து பாடும் திறன் மிக்கவராதலால் 'ஆசுகவி' என்றும் காளமேகம் (கரிய மேகம்) பெருமழை பொழிவது போல தொடர்ச்சியாகப் பாடிக் கேட்போரைத் திகைக்கும் வண்ணம் செய்வதால் 'காளமேகப் புலவர்' என்றும், அழைக்கப்பட்டார்.






ஒரு நாள் நல்ல மதியம். ஒரு அன்னசத்திரம்; புலவருக்கு நல்ல பசி; உண்ணத் தொடங்கி யிருந்தார். அவர் எதிரில் ஒரு முன் குடுமி வைத்த சோழியப் பிராமணன் (சோழ நாட்டவன்) முன் குடுமி அவிழ்ந்து அவனது சோற்றில் விழுவதுகூடத் தெரியா மல் உண்டு கொண்டிருந்தான். வாயின் சுற்றுப்புறம் எங்கும் சோற்றுப் பசை அலங்காரம். (அலங்கோலம்) கைவிரல் இறை களிடையே சோற்றுக்கூழ்; புறங்கை யில் வழிந்த சோற்றுக்கூழை அடிக்கடி நாவினால் வழித் தெடுத்துக் கொண்டிருந்தான். கூந்தல் ஒரு புறம் சோற்றில் அழா வியபடி இருந்தது. கிட்டதட்ட சோற்றுக்கும் அவனுக்குமிடையே ஒரு போரே நடந்து கொண்டி ருந்தது எனலாம். இந்த அநாகரிக மான செயற்பாடுகளைக் கண்ணுற் றார் காளமேகம். அவருக்கு உணவு செல்லவில்லை. வயிற்றைக் குமட்டியது. இந்த வேளை சோழி யன் சோற்றில் அழாவிய தன் கூந் தலை தன் இடது கையால் அனாயா சமாக தட்டிவிட கூந்தலில் ஒட் டிய எச்சிற் சோற்றுப் பருக்கை கள் தாராளமாக காளமேகத்தின் இலையில் விழுந்து தெறிக்க, சட்டென காளமேகத்தின்முகம் கறுத்தது. புலவர் உருத்திர மூர்த்தி யானார்.

சுருக்கவிழ்ந்த முன் குடுமிச் சோழியா
சோற்றுப்
பொருக்குலர்ந்த வாயா, புலையா,
திருக்குடந்தைக்
கோட்டானே, நாயே, குரங்கே புனைபொருத்தி
போட்டாளே வேலையற்றுப் போய்

என பொரிந்து தள்ளினார். முடிச்சவிழ்ந்து தொங்கிக் கொண்டி ருக்கும் முன் குடுமியை உடைய வனே, சோற்றுப்பசை உலர்ந்து காணும் வாயனே, ஒழுக்கமற்ற கடையனே, கும்பகோணத்தில் ஆந்தையைப் போன்றவனே நாயே, குரங்கே உன்னையும் ஒரு பெண் வேறு வேலையற்று (ஒரு பிறப்பென்று) பெற்றுவிட்டாளே! (ஐயகோ!) என்றவாறு இவ்வசைப் பாடலுக்கு எளிதாக பொருள் தெளியலாம். கடும்பசி, இயலாமை, கடும் சினம் ஆகிய உணர்ச்சி களோடு வசைவார்த்தைகள் வெளிப்பட்டாலும், கேட்டு உணர்ச் சிக்குரியதான சுருக்கு, பொருக்குக் கோட்டான், போட்டாள் என்ற ஒத்திசையுடை, எதுகை, மோனை, சொல்லணிகள் விளையாடு வதைக் கவிதையில் நயக்கலாம்.

சொற்சாதுரியமாக சிலேடை பாடுவது காளமேகத்திற்கு மிக விருப்பமான ஒரு விடயம். மூச்சுவிடாமல் சொற்களுக் கிடையே இடைவெளி இல்லா மல் எழுத்துக்களைப் போட்டு எவரும் அரிதாக பொருள் விளங்கு மாறும் வித்துவச் செருக்கோடும் பாடுவார். ஆழ்ந்து தெளிந்தால் அவற்றுள் ஆழ்ந்த பொருள் அமைவதைக் காணலாம்.

பூனைக்கீயாறுகால், புள்ளினத்துக் கோம்பது
கால்
ஆனைக்கு கால் பதினேழானதே–மானே கேள்
முண்டகத்தின் மீது முழுநீலம் பூத்ததுண்டு
கண்டதுண்டு கேட்டதில்லை காண்

இப்பாடல் தலைவன் தன் தலைவியின் முக வசீகரத்தை வர்ணித்து விதந்து பாடுவதாக (அகம்சார்ந்த) அமைந்ததாகும். தலைவன் முதல் இரு அடிகளி லும் விடுகதை போல ஒன்றைக்கூறி தலைவியைச் சிந்திக்க வைத்து பின் இரு அடிகளிலும் அவள் முக நலனைப் பாடுவதாக அமைகிறது. பூனைக்கு-4, பறவைக்கு-2, ஆனைக்கு-4 கால்கள் இதுதானே சரியான விடை. இங்குபுலவர் தப்புத்தப்பாய் கூறுகிறாரே. அவர் கூறும் விளக்கம் அறிவோம்.

பூ+நக்கி-பூவை நுகரும் வண் டுக்கு 6 கால்கள். பறவை (புள்)க்கு 9 1/4=2கால் (1/4+ 1/4+ 1/4+1/4+ 1/4+ 1/4+ 1/4+ 1/4+ 1/4) சேர்த்துப் பார்க்குக= எட்டுக் கால் சேர்ந் தால்-2 கால். ஒன்பதாவது 1/4, கால் என்ற உறுப்புக்கு ஆகியது. யானைக்கு =17 1/4=4 கால் (மேற் படி 1/4 பங்குகளைச் சேர்த்து பொருள்கொள்க.) ஆக சொற்சாது ரியமான ஒரு கணக்குக் கவிதை இது. அக்காலத்தில் இப்படி ஒரு

ஜோ.ஜனதா
யாழ்ப்பாணம்.

சொற்சாதுரியமாக கணக்குப் பண்ணும் கவிதை யைப் புலவர் பாடியுள்ளார் என் றால் அவரது கவித்து வத்தை வியக்காமல், நயக்காமல் இருக்க முடி யுமா? பாடலின் 3 ஆம் 4 ஆம் வரி களில் புலவர் தலைவி முகத்தை தாமரையாக (முண்டகம்) கவும், இரு கண்களை இரு கருங்குவளை மலர்களாகவும் உருவகிக்கின்றார். செந்தாமரை மலர் மேலே கருங் குவளை பூத்திருப்பதாக கூறி இந்த அதிசயத்தை யாரும் கூறி அறியவில்லை. நேரிலே தானே பார்த்ததாக அழுத்திக் கூறுவதில் உள்ள உருவக அணிச் சிறப்பை நயங்கொள்ளலாம். தலைவியின் முகமும் கண்களும் மறைந்து அவை தாமரையாகவும் கருங்கு வளை மலர்களாகவும் காணும் உருவக அதிசயத்தை ரசிப்போம்.

காள மேகத்தின் ஆசு கவி ஆற்றலை ஏனைய புலவர்களும் ஏனையோரும் பரீட்சித்துப் பார்ப்ப துண்டு. அவரும் அவற்றை சவால் களாக எடுத்துப் பாடி விடுவார். புலவனுக்கு ரோஷமும், துணி வும் கூடப்பிறந்தவை. ஒரு தருணம் தேங்காயையும், நாயையும் ஒப்புமை செய்து பாடும்படி கேட்டபோது

ஓடு மிருக்கும் தனுள்வாய்
வெளுத்திருக்கும்
நாடுங்குலைத் தனக்கு நாணது– சேடியே
தீங்காய தில்லை திருமலைராயன் வரையில்
தேங்காயும் நாயுமிணை செப்பு

தோழியே! திருமலைராயனு டைய நாட்டு எல்லையிலே தேங் காயையும், நாயையும் ஒரு தன்மை யதாகக் கூறலாம். (எங்ஙனமெனில்) தேங்காயின் உட்புறம் வெண்மை. நாய் வாயின் உட்பகுதி வெளுத் திருக்கும். தேங்காய் தன்னிடம் பயன்பெறுவோருக்காக குலை களில் தாராளமாக நிறைந்த காய் களைக் கொண்டிருக்கும். நாய் அந்நியரைக் கண்டால் பின்னடை யாது. (நாணாது) தாராளமாக குரைத்து விரட்டும். இவ்வாறு இரு பொருள்பட்ட சிலேடைச் சொற்களால் தேங்காயும் நாயும் ஒன்றுபட்டவை எனப்பாடினார்.

காளமேகம் எந்தப் பொருள் பற்றியும் இலாவகமாகப் பாடு வார். யார் எவரென்றில்லை. அவரில் பிழை இருப்பின் தூக்கி எறிவது போலும் பாடுவார். வசை மட்டுமல்ல கேலி, கிண் டல், நையாண்டி (அங்கதச்சுவை) செய்யவும் தயங்கார். அதுவும் கடவுளரைக் கேலி செய்து பாடு வதில் இவருக்கு நிகர் இவரே. அதற்காக இவரை நாத்திகன் என்றும் கூறமுடியாது.

இவர் வைஷ்ணவ சமயத்தவர். இறை வன் மேல் நெருங் கிய அன்பு உடைய வர். இறைவனில் உரிமை எடுத்துக் கொண்டு ஆசை யோடும் அன் போடும் திட்டு வார். கேலி செய் வார். கடவுள் மரியாதைக்குரிய வரல்லர். அன் புக்குரியவர். காள மேகம் இறை வனில் அதீத அன்பு கொண்டவர். இத னால் இறைவன் பற்றி நையாண்டிப் பாடல்கள் பல பாடி யுள்ளார்.

அப்பன் இரந் துண்ணி
யாத் தாள் மலைநீலி
ஒப்பரிய மாமனோ உறிதிருடி– சப்பைக்கால்
அண்ணன் பெரு வயிறனாறு முகத்
தானுக்கிங்
கெண்ணும் பெருமையிலை

ஆறுமுகக் கடவுள் அலங்கார ரூபனாக வீதியுலா வந்து கொண் டிருக்கிறார். உலாவில் எதிர்ப் பட்ட புலவருக்கு அவரின் அலங் காரங்களைப் பார்க்க சிரிப்பாய் வந்தது. மேற்சொன்னவாறு தந்தை யாகிய சிவன் பிச்சை ஏற்று அருந்துபவர். தாய் பார்வதியோ மலையில் பிறந்தவள், கரிய நிறத்தையுடையவள். இடையர் மனையின் உறியில் வெண் ணெய் திருடும் கள்வனே தன் னிகரில்லா மாமனெனப்படும் கோபாலன். வலிமையற்ற தட்டை யான கால்களையுடைய, விசால மான பரந்த உயர்ந்த வயிற்றை கொண்டவன்அண்ணனாகிய கணபதி. இத்தகையதான குறை பாடுகளையுடைய சுற்றத்தைக் கொண்ட முருகனுக்கு இந்த ஆடம்பரங்கள் தேவைதானா? (தேவையற்றவையே) ஒருவரைப் புகழ்ந்து பேசும் போது அவரின் பரம்பரையினரின் பெருமை களையும் எடுத்துக் கூறி புகழ் வது இயல்பு. ஆனால் இப்பாட லில் முருகனின் சுற்றத்தின் குறை பாடுகளைப் பெருமைகளாக எள்ளி நகையாடுகிறார்.

ஒருவரைப் புகழ்வது போல் இகழ்வதும், இகழ்வது போல் புகழ்வதும் வஞ்சப் புகழ்ச்சி எனப்படும்.வடமொழியில் இது 'நிந்தாஸ்துதி' எனப்படும் (இழிவு சிறப்பு) இது ஒரு நிந்தாஸ்துதி பாடலாகும். இப்படி இன்றும் பல கடவுளரையும் பாடியுள்ளார்.

புலவர் எந்தச் சந்தர்ப்பத்தில் எந்த மனநிலையில் ஆசுகவி களைப் பாடிய போதும் அவற் றில் சொற்சுவை, பொருள்சுவை, ஓசை, நயம் அணிச்சிறப்புகள், உணர்ச்சிகள் என்பன ஒரு அட்சரம் பிறழாமல் அமைந்திருப்பதை நயக்கலாம். இத்தகையகவிஆற்றல் கைவரப் பெற்ற மேதையான புலவர் கம்பனைப் போல் இளங் கோவைப் போல் காவியங்களைப் படைத்திருக்க முடியும். ஆயினும் இழந்ததை மறப்போம். கைவரப் பெற்றதைப் படிப்போம். சுவைப் போம்: மகிழ்வோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*நம்பிக்கை, நம்பிக்கை, ஒன்றேதான் வழி. வாழ்க்கைச் சக்கரம் சுழல பொறுமையுடனும் நிதானத்துடனும் அறிவுக் கூர்மையுடனும் உள்நோக்குப் பார்வையுடனும் காத்திருப்பதுதான் மிகச் சிறந்த வழி. இத்தகைய சிந்தனையை பக்தி மார்க்கம் தருவதால் சிலர் பக்தி மார்க்கத்தையும் இந்த கடுமையான காலங்களை கடக்க எளிதாய் பயன்படுத்துவர். தீய நண்பர்கள் மற்றும் போதை போன்ற தீய பழக்கங்களைக் கொண்டுள்ளவர்கள் இவைகளை விட்டாலன்றி தெளிவான சிந்தனையை அடைய முடியாது. இவர்களுக்கு இவைகளின் பிடியிலிருந்து மீள்வது மட்டுமே இவர்களை மனிதர்களாக்கும்.*



# துன்பங்கள் வழிப்படுத்தும்

■ சாயினி

**வா**ழ்வின் கடுமையான காலங்கள் ஒருவரது மேம்படலுக்கு மிக மிகத் தேவையான ஒன்றாகும். இந்தக் கடுமையான காலங்கள் நமது அனுபவங்களை வளப்படுத்துவதோடு மட்டுமல்லாது நம் வாழ்வை மேம்படுத்தவும் நமக்கு வாய்ப்பளிக்கின்றன.

ஆனால் நம்மில் பெரும்பாலானோர் இந்த கடுமையான காலங்கள் சொல்லும் செய்திகளை புரிந்து கொள்ள முடியாமல் இருப்பதாலேயே நம்மால் இந்த கடுமையான காலங்களைக் கடக்க முடிவதில்லை.

இந்த கடுமையான காலங்கள் நம்மில் இருக்கும் எதைக் குறித்தும் குறிவைக்கலாம். நமது ஆரோக்கியம், நமது செல்வம், நமது உறவுகள் இப்படி நம்மில் இருக்கும் எதைக் குறித்தும் சிக்கல்கள் எழலாம்.

சில நேரங்களில், இந்த வாழ்வின் அடிப்படைக்கான தேவைகளை, காரணிகளைப் பலமாகக் கொண்டவர்களது வாழ்வில் இது குறித்து சிக்கல்கள் வர வழியில்லை என்றாலும் அவர்களது தன் முனைப்புக் காரணமாக எழும் பேராசை, பதவிப் பற்று அவர்களது சமுதாய நிலையைப் பெருக்கிக் கொள்ளும் முயற்சி ஆகியவை உருவாக்கும் சிக்கல்களும் அவர்களுக்கு கடுமையான காலங்களை உண்டு பண்ணலாம்.

ஆனால் இரண்டாவதாகக் குறிப்பிட்ட இந்தக் கடுமையான காலங்கள் நமக்குள் நடக்கும் முரண்கள் குறித்து மட்டுமே இருக்கும். இது நாம் நம்மை ஏற்றுக் கொள்ள அல்லது நம்மை மாற்றிக் கொள்ள வேண்டி நமது உள்ளத்தில் எழும் சிக்கல்களை மையமாகக் கொண்டிருக்கும். இதுவும் கடுமையான காலங்கள்தான்.

இந்தத் தன் முனைப்பு முரண்களின் விளைவாக எழும் கடுமையான காலங்கள் நாம் நம்மை மிகவும் புரிந்து கொள்ள உதவும். இந்த கடுமையான காலங்கள் தீர்க்கமான சிந்தனைகளால் மட்டுமே தீர்க்கப்படக்கூடியவை. நமது சிந்தனைத் தெளிவும், உள் நோக்குப் பார்வையும், நமது முரண்களையும், நம்மையும் குறித்த சிந்தனைகளும் அவற்றை அறிந்து கொள்ளப் போதுமான நேரமும் உண்டானால் நமக்கு இந்த கடுமையான காலங்களை கடத்தல் எளிது. அது மட்டுமல்ல இத்தகைய கடுமையான காலங்கள் நமக்கு நல்ல பக்குவத்தையும் உயிரின் மேம்படுதலையும் அளிக்க வல்லன.

பொருளாதாரச் சிக்கல்கள், தொழில் முறையில் மாற்றங்கள், தோல்விகள், ஆரோக்கியக் குறைபாடுகள் மற்றும் உறவுச் சிக்கல்கள் போன்றன குறித்து எழும் கடுமையான காலங்கள் தானாகவே விலகிவிடக் கூடியன.

ஆனாலும் இத்தகைய காலங்கள் நமக்கு சில அறிவுறுத்தல்களைச் சொல்லிவிட்டுத்தான் செல்லும்.

இத்தகைய காலங்கள் நமக்கு பொருளாதாரத்தின் முக்கியத்துவத்தையோ, உறவுகளின் முக்கியத்துவத்தையோ அல்லது உறவுகளை நாம் நிலை நிறுத்திக் கொள்ள விட்டுக் கொடுத்தலின் முக்கியத்துவத்தையோ மற்றும் நமது நல்லொழுக்கத்துக்கும் சமுதாய நலனுக்கும் இருக்கும் தொடர்பையோ அல்லது இவ்வுலகின் நிலையாமை குறித்த உணர்வையோ நமக்குள் அழுத்தமாக பதித்துவிட்டுத்தான் செல்லும்.

இதனாலேயே சிறுவயதுக் காலத்தில் கடுமையான காலங்களை சந்தித்தவர்களது வாழ்க்கை பிற்காலத்தில் சிறக்க இருக்கிறது. அப்படியல்லாது தமது வாழ்வின் பிற்காலத்தில் இத்தகைய கடுமையான காலங்களைச் சந்திக்கும் பக்குவப்படாதவர்களின் நிலை பரிதாபத்துக்கு உரியது. மிகச் சிலரே பிறருக்கு வரும் சோதனைக் காலங்களிலிருந்து படிப்பினைகளைப் பெற்றுக் கொள்கின்றனர்.

சிலருக்கு தம்முடன் இருக்கும் தீய நட்பும் மற்றும் போதை போன்ற தீய பழக்கங்களும் தங்களது தெளிவான சிந்தனையை தடுப்பதால் இவைகளே கடுமையான காலங்களை உருவாக்கி அதிலிருந்து மீளமுடியாது போகின்றனர்.

சில நேரங்களில் இந்தக் கடுமையான காலங்கள் தன்னைச் சுற்றியுள்ள சமுதாயத்துக்கே பொதுவானதாக அமைந்துவிடுவதும் உண்டு.


இத்தகைய கடுமையான காலங்களை கடப்பது எப்படி?

நம்பிக்கை, நம்பிக்கை ஒன்றேதான் வழி. வாழ்க்கைச் சக்கரம் சுழல பொறுமையுடனும் நிதானத்துடனும் அறிவுக் கூர்மையுடனும் உள்நோக்குப் பார்வையுடனும் காத்திருப்பது தான் மிகச் சிறந்த வழி. இத்தகைய சிந்தனையை பக்தி மார்க்கம் தருவதால் சிலர் பக்தி மார்க்கத்தையும் இந்த கடுமையான காலங்களை கடக்க எளிதாய் பயன்படுத்துவர்.

தீய நண்பர்கள் மற்றும் போதை போன்ற தீய பழக்கங்களைக் கொண்டுள்ளவர்கள் இவைகளை விட்டாலன்றி தெளிவான சிந்தனையை அடைய முடியாது. இவர்களுக்கு இவைகளின் பிடியிலிருந்து மீள்வது மட்டுமே இவர்களை மனிதர்களாக்கும்.

சரியான பார்வையில் கடுமையான காலங்களைக் கண்டு நிதானத்துடனும் அறிவுக் கூர்மையுடனும் [illegible] பெற[illegible] மேம்படுத்துவோம்.

# ஒரு பிஞ்சின் பிரார்த்தனை......



குட்டி கதை

அன்று வெள்ளிக்கிழமை அதிகாலை நான்கு மணியிருக்கும். அதனைப் பிரதிநிதித்துவப்படுத்துவது போல பிள்ளையார் கோயில் பெரியமணி ஒலித்துக் கொண்டிருந்தது. அடுத்த மாதம் நடைபெறவிருக்கும் சாதாரணதர பரீட்சைக்கு படித்துக் கொண்டிருந்தான் தயா. அவனால் தொடர்ந்து படிக்க முடியவில்லை. ஓர் விம்மல்; அதன் வெளிப்பாடு சொல்லாமல் வரும் விருந்தாளியை போல ஒரு துளி கண்ணீர் கன்னத்தை கழுவுகின்றது. இவையனைத்தும் அவனுக்கு இன்று நேற்று ஏற்பட்டது அல்ல; இழக்கக் கூடாததை என்று இழந்தானோ அன்றிலிருந்து உருவாகியவை தான். கண்ணீரைத் துடைத்து விட்டு புத்தகத்தைப் பார்த்தான் "முன்னோக்கு" என எழுதப்பட்டிருந்தது. ஆனால் அவனால் தொடர்ந்து படிக்க முடியவில்லை.

"அன்றொரு நாள் பிள்ளையார் கோயில் தேர்த்திருவிழா நாங்கள் எல்லோரும் கோயிலுக்குச் சென்றோம். சுவாமி தரிசனம் செய்து விட்டு கடைகளைச் சுற்றிப்பார்க்கப் புறப்பட்டோம். அப்போது ஒரு புதியவர் அப்பாவின் நண்பன் என்று அறிமுகம் செய்து அப்பாவை கூட்டிக் கொண்டு போனவர்தான் பின்னர் எங்களுடைய அப்பா வரவே இல்லை. திருவிழாவின் போது சின்னப்பிள்ளையள் தான் காணாமல் போய் அழுவினம், பிறகு கிடைத்துவிடுவினம், ஆனால் அப்பா எங்களுக்கு இன்றுவரை கிடைக்கவே இல்லை.

குடும்பம் என்றால் எப்படி வாழவேண்டும் என்று எடுத்துக் காட்டியவர் அப்பா. சாதாரண குடும்பம் போல இல்லாது ஊரே கண்படுகிற மாதிரி எம்மை வளர்த்தவர்; அன்பு என்ற வார்த்தைக்குள் அகிலத்தையே காட்டியவர். அந்த குலவிளக்கை இழந்து இன்று ஏங்கித்தவிக்கிறோம்.. அப்பா, கண்டிப்பானவர் தான்; ஆனால் அன்பு நிறைந்தவர்; எமக்காக பல தியாகங்களை செய்தவர். குடும்ப நன்மைக்காக தன்னை மெழுகுதிரியாக உருக்கியவர். குடித்தல், புகைத்தல் போன்ற எவ்வித கெட்டபழக்கமும் இல்லாத அப்பா, உழைக்கும் பணத்தை அப்படியே கொண்டு வந்து அம்மாவிடம் கொடுத்து விடுவார். எங்களுடைய வெற்றிக்கு ஊன்றுகோலாக தோல்விகளை தாங்கும் தோளாக எங்களுடைய ஆத்மாவின் வேராக மிளிரும் அந்த தெய்வத்தை நாம் இன்று இழந்துவிட்டோம்.

சிலவேளை தங்கைகள் என்னிடம் "அண்ணா எங்கட அப்பா எங்க? என்று கேட்பார்கள். அதற்கு "அப்பா காசு உழைக்கப் போட்டார் வரேக்கை பொம்மை, கார் எல்லாம் வாங்கி வருவார். என்று நான் கூறுவேன். சந்தோஷத்தில் அவர்கள் துள்ளிக் குதிப்பார்கள். அவர்களை ஆறுதல்படுத்த நான்; என்னை ஆறுதல் படுத்த...

ஒரு வேளை நானும் பக்கத்து வீட்டு கண்ணன் மாதிரி ஆடியமாவாசை விரதம் இருக்க வேண்டுமோ? எங்களுடைய அம்மாவும் அவனுடைய அம்மா மாதிரி தலையில பூ வைக்காம, நெற்றியில் பொட்டு வைக்காம வெள்ளைச் சாறி தான் உடுக்க வேணுமோ ... சீ ... நான் ஏன் இப்படி நினைக்கிறன். கடவுளே நான் நினைக்கிற மாதிரி எதுவும் நடந்துவிடக் கூடாது. எங்கட அப்பாவை எங்களிடம் திருப்பிக் கொடுத்து விடு. நாங்கள் முந்தின மாதிரி சந்தோசமாய் இருக்க வேண்டும். என்ர அம்மாவின்ர முகத்தில சிரிப்பைக் காண வேண்டும். பந்தியில் அமர்ந்த ஒரு பசித்த பிச்சைக்காரனின் இலை போல எங்களுடைய உறவினர்களும் விலகிச் சென்று விட்டனர்.

அப்பா! உங்களுடைய சிரிப்பல்லவா எங்களுடைய இருள் முகிலை விலக்கியது. உங்களுடைய ஒவ்வொரு சொற்களையும் எங்கள் பாத படிக்கற்களாகக் கட்டியதை நாங்கள் சொல்லி நீங்கள் அறிய வேண்டியதில்லை. விழிகளின் மையப்பகுதியில் வீறு கொண்ட நீங்கள், விடியலின் விரைவை எங்கள் திசையில் அறிமுகப்படுத்தி விட்டு ஒளித்துச் சென்று விட்டீர்கள்.

அப்பா கடவுள் ரொம்ப நல்லவர் என்று கூறுவீர்களே! இல்லை... ஒருபோதும் இல்லை. என்னை யெல்லாம் அழவைச்சுப் பார்க்கிற கடவுள் நல்லவரா? இரக்கமானவரா? சொல்லுங்க அப்பா?

அம்மா என்னிடம் அடிக்கடி கூறுவா "தம்பி நீ அப்பாவின்ர கனவை நனவாக்க வேண்டும்'' அப்போது எனக்கு பயமாக இருக்கும். அதனால தான் இந்த குளிருக்குள்ளையும் காலையில் படிக்க எழும்பினனான்.

அன்புத் தெய்வமே! உங்கள் கடைசி ஆசை நிறைவேறும் வரை நான் கவலைப்படப் போவதில்லை. கவலைப்படின் இழந்தவை என்ற பட்டியலில் உங்களை மட்டுமல்ல, உங்கள் கடைசி நிமிட ஆசைகளையும் இழந்துவிடுவேன்.''

தன்னுடைய தாங்க முடியாத; சுமக்க முடியாத துன்பங்களை யெல்லாம் பிள்ளையாரிடம் முறையிட்டு மனத்திருப்தியோடு வீட்டுக்கு வந்த அம்மா; திருநீறு பிரசாதத்தை நெற்றியில் பூசிய போது மீண்டும் சுய நினைவுக்கு வந்தான் தயா. கடிகாரம் காலை 7 மணி காட்டியது. அவன் பாடசாலை செல்வதற்கு ஆயத்தமானான். தயா இனி ஒரு பொறுப்புள்ள மாணவன்.

போ.சித்திரா, மானிப்பாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எதற்கும் யார் பொறுப்பு?

நமது அனைத்து நன்மை தீமைகளுக்கும் நாமே பொறுப்பு. அன்றாடம் அநேகமானோரைச் சந்திக்கிறோம் உதவி கேட்கிறோம். ஆணையிடுகிறோம். அனைத்து சந்தர்ப்பங்களிலும் வெற்றி பெறுகிறோமா? பல நேரங்களில் பகையும், பிரச்சினைகளுமே மிஞ்சுகின்றன. விளைவாக - விரக்தி, இரத்த அழுத்தம், நரம்புத் தளர்ச்சி, தீராத கவலை, அமைதியின்மை, தூக்கமின்மை, ஒத்துப்போக இயலாமை, உணர்ச்சி வசப்படுதல். ஏன் இந்த நிலை? நாம் மகிழ்வாக இருக்க, நம்மால் பிறரும் மகிழ்ச்சி பெற, பிறர் நம்மை விரும்ப, பிறர் மத்தியில் நம் மதிப்பு உயர, பிறரிடம் நம் காரியங்களைச் சாதித்துக் கொள்ள ... இதோ பத்துக் கட்டளைகள் முயற்சி செய்து பாருங்கள்.

1. **அன்பு** செலுத்துங்கள். அக்கறை காட்டுங்கள்.
2. **ஆர்வத்துடன்** அதிகமாகச் செயற்பட விரும்புங்கள்.
3. **இன்சொல்** கூறி 'நான்,' 'எனது' போன்ற வார்த்தைகளைத் தவிர்த்திடுங்கள்.
4. **உணர்வுகளை** மதிக்கவும், மரியாதை கொடுக்கவும் புகழவும் கற்றுக் கொள்ளுங்கள்.
5. **ஊக்கத்துடன்** சுறுசுறுப்பாகச் செயற்படுங்கள்.
6. **எப்போதும்** பேசுவதைக் கேட்டு, பின்விளைவை யோசித்து சரியான சைகை, முகபாவத்துடன் தெளிவாகப் பேசுங்கள்.
7. **ஏற்றுக்** கொள்ளும் மனப்பக்குவத்துடன் பிறர் குறைகளை அலட்சியப் படுத்துங்கள்.
8. **ஐங்குணமாகிய** நகைச்சுவை, நேர்மை, சமயோசிதம், இன்முகம், விட்டுக் கொடுத்தல் ஆகியவற்றைக் கடைப்பிடியுங்கள்.
9. **ஒவ்வொருவரையும்** வெவ்வேறு புதுப்புது வழிகளில் கையாளுங்கள்.
10. **ஓஹோ,** இவர் இப்படித்தான் என்று யாரையும் பார்த்த மாத்திரத்தில் மதிப்பிடாதீர்கள்.

★**வாழ்க்கையில்** நல்வழிகளைக் கடைப்பிடிப்போம். வெற்றியை எட்டிப் பிடிப்போம்.

# அன்பு தான் இன்ப ஊற்று



திருமணம் என்பது சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுவது. அன்பு, பாசம், பொறுமை, நம்பிக்கை, விட்டுக்கொடுப்பு இவற்றின் மூலம்தான் குடும்பம் என்னும் வண்டியின் சக்கரங்கள் சுற்றிக் கொண்டு இருக்கின்றன. விரும்பிய வாழ்க்கை எல்லோருக்கும் கிடைப்பது இல்லை. கிடைத்த வாழ்க்கையை நல்ல விதமாக வாழ உங்களால் முடியும் தானே?

எல்லோர் இடத்திலும் அன்போடு இருங்கள். மற்றவர்களுக்கு உங்களிடத்தே நம்பிக்கை இல்லாது விடினும், அவர்கள் மீது நீங்கள் நம்பிக்கையோடு இருங்கள்.

உங்களுக்குப் பிடிக்கும் யாவும் உங்கள் கணவருக்கு பிடிக்க வேண்டும் என அடம்பிடிக்காமல் அவருக்குப் பிடித்தமானதையும் செய்யுங்கள்.

உங்கள் துணைவரின் தப்புக்களை மற்றவர்களின் முன் சுட்டிக் காட்டாதீர்கள். தனிமையில் அவருக்குப் புரியும் படி அன்போடு எடுத்துக் கூறுங்கள். உங்கள் சின்னச் சின்ன பிரச்சினைகளை அடுத்தவர்களிடம் கூறாதீர்கள். எந்த ஒரு பிரச்சினைக்கும் தீர்வு உண்டு. இருவரும் பேசி இணக்கப்பாடான முடிவு எடுங்கள். கதைக்க முதல் பல தடவை யோசித்து கதையுங்கள். யாருடைய மனதும் நோகும்படியாக கதைக்காதீர்கள்.

உங்கள் துணைவர் சிறிய பொருளைப் பரிசாகத் தந்தாலும் சிரித்த முகத்துடன் ஏற்றுக் கொள்ளுங்கள். அது முத்தமாய் இருந்தாலும் சரி நீங்களும் அவருக்கு பரிசளியுங்கள்.

எதற்கெடுத்தாலும் கோபப்படாதீர்கள். சின்னச் சின்ன விடயத்தையும் பெருசு படுத்தாமல் சமாளித்துப் போங்கள். நீங்களாக எதையும் முடிவு எடுக்காமல் உங்கள்கணவரோடு சேர்ந்து முடிவு எடுங்கள்.

எதற்காகவும் துணைவரை சந்தேகப் படாதீர்கள். உங்கள் சந்தேகத் தீயே உங்கள் குடும்பத்தை எரித்து விடும்.


பணம் மட்டும் வாழ்க்கையல்ல பாசமும் கலந்தது தான் வாழ்க்கை என்பதை மறவாதீர்கள். இசைக் குழு, சினிமா எனச் செல்லும் உங்கள் கணவரின் சின்னச் சின்ன சந்தோஷங்களுக்கு தடை போடாதீர்கள். வீட்டையும், உங்களையும் எப்போதும் சுத்தமாக வைத்திருங்கள். சின்னத் திரையில் மூழ்கி விடாமல் பிரயோசனமாக உங்கள் பொழுதைச் செலவிடுங்கள். கணவர் குழந்தைகள் என அவர்கள் விடயத்தில் அதிக கவனம் செலுத்துங்கள். இப்படியான உங்கள் செயல்கள் மூலம் உங்கள் அன்பை வெளிப்படுத்துங்கள். அதுதான் வாழ்க்கையில் இன்பத்துக்கான திறவுகோல்.

திருமதி அகிலதீபன், சரசாலை

# குடும்பம் என்றால் புரிந்துணர்வு அவசியம்

**கணவருக்கு மரியாதை கொடுங்கள். வீண் வாக்குவாதங்களை தவிர்க்கவும். அதனால் பல பிரச்சினைகள் தீரும். மீறியும் வாக்குவாதம் ஏற்பட்டால் விட்டுக் கொடுத்துச் செல்லுங்கள். நீங்கள் ஒரு முறை விட்டுக் கொடுத்து தான் பாருங்களேன். அடுத்த முறை அவர் விட்டுக்கொடுப்பார்.**





உங்கள் கணவரை உங்கள் கைக்குள் வைத்துக் கொள்ள விரும்புகிறீர்களா? "ஆமாம், ஆமாம்' என்று நீங்கள் அதி வேகமாகப் பதில் சொல்வது தெரிகிறது.

கணவரின் அன்பை நிரந்தரமாகப் பெறுவதற்கு நிறைய வழிகள் உள்ளன. என்னென்ன செய்யலாம் என்று கொஞ்சம் பார்ப்போமா..

காதலர்கள் மட்டும் தான் 'ஐ லவ் யூ சொல்ல" வேண்டும் என்றில்லை. கணவனும், மனைவியும் கூட சொல்லலாமே. தினமும் உங்கள் கணவரிடம் ஐ லவ் யூ சொல்லுங்கள். அவர் மகிழ்ந்து போய் ஐ லவ் யூ டூ டா செல்லம் என்று சொல்வார்.

கணவர் காலை அலுவலகத்துக்கு செல்லும் முன்பு அன்பாக ஒரு முத்தம் கொடுத்து அனுப்பி வையுங்கள். திரும்பி வந்ததும் உங்களுக்கு அவர் இரட்டிப்பு மகிழ்ச்சியை அளிப்பார். அன்றைய நாள் இருவருக்குமே இனிய நாளாக இருக்கும்.

கணவருக்கு மரியாதை கொடுங்கள். வீண் வாக்குவாதங்களை தவிர்க்கவும். அதனால் பல பிரச்சினைகள் தீரும். மீறியும் வாக்குவாதம் ஏற்பட்டால் விட்டுக் கொடுத்துச் செல்லுங்கள். நீங்கள் ஒரு முறை விட்டுக் கொடுத்து தான் பாருங்களேன். அடுத்த முறை அவர் விட்டுக்கொடுப்பார்.

என் கணவர் ஒரு முடிவு எடுத்தால் அது சரியாக இருக்கும். அவர் ஏதாவது சொன்னால் அதில் ஒரு காரணம் இருக்கும் என்று நம்புங்கள். கணவரை நல்ல நண்பராக்கிக் கொள்ளுங்கள். நண்பர்கள் போன்று மனம் விட்டுப் பேசுங்கள்.

கணவன், மனைவிக்கு இடையே யாரையும் நுழைய விடாதீர்கள். உங்கள் பிரச்சினைகளை நீங்களே பேசித் தீர்த்துக் கொள்ளுங்கள். இல்லையென்றால் சிறிய பிரச்சினை [illegible] வாய்ப்புண்டு.

எதற்கெடுத்தாலும் என் அம்மா வீட்ல எப்படி இருந்தேன் தெரியுமா என்று மூக்கைச் சிந்த ஆரம்பிக்காதீர்கள். அது கணவருக்கு எரிச்சலூட்டும். முடிந்தால் அம்மா வீட்டில் போய், எங்க வீட்டுக்காரர் வீட்ல எப்படி கவனிச்சுக்குறாங்க தெரியுமா என்று கணவர் புகழ் பாடுங்கள். உங்களவருக்கு உங்கள் மீது அன்பு கூடும்.


கணவர் மீது முழு நம்பிக்கை வையுங்கள். கணவருடன் குழந்தைத் தனமாக பேசுங்கள், விளையாடுங்கள். இது மன இறுக்கத்தைப் போக்கும்.

மாறாக கணவரது தாய் சகோதரிகள் பற்றி ஒரு போதும் குறை கூறாதீர்கள். குறை இருந்தால் சொல்லலாம், ஆனால் பட்டென உடைத்து படாரெனப் பேசிக் கெடுத்து விடக் கூடாது. எதையும் நேரம் காலம் பார்த்துச் சொல்ல வேண்டும். இல்லை என்றால் உங்கள் வாழ்க்கையில் நீங்களே மண்ணை அள்ளிப்போட்டது போன்றாகிவிடும். எதையும் நாசுக்காக எடுத்துச் சொல்லுங்கள். அவர் புரிந்து கொள்வார்.

உங்கள் கணவரின் தாய் சகோதரிகள் பிரச்சினை செய்தாலும் கூட என் மனைவி சும்மா தான் இருக்கா நீங்க தான் அவளோட சண்டைக்கு வருகிறீர்கள் என்று உங்களுக்கு ஆதரவாகப் பேசுவார். சண்டை போடாத கணவன், மனைவி இருக்க முடியாது. அப்படி சண்டை போட்டால் அதை மனதில் வைத்துக் கொண்டே இருக்கக் கூடாது. அவ்வப் போது மறந்துவிட வேண்டும். கட்டிப்பிடி வைத்தியத்திற்கு இதில் நிறையப் பங்கு உண்டு. அதையும் விடாதீர்கள். அடிக்கடி கணவரை அன்புடன், ஆசையுடன் கட்டிப்பிடியுங்கள்.


கணவரை அடக்கி ஒடுக்கித்தான் உங்கள் வசப்படுத்த வேண்டும் என்பதில்லை. அன்பாலும் உங்கள் பக்கம் சாய வைக்கலாம். இதையெல்லாம் செய்து பாருங்கள், பிறகு உணர்வீர்கள் அருமையான மாற்றங்களை!

திலகத்துக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புவோர் "திலகம்", உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






ஜீ.ஆர்.றிந்தியா, தரம்-4சி,
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி



ப.சரவணன், தரம்-2 பி,
யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை




கு.திவ்வியா, தரம்-7,
யாழ். சன்மார்க்க மகா.வி.



கு.நிபிதா, தரம்-1,
யாழ். சன்மார்க்க மகா.வி.



ச.அனிருத்தன், தரம்-1,
யா/ மானிப்பாய் மகளிர் கல்லூரி
ஆரம்பப் பிரிவு



கு.பரிஷா, தரம்-2,
யாழ்.இந்து மகளிர் ஆரம்பப்
பாடசாலை

## கடலின் அழகு

கடலிற் பொங்கும் திரையைப் பார்
காற்றில் சிதறும் நுரையைப் பார்
அலைகள் மோதும் கரையைப் பார்
அவைகள் தடவும் தரையைப் பார்
நுரைகள் மோதும் கரையைப் பார்
நூலில் தொங்கும் இரையைப் பார்
ஓடும் மீன்கள் நிரையைப் பார்
ஒளிக்கும் நண்டின் விரைவைப் பார்



ம.தேனுஜன்
தரம்-4பி, யா/ புத்தூர் இந்து ஆரம்பப் பாடசாலை.

# கீதை சொல்லும் பாடம்

ஒரு ஊரில் வயதான முதியவர் ஒருவர் தன் பேரனுடன் வாழ்ந்து வந்தார். தினமும் அதிகாலையில் எழுந்து, சமையலறை மேசை அருகில் அமர்ந்து, பகவத் கீதை படிப்பது அவர் வழக்கம். அனைத்து விடயங்களிலும் அவரைப் பின்பற்ற நினைத்த பேரனும், கீதை படிக்க முற்பட்டான்.


ஒருநாள் தாத்தாவிடம், ''நானும் உங்களைப்போல் தினமும் பகவத் கீதை படிக்கிறேன். ஆனால், எனக்கு அதன் அர்த்தம் விளங்கவில்லை; புரிந்த கொஞ்சமும், புத்தகத்தை மூடி வைத்ததும் மறந்துவிடுகிறது. இப்படி அதைப் படிப்பதால், எனக்கு என்ன பிரயோசனம்?'' என்று கேட்டான். அடுப்பில் கரியைப் போட்டுக்கொண்டிருந்த தாத்தா, அமைதியாக கரிக் படிந்திருந்த மூங்கில் கூடையைச் சிறுவனிடம் கொடுத்து, ''நதிக்குப் போய் இந்தக் கூடையில் நீர் கொண்டு வா'' என்றார். பேரனும் கூடையுடன் ஆற்றுக்கு ஓடினான்.

ஆனால், மூங்கில் கூடையில் தண்ணீர் தங்குமா என்ன? அவன் வீடு திரும்புவதற்குள் தண்ணீர் முழுவதும் ஒழுகிவிட்டது. தாத்தா சிரித்துக்கொண்டே, ''நீ இன்னும் வேகமாக வர வேண்டும்'' என்று சொல்லி, மறுபடியும் அவனைத் தண்ணீர் எடுத்து வர அனுப்பினார்.

இந்த முறை சிறுவன் வேகமாக ஓடி வந்தான்; ஆனாலும், வீடு சேர்வதற்குள் கூடையில் இருந்த நீர் வெளியேறி அது வெறுமையாகி விட்டது. காலியாகிவிட்டது. கூடையில் தண்ணீர் கொண்டு வருவது சாத்தியம் இல்லை என்று புரிந்துகொண்ட சிறுவன், வாளி ஒன்றைக் கையில் எடுத்தான். ஆனால் தாத்தாவோ, எனக்கு ''வாளியில் நீர் வேண்டாம். கூடையில்தான் வேண்டும். நீ இன்னும் தீவிரமாக முயற்சி செய்'' என்று அவனை மறுபடியும் ஆற்றுக்கு அனுப்பினார். அந்த முறையும் அவனால் தண்ணீர் கொண்டுவர முடியவில்லை. ''போங்க தாத்தா, இது பயனற்ற வீண் வேலை!'' என்றான், மூச்சு வாங்கியபடி. அவனைப் பார்த்துப் புன்னகைத்த தாத்தா, ''நீ இதைப் பயனற்றது என்கிறாய். ஆனால், கூடையைப் பார், தெரியும் என்றார்''. பையன் கூடையைப் பார்த்தான். முதல் தடவையாக மூங்கில் கூடையின் தோற்றம் முற்றிலும் வேறாக மாறியிருப்பதைக் கண்டான். பழைய, கரி படிந்த கூடை, இப்போது உள்ளும் புறமும் சுத்தமாகிப் புத்தம் புதியது போல் காணப்பட்டது! தாத்தா சொன்னார்: ''குழந்தாய்! கீதை படிக்கும்போது இதுதான் நமக்கும் நேர்கிறது.

உனக்கு அர்த்தம் புரியாமல் இருக்கலாம்; நினைவில் நிற்காமல் போகலாம். ஆனால், நீ உள்ளும் புறமும் தூய்மையடைந்து முற்றிலும் புதிய மனிதனாகிவிடுவாய்! இது கீதாச்சார்யனான கிருஷ்ண பரமாத்மா, நம் வாழ்வில் நிகழ்த்தும் அற்புதம்!'' என்றார்.





## எழுது...

எழுது உன்னால் முடியும்
ஏதாவது எழுது
சிறகு முளைத்த உன் சிந்தனைகளை
இனியும் சிறை வைக்காதே
எழுது
உன்னால் முடியும்
வாழ்க்கையின் இன்னொரு பகுதியை
பார்க்க முடியும்
எழுது
ஏன் இனி தயக்கம்
தனிமையும் இனிமையும்
தவமாய் இருக்கும் போது
உன்னால் எதையும் சாதிக்கலாம்
எங்கே எழுதத் தொடங்கு இதோ
ஆசான் அடி எடுத்து தருகிறேன்
எடு பேனாவை இன்னொரு
அக்கினி வேள்வி செய்ய
ஏழையின் வியர்வையில் இலக்கியம் பாடு
இனியும் தயங்காதே
உன்னால் முடியும்
அகரம் கற்றுத்தான் அனைத்தும் கற்பது
எடு பேனா தொடு இமயத்தை

இ.தாட்சாயினி
தரம்-7, யா/ நீர்வேலி றோ.க.த.க.பாடசாலை.

## தகவல் பெட்டகம்

★ தாகூரால் இந்தியாநாட்டு தேசிய கீதமும், பங்களாதேஷின் தேசிய கீதமும் இயற்றப்பட்டன.
★ஜப்பானியர் கடற்பாசி யையும் உணவாக உட்கொள் கின்றனர்.
★ மது அருந்துபவர்களுக்கு சிறுமூளை பாதிப்படைவதா லயே தள்ளாடுகிறார்கள்.
★ பிரான்ஸ் நாட்டில் பெற்றோல் ''எசன்ஸ்'' என்ற பெயரில் வழங்கப்படுகிறது.
★ பட்டுப்பூச்சி ஒன்றின் கூடு 3 ஆயிரம் அடி நீளமுள்ளபட்டு நூலைத் தரும்.

சா.ஜிந்துஜா,
கோண்டாவில்.

## விடை தெரியுமா? 178

### உங்களுக்கும் பரிசில்கள்

1. 'பென்சிலின்' மருந்து தயாரிக்கப்படும் தாவரம் எது?
2. முதன் முதலில் 'கலைக்களஞ்சியம்' வெளியிட்ட நாடு எது?
3. 75 ஆவது ஆண்டு நிறைவில் எடுக்கப்படும் விழா எவ்வாறு அழைக்கப்படும்?
4. ஞாபகசக்தி கூடிய விலங்கு எது?
5. உலகத்தின் கூரை என்று அழைக்கப்படும் நாடு எது?

### விடைகள் 176

1. ஆஸ்திரேலியா
2. ஓடிப்போனவன்
3. [illegible]
4. 2012.08
5. செப்ரெம்பர் 08

### வெற்றி பெற்றோர் விவரம் (176)

* தி.சுஜீவன், தரம்- 7பி, ஹாட்லிக் கல்லூரி
* பீ.மேரி சிந்துஜா, தரம்- 9, மிருசுவில் றோ.க.த.க.பா.
* ர.ஜோசினி, தரம்-9பி, வே.ம.உ.பா.
* செ.விஜித்தா, தரம்- 8, கிளி/ கிராஞ்சி அ.த.க.பாடசாலை.
* வி.சாளினி, தரம்- 7, கோண்டாவில் இராமகிருஸ்ண ம.வி.

### விடை தெரியுமா?

தெரிந்தால் 29.09.2012 இற்கு முன்னர் சரியான விடைகளை அனுப்பும் 6 மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, ரூபா 125 மற்றும் ரூபா 100 வீதமும் ஏனைய மூவருக்கும் தலா ரூபா 75வீதமும் பரிசில்கள் நூல்களாக வழங்கப்படும்.

சிறுவர் கதிருக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்பும் சிறார்கள் ''சிறுவர்கதிர்'', உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தால் அழியாத சுவடு

# 'குத்துவிளக்கு'






■ சி.ஜனகன், ஜோ.தட்சா, MRTC

சமூகத்தின் எல்லா கலைகளையும் தன்னகத்தே இணைத்துக் கொண்டு இன்று மக்கள் விரும்பும் துறையாக பரிணமித்திருக்கின்றது திரைப்படத்துறை. இலங்கைத் திரைப்பட துறையின் ஆரம்ப காலத்தில் அதாவது 1956 களில் தமிழர்களின் ஆதிக்கமே இருந்தது.

முதன் முதலில் வெளியாகிய சிங்கள மொழித் திரைப்படமாகிய 'கடவுனு பொறந்துவ' என்னும் திரைப்படத்தை தயாரித்தவர் தமிழராகிய எஸ்.எம். நாயகம் என்பவராவர்.

அவருக்குப் பிற்பட்ட நாள்களில் தமிழர்கள் தமக்கான திரைப்படங்களை தயாரிக்க ஆரம்பித்தனர். அவற்றில் தனித்துவமான இடங்களை பெற்ற திரைப்படங்களாக வாடைக்காற்று, பொன்மணி, தோட்டக்காரி, குத்துவிளக்கு போன்றவற்றைச் சுட்டிக் காட்டிக் கூற முடியும்.

1972 இல் வெளியான யாழ்ப்பாணத் தமிழ்த் திரைப்படமாகிய ''குத்துவிளக்கு'' மீண்டும் கடந்த 15.09.2012 அன்று யாழ். பல்கலைக்கழக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையத்தில் திரையிடப்பட்டிருந்தது.

24.02.1972 இல் யாழ்ப்பாணத்தில் திரையிடப்பட்ட இத்திரைப்படம் 100 நாள்களை கடந்து சாதனை படைத்திருந்தது.

இலங்கை கலைஞர்கள், எழுத்தாளர்கள், தொழில் நுட்பவியலாளர்களின் ஒன்றிணைவில் உன்னதமான தமிழ்த் திரைப்படம் உருவாக வேண்டும் என்ற வி.எஸ். துரைராஜாவின் எண்ணத்தின் உருவாக்கமே ''குத்துவிளக்கு'' திரைப்படம். வி.எஸ். துரைராஜா யாழ்ப்பாணத்தின் பொது நூலகம், தந்தை செல்வா நினைவுத் தூபி, வீரசிங்கம் மண்டபம் போன்ற கட்டடங்களை வடிவமைத்த சிறந்த கட்டடக்கலை நிபுணரும் கூட.

இலங்கை கலாசாரத்தை பிரதிபலிக்கும் முகமாக இலங்கை கலைஞர்களைக் கொண்டே உருவாக்கப்பட்ட இத் திரைப் படத்தை டபிள்யூ.எஸ்.மகேந்திரன் இயக்கியுள்ளதுடன் ஒளிப் பதிவாளராகவும் பணிபுரிந்துள்ளார்.

இத்திரைப்படத்தை முதலில் இயக்கும் பொறுப்பை பாலு மகேந்திராவிடம் ஒப்படைக்க விரும்பியிருந்தார் வி.எஸ்.துரைராஜா. ஆனால் பாலு மகேந்திரா மலையாளத் திரைப்படம் ஒன்றை இயக்குவதற்காக இந்தியா சென்ற நிலையில் அந்த பொறுப்பு டபிள்யூ. எஸ். மகேந்திரனிடம் ஒப்படைக்கப்பட்டது.

அந்தக் காலப் பகுதியில் திரையுலகில் அனுபவம் பெற்றிருந்த ஈழத்து இரத்தினம் இத் திரைப்படத்துக்கான திரைக்கதை வசனம் மற்றும் பாடல்களை எழுதியுள்ளார். அக்காலத்தின் பிரபல இசையமைப்பாளர் ஆர்.முத்துச்சாமி இசையமைத்திருந்தமை படத்தின் வெற்றிக்கு பக்கபலமாக அமைந்தது. சங்கீத புஷணம் எம்.ஏ. குலசீலநாதன், மீனா மகாதேவன், ஆர். முத்துச்சாமி ஆகியோர் இத் திரைப்படத்தின் பாடல்களைப் பாடியுள்ளனர்.

திரைப்படத்தின் கதாநாயகனாக அச்சுவேலி நமசிவாயமும்(ஜெயகாந்) கதாநாயகியாக பிரபல நாட்டியத் தாரகை லீலா நாராயணனும் பாத்திரமேற்று நடித்துள்ளனர். அத்துடன் ஆனந்தன், திருநாவுக்கரசு, திருகோணமலை இந்திராதேவி முதலிய மேடை நாடக அனுபவம் மிக்க பலர் துணை நடிகர்களாக நடித்துள்ளனர்.

அக்காலப் பகுதியின் சாதாரண விவசாயக் குடும்பத்தின் கதை. ஏழை விவசாயியான வேலுப்பிள்ளைக்கும் மனைவி இலட்சுமிக்கும் மூன்று பிள்ளைகள். இத்திரைப்படத்தில் வேலுப்பிள்ளையாக நடிகர் பேரம்பலமும் இலட்சுமியாக சாந்திலேகாவும் பாத்திரமேற்றுள்ளனர். குடும்பப் பொறுப்பை சுமக்கும் மூத்த மகன் சோமுவாக நடிகர் ஜெயகாந்தும் அவனின் பாசத்துக்குரிய சகோதரிகள் மல்லிகா மற்றும் ஜானகியாக லீலா நாராயணனும் பேபி பத்மாவும் நடித்துள்ளனர்.

சோக மயமாக நகரும் விவசாயக் குடும்பத்தை அழகாக சித்திரித்துள்ளது குத்துவிளக்கு.

இந்த ஏழைக் குடும்பத்துக்கு அடுத்த வீட்டில் பணக்காரர்களாக வாழ்க்கை நடத்தும் குமாரசுவாமி நாகம்மா தம்பதியராக திருநாவுக்கரசு மற்றும் இந்திராதேவியும் தமது திறமையை வெளிப்படுத்தியுள்ளனர். இவர்களுக்கு இரண்டு பிள்ளைகள். மகன் செல்வராஜாவாக ஆனந்தனும் நாகரிகப் பெண்ணான ஜெயாவும் உள்ளனர்.

பணக்கார வீட்டுப் பிள்ளையான செல்வராஜுக்கும் ஏழைப்பெண்ணான மல்லிகாவுக்கும் இடையில் காதல் ஏற்படுகின்றது. ஆனாலும் அவர்கள் விருப்பத்துக்குத் தடையாக வருகிறாள் செல்வராஜுன் தாய் நாகம்மா.

ஏழைக் குடும்ப மகனான சோமு தன் தங்கையின் திருமணத்துக்கு தன் பல்கலைக் கழகப் படிப்பையும் இடைநிறுத்தி தன் வயதை ஒத்த இளைஞர்களுடன் கூட்டுறவுப் பண்ணையில் வேலை செய்து பணம் புரட்டுகின்றான்.

இதற்கிடையில் செல்வராஜுற்கு வேறொரு பெண்ணைத் திருமணம் செய்ய ஏற்பாடுகள் செய்வதையறிந்த சோமுவின் தங்கை தற்கொலை செய்து கொள்கிறாள்.

இதுவே குத்துவிளக்கு திரைப்படத்தின் கதைச் சுருக்கம்.

1971 ஆம் ஆண்டு இடம்பெற்ற ''குத்துவிளக்கு'' திரைப்பட ஆரம்ப விழாவை இந்திய பிரபல நடிகை சௌகார் ஜானகி ஆரம்பித்து வைத்தமையும் 1975 ஆம் ஆண்டு டில்லியில் இடம்பெற்ற உலகத் திரைப்பட விழாவில் வர்த்தக பிரிவில் ''குத்துவிளக்கு'' திரைப்படம் திரையிடப்பட்டமையும் வரலாற்றுச் சுவடுகள்.

அதுமட்டுமன்றி யாழ்ப்பாணத்தில் இத்திரைப்படத்தின் முதல் காட்சியை ஒரு விவசாயி ஆரம்பித்து வைத்துள்ளமை மண் வாசனையைக் காட்டுகிறது. இத்திரைப்படத்தின் பெரும்பாலான காட்சிகள் யாழ்ப்பாணத்தில் உள்ள ஆலயங்கள், குளங்கள், வயற் பகுதிகளில் படமாக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாண, வடமராட்சியில் பருத்தித்துறையை அண்டிய பகுதிகளிலும் கொழும்பு, கண்டி மற்றும் மாங்குளம் ஆகிய இடங்களிலும் படப்படிப்புக்கள் இடம்பெற்றுள்ளன. குறிப்பாக நல்லூர் மற்றும் செல்வச்சந்நிதி ஆலய உற்சவக் காலங்களும் இத்திரைப்படத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளமை சிறப்பம்சமாகும். அன்றைய நாளின் நல்லூர் கந்தசுவாமி ஆலயம், செல்வச்சந்நிதி ஆலயம் என்பவற்றை ஆவணப்படுத்தியுள்ளவிதம் அற்புதமாக அமைந்துள்ளன.

பணம் மனித வாழ்வில் எவ்வாறு ஆதிக்கம் செலுத்துகின்றது, மனிதனை அது எவ்வாறு அடிமையாக்குகின்றது என்பதும் சமுதாயத்தில் விவசாயிகள் படும் துன்பங்கள், பெண்கள் எதிர்கொள்ளும் சீதனப் பிரச்சினைகள், வேலையில்லாப் பிரச்சினைகள், சாதிப் பிரிவினைகள், ஏழைப் பெண்களின் உண்மைக்காதல் மற்றும் பணக்கார ஆண்களின் பொழுதுபோக்குக் காதல் என்பவை மிக தத்ரூபமாக இத்திரைப்படத்தில் வெளிக்காட்டப்பட்டுள்ளன.


இலங்கைத் தமிழ் திரைப்படத் துறையில் முக்கியமான அத்தியாயத்தை கொண்டுள்ள குத்துவிளக்கு தனது 50 ஆவது நாளை சங்கானையிலும், 100 ஆவது நாளை சுன்னாகத்திலும் கொண்டாடியமை குறிப்படத்தக்கது.

யாழ்ப்பாணத்தில் 100 நாள்களை தொட்ட முதல் இலங்கைத்தமிழ் திரைப்படம் குத்துவிளக்கு என்பது இங்கு கவனிக்கத்தக்கது. யாழ்ப்பாண மக்களின் வாழ்வியல், கலை, பண்பாடு, மொழிநடை என அனைத்தையும் உள்ளடக்கிய 2 மணித்தியால யதார்த்தமான திரைப்படமாக குத்துவிளக்கு திரைப்படத்தை நாம் பார்க்க முடிகிறது.

இவ்வாறான இலங்கைத் தமிழ்த் திரைப்படங்கள் ஏன் இன்று வெளியாவதில்லை? என்ற கேள்வி எமக்குள் எழுந்த போது அதற்கான விடையும் கிடைத்தது. வர்த்தக ரீதியாக கலை மாற்றம் பெற்றபோது நல்ல கலைகளும், கலைஞர்களும் இந்த துறையை விட்டு ஒதுங்கிக் கொண்டனர். இதுதான் இந்த நிலைக்குக் காரணம். அத்துடன் போர் சூழல்களால் முன்னைய இலங்கைத்தமிழ் திரைப்படங்களின் பிரதிகள் அழிக்கப்பட்டதும், எரிக்கப்பட்டதும் துயரமான சம்பவங்களே.


இன்று எம் மத்தியில் இருக்கும் இலங்கைத்தமிழ் திரைப்படங்கள் மிகக் குறைவானவையே. அந்த பிரதிகளை வைத்திருப்பவர்கள் அவற்றை இக்கால சந்ததியினருக்கு காட்சிப்படுத்துங்கள். எங்கள் வரலாற்றை தெரியப்படுத்துங்கள். எமது வாழ்வியலை, எமது ரசனையை வெளிப்படுத்துவதற்கு இந்திய திரைப்படங்களை நம்பிப் பயனில்லை. நாம் நமக்கான திரைப்படங்களை தயாரிக்க வேண்டும். அதற்கு முன்னதாக நமது திரைப்பட வரலாற்றை நாம் திரும்பிப் பார்க்க வேண்டும். அவை எமக்கு பல உண்மைகளை சொல்லிச் செல்லும். பல பாடங்களை கற்றுத்தரும். காலங்களை கடந்து சுவடாக எம்மத்தியில் நிலைத்து நிற்கும் குத்துவிளக்கு அதற்கு சிறந்த உதாரணமாகும்.

பணம் மனித வாழ்வில் எவ்வாறு ஆதிக்கம் செலுத்துகின்றது, மனிதனை அது எவ்வாறு அடிமை ஆக்குகின்றது என்பதும் சமுதாயத்தில் விவசாயிகள் படும் துன்பங்கள், பெண்கள் எதிர்கொள்ளும் சீதனப் பிரச்சினைகள், வேலையில்லாப் பிரச்சினைகள், சாதிப் பிரிவினைகள், ஏழைப் பெண்களின் உண்மைக் காதல் மற்றும் பணக்கார ஆண்களின் பொழுதுபோக்குக் காதல் என்பவை மிக தத்ரூபமாக இந்தத் திரைப்படத்தில் வெளிக்காட்டப் பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொற்சிலம்பம் - போட்டி இல: 233



அனுப்புபவர் பெயர்:..............................................

விலாசம்:..............................................

..............................................

கையொப்பம்:..............................................

### இடமிருந்து வலம்

1. வீரதீரச் செயல்
4. மிகுந்த
7. முனிவர் இயற்றுவது
8. ஒருவரின் வதனத் தோற்றத்தின் பலன்
9. சரஸ்வதி
11. ரக
12. மரம்
13. சமுத்திரம்
14. அரசரின் இருக்கை
16. பின் அல்ல
17. மைதானம்
19. நித்திரையில் காண்பது
20. தடிமன் பீடித்தால் வருவது
21. தாங்கள்
22. ஒன்றின் பெயரால் மற்றொன்று அழைக்கப்படுவது.

### மேலிருந்து கீழ்

1. பாதகம் அல்ல
2. துன்பத்தால் வருவது
3. இணைக்கச் சொல்
4. உள்
5. தமிழகம் இதற்குள் அடங்கும்
6. ஊறுதல்
8. இது காலில் குத்தும்
10. இறுதிச் சடங்கு
13. நெருப்பு
14. தேர்தலில் வேட்பாளருக்கு ஒதுக்கப்படுவது
15. கிரியை
16. முன்னிலையில்
18. பனிக்காலம் வந்துவிட்டால் இது வாட்டும்
20. கழித்தல் குறி.

* வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

* ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப் படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 231 இற்கான சரியான விடைகள் வருமாறு:

### இடமிருந்து வலம்

(1) நாவிதன் (4) பங்கு (6) ரதம் (7) கடை (8) சம்பவம் (10) புவி (11) திருமகள் (14) சல்லி (16) விரசம் (18) யுவன் (20) குண்டு (21) அகன்ற (22) தியாகம்

### மேலிருந்து கீழ்

(1) நாரசம் (2) விதம் (3) தம்பதி (4) படை (5) குளவி (7) கம்மல் (9) வருசம் (10) புள் (12) கலியுகம் (13) முரண் (15) மன்றம் (16) விருதி (17) சடுதி (19) வன் (21) அக

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்ட சாலிகளது பெயர் விபரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.
6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,

**சொற்சிலம்பம் போட்டி**
**இல. 233**
**நியூ உதயன் பப்ளிகேஷன் [பிறைவேற்]லிமிட்டெட்,**
**இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன் கிழமைக்கு அடுத்து வரும் புதன் கிழமைக்கு முன்னர், (03.10.2012 ஆம் திகதிக்கு முன்னர்) கிடைக்கத் தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

7. சொற்சிலம்பம்போட்டி இல.233இல்வெற்றி பெறுவோர்களது விபரம்07.10.2012 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 231 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விபரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு**
**வ.அவனிகா,**
இல.599/21, இணுவில் கிழக்கு, சுன்னாகம்.

**2 ஆம் பரிசு**
**க.உமாபிரகாஸ்,**
அன்புபுரம், முழங்காவில்.

**3 ஆம் பரிசு**
**கே.கே.வேகானன்,**
வித்தியானந்தாக் கல்லூரியடி, முள்ளியவளை, முல்லைத்தீவு.

**4 ஆம் பரிசு**
**திருமதி அ.சொர்மாலை,**
பெரிய தம்பிரான் கோயில் வீதி, தும்பளை மேற்கு, பருத்தித்துறை.

**5 ஆம் பரிசு**
**ஒற.டயான்ஸிகா,**
சுண்டுக்குளி, மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்.

**பாராட்டுப் பெறுவோர்**

**க.ஊர்மிளா,**
இல.85, உப்பளம், பெரியகடை, மன்னார்.

**திருமதி ச.லிங்கமூர்த்தி,**
அ.மி.பாடசாலை ஒழுங்கை, வல்வெட்டித்துறை.

**ச.ஜசிந்தன்,**
அத்தியடி, புதுவீதி, யாழ்ப்பாணம்.

பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி 'உதயன்' அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம். யாழ். மாவட்டத்தைத் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களிலிருந்து பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்பட்டோருக்கான பணப்பரிசில்கள் காசோலை மூலம் காலக்கிரமத்தில் அவர்களது விலாசத்துக்குப் பதிவுத் தபால்மூலம் அனுப்பிவைக்கப்படும்.

# திருந்தாத ஜென்மம்....

(11 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தலையில் அடித்தபடி வானிலிருந்து இறங்கி பிரேதம் வைத்திருந்த இடத்து வரவும் அவளுடைய நெருக்கிய உறவினர்கள் அவளை கட்டியணைத்து அழுதார்கள்.

''அம்மா எப்படியம்மா எங்களை விட்டுப் போக மனம் வந்தது. அப்பா பி.எச்.ஐ.மார் பேசுவினம். ஃபைன் அடிப்பார்கள் என்று வீட்டை எந்த நேரமும் சுத்தமாக வைச்சிருப்பார் எண்டு சொல்லுவியே இப்ப எப்படியம்மா உங்களுக்கு டெங்கு வந்தது'' என்று ஒப்பாரி வைத்து அழ அவளைக் கட்டியணைத்துப் பக்கத்து வீட்டுப் பெண்,

''ஓம் பிள்ளை கொப்பா தன்ரை வீட்டை சுத்தமாக்கிக் கொண்டேயிருப்பார். எல்லாக் குப்பைகளையும் கொண்டுபோய் வெறுங்காணிக்குள் போடுவாரே என்று அவளும் மகளுடன் சேர்ந்து ஒப்பாரி வைத்து அழுதாள்.

''போட்டால் மட்டும் பாதகமில்லை. பி.எச்.ஐ.மார் வந்து கேட்ட போது என்ரை வீட்டுக் குப்பைகளை அவ்வளவு தூரம் கொண்டு போய் போடுவேனா? என்று அப்பாவி போல கூறிவிட்டார். பி.எச்.ஐமாரும் இந்த மஷுவென் படிச்சமாதிரி இருக்கிறான்.

இப்படி இவன் பிழை விடுவானே என்று நினைத்துக் கொண்டு ''வெரி சொறி யாரோ உங்களைப் பற்றி தப்பாக எழுதிப் போட்டாங்கள்'' என்று கூறிவிட்டு அந்தக் காணிக்குப் பக்கத்தில் உள்ள வீட்டுக்காரரிடம் எங்களாலை ஒன்றுஞ் செய்யேலாது.

கையும் மெய்யுமாக பிடித்தாலொழிய மற்றப்படி ஆக்ஷன் எடுக்கேலாது என்று கூறிவிட்டுப் போயிட்டாங்கள். அதற்கு பிறகாவது அந்தக் காணிக்குள் குப்பை இல்லாமல் இருந்திருந்தால் நாங்கள் பேசாமல் இருந்திருப்போம். பி.எச்.ஐ ஆள்களை கூட்டிக் கொண்டு வந்து கூட்டிக் குப்பை எரித்துச் சுத்தமாக்கின பிறகும் கோழிச்செட்டைகள், தகரங்கள் என்று போடப்பட்டிருந்தன என்று கூறி முடித்தாள். செத்த வீட்டுக்கு வந்த வெறுங்காணிக்கு அருகிலுள்ள வீட்டுப் பெண்.

''அதற்கு பிறகு போட்டவர்கள் யார் என்று தெரியுமா'' என்று தன் சந்தேகத்தை தெளிவுபடுத்த விரும்பியவளாய் கேட்டாள் அவளருகே இருந்த இன்னொரு பெண்.

''தெரியாது, ஆனால் ஜனநடமாட்டம் இல்லாத நேரம் பார்த்துப் போடுகிறார்கள். இவர்கள் போடும் குப்பைகள் காற்றுக்கு அடிபட்டுக் கொண்டு வந்து எங்கள் கிணற்றுக்குள் விழுகிறது. வயிற்றைப் பிரட்டும் துர்நாற்றம்..'' அவள் வேதனையுடன் கூறினாள்.

இண்டைக்கு எங்கள் சமுதாயம் எழும்பாமல் விடுவதற்கு காரணம் சுயநலவாதிகளாக இருப்பது. அது மட்டுமல்ல யார் சொல்றதையும் கேட்டு நடப்பதை கௌரவக் குறைவு என்று நினைப்பது. எது எப்படியென்றாலும் கடவுள் தீர்ப்பொன்று இருக்கும். சட்டம் ஏமாந்துபோனாலும் போகும். காலம் இப்போது பழி வாங்கித் தீர்த்துவிட்டது.

அழுது களைத்து சோர்வுடன் இவர்களுக்குச் சற்றுத் தள்ளி இருந்த ராணியின் மகளின் காதுக்கும் இவர்களுடைய சம்பாஷனை கேட்டது.

அவளின் மனம் பன்மடங்கு வேதனையை அனுபவித்தது போனில் எத்தனை தரம் அப்பாவுக்கு அட்வைஸ் பண்ணியிருப்பேன். அடுத்தவன்ரை காணிக்குள்ள குப்பைகளை போடாதேங்கோ. கூடாத பிளாஸ்ரிக் வாளிக்குள் போட்டு வைத்துவிட்டு யூ.சி. லொறி வரும்போது அதற்குள் போட்டு விடுங்கோ என்று.

அப்ப போனில் சொன்னாரே நான் செய்யுறன் எண்டு சீ இவரும் ஒரு மனுஷரா தன் மனதுக்குள்ளேயே தந்தையைத் திட்டித் தீர்த்தவள் யார் சொல்லியும் திருந்தாதவருக்கு இதுதான் சரியான தண்டனை. எட்டுச் செலவை முடித்து கொண்டு நான் கொழும்புக்குப் போயிடனும். அவர் தனியே இருந்து குற்ற உணர்வுடன் காலம் கழிக்கட்டும்.

''என்ன பிள்ளை அம்மாவுக்கு பூவுத் தண்ணியும் போட்டுக் கும்பிடவில்லையா?'' அருகிலிருந்தவள் குரல் கொடுத்தபின்பு அவசர அவசரமாக ஐயரிடம் பூவும் தண்ணியும் வாங்கிக் கொண்டு மூன்று தரம் தாயை சுற்றி வரும்போது அவளால் துக்கத்தைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

''ஐயோ அம்மா, யார் செய்த பாவமோ தெரியேலை என்னை உங்களிடமிருந்து பிரித்துவிட்டது. இனி எப்படியம்மா உங்களுடன் பேசுவேன். என்னாலை...'' மேலும் வார்த்தைகள் வெளிவராமல் கத்தினாள்.

பிரேதத்தை தூக்கிக் கொண்டு போவதற்காக மூடியைக் கொண்டு வந்தார்கள். அவள் அந்த உயிர் மீது கைகளை வைத்து ஒப்பாரி வைத்து அழுதாள். அருகிலிருந்தவர்கள் அவளை இழுத்து பெட்டியை மூடுவதற்கு ஒத்தாசை செய்தனர்.

திருந்தாத ஜென்மம் இருந்தென்ன லாபம் என்றால் எதற்கு ஆண்டவன் அம்மான்ர உயிரை எடுக்க வேணும்? எதற்கு எடுக்கணும்?

மீளாத துயரில் ஆழ்ந்திருந்த அன்னையின் இழப்பினால் ஆழாத் துயரில் மூழ்கியிருந்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்தனை தெளிவு தரும்

தானா

இந்த நாடு அன்னியர் ஆட்சியி லின்றும் விடுதலை பெற்று சுதந்திர நாடாக இயங்க ஆரம்பித்த 1948 ஆம் ஆண்டு முதல் இற்றை வரையயான காலப்பகுதியில் இந்தநாட்டின் தமிழ் இனத்தவர் அரசியல் ரீதியில் பேரினவாத, பெரும்பான்மையின சிங்களத் தரப்புக்களால் மாற்றாந்தாய் மனப்பாங்குடன் நடத்தப்பட்டமையால், நடத்தப்படுவதனால் இந்த நாட்டின் தமிழ் மக்கள் அரசியல் ரீதியில் ஒதுக்கப்பட்டவர்களாக, புறக்கணிக்கப்பட்டவர்களாக, அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டவர்களாக வாழநேர்ந்துள்ளமை வரலாறு.

அதேவேளை இந்த அரசியல் என்ற பிரிவுக்குள் அடங்காது, எமது தமிழ் இனத்தவர்கள் மத்தியில் பல்வகை பேதங்கள், வேறுபாடுகள் நிலவி வந்தமைக்கும் வரலாற்றுப்பதிவுகள் தக்கசான்று பகரும்.

குலபேதம், மதபேதம், பிரதேசவாதம் போன்ற பற்பல குறுகிய நோக்கிலான வேறுபாடுகளை நாம் எமக்குள்ளேயே வகுத்துக்கொண்டு வாழநேர்ந்ததால் ஈழத்தமிழினம் என்ற நிலைப்பாட்டை பூரணமாக கைக்கொள்வதைத் தவிர்த்து, சமூகங்கள் மத்தியில் கட்டுக்கோப்பின்றி, தனித்தனி மனிதக்குழுமங்களாக வாழ்க்கையை நடத்திச் செல்ல நேர்ந்தது.

ஈழத்தமிழ் இனத்தவர் மத்தியில் நிலவி வந்த இத்தகைய நியாயமற்ற, குறுகிய நோக்கிலான வேறுபாட்டு உணர்வுகள், அரசியல் புலத்துக்கு அப்பால், எமது இனத்தின் பாரம்பரிய கலாசார விழுமியங்களில், செயற்பாடுகளில், நாளாந்த வாழ்வியலில் குறிப்பிடத்தக்க அளவுக்கு தாக்கத்தையும், பின்னடைவுகளையும் ஏற்படுத்தி வைத்தமையையும் மறுப்பதற்கில்லை.

அத்தகைய தமிழர்தம் வாழ்க்கைமுறை, பேரினவாதத்தை முன்னிலைப்படுத்தி, இந்த நாட்டின் தமிழ் மக்களைத் தொடர்ந்தும், எப்போதுமே நாட்டின் இரண்டாம் தரப்பிரஜைகளாக வைத்திருக்கும் நோக்கில் தீவிரத்தனம் காட்டிச் செயற்பட்ட, செயற்பட்டுவரும் சிங்கள பேரினவாதத் தரப்புக்களுக்கு, அவர் தம் அபிலாஷைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கே பேருதவியாய், பக்கத்துணையாக அமைந்தது, அமைகிறது என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டதொரு உண்மையே.

அன்னிய ஆட்சியாளர்கள் தாம் கைப்பற்றி அரசாண்ட நாடுகளில் வாழ்ந்த மக்களை எதிர்ப்புக்களேதுமின்றி சுலபமாக நிர்வகிக்கக் கடைக்கொண்ட பிரித்தாளும் தந்திரத்தை அவர்களிடமிருந்து கற்றுத் தேர்ந்து கொண்ட சிங்கள ஆட்சியாளர்கள், இந்த நாட்டின் தமிழ் இனத்தவர் மீது அதே பிரித்தாளும் தந்திரத்தைப் பரீட்சித்துப்பார்க்க முயன்று, அதில் வெற்றியும் கண்டனர். சமூகரீதியில் நிலவிவந்த குலபேதம், மதபேதம் பிரதேசவாதம் என்பவற்றை, தருணங்கள் வாய்த்த போதெல்லாம் தமிழ் மக்கள் மத்தியில் தூண்டிவிட்டு இனரீதியாக பிரிவினைகளை வளர்த்ததோடு, பிரதேசவாதத்தைத் தூண்டி யாழ்ப்பாணத்தான், வன்னியான், மட்டக்களப்பான் என்ற வகையில் தமிழ்ச்சமூகத்தைக் கூறுபோட்டு பிரித்தாளும் கைங்கரியத்தை கனகச்சிதமாகவே நிறைவேற்றி வந்தனர். இதற்கு காலத்துக்குக் காலம் இலங்கை அரசியலரங்கில் செயற்பட்ட எம்மவர்கள் சிலரும் துணைபோனமை கசப்பான உண்மை.

சரி, ஏறக்குறைய மூன்று தசாப்தகாலம் சாத்வீக வழியிலும், மூன்று தசாப்தகாலம் ஆயுதப் போராட்டத்திலும் ஈடுபட்டும் சிங்கள மேலாண்மைவாத அரசியல் தரப்புக்களிடமிருந்து எமது அரசியல் ரீதியான உரிமைகளைப் பெற்றுக் கொள்ள இயலாத நிலையில், இன்று அதே சிங்கள மேலாண்மைவாத ஆட்சியாளர்களின் நீதி நியாயமற்ற அரசியல் செயற்பாடுகளுக்கு அடங்கி நடக்கவேண்டிய பரிதாபநிலைக்கு ஈழத்தமிழினம் உட்பட நேர்ந்துள்ளது. சிங்கள பேரினவாத முனைப்புடன் சிங்கள புத்திஜீவிகள் தரப்பென தம்மை அடையாளப்படுத்திக் கொள்ளும் சிங்கள கடும்கோட்பாட்டுத் தரப்பு, திட்டமிட்டு வகுத்து வழங்கும் அரசியல் செயற்திட்டங்களை அப்படியே உள்வாங்கி, தமது அரசியல் அதிகாரம் என்ற பலத்தைப் பயன்படுத்தி, அவற்றை அணுவளவும் பிசகாது, எதுவித மாற்றங்களோ, பின்னடைவுகளோ இன்றி அச்சொட்டாக நிறைவேற்றி வரும், மெதுமெதுவாக தமிழ் மக்களது வாழ்வியல் கோட்பாடுகள், கலாசார செயற்பாடுகளுள் உட்புகுத்தும் திட்டமிட்ட இனப்பண்பாட்டழிப்பை மேற்கொண்டு வரும் பேரினவாதத் தரப்புக்கு, தம்மையறியாமலே எம்மில் ஒரு தரப்பினரும் துணைபோவதை எமது ஈழத்தமிழினத்தின் சாபக்கேடு எனக் கூறுவதைத் தவிர வேறெந்த வார்த்தைகளாலும் விமர்சிக்க இயலாது.

இத்தகையதொரு அவலநிலையில், எத்தகைய பற்றுக்கோடுமின்றி, இருள்சூழ்ந்த நிலையில், எதிர்காலமே கேள்விக்குறியான நிலையில் துடுப்பிழந்த மரக்கலம் ஆழ்கடலில் தத்தளிப்பது போன்று ஈழத்தமிழினம் போக்கற்றுப் போய் நிற்கும் நிலையில், நம்மில் ஒருதரப்பினர்- ஏன் பெரும்பாலோர் என்றும் கூடக் கூறத்தக்க அளவுக்கு எமது இனமத பாரம்பரிய நடைமுறைகள் குறித்து மனதளவிலாவது உறுதியான சிந்தனையின்றி, பற்றின்றி, ஓடுகிற மழை நீருடன் சேர்ந்தோடும் கிளிஞ்சல்கள் போன்று பிரக்ஞையற்ற விதத்தில் எமது வாழ்க்கையைத் தொடர்ந்து முன்னெடுக்கப் பழகிக் கொண்டுள்ளோம்.

இன்றைய எமது சமுதாய அமைப்பில் எம்மிடம் மீந்துள்ள ஒரே நடைமுறை வழக்கம் வறட்டுக்கௌரவம் ஒன்றுதான். இன்று நாம் எமது ஒவ்வொரு வாழ்வியல் செயற்பாடுகளிலும் தற்பெருமை, சுயகௌரவம், ஆடம்பர விருப்பு என்பவற்றை முன்னிறுத்தியே செயற்படப்பழகிக் கொண்டுள்ளோம். இவற்றுக்கான ஒரு சில உதாரணங்களை முன்வைப்பது இவ்வேளையில் அவசியமானது என்பதால் இதோ அவற்றில் ஒன்றிரண்டு சுருக்கமாக.

இனம், மதம், எமது பாரம்பரிய நடைமுறைகள் எவரால் எவ்விதம் களங்கப்படுத்தப்பட்டாலும் சரி, மாற்றங்களுக்கு உள்ளாக்கப்பட்டாலும் சரி, குறிப்பிட்ட இந்த எம்மவர் தரப்புக்கு அவை பற்றியெல்லாம் கவலையே கிடையாது. இவர்களுக்கு தற்போது தேவையானதெல்லாம் பட்டமும் பதவிகளும் தான். அது அரசதுறை சார் உயர்பதவியானாலும் சரி, கலை, கலாசார, சமயம் சார் பட்டமானாலும் சரி, அதனை அடையும் அதீத வெறி இத்தரப்பினரை ஆட்கொண்டுள்ளளமை இன்றைய யதார்த்தம். முன்னரெல்லாம் தகுதி, தராதரம் படைத்தோர் சமூகத்தால் இனங்காணப்பட்டு இத்தகைய பதவி பட்டங்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். இதனால் அவர் தம் சேவையும், கலைகலாசார வெளிப்படுத்தல்களும் மேன்மேலும் மெருகு பெற்றன. இதனால் சமூகத்துக்கு அவர்களால் பெரும் பயன் ஈட்டும் வாய்ப்புக்கிட்டியது. ஆனால் இன்றோ அத்தகைய வாய்ப்பைப் பெற தகுதியுள்ளவர்கள்-அவர்களை விட தகுதியும் திறனும் வாய்த்தோர் தமது திறமைகளை வெளிப்படுத்த முயன்றாலும் வாய்ப்பின்றி, வாய்ப்பு மறுக்கப்பட்டு, இத்தகைய பதவி, பட்ட வேட்கையாளர்களால் ஏதோ வகையில் புறமொதுக்கப்படும் நிலை நிலவுவது பரிதாபகரமானதே. மாறாகத் திறன் வாய்த்தோர் பற்பல சிரமங்களினூடாக தமது திறமையை வெளிப்படுத்த இத்தகைய பதவி பட்ட வேட்கையாளர்கள் விமர்சனம் என்ற ஆயுதத்தைக் கையிலெடுத்து அத்தகையோரின் முயற்சிகளை முளையிலேயே கிள்ளி எறிந்து விடத் திட்டமிட்டுச் செயற்படுவது வழக்கமான தொன்றாக ஆகிப்போய்விட்டது. கலை கலாசார வெளிப்படுத்தல்களில் போட்டி நிலவுவது அத்துறைகளின் வளர்ச்சிக்கு ஆரோக்கியமானது என்பது நிதர்சனம். ஆனால் அது பொறாமையாக, இயலாத் தன்மையின் வெளிப்பாடாக அமையுமானால் அது சமூகத்தின் ஆரோக்கியக் குறைவுக்கே வழிவகுக்கும் ஒன்றாக மாறிப்போய்விடும். இது குறித்து நாம் எள்ளளவாவது சிந்தித்துப் பார்க்கின்றோமா?

பொதுவாக ஈழத்தமிழினத்தவர்கள் தமது வாழ்வியலில் அத்தியாவசியமான செலவுகளைக்கூட கட்டுப்படுத்தி, மட்டுப்படுத்தி, பணத்தை மீதப்படுத்திச் சேமிக்கும் பழக்கம் கொண்டவர்கள் என்பது பலராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டதொரு உண்மை. வளம் குறைந்த பூமிப்பிரதேசத்தில் தமது கடின உடலுழைப்பால் பயிர்த்தொழில் - விவசாய முயற்சிகளை மேற்கொண்டோ, வேறு எந்தவொரு தொழில் முயற்சியாயினும், அதில்அக்கறையும், அதிகூடிய கவனமும் செலுத்திச் செயற்பட்டே உழைக்கும் தரப்பினர்கள் எம் ஈழத்தமிழர்கள். திரைகடலோடியும் திரவியம் தேடு என்பதற்கிணங்க வெளிநாடுகளில் சென்று தொழில் செய்து பணமீட்டினாலும் கூட, அநாவசியமாக, படோபகாரத்துக்காக தமது கைப்பணத்தை செலவு செய்வதை மட்டுப்படுத்திக்கொள்பவர்கள் அவர்கள் என்றெல்லாம் பேசப்பட்ட, விமர்சிக்கப்பட்ட எம் ஈழத்தமிழ் மக்களது அண்மைக்கால தலைமுறைகள் வெறும் படோபகாரத்திற்கும், சுய விளம்பரத்துக்குமாக பணத்தை அநாவசியமான விதத்தில் செலவிடப் பழகிக் கொண்டுள்ளதைத் தெளிவாக உணரமுடிகிறது. கோயிலில் உற்சவங்கள் சிறப்புற நடத்தப்படுவதைத் தவறாகக் கொள்ள இயலாது. ஆனால் பக்திபூர்வமாக, செய்யப்படவேண்டிய உற்சவங்களைப் பெருமெடுப்பில், பெரும் பணச்செலவில் ஆடம்பரமாகச் செய்துதான் தமது பிரபல்யத்தைப் பறைசாற்றிக்கொள்ள வேண்டுமா? மூன்று தசாப்தகாலப் போரால் - அதிலும் இறுதிப் போர் வேளையில் போர்ப்பாதிப்பால் சொல்லொணாத்துன்பமும் துயரமும் பட்டு நொந்து போன, தமது வாழ்வாதாரங்களை ஒட்டுமொத்தமாக இழந்து ஏக்கப்பெருமூச்சுடன் அவல வாழ்வு வாழும் எம் உடன் பிறப்புக்களது நிலைகுறித்து நெஞ்சில் கொஞ்சமாவது ஈவு இரக்கம் கொள்ளாது, தமது சுயகௌரவத்தை வெளிக்காட்ட, வெளிச்சம் போட்டுக் காட்டும் நோக்கில் ஆலயத் திருவிழாக்களை வினோதக் கண்காட்சி போன்று நடத்திக்காட்ட முயலும் நம்மவர்கள் குறித்து, அவர்கள் போக்குக் குறித்து கவலைப்படுவதைத் தவிர வேறென்னதான் செய்ய இயலும். ஆண்டவன் ஆடம்பரத்தை ஒருபோதும் விரும்புவதில்லை. அன்பையும் அடுத்தவருக்கு உதவும் மனப் பண்பையுமே அவன் விரும்புகிறான் என்பதைத் தெரிந்து இருந்தும், இவ்விதம் ஆளுக்காள் போட்டி போட்டு திருவிழா உபயகாரர்கள் பணத்தைத் தண்ணீராய் செலவு செய்து தமக்குத் தாமே சுயவிளம்பரம் தேடிக் கொள்ள முயல்வதை ஆரோக்கியமான சமுதாயம் ஒரு போதும் வரவேற்கப் போவதில்லை; ஆண்டவனும் கூட அதனால் ஒரு போதும் உளம் மகிழப் போவதில்லை என்பதை என்றுதான் நம்மவர்கள் உணரப் போகிறார்களோ?

அண்மைக்காலமாக, எமது குடாநாட்டுப் பத்திரிகைகளில் வெளிவரும் கட்டுரைகளில் பெரும்பாலானவை அரசியல் செயற்பாடுகளை, நாட்டின் அரசியல் நிலைமைகளை விமர்சிக்கும் வகையிலான கட்டுரைகளையே தாங்கி வருவதாக நண்பர் ஒருவர் முறைப்பட்டுக் கொண்டார்.

இன்றைய எமது தமிழ்ச் சமுதாயத்தில் தமிழ் மக்கள் அன்றாடம் எதிர்நோக்கும் சிக்கல்கள் சிரமங்களையோ , அவர்களது வாழ்வியல் நடைமுறைகளில், அவர்களது மன எதிர்பார்ப்புகளில் ஏற்படும் நல்லவை கெட்டவைகளையோ பத்திரிகைகள் சுட்டிக் காட்டுவது இல்லை என்பது அவரது ஆதங்கம். நல்ல கருத்துக்களைப் பத்திரிகைகளில் முன்வைக்கும் போது அவை நம்மவர்களில் ஒரு சிலரையாவது சிந்திக்க வைக்கின்றன. அதன்பயனாய் சமூகத்தில் சிந்தனைத் தெளிவு ஏற்பட வாய்ப்புண்டு என்பது அவரது நம்பிக்கை.

அந்த வகையில் இன்று குழம்பிய குட்டையாய் மாறிப்போய் உள்ள எமது ஈழத்தமிழினத்தின் அரசியல் , சமூக, சமயவாழ்வு முறைகளில் நிலவும் போக்கைச் சுட்டிக் காட்டும் நோக்கிலானதே இம் முயற்சி. முயற்சி திருவினையாக்குமா? என்பதை காலமும் வாசகர்களின் சிந்தனையும் தான் தீர்மானிக்க வேண்டும்.

# இன்பத்துக்கும் துன்பத்துக்கும் காரணம் மனமே

மனம் ஒரு குரங்கு எனச் சொல்வார்கள். இது மனதின் நிலையற்ற தன்மையை குறிக்க வந்த ஒரு சொல்வகை. ஆனால் இந்த மனம் ஒரு மாயக் கண்ணாடியாய் மனிதனை திசை திருப்பித் தன் வழி சென்று பாதாளத்தில் வீழும் அருவியாய் அவனை அவனைச் சார்ந்தவர்களுடன் வாழ்வைக் கெடுக்கும் வகையில் வீழ்த்துவதை எத்துனை பேர் அறிவர்?

நன்கு சிந்தித்துப் பார்த்தோமானால் இந்த மனம் ஒரு கை தேர்ந்த நியாயக் காரனைப் போல் தான் உந்துவிக்கும் ஒவ்வொரு செயலுக்கும் ஒரு நியாயத்தை கற்பிக்கும். உண்மையில் மனிதனுக்குத் தேவைகளை ஏற்படுத்துவது அவனது உடல் மற்றும் அவனது வாழ்க்கை முறைகள் தான். இதில் மனதுக்கெனத் தனித் தேவைகள் இல்லாது போயினும் அத்துமீறிய செயலாய் மனமானது மற்றதன் தேவைகளில் ஆளுமை செய்யத் தொடங்கிவிடும். இது அபாயகரமானதாகும். இத்தகைய செயல்களுக்கு தூண்டும் மனம்தான் காரணம்.

வயிற்றுப் பசிக்கு தேவையான உணவு கிடைத்தவுடன் நமது வயிறு மேற்கொண்டு எடுத்துக் கொள்ள மறுக்கிறது. ஆனால் நமது மனமோ அடுத்த வேளைக்கு என ஒரு சாக்குச் சொல்லி நம்மை சேர்த்து வைக்கச் சொல்கிறது. சேமிப்பு நல்ல பழக்கம் தான். ஆனால் எவ்வழியிலேனும் பணம் சேர்க்கத் தூண்டுவதுதான் நம்மை இழிவுக்கு இட்டுச் செல்லும் செயல். நாளை என்பதே நிலையில்லை எனும் உலகம் கண்ட உண்மையை மறைத்து நம்மை இப்படிப்பட்ட இழி செயலுக்குத் தூண்டுவது நம்முடைய பாழும் மனம் தான்.


மாயக் கண்ணாடியாய் இந்த பாழும் மனம்தான் நமது தேவைகளை விபரீதமாய் பெருக்கிக் காட்டி, நமது வழிப் பிறழ்வுகளை அழகாய் நியாயப்படுத்தி நம்மை நிலையான துன்ப வழிக்கு இட்டுச் செல்கின்றது. இத்தகைய நடவடிக்கைகள் மற்றோரையும் மறைமுக துன்பத்துக்கு ஆளாக்குகிறது.

முக்கியமாக இந்த இழிமனம்-பிசாசுமனம் - தான் காட்டும் மாய பிம்பத்தில் மயங்கியவனை சமுதாயத்தில் இருந்து பிரிப்பதோடு மட்டுமல்லாது அவ்வனை சமுதாயத்துக்கு எதிராகவும் திசை திருப்பிவிடும்.

ஒரு சாதாரண மனிதனின் பார்வையில் தப்பு எனத் தோன்றும் ஒரு செயலை இந்த மாயக் கண்ணாடி நியாயப்படுத்தி தனக்குச் சாதகமாகத் திருப்பிவிடும். இப்படிப் பட்ட மாயக் கண்ணாடியை பார்க்கத் தொடங்கியவர்கள் அதில் இருந்து மீண்டதில்லை. தான் கொண்டவைகளை கொள்கைகளாகவும், தனது செயல்களை துணிச்சல் மிக்கதென்றும் மாய வலையில் ஆழ்ந்து வாழ்க்கையைத் தொலைத்து மாய்ந்து போகின்றனர். தெளிவான சிந்தனை கொண்டவர் மட்டுமே இத்தகைய மாய பிம்பங்களுக்கு மயங்காது தனது மனதை கட்டுக்குள் வைத்து அதனை உள்ளதை உள்ளபடி காட்டும் உண்மைக் கண்ணாடியாக பயன்படுத்தி பயன் அடைகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்தித்துச் செயற்பட்டால் சிறை வெகு தூரத்தில்



கறுப்பி

போர் முடிவடைந்தாலும் ஆயிரக் கணக்கான தமிழ்க் கைதிகள் சிறையில் அந்தரித்து வாழ்கின்றனர். இந்த நிலையில் மாற்றம் ஏற்பட்டதாகத் தெரியவில்லை.

போர்க் காலங்களில் சந்தேகத்தின் பேரில் சிறைக்குள் தள்ளப்பட்ட பல பேரில் சிங்களவர்கள், முஸ்லிம்கள் ஆகியோரை விட தமிழர்களே அதிகம் உள்ளனர். தற்போது போர் முடிவடைந்து மூன்று ஆண்டுகளைக் கடந்த நிலையிலும் கூட தமிழ்க் கைதிகளுக்கு விமோசனம் இல்லை. சமூகத்துடன் ஒன்றிணைத்துவிடும் செயற்பாடுகள் கூட முற்று முழுதான நிலையில் இல்லை.

சிறைக்குள் வாழும் கைதிகள் அடுத்து நமக்கு என்ன நிலையோ என எண்ணி எண்ணி கண்ணீர் வடிக்கின்றனர். ஒவ்வொரு நாளும் தமது விடுதலையை எண்ணிக் காத்திருக்கின்றனர்.

போர்க் காலங்களில், போர் முடிவுற்ற நிலையில் பல்வேறு சந்தர்ப்பங்களில் கைது செய்யப்பட்டு சிறைகளில் வைக்கப்பட்டு பின் விடுதலை செய்யப்பட்டு சமூகத்துடன் குடும்பங்களுடன் ஒன்றிணைக்கப்படும் போது சமூகம் இவர்களைப் புறம் தள்ளியே பார்க்கின்றது.

இந்தக் கைதிகளின் நிலை ஒருபுறமிருக்க, சமூகத்தில் அன்றாடம் நடைபெறும் குழு மோதல்கள், விபத்துக்கள், கை கலப்புகள் போன்ற பல்வேறுபட்ட சம்பவங்களால் இளைஞர்கள் சிறைக்குள் தள்ளப்படுகின்றனர். இதனால் அவர்கள் தமது எதிர்காலத்தைக் கேள்விக்குறியுடன் நகர்த்துகின்றனர்.

மதுபாவனை, போதைவஸ்துபாவனை என்பன குடாநாட்டில் அதிகரித்துக் காணப்படும் நிலையில் வீதிகளில் கோஷ்டி மோதல்கள், வாய்த் தகராறுகள், பாலியல் சேஷ்டைகள் போன்ற பிரச்சினைகளுக்குள் இளைஞர்கள் தள்ளப்படுகின்றனர்.

பொருளாதார ஏற்றத்தால் வறுமை என்பது பெரும்பாலானவர்களை வாட்டி வதைக்கின்றது. ஒரு குடும்பத்தில் அதிக அங்கத்தவர்கள் ஒருவரின் உழைப்பிலேயே தங்கி வாழ்கின்றனர்.

இது ஒருபுறம் இருக்க உழைத்து வாழ வேண்டும் என்ற எண்ணம் சற்றும் இல்லாது வீதிகளில் நின்று தேவையற்ற பிரச்சினைகளுக்கு இளைஞர்கள் செல்கின்றனர்.

தற்போது வாள் வெட்டு, கோடரியால் வெட்டுதல், கொலை செய்தல் போன்ற கொடிய செயற்பாடுகளிலும் இன்றைய இளைய சமுதாயம் இறங்கிவிட்டது என்பது வேதனை தரும் விடயம்.

இத்தகைய வேண்டத் தகாத செயற்பாடுகள் மூலமே சிறையில் வாடவேண்டிய நிலைக்கு இளைஞர்கள் ஆளாக்கப்படுகின்றனர்.

இந்த நிலையில் யாழ். மாவட்டத்தில் உள்ள பொலிஸ் நிலையங்களில் பல தரப்பட்ட விசாரணைகளும், நீதிமன்றங்களில் வழக்குகளும், இழுத்தடிப்புக்களும் நாளாந்தம் அரங்கேறிய வண்ணமே உள்ளன.

பொலிஸ் நிலையத்தில் சமரசமாக்கப்பட்டவர்களைத் தவிர ஏனையவர்கள் நீதிமன்றத்துக்கு அனுப்பப்படுகின்றனர். அவற்றில் குற்றப் பணம் கட்டி வெளியேறுபவர்களைத் தவிர கட்ட மறுத்தவர்கள், முடியாதவர்கள் சிறைக்குள் தள்ளப்படுகின்றனர். இவ்வாறு சிறைக்குள் வாழும் கைதிகளில் யாழ். மாவட்டத்தில் மட்டும் 400 கைதிகள் உள்ளனர். இவற்றில் பெண் கைதிகள் 23 பேரும், ஆண்களில் அரசியல் கைதிகள் 5 பேரும் உள்ளடங்குகின்றனர். இதில் பெண் கைதிகள் 23 பேரில் 3 பேர் விசாரணைக் கைதிகளாகவே உள்ளனர். இவர்களில் களவு, கருச்சிதைவு, கள்ளச்சாராயம் காய்ச்சுதல் என பலதரப்பட்ட குற்றச் செயல்களில் நிமித்தம் மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

மற்றும் கைதிகளில் விசாரணைக் கைதிகள், தண்டனைக் கைதிகள் என்பவற்றில் அதிகம் களவுடன் தொடர்புடையவர்களே உள்ளனர். இரண்டாவதாக கொலை, மூன்றாவது இடத்தில் கோஷ்டி மோதல் என்பன உள்ளன என்று யாழ் சிறைச்சாலை தெரிவித்துள்ளது.

"சிறையிலிருக்கும் அவமானத்தை தாங்க முடியாமல் தினம் தினம் அழுகிறேன்" என தனது சிறை அனுபவம் பற்றி விவரிக்கிறார் தண்டனை பெற்ற யாழ் சிறைக்கைதி ஒருவர்.

'எனது பெயர் முத்துக்குமார், வயது 34, திருமணமாகி 6 வருடங்கள் ஆகின்றன. 4 பிள்ளைகளுண்டு. அனைவருமே சிறுவர்கள். நான் வலிகாமத்தைச் சேர்ந்தவர்.

தினமும் குடித்துவிட்டு மனைவியை துன்புறுத்தி வந்தேன், அது பெரிய பிரச்சினை ஆகிவிட்டது. மனைவி பொலிஸ் நிலையத்திற்குச் சென்று முறைப்பாடு செய்தார். பின் நீதிமன்றத்திற்குச் சென்றது. எனக்கு 20 மாதகாலம் சிறைத் தண்டனை விதித்தனர். மூத்த மகள் எனது அப்பா, அம்மாவுடன் தான் வாழ்கின்றாள். ஏனைய மூன்று பிள்ளைகளும் மனைவியுடன் தான் வாழ்கின்றனர். என்னால் குழந்தைகளிடையே ஒற்றுமை உணர்வு இல்லாமல் போய்விட்டது. குழந்தைகள் மனைவியைப் பிரிந்து வாழும் வேதனையை நன்கு உணர்கின்றேன். மேலும் அவர்கள் மற்றவர்களால் வெறுக்கப்படும் சந்தர்ப்பங்களில் என்னை வெறுக்கிறேன். குடும்பத்தை விலத்தி இருப்பதால் எனது குழந்தைகளுக்கோ மனைவிக்கோ பாதுகாப்பு இல்லை என உணர்கின்றேன்.

எனக்காக வாதித்து வெளியே எடுத்து விடுவதற்கு யாரும் இல்லாததால், மேலும் 6 மாத சிறை வாசத்தை அனுபவிக்கின்றேன். 6மாதம் முடிவடைவதற்கு இன்னமும் 2 மாதங்கள் உள்ளன. அந்த நாளை எண்ணிக் காத்திருக்கின்றேன். என கண்ணில் நீர் ததும்ப பெருமூச்சுடன் தனது கதையை சொல்லி முடித்தார்.

தற்போது சிறையில் வாழும் 400 கைதிகளுக்கும் போதிய இடவசதிகள் இல்லை. ஒரு சிறிய இடத்தினுள் இக்கைதிகளை அடைத்து வைத்திருப்பதால் தொற்று நோய்கள் ஏற்பட வாய்ப்புக்கள் உண்டு.

யாழ். சிறைச்சாலைக்கு சொந்தமான கோப்பாய் இந்து மயானப் பகுதி இராணுவத்தினருக்கு தாரை வார்த்துக் கொடுக்கப்பட்ட நிலையில் பண்ணைப் பகுதியில் கட்டடம் அமைப்பதற்கு அடிக்கல் நடப்பட்டது. அதற்குப் பின் எந்த ஒரு முன்னேற்றமும் நடந்தபாடில்லை. மண் வளம் தரம் அற்றது அதனால் தான் கட்ட வேலை தாமதம் என காரணம் கூறி விடுகின்றனர் சம்பந்தப்பட்ட அதிகாரிகள்.

கைதிகளின் நலனில் அக்கறை செலுத்துவதாயின் விரைவாக ஒரு கட்டடத்தை அமைத்து சுகாதாரமாக வாழ விட வேண்டும். இந்த நிலையில் அதிகாரிகள் அக்கறை எடுத்துச் செயற்பட வேண்டும்.

## நலம் தரும் தெய்வீக மூலிகைகள்




### மஞ்சிட்டி

தாவரவியற்பெயர் - Rubia Cordifolia (ரூபியா கோடிபோலியா)
குடும்பம் - Rubiaceae (ரூபியேசியே)
சிங்களப் பெயர் - வல்மதட்ட
சமஸ்கிருதப் பெயர் - மஞ்சிஷ்ட
ஆங்கிலப் பெயர் - Indian madder

இது இந்தியாவில் மலைப் பிரதேசங்களில் வளரும் ஒரு கொடியாகும்.

**வேர்க்குருவுக்கு**

இதன் வேரைப் பொடிசெய்து தேன்விட்டரைத்துப் பூச வேர்க்குரு, முகப்பரு என்பன மாறும்.

**மூட்டு வீக்கத்துக்கு**

இதன் வேரை அதிமதுரத்துடன் சேர்த்து அரிசிக் கஞ்சி அல்லது வினாகிரி விட்டரைத்து மூட்டு வீக்கத்துக்கு வைத்துக் கட்டிவர வீக்கம் வற்றும். மூட்டுவலியும் குறையும்.

**கரப்பனுக்கு**

மஞ்சிட்டிவேர், கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், வேப்பம் பட்டை, கோரைக்கிழங்கு, மரமஞ்சள், கடுகுரோகணி என்பன சமஅளவில் எடுத்துக் குடிநீர் செய்து ½ கோப்பை அளவில் காலை, மாலை பருகிவர கரப்பன், சொறி, சிரங்கு மற்றும் தோல் நோய்கள் மாறும்.

### தணக்கு

வேறு பெயர் தடவு மரம், தெப்பமரம்
தாவரவியற் பெயர் -. Gyrocarpus americanus (கைரோகார்பஸ் அமெரிக்கானஸ்)
குடும்பம் - Combretaceae (கொம்பிறிற் றேசியே)

இது உலர் வலயத்துக்குரிய ஒரு மரமாகும். சில இடங்களில் கூட்டமாக வளர்ந்து காணப்படும். பட்டை வெண்ணிறமாயும் அழுத்தமாகவும் காணப்படும். தனி இலைகள். ஒன்றுவிட்ட இலை ஒழுங்கு. இலைகள் நீள் வட்டம் அல்லது முட்டையுருவானவை. நுனி கூராக இருக்கும். இலையுதிர் மரம். மார்கழி, தையில் இலையுதிர்க்கும். சித்திரை வைகாசியில் துளிர்க்கும். தை, மாசியில் பூக்கும். பூக்கள் வெள்ளை அல்லது வெண் மஞ்சள் நிறம், கனி இரண்டு செட்டைகளையுடையது. காற்றில் பறந்து பரம்பிச் செல்லும். தணக்கில் வெண் தணக்கு, செந்தணக்கு, மஞ்சள் தணக்கு, மலைத் தணக்கு என்று பல பேதங்களுண்டு.

இதன் இலையை வாட்டி விரணங்களுக்குக் கட்டலாம்.

**இருமலுக்கு**

இதன் பிசினைப் பொடித்து தேனில் குழைத்து சாப்பிட இருமல், தொண்டைப் புகைச்சல் என்பன தணிவடையும்.

**விரணவடையும்**

இதன் பட்டையைக் குடி நீரிட்டு அந்த நீரால் விரணங்களைக் கழுவிவர விரணங்கள் ஆறும்.



Dr. சே.சிவசண்முகராஜா M.D. (S),
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்தமருத்துவத்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கு இந்த வாரம் எப்படி...

## 23.09.2012 முதல் 29.09.2012 வரை

தருபவர் - வித்தியா

**மேடம்**- சமூகத்தில் நல்ல செல்வாக்கு, உறவினர்களிடம் நன்மதிப்பு கிடைக்கும். இளைய சகோதர வகையில் சுபகாரிய பேச்சு நிறைவேறும். வீடு வாகனத்தில் அபிவிருத்தி செய்வீர்கள். சிலர் புதிய வீடு, வாகனம் வாங்க தகுந்த பணவசதி கிடைக்கும். படிப்பில் உயர்ந்த தேர்ச்சி வீதம் பெறுவர். உடல்நலம் ஆரோக்கியம் பலம்பெறும். வம்பு, விவகாரம் அணுகாத இனிய வாழ்வுமுறை பெறுவீர்கள். அரசு தொடர்பான காரியங்களில் சாதகநிலை உண்டு. உணவு ஒவ்வாமையினால், அவதிப்பட நேரலாம். கவனம் தேவை. தொழில் மற்றும் வியாபாரத்தில் வளர்ச்சிப் பணி நிறைவேறி, கலைஞர்கள் தமக்கு கிடைத்த வாய்ப்புக்களை நன்றாக பயன்படுத்தி பேரும், புகழும் பெறுவர்.

**இடபம்**- உங்கள் செயல்களில் உத்வேகமும், நீதிநேர்மையும் நிறைந்திருக்கும். நடை, உடை, பேச்சில் புதிய மாற்றம் பின்பற்றுவீர்கள். உங்கள் உறவினர், நண்பர்களிடம் நல்லபெயர் கிடைக்கும். இளைய சகோதரர் வேலைவாய்ப்பில் முன்னேற்றம் பெற உதவி புரிவீர்கள். உடல்நல ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். எதிரி சொந்த சிரமம் காரணமாக, இடம் மாறிப்போகிற நன்னிலை உண்டு. நிர்ப்பந்த பணக்கடன் அடைப்பீர்கள். தொழில், வியாபாரத்தில் இருந்த சிரமம் மாறி, வளர்ச்சிப் பாதையில் செல்லும். பணியாளர்களுக்கு, பதவி உயர்வு, சலுகைப்பயன் கிடைக்கும்.

**மிதுனம்**- எவரிடத்தும், பக்குவமாகபேசி, சொந்தப்பணி நிறைவேற்றுவீர்கள். கூடுதல், பணவரவு கிடைத்து மனதில் தைரியமும், மகிழ்ச்சியும் பெறுவீர்கள். வீடு, வாகனத்தில் கிடைக்கிற வசதி திருப்திகரமாக இருக்கும். அறிமுகம் இல்லாத பெண்ணுக்கு உதவுவதில் நிதான நடைமுறை வேண்டும். புத்திரர் படிப்பு சுமையால் மனக்குழப்பம் அடைவர். உரிய பயிற்சியும், ஆறுதல் வார்த்தையும், அவர்கள் மனதில் நம்பிக்கையைத் தரும். வம்பு, விவகாரங்களில் தலையிடாமல் விலகி சுமுக வாழ்க்கை முறையை அமைத்துக் கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் கூடுதல் பொறுப்புடன் நடந்து, நன்மை பெறுவீர்கள்.

**கடகம்**-உங்கள் தோற்றத்தில் பொலிவும், செயலில் நேர்த்தியும் உண்டாகும். புதிய திட்டங்களைச் செயற்படுத்தி நன்மை பெறுவீர்கள். வாழ்வில் வளர்ச்சிக்கு எதிராக இருந்த சூழ்நிலை மாறும். புத்திரர் பயஉணர்வால் படிப்பில் பின்தங்க நேரிடும். ஊட்டம் தரும் உணவு, உரிய பயிற்சி முறை, நம்பிக்கை மற்றும் தர தேர்ச்சி வீதம் உயர்த்தும். எதிரித்தனங்களை வெல்லுகிற புதிய உத்தி அறிவீர்கள். தொழில், வியாபாரத்தில் உருவாகிற குறுக்கீடுகளை உரிய முறையில் சரிசெய்வீர்கள். கூடுதல் பணவரவு கிடைக்கும். சமூகத்தில் நல்ல புகழ், அந்தஸ்து ஏற்படும். கலைஞர்கள், திறமைகளை இயல்பாக வெளிப்படுத்துவர்.

**சிங்கம்** -கடந்த காலத்தில் எதிரித்தனமாக செயற்பட்டவர்களை எதிர்க்கும் நடவடிக்கைகளை முன்யோசனையுடன் செய்வீர்கள். உறவினர், நண்பர், உங்களை குறைசொல்ல இயலாத வகையில் செயற்படுவது நல்லது. தொட்ட காரியம் துலங்கும். வாழ்வுக்குத் தேவையான பணவசதி கிடைக்கும். உடல்பிணி, தொந்தரவு குறையும். பூர்வீகசொத்தில் திருப்திகர பணவரவு உண்டு. தொழில், வியாபாரத்தில் திருப்திகர வளர்ச்சி உண்டு. ஆடை, ஆபரணச்சேர்க்கை கிடைக்கும். உத்தியோகத்தர்களுக்கு நல்லவர்களின் ஆலோசனை, உதவி கிடைக்கும்.

**கன்னி**-தன்னை பழித்தவரை வசைபாடும் போக்கு உங்கள் பேச்சு, செயலில் வரலாம். நிதானம் தேவை. அலைச்சல் பயணமும் அதனால் மனச்சோர்வும், உடல்நலக்குறைவும் உண்டாகும். தேவையற்ற பயணத்தைத் தவிர்க்கவும். நண்பர், உறவினர், உங்கள் நற்குணத்தை உணர்ந்துள்ளதால் நல் அன்பு பாராட்டுவர். புத்திரரின் செயற்பாடு பிறர் குறை சொல்லும் வகையில் இருக்கும். அவர்களை கண்காணிப்புடன் வளர்ப்பது நல்லது. சேமிப்பு பணத்தை உங்களின் முக்கிய செலவுக்கு தந்து உதவுவர். உத்தியோகத்தர், நிர்வாகத்தின் எதிர்பார்ப்பை நிறைவேற்றுவதில் தாமதம் உண்டு. மாணவர்கள் படிப்பில் கவனம் தேவை.

**துலாம்**-பிற விவகாரங்களை தவிர்த்து, சொந்தப்பணியில் மட்டும் ஈடுபடுவது நல்லது. இளைய சகோதரருக்குச் சொல்லும் ஆலோசனை எதிர்விளைவைத் தரலாம். கவனம் தேவை. குடும்ப செலவுகளுக்கான பணத்தேவை அதிகரிக்கும். அறிமுகம் இல்லாதவர், பொறாமை உணர்வு உள்ளவர் தரும் உணவுப்பொருள் உண்ணக்கூடாது. தொழில், வியாபாரத்தில் நடைமுறை அனுகூலத்தைப் பாதுகாக்க கூடுதல் உழைப்பு வேண்டும். உத்தியோகத்தர், கவனக்குறைவால் நிர்வாகத்தின் கண்டிப்பைப் பெறுவர். கலைஞர்கள், கேலிப்பேச்சுக்களில் நிதானம் பின்பற்றவேண்டும்.

**விருச்சிகம்**- மனதில் இருந்த குழப்பம் விலகி புதிய உத்வேகம் பிறக்கும். செயல்களில் வெற்றி கிடைக்கும். இளைய சகோதரருக்கு இயன்ற அளவில் உதவுவீர்கள். அரசு தொடர்பான உதவி எளிதில் வந்து சேரும். எதிரியால் இருந்த தொந்தரவு விலகும். இல்லறத்துணையின் கருத்துக்கு உரிய மதிப்பு தருவீர்கள். ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டு. தொழில் வளர தேவையான அனுகூல காரணி பலம் பெறும். உத்தியோகத்தர், பணியாளர் பணித்திறமையால் நிர்வாகத்திடம் பாராட்டு, சலுகை பெறுவர். கலைஞர்களுக்கு புதிய ஒப்பந்தம் கிடைத்து திருப்திகர பணவரவு காண்பர். மாணவர்கள், வியப்பு தரும் வகையில் நல்ல தர தேர்ச்சி பெறுவர்.

**தனுசு** - எந்தச் செயலும் எளிதாக நிறைவேறும். பெரும்பான்மை கிரகங்கள் நன்மை தருவதால், வாழ்வில் அதிக நல்ல பலன்களே நடக்கும். நற்பெயர் உயர்வதால் சமூகப்பணியிலும் ஆர்வம் வளரும். புத்திரரின் நற்செயல் மனமகிழ்வைத் தரும். எதிரியின் தொல்லை வராத சுமுகவாழ்வு உண்டு. இல்லறத்துணையின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் எதிர்பாராத வளர்ச்சியும், உபரிபண வருமானமும் கிடைக்கும். புதிய தொழிற்கருவிகள் வாங்கலாம். பணியாளர்களுக்கு பதவி உயர்வு கிடைக்கும். கலைஞர்கள் புதிய ஒப்பந்தம் பெற்று திருப்திகர பணவரவு காண்பர். மாணவர்கள் படிப்பில் நல்ல தர தேர்ச்சி பெறுவர்.

**மகரம்**- பேச்சில் ஏற்படும் கடினத்தன்மையை குறைப்பது நல்லது. இளைய சகோதரர் ஆன்மிக எண்ணங்களில் சிறந்து வருவர். வீடு, வாகனத்தில் கூடுதல் பாதுகாப்பு நடைமுறையைப் பின்பற்றுவதால் சிரமம் வராமல் தவிர்க்கலாம். உழைப்புக்கேற்ற ஓய்வு மட்டுமே உடல்நலத்தை சீராக வைத்திருக்க உதவும். குடும்பத்தின் முக்கிய செலவுக்காக சிறியளவில் பணக்கடன் பெறுவீர்கள். உங்களை அளவுக்கு மீறி பாராட்டிப் பேசுபவர்களிடம் முன்யோசனையுடன் நடந்து கொள்வது நல்லது. தொழில் வியாபாரத்தில் சிறு குளறுபடி வரலாம். கவனமாகச் செயற்படுவதால் நிலைமை சீராகி தொழில் வளரும்.

**கும்பம்**-நம்பிக்கை, சுறுசுறுப்புடன் செயற்படுவதால் சிரமங்களைச் சரி செய்யலாம். அரசு தொடர்பான பணியில் உள்ளவர்களிடம் பேசுவதில் நிதானம் வேண்டும். உடன் பிறந்தவர் சொந்தப்பணி கவனிப்பதில் ஆர்வம் கொள்வர்.எதிரியால் வரும் கெடுசெயலை எதிர்கொள்ளாமல் விலகுவதால் சில நற்பலன் உண்டாகும். இல்லறத்துணையிடம் கடந்த கால விவகாரங்களைப் பற்றி பேசவேண்டாம். தொழில் மற்றும் வியாபாரத்தில் கூடுதல் உழைப்பால் மட்டுமே இருக்கிற அனுகூலம் பாதுகாக்கலாம். பணியாளர்கள் இலக்கு நிறைவேற்ற கூடுதல் பொறுப்புணர்வுடன் செயற்படுவது அவசியமாகும்.

**மீனம்**-எந்தச் செயலிலும் முன்யோசனையுடன் செயற்படுவது நல்லது. நண்பர்களின் உதவி முக்கிய தருணங்களில் கிடைக்கும். புத்திரர் அறிவுப் பூர்வமான விடயங்களில் உங்களிடம் சந்தேகம் கேட்டு தெளிவு பெறுவர். ஊட்டம் தரும் உணவு, உழைப்புக்கு தகுந்த ஓய்வு உடல்நலம் சீர்பெற உதவும். இல்லத்துணை, உங்கள் நலனில் அக்கறை கொள்வர். தொழில் மற்றும் வியாபாரத்திற்கு கூடுதல் மூலதனம் தேவைப்படும். தகுதிக்கு மீறிய அளவில் [illegible] பெறக்கூடாது. பணியாளர்கள் இலக்கு நிறைவேற்ற கூடுதல் பொறுப்புடன் செயல்பட வேண்டும். கலை[illegible] ஈடுபடுவர். மாணவர்கள், விளையாட்டுக் குணங்களை தவிர்ப்பதால் மட்டுமே படிப்பில் கவனமும், உருவாகும்.

# நாளைய நம்பிக்கை

என் கனவுகளை கலைத்து
நினைவுகளை அழித்து
சிறகொடித்து விலங்கிட்டு
கூண்டில் அடைத்து
வெறி நாய்களாய் வேட்டையாடுகின்றனர்
வாழத் துடிக்கும் என் ஆத்மா ஓசைகள்
இரணியர்களுக்கு கேட்குமா?
ஊமையாய் இருந்து கண்ணீர்விடுகிறேன்
விழிகள் செயலிழக்கும் ராத்திரிகளில்
மனம் உருகி விம்மலாய் வெடிக்கும்
சாமங்களில் என்னைப் பார்த்து
அனுதாபப்படுகின்றது தனிமை
வெளிச்சம் காணத்துடிக்கின்ற
என் விழிகளுக்கு அமாவாசை
இருவே பாதையாய்...
தொலைதூரத்து சந்திரனைக் கண்டு
கைகளை நீட்டும் மழலை போல்
விடுதலைக்காக கைகளை
நீட்டி நீட்டி ஏமாந்தே என் வாழ்
நாள்கள் கரைகின்றன
அவகாசமின்றி ஆண்டுகள் விரைகின்றன
என் வாழ்வின் நீளப்பாதையை
புரிய முடியவில்லை
நினைவுகளும் கனவுகளும்
மௌன மரணமாகும் முன்னே
இரவு பகலாக முழந்தாழில் நின்று
பிரார்த்திக்கின்றேன் நாளையும்
நான் உயிருடன் இருக்க வேண்டும் என்
ஏனெனில் என்றோ ஓர் நாள்
நொறுக்கிவிடலாம்
அறுத்தெறியலாம்
துருப்பிடித்து போயிருக்கும்
சிறையின் பூட்டுக்களையும்
கை விலங்குகளையும்

வந்தனா, கரவெட்டி.



# தவிக்கிறேன்...

அதிகாலையில் மலரும்
மல்லிகைப் பூக்கள்
மாலையில் உதிர்கின்றன
விண்ணிலே மலரும்
நட்சத்திரப் பூக்கள்
காலையில் மறைகின்றன
என்னிலே மலர்ந்த
பாசப் பூக்கள்
முள்ளிவாய்க்காலில்
முகவரி இல்லாது போயின

க.மலர்,
சிறுவர் இல்லம்.

# என்னவள்...

கண்களில் காதல் ஆரம்பிக்கும்
என்னவளுக்கோ
கவிதையில் காதல்
எனக்கோ அவளில் காதல்...

கவிதையில் ஆரம்பித்த காதல்
நான் பேச ஆரம்பிக்கும்போது
மௌனங்கள் போதும் என்றாள்
ஆயிரம் மொழிகள்
மௌனங்களுக்குள்...

அவள் இதயத்தில்
ஓசையில்லாமல்
ஒழிந்து கொண்டேன்
நானும்
ஒவ்வொரு துடிப்பின்
முடிவிலும்
உறைந்துவிட்டாள்
என்னவள்



சிந்து சிவதாஸ்,
சுதுமலை தெற்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மனம் விட்டுச் சிரிக்க முடிகின்றதா?

■ இணையவன்

வயிறு குலுங்கச் சிரிப்பது என்கிறார்களே? நம்மில் எத்தனை பேருக்கு அப்படி அடிக்கடி சிரிக்க முடிகின்றது? இயந்திரத்தனமான வாழ்க்கைக்கு அடிமைப்பட்டுவிட்டதில், சிரிப்பைத் தொலைத்துவிட்டு நிற்கும் அவலம் நம்மில் பலபேருக்குத் தெரிய வருவதில்லை. பல அதிருப்திகளால், நம்மால் மனம் விட்டுச் சிரிக்க முடியாத நிலை நம்முடன் வந்து ஒட்டியிருக்கின்றது.

ஒரு குழந்தை பிறந்து நாலாவது மாதத்தில் சிரிக்க ஆரம்பித்து விடுகின்றது என்கிறார்கள். அப்படி ஆரம்பிக்கும் சிரிப்பு, எவ்வளவு காலம் நம் வாழ்க்கையில் தொடர்கின்றது? வாழ்க்கையின் பிற்பகுதியிலும் மனம் விட்டுச் சிரித்து வாழும் அளவிற்கு, வாழ்வின் சுமைகளை நம்மால் இறக்கி வைக்கமுடிகின்றதா?

ஒரு நகைச்சுவையான சம்பவத்தைப் பார்த்தோ அல்லது நகைச் சுவையான பேச்சு ஒன்றைக் கேட்டோ நாம் சிரித்தாலும், வேறு பல காரணங்களுக்காகவும், நாம் சிரிக்கின்றோம். ஒரு இக்கட்டான நிலையிலிருந்து மீண்டுவிட்டோம் என்று உறுதியாக நாம் தெரிந்து கொண்டவுடன், நம் முகத்தில் மலர்வது என்ன? சிரிப்புத்தானே? இன்னொருவர் பேசியதை நாம் புரிந்து கொண்டுவிட்டோம் அல்லது நாம் பேசி முடித்து விட்டோம் என்பதை வெளிப்படுத்த நாம்முகத்தில் வரவழைத்துக் கொள்வது சிரிப்பைத்தானே?

சிரிப்பது உடலுக்கு ஆரோக்கியம் என்கிறார்கள். மனம் விட்டுச் சிரிக்கும்போது, முகத்தின் 15 நார்களுக்கும் பயிற்சி கிடைகின்றதாம். புதுமையான தகவல் இது. இல்லையா?

இடுக்கண்வருங்கால் நகுக அதனை
அடுத்தூர்வது அஃதொப்பதில்

இந்த வள்ளுவரின் இரு அடிகளையும் நோக்கும்போது, நமக்குத் துன்பம் வரும்போது, சிரிக்க வேண்டும் என்று சொல்லியிருப்பதைக் காணுகையில், அவர்மீது நமக்கு கோபம்தான் வருகின்றது. இவர் எதற்கு இப்படிச் சொல்கிறார் என்று நமக்குக் கேட்கத் தோன்றுகின்றது. துன்பம் எனும் சுமை அழுத்த, எப்படி சந்தோஷமாகச் சிரிக்க முடியும்?

துன்பம் வரும்போது அதனை எள்ளி நகையாடுங்கள். அப்படிச் செய்தால் அதன் பின்னர் விளையப்போவது ஒப்பற்ற நன்மையாகவே இருக்கும் என்பதையே இங்கு வள்ளுவர் பெருமான் வலியுறுத்துகின்றார். அவர் துன்பம் வரும் வேளை சிரிக்கச் சொல்லவில்லை. அதை நோக்கி எள்ளி நகையாடும்படி பணிக்கின்றார். அவமானம் அடையும் படி, கேலி செய்து சிரிப்பதே எள்ளி நகையாடுதல் என்று பொருள்படுகின்றது.

நாம் சிரிப்பதற்கும், நம்மைப் பார்த்து இன்னொருவர் சிரிப்பதற்கும் இடையில் மலைக்கும் மடுவிற்கும் இடையிலுள்ள வேறுபாடல்லவா இருக்கின்றது?

சிரிப்பது ஒரு தொற்று வியாதியைப் போன்றது என்று சொல்லி விடலாம். முகம் சோர்ந்து நிற்பவரையும், இன்னொருவரின் நகைச் சுவையான பேச்சு கவரத் தவறுவதில்லை. நகைச் சுவைப் பேச்சு தன்னையறியாமல் கொல்லென்று மற்றையவரையும் சிரிக்க வைத்து விடுகின்றது. இதனால் தோன்றும் முகமலர்ச்சி, அந்த முகத்துக்குத் தனி அழகையும் கொடுத்து விடுகின்றது. சிரிப்பின் பேராற்றல் இது!

நகைச்சுவையாக, அதே சமயம் பிறர் மனதைப் புண்படுத்தாத வகையில் மிக நாகரீகமாகப் பேசிப் பழகுவோரைச் சுற்றி எப்பொழுதும் ஒரு கூட்டம் சுற்றியபடிதான் இருக்கும். நகைச் சுவையில் மயங்காதோர் நானிலத்தில் யார்தான் உளர்?

பாவேந்தர் பாரதிதாசன் இளைஞர் இலக்கியமென எழுதிய அருமையான வரிகளில் சிலவற்றைப் பாருங்கள்.

வகுத்து வகுத்துச் சொல்வார்கள். அதன் பயணத்தை ஆராய வேண்டும்.

பகுத்தறிவு அழியாச் சொத்தாம்,
அதைப் பாழாக்கக் கூடாது தம்பி
நகைத்திட எதையும் செய்யாதே-
மிகநல்லொழுக்கம் வேண்டும்தம்பி

பிரித்துப் பிரித்துச் சொல்வார்கள். நீ சரியான விவரத்தை (வயணம்) அறிய வேண்டும். பிரித்தறியும் திறன் என்பது காலத்தால் அழியாச் சொத்து. நீ அதை அழித்து விடக்கூடாது. பிறர் உன்னைப் பார்த்து கேலி செய்து சிரிக்கும் அளவுக்கு உன் செயற்பாடுகள் அமைந்துவிடக் கூடாது. நீ நல்லொழுக்கம் மிகுந்தவனாய் வாழவேண்டும் தம்பி என்று இளைய சமுதாயத்தினருக்கு அறிவுரை கூறுகின்றார் பாவேந்தர். சிரிப்பின்மகத்துவம் தெரிகின்றதா?

# சிற்பியும் நாமே.. சிலையும் நாமே..



■ மருத்துவர் இ.சிவசங்கர்

எப்படியும் வாழ்தல் வாழ்வாகாது, இப்படித்தான் ஒழுக வேண்மென முயற்சித்தலே வாழ்வாகும். எமது விருப்பு வெறுப்புக்களுக்கு அப்பாற்பட்டு உயர் விழுமியங்களைக் கைக்கொண்டு வாழ்தல், அல்லது வாழ முயற்சித்தலே வாழ்வாகும்.

தனி மனிதன், சமூக வாழ்வில் பங்கெடுக்கும்போது அதற்குரிய உயர் சமூக விழுமியங்களைக் கடைப்பிடிக்க வேண்டும். இதையே நாம் சமூக அறம், சமூக தர்மம் என்று கூறுகின்றோம்.

**சமூக அறத்தின் வீழ்ச்சி**

யாழ்ப்பாண சமூகம், சமூக அறத்தில் உயர் நிலையில் இருந்தது என்று கூறப்படுகின்றது. தற்போதைய சமூக தலைமைகளின் அற நிலைப்பாடுகளை அவதானிக்கும் போது எமது சமூக அறம் வீழ்ச்சி அடைந்துள்ளது என்பதை அவதானிக்க முடிகிறது.

சமூக அறத்தில் உயர்நிலையற்றோர் சமூக தலைமைகளாக வருவது, சமூகத் தலைமைகள் சமூக அறத்தை கடைப் பிடிக்காமல் விடுவதை சமூகம் அனுமதித்தல், சகித்துக் கொள்ளல் என்பவை யாழ்ப்பாண மக்களின் சமூக அறநிலை வீழ்ச்சி கண்டுள்ளதுஎன்பதைதெளிவாக்குகின்றது.

**அறம் கடைப் பிடிக்கப்படல்**

தனி நபர் சமூக அறத்தை கடைப் பிடிக்க வேண்டும். தவறும் பட்சத்தில் சமூகம் அற நிலைப்பாட்டை நடைமுறைப்படுத்த வேண்டும். இத்தகைய நிலையிலேயே சமூகத்தின் நல் இயங்கு நிலை உறுதிப் படுத்தப்படும். இதுவே எம்மிடம் எதிர்பார்க்கப்படுகின்றது.

வேம்படி மகளிர் கல்லூரியின் தற்போதைய அதிபர் பொறுப்பில் இருப்பவர் நிர்வாக முடிவுக்கு மீறலாக இருக்கின்றார். தான்சார்ந்த திணைக் களத்தின் நிர்வாக முடிவை ஏற்று நடைமுறைக்கு கொண்டு வருவது அவருடைய அறமாகும். அதன்படி ஒழுகாமை அறமீறலாகும்.

அதிபரின் அறமீறலுக்குத் துணை போகும் ஆசிரியர் குழாத்தின் அற நிலையும் கவனத்தில் எடுக்கப்பட வேண்டும். அறமீறலுக்கு துணைபோதலும் அறமீறலாகும். இதை துணை போகும் ஆசிரியர் குழாம் கவனத்தில் எடுக்க வேண்டும்.

நிர்வாக ஒழுங்கை அறம் சார்ந்து எடுப்பதும், அதை நடைமுறைப் படுத்துவதும் திணைக்கள நிர்வாகத்தின் அறமாகும். அறம் சார்ந்து முடிவெடுக்கப்பட்டமையும், அறம் சார்ந்த கடித முடிவுகள் எடுக்கப்பட்டமையும் பாராட்டப்பட வேண்டியவை.

அண்மையில் யாழ். இந்து மகளிர் கல்லூரியின் அதிபர் விடயத்தில் கல்வித் திணைக்களம் அறம் மீறிய முடிவுகளையும், கடின செயற்பாடுகளையும் நடைமுறைப்படுத்தியது. இந்து மகளிர் கல்லூரி விவகாரமுடிவு கல்வித் திணைக்களத்தின் அறமீறலை காட்டி நிற்கின்றது. அந்த வகையில் வேம்படி விடயத்தில் நன்நிலை பேணப்படுகின்றது.

எடுக்கப்பட்ட முடிவுகள் மன சுத்தியுடன் எடுக்கப்பட்டிருந்தால், அதை நடைமுறைக்கு கொண்டு வரும் உறுதி வெளிப்படும். ஆனால் வேம்படி விடயத்தில் தம்மால் எடுக்கப்பட்ட சரியான முடிவை நடைமுறைப்படுத்தும் செயற்பாடுகள் காணப்படவில்லை.

வெறுமனே இருப்பதன் காரணம் என்ன? சரியான நடைமுறைகளைக் கொண்டு வரமுடியாத போது, தத்தமது பதவி விலகலாவது உயரிய பண்பாக கருதப்படும். அதுவும் இதுவரை நிகழவில்லை. கல்வித் திணைக்களம் தனது அறம்சார் நிலையை எவ்வாறு உறுதிப்படுத்தப் போகின்றது. இத்தகைய நிலையில் ஏனையோரை நிர்வகிக்கும் தார்மீக நிலை கல்வித் திணைக்களத்துக்கு ஏற்படுமா? வரும் காலங்களில் நிர்வாகத்தை எந்த முகத்துடன் நடைமுறைப்படுத்தப் போகின்றது.

சமூக ஒழுக்கம், அறம் என்பவை வெளிப்படையாக மீறப்பட்ட யாழ். இந்து மகளிர் கல்லூரி அதிபர் விவகாரம், சமூக முன்னணியாளர்களின் விழுமிய பலவீனத்தையும், சமூக ஒழுங்கின்மையையும் காட்டுகின்றது.

யாழ்.இந்த மகளிர் கல்லூரி மாணவிகள் பாடசாலைக்கு வெளியில் அழைத்துச் செல்லப்பட்டு வன்முறை உரையாடல் நிகழ்த்தப்பட்டு திருப்பி அனுப்பப்பட்ட விடயம் சிறுவர் மீதான வன்முறையாக வரையறை செய்யப்படலாம். இந்த நிகழ்வுக்கு இடமளித்த கல்லூரி நிர்வாகம் விளக்கமளித்தலுக்கு உட்படுத்தப்படலாம் அல்லவா?

இத்தகைய விடயங்களுக்கு மௌனத்தை கடைப்பிடித்த பாடசாலை அபிவிருத்தி குழுவின் செயற்பாடு ஏற்புடையதா? வன்முறை உரையாடலுக்கு உட்படுத்தப்பட்ட மாணவிகள் ஆளுமைசார் நெருக்கீடுகளுக்கு உட்பட்டிருப்பார்கள். இவை கண்டு கொள்ளப்பட வேண்டும். இத்தகைய சம்பவங்கள் நடைபெறுவது அனுமதிக்கப்பட கூடியதா என்பதும், இதில் கல்வி திணைக் களத்தின் பொறுப்பும் ஆராயப்பட வேண்டியவை.

அரசியலாளர்களின் பங்களிப்பும் ஆராயப்பட வேண்டியதாகின்றது. அரசியலாளர்கள் சமூக நிர்வாகத்தை ஒழுங்குபடுத்தலில் நடுநிலை வகித்துச் செயற்பட வேண்டியது அவர்களின் அறமாகும். ஆனால் தற்போதைய காலங்களில் தத்தமது அரசியல் இலாபங்களுக்காக பக்கச் சார்பாக நடந்து சமூக ஒழுங்கு குலைக்கப்படுவது காணப்படுகின்றது.

அரசியலாளர்களின் இத்தகைய செயற்பாடுகள் அதிகரிப்பதற்கும் சமூக பொறுப்பின்மையும் பலவீனமுமே காரணமாகின்றன. அரசியலாளர்கள் தமது நடவடிக்கைகளின் விழுமியங்களை கண்டுகொண்டு சமூகத்துக்குமுன்மாதிரியாக செயற்படுவது நன்று.

சமூக விழுமியங்களை நெறிப்படுத்தி ஒழுங்கு படுத்துவதில் கல்விப் புலத்தினருடன் சமய பொறுப்பாளர்களும் கடப்பாடு உடையோரே ஆவர். சமூக முறைமைகளை நடைமுறைப் படுத்துவதில் சமய பொறுப்பாளர்களின் பங்கு அதிகமானது. ஆனால் சமூக ஒழுங்கமைவில் இவர்களின் மௌனம் பாதகமானது. அறம் சார் ஒழுங்கை எடுத்தியம்புவர்களாக சமயபெரியோர்கள்செயற்படவேண்டும்.

இறுதியாக தனிமனித மீறல்களுக்கு அது சார்ந்த நிர்வாகிகளே பொறுப்புக்கூற வேண்டியவர்கள் நடைமுறைப்படுத்தலுக்கான செயல்முறைகள் அனைத்தும் கைக் கொள்ளப்பட வேண்டும். தமது முடிவுகளை நடைமுறைபடுத்தாமைக்கு தாமே பொறுப்பு என்பதை கல்வித் திணைக்களம் உணர வேண்டும். இளைய சமுதாயத்துக்கு முன்னுதாரணமாகச் செயற்பட வேண்டிய கடமை எமக்குண்டு.

பாடசாலை ஆசிரியர் குழு, கல்லூரி அபிவிருத்திக்குழு, பழைய மாணவர் சங்கம், நலன்விரும்பிகள் ஒருங்கிணைந்து செயற்பட வேண்டிய கடமை நமக்கில்லையா. கல்வித் திணைக்களம் தனது கடமையில் இருந்து விலகும் போது மேலே கூறப்பட்ட கல்லூரிச் சமூகம் திணைக்களத்தின் மீது அழுத்தம் கொடுக்க வேண்டிய பொறுப்பு இல்லையா? எமது கடமை, பொறுப்புக்களில் ஒழுங்குபடுத்தலை ஏற்படுத்தாது, இளைய சமுதாயத்திடம் எவற்றை வளர்த்தெடுக்க போகின்றோம்.

மூத்தோர்களின், சமூக முன்னணியாளர்களின் அறம், ஒழுங்கு என்பவை அற்ற வாழ்வு நிலை இளையோரை விரக்திக்கு உள்ளாக்கும்.

இதன் தொடர்ச்சியாக மன அமைதியின்மை, பொறுப்பற்ற தன்மை, சமூக எதிர்நடத்தைகள் இளைஞர்களிடையே தோற்றம் கொள்ளும். சமூக ஒழுங்குள்ள நிலையும், முன்னுதாரணத்துக்கு உரியோரின் பண்பு சார் நடத்தைகளுமே பொறுப்புணர்வு ஒழுக்க அவசியமாகும். எனவே முன்னுதாரணத்துக்கு உரியோர், தமது தனிப்பட்ட ஆசை தேவைகளை அறம் சார் தடத்தின் ஊடாகப் பூர்த்தி செய்ய முன்வர வேண்டும். அத்துடன் சமூக மட்ட நிர்வாக ஒழுங்கு படுத்தலில் சமூக நிர்வாக நியமங்களுக்கு அமைந்த முடிவெடுத்தலும், அதனை நடைமுறைப்படுத்தலை உத்தரவாதப்படுத்தலும் இளைஞர்களின் சீராக்கல் வளர்ச்சிக்கு உறுதுணை செய்யும். எம்மை நாமே சீர் செய்வதன் ஊடாக எமது உள்ளார்ந்த உயரிய நிலையை வெளிகொணர்வோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேச்சு சுதந்திரத்துக்குள் சமய நிந்தனையை அடக்கிவிட முடியாது.....

■ ரெங்கன்

முஸ்லிம் நாடுகளையும் உலக முஸ்லிம்களையும் கொதிப்பில் ஆழ்த்தியுள்ள அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட திரைப்படம் தொடர்பாகத் தெரிவிக்கப்படும் நியாயப்பாடுகளைப் பிரபல உலக விமர்சகர்கள் அபத்தமானவை,ஏமாற்றுவேலை என்று கண்டித்திருக்கிறார்கள்.

பேச்சு சுதந்திரத்தைக் காரணம் காட்டி மேற்குலக சில நாடுகளும் ஏடுகளும் இந்தச் செயற்பாட்டை நியாயப்படுத்தப் பார்க்கின்றன. உலகம் முழுவதும் வாழ்கின்ற ஒரு பில்லியனுக்கும் மேற்பட்ட முஸ்லிம்களின் மனங்களை புண்படுத்தியிருப்பதை தனிமனித பேச்சு சுதந்திரத்தைக் காட்டி சமாளித்து விட முடியாது- கூடாது என்று மத்திய கிழக்கு தொடர்பான நூல்களின் ஆசிரியரான டாக்டர் இஸ்மாயில் சலாமி தெரிவித்துள்ளார்.

2012 ஆம் ஆண்டு இஸ்லாத்தை அவதூறு செய்யும் ''முஸ்லிம்களின் அப்பாவித்தனம்'' என்ற தலைப்பிலான திரைப்படம் இஸ்லாத்துக்கு எதிரான அமெரிக்காவில் வாழும் இஸ்ரேலியர் ஒருவரால் தயாரிக்கப்பட்டுள்ளது. 50 லட்சம் யு.எஸ். டொலர் செலவில் இந்தப் படம் யூத நிறுவனங்களின் நிதிப் பங்களிப்புடன் தயாரிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் புனிதகுர்ரான் பிரதிகளைத் தீயிட்டுக் கொளுத்தி சர்ச்சையைக் கிளப்பியிருந்த ரெ்றி ஜோன்ஸ் என்ற அமெரிக்க பாஸ்ரர் இந்தப் படத் தயாரிப்பின் பின்னணியில் இருந்திருப்பார் என்ற சந்தேகம் இருப்பதாகவும் விமர்சகர் சலாமி தெரிவித்துள்ளார். அந்தப் படத்தின் தயாரிப்பாளர் யார் என்பதை குறிப்பாகச் சொல்ல முடியாவிட்டாலும் அப்படியான ஒருவர் இல்லை என்பதை நம்புவதற்குக் காரணம் இருக்கிறது. அந்தப் பாஸ்ரரே படத்தைத் தயாரித்திருக்கவும் முடியும். ஏனென்றால் அந்தப் படத்தில் எதுவித சினிமா நுணுக்கங்களையும் காணமுடியவில்லை. படத்தில் சம்பந்தப்பட்டிருப்பவர்களும் சியோனியவாதிகளுக்கு சேவை செய்யும் கைக் கூலிக்கும்பல் என்றுஅவர்குறிப்பிட்டுள்ளார்.

### பழிவாங்கும் செயல்

லிபியாவில் அமெரிக்கத் தூதரகம் மீது தாக்குதல் நடத்தி அங்கிருந்த அமெரிக்க தூதுவருடன் வேறு மூன்று அமெரிக்கர்களையும் கொன்ற சம்பவமானது தங்கள் அமைப்பின் இரண்டாம் நிலை தலைவர் கொல்லப்பட்டமைக்கான பழிவாங்கும் நடவடிக்கை என்று அல்கய்டா தீவிரவாத அமைப்பு அறிவித்துள்ளது. ஆபிரிக்காவிலும் மத்திய கிழக்கிலும் உள்ள அமெரிக்க நிறுவனங்கள் மீது மேலும் அதிக தாக்குதல்களை நடத்துமாறும் மேற்கு நாடுகளில் வாழும் முஸ்லிம்களை அமெரிக்க நிறுவனங்களை தாக்குமாறும் அல்கய்டா அழைப்பு விடுத்துள்ளது.

### காபூலில்

காபூல் நகரில் கடந்த வாரம் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் நூற்றுக்கணக்கான ஆப்கானியர்கள் வீதிகளில் இறங்கி அமெரிக்க நிறுவனங்கள் மீது கல்லெறிந்தும் கார்களுக்குத் தீ மூட்டியும் அமெரிக்கா சாகட்டும் என்றும் கூச்சல் போட்டும் கிளர்ச்சி செய்தார்கள்.

நேட்டோ மற்றும் அமெரிக்க இராணுவ நிலைகளுக்கு அருகில் இந்த ஆர்ப்பாட்டங்கள் இடம் பெற்றன. லெபனானில் செயற்படும் ஹெஸ் புல்லா இயக்கத்தின் தலைவர் நஸ்ரல் லாஹ் விடுத்த ஓர் அழைப்பையடுத்து இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

### பேஷாவரில்

பாகிஸ்தான் பேஷாவர் நகரில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது பொலிஸாருடன் நடந்த கைகலப்பில் ஆர்ப்பாட்டக்காரர் ஒருவர் கொல்லப்பட்டார்.

### மணிலாவில்

பிலிப்பைன்ஸில் சுமார் 3 ஆயிரம் முஸ்லிம்கள் வீதியில் இறங்கி நடத்திய ஆர்ப்பாட்டத்தின்போது அமெரிக்க - இஸ்ரேல் கொடிகளுக்குத் தீ மூட்டினார்கள். அவர்கள் எடுத்துச் சென்ற பதாகைகளில் அமெரிக்கர்கள் சாத்தான்கள், இஸ்ரேல் யூதர்கள் முஸ்லிம் சமூகத்தின் எதிரிகள் என்று பொறிக்கப்பட்டிருந்தது.



உலக நடப்புகள் ஒரு பார்வை

### அமெரிக்க தூதரகங்கள் பாதுகாக்கப்படும்

வெளிநாடுகளில் உள்ள அமெரிக்க தூதரகங்கள் மற்றும் ஏனைய தூதரகங்களைப் பாதுகாப்பதற்கான அழுத்தம்மிக்க நடவடிக்கைகளை எடுத்து வருவதாக ராஜாங்க அமைச்சர் ஹிலாரி கிளின்ரன் தெரிவித்துள்ளார்.

மத்திய கிழக்கு, வட ஆபிரிக்கா, தென் ஆஸியா மற்றும் முஸ்லிம்கள் வாழும் பல நாடுகளிலும் அமெரிக்க நிறுவனங்களுக்கு எதிராகக் கடும் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்று வரும் நிலையில் அமெரிக்க வெளியுறவு செயலர் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

தமது நிறுவனங்கள் அமைந்துள்ள நாடுகளில் பாதுகாப்பு நிலைமைகள் ஆராயப்படுவதாகவும் அவசியமான இடங்களில் பாதுகாப்பு மேலும் ஸ்திரப்படுத்தப்படும் என்று கிளின்ரன் கூறினார். கடந்த வாரம் ஆப்கான் காபூல் நகரில் தற்கொலை தாக்குதல் ஒன்று நடத்தப்பட்டதில் இஸ்லாத்தை இழிவுபடுத்தும் திரைப்படம் தொடர்பான வன்செயல்களில் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை 30 ஆக அதிகரித்துள்ளது. கடந்த 11 ஆம் திகதி லிபியாவில் பெங்காஸி நகரில் அமெரிக்கத் துணைத்தூதரகத்தை வன்முறைக் கும்பல் ஒன்று தாக்கியதில் அங்கிருந்த அமெரிக்க தூதுவர் கிறிஸ் ஸ்டீபன் உட்பட 4 பேர் கொல்லப்பட்டனர்.

இந்தச் சம்பவம் பற்றி ஹிலாரி கிளின்ரன் கூறுகையில், இந்தச் சம்பவத்தைத் திட்டமிட்டு நடத்தியவர்கள் கண்டுபிடிக்கப்பட்டு தண்டிக்கப்படும் வரை நாங்கள் ஓயப்போவதில்லை என்று கூறியுள்ளார். பல இடங்களிலும் மக்களின் உணர்ச்சிமயத்தை தீவிரவாதிகள் தமது தேவைகளுக்கு பயன்படுத்திக் கொண்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

### அமெரிக்க போர்க்கப்பல்கள்

லிபியாவில் அமெரிக்க தூதரகம் தாக்கப்பட்டு தூதுவர் கொல்லப்பட்டதையும் ஏனைய அரபு நாடுகளில் அமெரிக்காவுக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களும், வன்முறைகளும் அதிகரித்திருப்பதைத் தொடர்ந்து அமெரிக்க போர்க்கப்பல்கள் அந்தப் பகுதிக்கு விரைந்துள்ளன.

போர்ப் பயிற்சிகளில் அவை ஈடுபட்டிருப்பதாகவும் கூறப்படுகின்றது. வளைகுடாப் பகுதியில் எவ்வேளையிலும் நிலைமைகள் சீர்குலையும் ஆபத்திருப்பதால் அவை கைமீறிப்போவதைத் தடுப்பதற்காகவே அமெரிக்க போர்க் கப்பல்கள் அங்கு சென்றிருப்பதாகவும் கருதப்படுகின்றது.

## இஸ்லாமிய நாடுகளில் தொடர்கிறது ஆர்ப்பாட்டம்

### ஹோமுஸ் கால்வாய் நிர்மூலமாக்கப்படும்

ஈரான் மீது தாக்குதல் நடத்தப்படுமானால் வளை குடாவின் ஹோர்முஸ் நீரிணை தளங்கள் மத்திய கிழக்கிலுள்ள அமெரிக்க தளங்கள் மற்றும் இஸ்ரேல் மீது கடும் எதிர் தாக்குதல் நடவடிக்கைகள் நடத்தப்படும் என்று ஈரானின் பலமிக்க புரட்சிகர காவல் அணியின் தலைவர் ஜெனரல் மொகம்மத் அலி ஜாப்ரி எச்சரித்துள்ளார்.

தெஹ்ரானில் பத்திரிகையாளர் மாநாடொன்றில் பேசிய மேஜர் ஜாப்ரி, ஈரான் இராணுவ ரீதியிர் இலக்கு வைக்கப்படுமானால் அணு ஆயுதப் பரவல் தடை ஒப்பந்தத்தை அது கைவிட வேண்டிவரும் என்றும் சொன்னார்.

ஈரான் அணு ஆயுதத் தயாரிப்பில் ஈடுபட்டிருப்பதாகப் பரவலாக வெளியாகியுள்ள தகவல்களின் காரணமாக அந்தப் பகுதியில் ஏற்பட்டுள்ள பதற்ற நிலையின் பின்னணியில் இந்த எச்சரிக்கை வெளி வந்துள்ளது.

ஈரானின் அணு உலைகள் மீது தாக்குதல் நடத்தி அவற்றை அழிப்பது குறித்து இஸ்ரேல் ஏற்கனவே எச்சரிக்கை விடுத்திருப்பது குறிப்பிடத்தக்கது. இதற்கு அமெரிக்கா ஆதரவளிக்கலாம் அளிக்காமலும் விடலாம் என்பது இஸ்ரேலின் இப்போதைய நிலைப்பாடு. வளைகுடா பகுதியில் ஹோமுஸ் நீரிணையானது ஒரு குறுகிய கால்வாயாகும். இதன் வழியாக உலக வர்த்தகத்தின் முக்கால் பகுதியும் இடம்பெறுகின்றது. உலக நாடுகளுக்கான வளைகுடா எண்ணெய் போக்குவரத்தும் இதன் வழியாகவே நடைபெறுகின்றது. எனவே ஈரான் தாக்கப்பட்டால் இந்த நீரிணை கால்வாய் தாக்குதலுக்குள்ளாவது தவிர்க்க முடியாத நிலையாகும் என்று ஜாப்ரி கூறியுள்ளார்.

### அரச குடும்பத்தை கவலையில் ஆழ்த்திய சம்பவம்

பிரிட்டிஷ் முடிக்குரிய வாரிசு வரிசையில் இரண்டாம் இடத்தில் இருப்பவரும் தற்போதைய பிரிட்டன் இரண்டாவது எலிசபெத் மகாராணியின் பேரனும் சார்ல்ஸ் இளவரசரின் மூத்த புதல்வருமான இளவரசர் வில்லியமின் துணைவியார் இளவரசி கெதரினின் மேல் சட்டை இல்லாத புகைப்படத்தை வெளியிட்டமைக்காக ஐரிஷ் பத்திரிகை ஒன்றின் ஆசிரியர் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

அதேசமயம் இளவரசியின் மேல் சட்டையில்லாத படங்களை வெளியிட்ட பத்திரிகை நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பது பற்றியும் பிரிட்டிஷ் அரச குடும்பத்தினர் ஆலோசித்து வருகின்றனர்.

பத்திரிகையின் பிரிட்டிஷ் மற்றும் அயர்லாந்து உரிமையாளர்கள் குறித்த படம் வெளியிடப்பட்டதைக் கண்டித்திருப்பதுடன் டப்லினில் வெளிவரும் இன்டிபென்டன்ட் பத்திரிகையின் ஆசிரியர் ஓ கேன் என்பவர் உடனடியாக பதவி நீக்கம் செய்யப்பட்டிருப்பதாகவும் அறிவித்துள்ளனர்.

மேற்படி படங்கள் முதலில் பிரெஞ்சு மொழியில் வெளியாகும் குளோசர் என்ற பத்திரிகையிலேயே வெளிவந்திருந்தன. படங்கள் வெளியான பின்னணி பற்றியும் உரிமையாளர்கள் உள்ளக விசாரணையொன்றுக்கு உத்தரவிட்டுள்ளனர்.

நொதேர்ன் அன் ஷெல் நிறுவன தலைவர் றிச்சார்ட் டெஸ்மொன்ட் தகவல் தருகையில் இளவரசியின் மேல் சட்டையில்லாத படத்தை வெளியிட்டமைக்காக ஐரிஷ் ஸ்டார் பத்திரிகையை மூடி விடுவதற்கு உத்தேசித்திருப்பதாகத் தெரிவித்துள்ளனர்.

பிரான்சில் உள்ள மாளிகையொன்றின் மேல் மாடியில் சூரிய வெளிச்சத்தில் மேல் சட்டையில்லாமல் இளவரசி அமர்ந்து 'சன்பேதிங்' செய்து கொண்டிருந்தபோது இந்தப் படங்கள் எடுக்கப்பட்டுள்ளனவாம். இந்தப் படங்கள் வெளியிடப்பட்டதின் மூலம் அந்தப் பத்திரிகை நிறுவனத்தின் ஆசிரியர் பகுதியினரின் தரக்குறைவைக் காட்டுவதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இளவரசி கெதரினின் மேல் சட்டையில்லாத புகைப்படங்களை பிரெஞ்சு சஞ்சிகைகள் மேற்கொண்டு வெளியிடக்கூடாது என்ற நீதிமன்ற கட்டளையைப் பெற்றுக் கொண்டதன் பின் இளவரசர் வில்லியமும் மனைவி கெதரினும் தாயகம் நோக்கி புறப்பட்டுள்ளார்கள்.

பிரெஞ்சு பத்திரிகையான குளோசர்மேற்கொண்டும் இளவரசியின் மேல் சட்டையில்லாத படங்களை வெளிடக் கூடாது என்பதுடன் குறித்த படங்கள் எவ்வாறு பத்திரிகைகளுக்குக் கிடைத்தன என்பதை ஆராய்ந்து அறியும் படியும் அதிகாரிகள் கேட்கப்பட்டுள்ளனர். இளவரசர் தம்பதியர் சிங்கப்பூர் மற்றும் மலேஷியா முதலிய நாடுகளில் தமது சுற்றுப் பயணத்தை முடித்துக் கொண்டு தாயகம் புறப்பட்டு விட்டதாகச் செய்திகள் கூறின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றி பெறலாம் வாங்க!

■ ராகவன் அல்பி

மாறாமல் நீண்டகாலம் நீடித்து இருப்பது எதுவுமில்லை. நம்மைச் சுற்றி மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டுதான் இருக்கின்றன. இந்த மாற்றங்கள் நம்முடைய திறமைகளைத் தூண்டிவிடுவதாகவும் இருக்கலாம், பயமுறுத்துவதாகவும் இருக்கலாம். நீங்கள் அதை எப்படி பார்க்கிறீர்கள் என்பதைப் பொறுத்தது. சிறந்த மாற்றங்கள் என்பது மற்றவர்கள் உங்கள் மீது திணிக்காது, நீங்களே மாற வேண்டுமென நினைத்து மாற்றம் செய்து கொள்வதுதான். அதுதான் மகிழ்ச்சிக்குரியதுமாகும். ஏனெனில் அவைதான் உங்களை இலக்கின் அருகில் இட்டுச் செல்லும்.

சில சமயங்களில் உங்கள் வாழ்க்கையில் நீங்கள் பெரும் மாற்றங்களைச் செய்ய விரும்புவது புதிய விஷயங்களைக் கண்டடைய உதவும். இந்த வாரமும் இனிவரும் சில வாரங்களும் பலபேர் மாற்றம் செய்து கொள்ள விரும்பும் விஷயங்கள் பற்றியும் அதை எவ்வாறு செய்ய வேண்டுமென்பது பற்றியும் ஆராய இருக்கிறோம். எனவே தவறவிடாமல் படியுங்கள்.

வழமைபோன்றே மாற்றங்கள் விடயத்திலும் 10 முக்கிய விடயங்களை நாம் அவதானிக்கலாம்.



**நிறை:** அதிக நிறையுடன் இருக்கும் சில பேர் தங்கள் நிறையைக் குறைக்க விரும்புவார்கள். அதேசமயம் குறைவான எடையுடையவர்கள் கொஞ்சம் நிறைகூட வேண்டுமென நினைப்பார்கள். நீங்கள் இருக்கும் எடை பற்றி உங்களுக்குத்திருப்தி இல்லையெனில் அதைக் குறைத்துக் கொள்வது அல்லது அதிகரித்துக் கொள்வதை மெதுவாகத்தான் செய்ய வேண்டும்.

உங்கள் வாழ்க்கையை மாற்றப்போகும் தொடர்....

**வேலை:** பார்க்கும் வேலையை நீங்கள் வெறுக்கலாம் அந்தச் சமயத்தில் வேலையை மேம்படுத்த முயற்சி செய்வீர்கள். அல்லது புதிய வேலையைத் தேடுவீர்கள். பெரும்பாலான நேரங்களில் பலபேர் புதிய வேலைக்கு எளிதாக மாறிவிடுவீர்கள்.

**ஆரோக்கியம்:** நீங்கள் புகைப்பிடிக்கிறீர்கள் அல்லது அதிகமாகக் குடிக்கிறீர்கள் அல்லது குறைவான உடற்பயிற்சி செய்கிறீர்கள் என்று நினைத்தால், உடற்பயிற்சி செய்யத் தொடங்குவது ஆரோக்கியத்தைப் பேணுவதற்கான முதல் படியாகும்.

**வீடு:** மனச்சோர்வை ஏற்படுத்தும் சுற்றுப்புறத்துடன் வாழ்கின்றீர்களா? உங்களுக்கென்று தோட்டம் வேண்டுமென ஆசைப்படுகிறீர்களா? சில சமயங்களில் நீங்கள் இருக்கும் வீட்டை அல்லது சுற்றுப்புறத்தை மேம்படுத்த நிறைய விஷயங்களைச் செய்ய வேண்டியிருக்கும். இது வீட்டை மாற்றுவதைவிட மிகவும் செலவு குறைவானது, எளிதானது.

**தோழமை:** இது சிரமமானது. காலப்போக்கில் நாம் மாறிக்கொண்டே இருக்கிறோம். மேலும் சில சமயங்களில் பலர் நம்மை விட்டு விலகிச் செல்வார்கள். அந்தச் சவால்களை எப்பொழுது எதிர்கொள்வது என்பதையும் எப்பொழுது உறவை முடிவுக்குக் கொண்டு வர வேண்டும் என்பதையும் தெரிந்து வைத்திருப்பது நல்லது. இது பற்றி மற்றவரிடம் ஆலோசனை கேட்பது சரியான முடிவை எடுக்க உங்களுக்கு உதவும்.

**வருமானம்:** பெரும்பாலான சமயங்களில் நீங்கள் வாங்கும் சம்பளத்துக்கும் நிறுவனத்தில் உங்களின் பங்களிப்புக்கும் சிறிதளவே சம்பந்தம் இருக்கும். நீங்கள் உங்கள் தகுதிக்கேற்ற சம்பளம்தான் வாங்குவீர்களா என்பதை எப்போதும் மீளாய்வு செய்து கொண்டே இருக்கவேண்டும்.

**தோற்றம்:** உங்கள் தோற்றத்தைப் பற்றி நீங்கள் கவலைப் பட்டுக் கொண்டிருக்கலாம். அறுவைச் சிகிச்சை செய்து அழகுபடுத்திக்கொள்ளக் கூட நினைத்திருக்கலாம். அது போன்ற சமயங்களில் நண்பர்களிடம் ஆலோசனைகளைப் பெறலாம். இல்லையென்றால் தேவையில்லாமல் கவலைப்படுவது போலாகிவிடும்.

**தனிப்பானி:** இது மற்றவர்கள் உங்களைப் பற்றி எப்படிப் பார்க்கிறார்கள் என்பது பற்றியது. நீங்கள் உங்களை எப்படி உணர்கிறீர்கள் என்பது பற்றியது அல்ல. நீங்கள் கனிவானவராக, சுயநலமிக்கவராக, ஆர்வமற்றவரா, எப்படிக் கருதப்படுகிறீர்கள்? நீங்கள் எப்படித் தோன்ற விரும்புகிறீர்கள்? உங்களைப் பற்றி மற்றவர்கள் என்ன கூறவேண்டுமென விரும்புகிறீர்கள்? என்பதைப்பற்றியது. உங்கள் வெற்றியில் மற்றவர்களின் பங்களிப்பை உறுதிப்படுத்துவதில் இது செல்வாக்குச் செலுத்தும்.

**தாக்கம்:** பலபேருக்கு ஒரு கட்டத்தில் நிறைய விஷயங்களை மாற்றிக்கொள்ள வேண்டிய தேவை வரும். நீங்கள் மாணவப் போராளியாக அல்லது பிரசாரகராக இருக்கலாம். உண்மையில் நீங்கள் என்ன மாற்றம் செய்து கொள்ள விரும்புகிறீர்கள் அது ஏன்? என்பதைத் தெளிவுபடுத்திக்கொள்ளுங்கள்.

16

**வாழ்க்கை:** சிலர் ஒட்டுமொத்தமாக எல்லாவற்றையும் மாற்றிக்கொள்ள வேண்டும் என நினைப்பார்கள். ஒருவேளை முக்கியமான குற்ற விசாரணையில் நீங்கள் சம்பந்தப்பட்டிருந்து, அதற்காக முற்றிலும் புதிய அடையாளம் தேவைப்படும் சூழ்நிலையைத் தவிர்த்து, அது மிகவும் சிரமமான காரியம்தான். எங்கிருந்து தொடங்குவது எனத் திட்டமிடுங்கள்.

# குதிரைகள் மீது திரும்பிய பார்வை...

■ லக்ஸ்மன்

நெடுந்தீவில் உள்ள குதிரைகள் அரசு உடைமை என நெடுந்தீவுப் பிரதேச சபை இப்போது அறிவித்துள்ளது. வரலாற்றுச் சான்றுகள் நிறைந்த ஒரு பிரதேசம் நெடுந்தீவு என்பதால் வெறும் அறிவிப்புடன் தனது கடமை முடிந்துவிட்டதாக சபை கருதிவிடக் கூடாது.

குதிரைகள் அரேபியர்கள் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த காலத்தில் இங்கு கொண்டு வரப்பட்டிருந்ததாகக் கொள்ளப்படினும் போர்த்துச்கீசர், ஒல்லாந்தர் காலங்களிலேயே அவற்றுக்கு முக்கியத்துவம் கிடைத்தது. பிரிட்டிஷார் காலத்தில் பணியில் இருந்த ஐரிஸ்காரரான எட்வேட் நோளனுக்கு குதிரைகள் விடயத்தில் முக்கிய தொடர்புகள் இருந்துள்ளது.

தற்போதைய நெடுந்தீவு உதவி அரச அதிபர் பணிமனை அமைந்துள்ள இடத்தில் இருந்து நிர்வாகக் கடமைகளைக் கவனித்த இவன் குதிரைகளை ரசிக்கவும் அவற்றின் பராமரிப்புக்கள் குறித்துப் பார்வையிடவும் அடிக்கடி குதிரைகளைப் பார்க்க இலகுவாகச் செல்வதற்குரிய வசதியாகவே இரண்டு பெரிய குளங்களை ஒன்றிணைத்து அதனூடாகக் குதிரைகள் நிற்கும் பகுதிகளுக்குச் சென்று வந்தான். குதிரை வளர்ப்புக்கு முக்கியத்துவம் மிகக் கூடுதலாக வழங்கப்பட்டது இவனது காலத்தில்தான்.

அரச சொத்து என்ற வகையில் இதனைப் பராமரிக்கவென உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டதுடன் குதிரைலாயங்கள், தண்ணீர்த் தொட்டிகள், மருத்துவக் கேணி போன்றவற்றை அமைத்துப் பராமரித்தும் வந்தான்.

நெடுந்தீவு கச்சேரி மூடப்பட்டதும் குதிரைகள் பராமரிப்பின்றிக் கைவிடப்பட்டன. ஊரில் உள்ள சிலர் அவற்றைப் பிடித்து தமது உரிமை எனக் கூறி [illegible] யாளமிட்டு அலைய[illegible] தமது எனப் பிடித்து வைத்திருந்த குதிரைகளைக் கூட அவர்கள் உரிய முறையில் பாதுகாத்ததில்லை.

சுதந்திரமாகத் திரிந்த குதிரைகள் கேட்பாரில்லாத நிலையில் வெளியிடங்களுக்குக் கொண்டு செல்லப்பட்டதும் உண்டு. இரவு வேளைகளில் திருட்டுத்தனமாகவும் ஏற்றி அனுப்பப்பட்டுமுள்ளன.

இவை வரலாற்றுடன் இணைந்த நெடுந்தீவின் சொத்து என்பதால் கிராமசபை இவற்றைத் தனது உடைமையாகப் பிரகடனப் படுத்துவதுடன் அவற்றைப் பராமரித்துப் பாதுகாக்க வேண்டும் என நெடுந்தீவின் பிரதான பொதுத்தாபனமாக அப்போது இருந்த நெடுந்தீவு முன்னேற்றக் கழகம் 1974 இல் கிராம சபையைக் கேட்டுக் கொண்டது. அத்துடன் நெடுந்தீவுப் பகுதியில் இருந்து வெளியிடங்களுக்கு அவற்றை எடுத்துச் செல்வதும் தடைசெய்யப்பட வேண்டும் என அன்றைய பெரும்பாக உத்தியோகத்தராக இருந்த [illegible] குதிரை ஏற்றுவதற்கான தடையும் பிறப்பிக்கப்பட்டிருந்தது.

இப்போது பிரதேச சபை தனது பார்வையைக் குதிரைகள் மீது திருப்பியுள்ளது. இந்த அறிவிப்பு குதிரைகளுக்கு பயனுள்ளதாகவும் அவை எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு தீர்வு தரக் கூடியதாகவும் அமைய வேண்டும். உணவு, குடி தண்ணீர் கிடைக்காமல் அவை தொடர்ந்தும் அலைகின்றன. வெல்லைப் பகுதியை தமது வதிவிடமாகக் கொண்டு அந்தப் பகுதிகளில் உணவு, தண்ணீரைப் பெற்று வந்த குதிரைகள் இந்த இரண்டும் கிடைக்காத நிலையில் உணவு, தண்ணீரைத் தேடித் திரிகின்றன. இந்தப் பிரதேசங்களில் உணவுக்கெனப் புற்களை வளர்க்கவும், நீர்த் தொட்டிகளை அமைக்கவும் குதிரைலாயங்கள் இருந்த பகுதியை இனங்கண்டு தொழுவங்களை அமைத்து பராமரிப்பதற்குமென ஊழியர்களையும் நியமிக்கும் பட்சத்தில் தான் அரசுடைமை என்ற அறிவிப்பு பொருத்தமானதாக இருக்கும்.

குதிரைகளைப் பார்வையிடுவதற்கென்றே வெளிநாட்டு உள்நாட்டு உல்லாசப் பயணிகள் வருகின்றனர். குதிரைகளை ஒன்றிணைத்துப் பராமரித்தால் உல்லாசப் பயணிகளிடம் அதற்கான கட்டண அறவீடுகளையும் மேற்கொள்ளலாம். வெறுமனே நெடுந்தீவு ஒரு சிறந்த சுற்றுலாப் பிரதேசம் என்று சொல்லிக் கொண்டிருப்பதால் சுற்றுலாப்பயணிகள் மூலம் நெடுந்தீவுக்கு எந்த வருமானமும் கிடைக்கப் போவதில்லை. வந்தார்கள், பார்த்தார்கள், போனார்கள் என்றதுடன் நின்று விடும்.

குதிரைகள் மட்டுமன்றி ஏனைய சரித்திரச் சான்றுகளும் படிப்படியாக அருகியும் சிதைந்தும் வருகின்றன. ஒரு காலத்தில் எந்த ஒருவரலாற்று அடையாளங்களையும் முழுமையாக இழந்து விடும் நிலையில் இருந்து நெடுந்தீவைக் காக்க குதிரைகள் உட்பட ஏனையவற்றையும் பாதுகாத்து அதனூடாக வருமானம் பெறக்கூடியதாக இந்தப் புதிய பார்வைகள் தேவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவிடு பொடியான நல்ல சந்தர்ப்பம்...

■ அதிரன்



கிழக்கு மாகாண முஸ்லிம்களுக்கு மு.கா. தலைவர் ரவூப் ஹக்கீம் செய்தது ஒரு வரலாற்றுத் துரோகம் என இப்போது முஸ்லிம் புத்திஜீவிகளும் கல்விமான்களும் சீற்றமடைந்திருக்கிறார்கள். கிழக்கில் ஆட்சியை அமைக்க முஸ்லிம் காங்கிரஸ் அரசுக்கு ஆதரவளித்தமையே இந்தக் கொந்தளிப்புக்குக் காரணம்.

தேர்தல் காலங்களில் முஸ்லிம் காங்கிரஸ் எவ்வளவுதான் சமூகப்பற்றினைப் பற்றிப் பேசினாலும், இறுதியில் கட்சியின் தலைமை தனது நலன்களைக் கருத்தில்கொண்டே முடிவுகளை எடுக்கிறது.

இந்த வழிமுறையையே கிழக்கு மாகாண சபையின் ஆட்சி அதிகாரத்தை தீர்மானிக்கும் விடயத்திலும் முஸ்லிம் காங்கிரஸ் பின் பற்றியுள்ளது.

முஸ்லிம் காங்கிரஸ் உருவாக்கப்பட்டது முஸ்லிம் சமூகத்தின் நன்மைகளைக்கருத்தில்கொண்டா? அல்லது அதன் தலைமையின் பதவி மோகத்தைக் கருத்தில் எடுத்தா? என்று சிந்திக்கும் அளவுக்கு முஸ்லிம் காங்கிரஸால் முஸ்லிம்களின் சமூக நலன்கள் தொடர்ச்சியாகப் புறக்கணிக்கப்பட்டு வருகின்றமைக்கு இந்தச் சம்பவம் ஒரு நல்ல உதாரணம்.

கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் முஸ்லிம்களில் மூன்றில் இரண்டு பங்கினர் முஸ்லிம் காங்கிரஸிற்கே வாக்களித்தார்கள். முஸ்லிம் காங்கிரஸ் மூலமாக ஒரு முஸ்லிம் முதலமைச்சரைப் பெற்றுக் கொள்ள வேண்டும், முஸ்லிம்களின் அடிப்படை உரிமைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட வேண்டும், முஸ்லிம்களின் உரிமைகளில் கைவைக்கும் அரசுக்கு ஒத்துழைப்பு வழங்கக் கூடாது என்பதற்காகவே கிழக்கு முஸ்லிம்கள் மு.காவுக்கு வாக்களித்தார்கள்.

முஸ்லிம்களின் வாக்குகளைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்பதற்காக அரசுக்கு எதிரான வலுவான பிரசாரங்களை முஸ்லிம் காங்கிரஸ் மேற்கொண்டது.

முஸ்லிம் முதலமைச்சரைப் பெற்றுக் கொள்வதே எமது ஒரே இலக்கு. தலைமைத்துவத்தின் அமைச்சர் பதவியையும் அடமானம் வைத்துத்தான் தேர்தலுக்கு முகங்கொடுத்துக் கொண்டிருக்கின்றோம் என்றெல்லாம் பல வீர வசனங்களை முஸ்லிம் காங்கிரஸின் தலைமைத்துவம் மேடைகளில் சூளுரைத்தது.

முஸ்லிம் காங்கிரஸுக்கு நீண்ட இடைவெளிக்குப் பிறகு பேரம் பேசும் சந்தர்ப்பம் கிழக்கு மாகாண சபைத் தேர்தலின் வாயிலாகக் கிட்டியது. அதனை அது சரியாகப் பயன்படுத்திக்கொள்ளுமென்று அந்தக் கட்சியின் ஆதரவாளர்கள் பலரும் கனவு கண்ட போதிலும் அவை வெறும் கனவாகவே கலைந்து விட்டன. ஜனாதிபதி மஹிந்தவின் ஆசை வார்த்தைகளுக்கு எடுபட்டு கிழக்கில் ஆட்சி அமைக்க அரசுக்கு ஆதரவளித்ததுடன் மு.காவின் நீண்டகாலக் கனவாகிய முதலமைச்சர் பதவியையும் தனது சுயலாப அரசியலுக்காக விட்டுக்கொடுத்து கிழக்கு முஸ்லிம்களுக்கே துரோகமிழைத்துவிட்டார் ஹக்கீம்.

தனித்துவம், கொள்கை, சமூகப்பற்று போன்றவற்றை எல்லாம் இழந்து பதவிகளே முக்கியம் என்ற நிலைக்கு இப்போது வந்துவிட்டது முஸ்லிம் காங்கிரஸ். ஆயினும் இந்த நிலை இன்னும் தொடர்ந்து செல்ல முஸ்லிம் மக்கள் அனுமதிக்க மாட்டார்கள் என்பது தெளிவான விடயம். இப்போது மு.கா. செய்த தவறுக்காக அதற்கான பிரதிபலனை விரைவில் அனுபவிக்க நேரிடும் என முஸ்லிம் புத்திஜீவிகள் எச்சரிக்கை விடுத்துள்ளார்கள். மு.காவுக்குக் கிடைத்த கிழக்கின் முதலாவது முஸ்லிம் முதலமைச்சர் பதவியை அது அரசுக்குத் தாரை வார்த்ததுதான் அனைவருக்கும் ஆத்திரம்.

அரசிடம் இவ்வாறு விலை போனதை விட தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து கொண்டு அவர்கள் வழங்கவிருந்த முதலமைச்சர் பதவியை மு.கா. ஏற்றிருந்தால் அது மு.கா. முஸ்லிம் மக்களுக்குச் செய்த அதிசிறந்த- வரலாற்றுப் பதிவுடைய ஒரு நிகழ்வாக இருந்திருக்கும் என்பதுடன் இலங்கை அரசியல் வரலாற்றில் சிறுபான்மையினரான தமிழ், முஸ்லிம் மக்கள் இணைந்து தமது உரிமைகளை வென்றெடுக்கக் கிடைத்த ஆயுதமாகவும் அதனைப் பயன்படுத்தியிருக்க முடியும்.ஆனால் மு.கா அவை பற்றி எண்ணவில்லை.

ஜனாதிபதியுடன் கிழக்கு மாகாண சபையின் ஆட்சி அதிகாரம் பற்றி முஸ்லிம் காங்கிரஸின் தலைமைத்துவம் மற்றும் முக்கியஸ்தர்கள் பேசியபோது முஸ்லிம் சமூகத்தின் சார்பாக எத்தகைய கோரிக்கைகளை முன் வைத்தார்கள் என்பது இரகசியமாகவே இருந்து வருகின்றது. முஸ்லிம் சமூகத்தின் காணிப் பிரச்சினைகள், மீள் குடியேற்றம், போன்ற விடங்கள் ஆராயப்படவில்லை என்பதே முஸ்லிம் காங்கிரஸின் ஆதரவாளர்களில் பெரும் பான்மையானவர்களின் அபிப்பிராயமாக இருக்கின்றது.

மத்திய அரசில் அமைச்சுப் பதவிகள், கிழக்கு மாகாண சபையில் முதலமைச்சர் பதவியும் மற்றுமொரு அமைச்சுப் பதவியைப் பற்றியும் மட்டுமே பேசப்பட்டுள்ளன. முதலமைச்சர் பதவியை வழங்கினால் மத்திய அரசில் ஒரு அமைச்சுப் பதவியும், ஒரு பிரதி அமைச்சர் பதவியும் வழங்கப்படும்; மத்திய அரசில் இரண்டு அமைச்சர் பதவிகளும், மூன்று பிரதியமைச்சர் பதவிகளும் வழங்குவதாக இருந்தால், மாகாண சபையில் முதலமைச்சர் பதவிக்குப் பதிலாக இரண்டு அமைச்சர் பதவிகள் வழங்கப்படுமென்று ஜனாதிபதி தெரிவித்ததாகவும் கூறப்படுகின்றது.

தற்போது கிழக்கு மாகாண சபையின் முதலமைச்சராக நஜீப் அப்துல் மஜீத் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வேட்பாளராகப் போட்டியிட்டார். இவருக்கு முதல் இரண்டரை வருடங்களும், மீதி இரண்டரை வருடங்களை முஸ்லிம் காங்கிரஸுக்கும் வழங்குதவற்கு ஜனாதிபதி உறுதியளித்துள்ளார் என ஹக்கீம் தெரிவித்துள்ளார். விழுந்தாலும் மீசையில் மண் படவில்லை என்பதாகவோ ஹக்கீமின் இந்தக் கூற்று அமைந்துள்ளது.

இரண்டரை வருடங்களின் பின்னர் மு.காவுக்கு அது கிடைக்குமென்று எந்த உத்தரவாதமும் இல்லை. அரசு தம்மைப் போடுகாயாகவே வைத்துள்ளதென்று தேர்தல் காலங்களில் முழங்கிய குற்றச்சாட்டுகள் எப்படி கிழக்கு மாகாணத்தில் இணைந்து ஆட்சியமைத்துக் கொண்டதன் பின்னர் இல்லாமல் போனது என்பதை ஹக்கீமிடம்தான் கேட்கவேண்டும்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு முஸ்லிம் காங்கிரஸுக்கு முதலமைச்சர் பதவியை வழங்குவதாக பகிரங்கமாக அழைப்பு விடுத்த போதிலும், அதனை ஏற்றுக் கொள்ளாது அரசுடன் பேசிக் கொண்டிருந்த முஸ்லிம் காங்கிரஸின் தலைமை அவசரப்பட்டு முடிவை எடுக்க முடியாதென்று கடந்த 18 ஆம் திகதி கூறிவிட்டு மறுநாள் அரசுடன் இணைந்து கொண்டதை அவசரப்படாத முடிவு என்று சொல்ல முடியுமா?

அரசுடன் இணைவதற்கு முன்னர் என்னென்ன் விடயங்களைப் பற்றிப் பேசினோம், அரசு குறிபிட்ட சில விடயங்களை செய்வதற்கு உறுதியளித்துள்ளது, அதற்கான உடன்படிக்கையில் எப்படிக் கைச்சாத்திட்டுள்ளோம் என்று ஒரு வார்த்தையேனும் கூறுவதற்கு முஸ்லிம் காங்கிரஸால் முடியவில்லை.

தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸை மரச் சின்னத்தில் போட்டியிடச் செய்வதில் பெரும் பங்காற்றிய ஹஸன் அலி போன்றவர்களும் முதலமைச்சர் விடயத்தில் கோட்டை விட்டிருப்பது கட்சியின் ஆதரவாளர்களைக் கடும் விசனமடைய வைத்துள்ளது. முஸ்லிம் காங்கிரஸ் கிழக்கில் அரசுக்கு ஆதரவு அளித்த 18 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை ஜனாதிபதியைத் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் சந்தித்தார். அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களுக்கு தமிழ் மொழி மூல அரச அதிபர்களை நியமிக்கவேண்டுமென்றும், சம்பூர், வலிகாமம் பிரதேசங்களில் மீள்குடியேற்றம் பற்றியும் அவர் ஜனாதிபதியிடம் பேசியுள்ளார்.

கிழக்கு மாகாணத்தில் உள்ள மக்கள் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனுக்கு இருக்கும் அக்கறைகூட அமைச்சர் ஹக்கீமுக்கு இல்லாமல் போனது ஏன் என கிழக்கு பல்கலைக்கழக விரிவுரையாளர் ஒருவர் கேள்வி எழுப்பியிருக்கிறார்.

இதிலிருந்து தனது சுயலாபங்களுக்காகவே ஹக்கீம் செயற்படுகிறார், கட்சி மற்றும் மக்கள் பற்றி அவருக்கு அக்கறை இல்லை என்பதைப் புரிந்துகொள்ளாமல் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கிழக்கு மாகாணத்தில் ஆட்சியமைப்பது தொடர்பில் மு.கா. மேற்கொண்ட தீர்மானம் முற்றிலும் தவறானது என்று ஒட்டுமொத்த முஸ்லிம் சமூகமும் குற்றம்சாட்டும் அளவுக்கு ஹக்கீமின் செயற்பாடு அமைந்துள்ளது. இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விடுத்த அழைப்பையும் அவர் உதாசீனம் செய்தமை பெரும்பாலான முஸ்லிம் மக்களை மேலும் சினத்துக்குள்ளாக்கியுள்ளது.

அத்துடன் இனப்பிரச்சினை தொடர்பில் மு.காவுடன் இணைந்து செயற்பட எண்ணியிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எண்ணத்தையும் அது தவிடுபொடியாக்கியிருக்கிறது.

இதற்கெல்லாம் காரண கர்த்தாவாக இருப்பவர் மு.காவின் தலைவர் ஹக்கீம்தான். இந்த நெருக்கடி நிலையை இனிமேல் அவர் எப்படி எதிர் கொள்ளப் போகிறார் என்பது அடுத்துள்ள எதிர்பார்ப்பு.

**அரசுடன் இவ்வாறு விலை போனதை விட தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து கொண்டு அவர்கள் வழங்கவிருந்த முதலமைச்சர் பதவியை மு.கா. ஏற்றிருந்தால் அது மு.கா. முஸ்லிம் மக்களுக்குச் செய்த அதிசிறந்த- வரலாற்றுப் பதிவுடைய ஒரு நிகழ்வாக இருந்திருக்கும் என்பதுடன் இலங்கை அரசியல் வரலாற்றில் சிறுபான்மையினரான தமிழ், முஸ்லிம் மக்கள் இணைந்து தமது உரிமைகளை வென்றெடுக்கக் கிடைத்த ஆயுதமாகவும் அதனைப் பயன்படுத்தியிருக்க முடியும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விதி தவறினால் வெல்ல முடியாது

விஷ்ணு

சட்டம், விதிமுறைகள், ஒழுங்கு விதிகள், கொள்கைகள் என்பன உரிய முறையில் பின்பற்றப்படும்போது அல்லது நடைமுறைப்படுத்தப்படும்போது இவற்றுடன் தொடர்புடைய பல்வேறு பிரச்சினைகளுக்கும் தீர்வு கிடைக்கும். இவை எப்பொழுதெல்லாம் பின்பற்றப்படாமல் விடப்படுகின்றனவோ, அல்லது நடைமுறைப்படுத்தப்படாமல் விடப்படுகின்றனவோ அல்லது மீறப்படுகின்றனவோ அப்பொழுதெல்லாம் ஏற்படும் துர்விளைவுகளில் இழப்புக்களைத் தவிர்க்க முடியாது போய்விடும்.

தற்போது உரிய நிலையை அடையத் தவறியுள்ள இவற்றில் விதிமுறைகள் எனும் வகையில் உள்ளடங்கும் போக்குவரத்து விதிமுறைகள், செயல்வடிவம் பெறுவதில் இன்னும் எவ்வளவோ முன்னேற வேண்டிய நிலையே காணப்படுகிறது.

விதிமுறைகளைப் பின்பற்றும் தரப்பு, இவற்றை நடைமுறைப்படுத்தப் பொறுப்புடைய தரப்பு இரண்டும் தமது பொறுப்பை முழுமையாகச் செயற்படுத்தவில்லை.

வடக்கில் தற்போது போக்குவரத்து நெரிசல் நகரை அண்மித்த பகுதிகளில் அதிகமாகிவிட்டது. வடக்கிலுள்ளவர்கள் நாகரிக முன்னேற்றம், அந்நிய நாட்டிலிருந்து வரும் பணம், தேவைப்பாடு எனப் பல காரணங்களால் வாகனங்களைக் கொள்வனவு செய்வது அதிகரித்து விட்டது. சொகுசு வாகனங்களின் கொள்வனவு அதிகரித்து விட்ட அதேவேளை, மோட்டார் சைக்கிள் பாவனை மக்களின் அடிப்படைத் தேவைகளில் ஒன்றாக உள்ளது.

வடக்கிலுள்ள மாவட்டங்களில் யாழ்ப்பாணத்திலேயே அதிக மோட்டார் சைக்கிள்கள் விற்பனையாகின்றன என்பதும் மறுப்பதற்கு இல்லை. இவை வீதிகளில் போட்டிபோடுகின்றன. கண்ணில் தென்படும் இவை கண் இமைக்கும் நேரத்தில் மாயமாகிவிடுகின்றன.

தற்போது வடக்கிலுள்ள வீதிகள் காப்பெற் வீதிகளாக உருமாற்றமடைந்து கொண்டிருப்பது மோட்டார் சைக்கிளில் சவாரி செய்பவர்களுக்கு மிக்க மகிழ்ச்சியான விடயமாக இருக்கும்.

தவிர தென்பகுதியிலிருந்து நாளாந்தம் நூற்றுக்கணக்கான வாகனங்கள் வடபகுதிக்கு வந்து செல்கின்றன. இந்த இரண்டு காரணங்களாலும் வீதிகள் வாகனங்களால் நிறைந்துள்ளன.

சகல வீதிப்பாவனையாளர்களும் பெறுமதி மிக்க வீதிப்பரப்பின் பாவனைக்கும் அதன் பாதுகாப்புக்கும் உதவும் முகமாகவே, அரசால் ஒழுங்கு விதிமுறைகள் உருவாக்கப்பட்டு அவற்றை உரிய முறையில் கடைப்பிடிக்கும்படி வீதிப் பாவனையாளர்கள் கோரப்படுகின்றனர்.

இந்த விதிமுறைகளைப் பின்பற்றி வீதிப் பாவனையாளர்களிடமிருந்து ஒத்துழைப்பை வேண்டி நிற்கின்றமை வீதிப் பாவனையாளர்களது நலனுக்காகவே என்பதனை வீதிப்பாவனையாளர்கள் ஒவ்வொருவரும் மனதில் ஆழமாகப் பதிக்க வேண்டும்.

வீதிப்பாவனையாளர் எனும்போது தனியே பஸ்சாரதிகளோ, மோட்டார் சைக்கிள் ஓட்டுபவர்களோ, ஏனைய வாகன சாரதிகளோ மட்டுமல்லர். சைக்கிளில் செல்பவர்கள், பாதசாரிகள் என அனைவரையும் உள்ளடக்கியே கூறப்படுகிறது. இவர்கள் ஒவ்வொருவரும் எவ்வாறு விதிமுறைகளைப் பின்பற்றி நடக்கின்றனர் என்பதில்தான் மற்றைய ஒவ்வொருவரது பாதுகாப்பும், நலனும் உறுதிப்படுத்தப்படுகிறது.

தற்போது வீதிகளில் பாதசாரிகள் போக்குவரத்து விதிமுறைகளைப் பின்பற்றுவது என்பது மிக அரிதான விடயமாகின்றது. யாராவது ஒருவராவது விதிமுறைகளைப் பின்பற்றுகிறார்கள் என்று கூறமுடியாத அளவுக்கு இங்கு நிலைமை உள்ளது.

போக்குவரத்து விதிமுறைகளை மீறுகின்றனர் என்ற ரீதியில் முக்கியமாக பாதசாரிகள் விடயம் கவனத்தில் கொள்ளப்பட்டு அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. கடந்த மாதம் இது குறித்த தகவல் வெளியானவுடன், தொடர்ந்து மூன்று நாள்கள் நகரின் முக்கிய சந்திகளில் பாதசாரிகள் வீதியைக் கடப்பதைக் கண்காணித்தவாறு போக்குவரத்துப் பிரிவுப் பொலிஸார் கடமையில் இருந்தனர்.

அதனால் மஞ்சள் கோடு அருகாக இருந்தும் அதன் மூலமாக வீதியைக்கடக்காது ஏனைய பகுதியினூடாக வீதியைக் கடந்தவர்களுக்கு எதிராக பொலிஸார் நடவடிக்கை எடுத்திருந்தனர்.

இது அந்தப் பாதசாரிகளுக்குத் தலையிடியைக் கொடுத்திருந்தாலும் பலரது நலன் கருதியதாகவும், வரவேற்கப்பட்ட தொன்றாக இருந்தது. ஆனால் அந்த வரவேற்பு அந்த மூன்று நாள்களுக்கு மட்டுமே இருந்தது. நான்காவது நாளிலிருந்து இன்று வரை அந்த இடத்தில் விதிமுறைகளை நடைமுறைப்படுத்தும், வலியுறுத்தும் பொலிஸாரைக் காணமுடிவதில்லை.

பாதசாரி விதிமுறையை மீறியவர்களுக்கு பொலிஸார் மூன்று நாள்களும் நடவடிக்கை எடுத்தமை நல்லவிடயம். ஏனெனில் விதிமுறை தெரிந்திருந்தும் அதன் முக்கியத்துவத்தை உணர்ந்திராத பலர் பின்னர் அதனை உணர்ந்து கொண்டனர். இந்த விடயத்தில் ஒரு முறை தவறிழைத்தவர் மீண்டும் தவறிழைக்கவோ, கவனயீனமாகச் செல்லவோ முற்படமாட்டார்கள் என்பது நிச்சயம்.

பாதசாரிகள் வீதியால் செல்லும் போது விதிமுறைகளைச் சிறிதேனும் பின்பற்றுகிறார்களில்லை. ஏனைய வாகன, மோட்டார் சைக்கிள் சாரதிகளும் இதில் உள்ளடங்குவர். ஏதாவது ஒருவகையில் அநேகர் விதிமுறைகளை மீறிவிடும் நிலை காணப்படுகிறது. ஒவ்வொரு நாளும் தவறாது விபத்து நிகழ்ந்து கொண்டே இருக்கிறது. அநேகர் அரச வைத்தியசாலைகளிலும் சிலர் தனியார் வைத்தியசாலைகளிலும் சிகிச்சை பெற்றுச் செல்கின்றனர். தவிர விபத்தால் ஏற்பட்ட உடற்காயம் சிறியது சாதாரணமானதாக இருக்கலாம். காயம் ஏற்படாமலும் இருக்கலாம். ஆனால் விபத்தினால் வாகனம் கடுமையாகச் சேதத்துக்கு உள்ளாகின்றமை அதனால் ஏற்படும் நட்டம் என்பன ஈடுசெய்ய முடியாததாய் இருக்கும். பெரிய முதலீட்டு இழப்பை எதிர்கொள்ள வேண்டியேற்படும். நீங்கள் விதிமுறைகளைப் பின்பற்றி மிக அவதானமாக வாகனம் செலுத்துபவராக இருந்தாலும் உங்களை முந்திச் செல்பவர் அல்லது எதிரே வருபவர் பயிற்சி பெற்றிராது முரட்டுத்தனமாக வாகனம் செலுத்திவரலாம். அவரும் உங்களை மோதி விடலாம். பின்னர் தலைமறைவாகி விடலாம். இவற்றையும் நீங்கள் கவனத்தில் கொள்ளுங்கள்.

வடக்கில் தென்பகுதி வாகனங்கள் உரிய விதிமுறைகளைப் பின்பற்றுவதில்லை என்றும், அதிலும் அரச அதிகாரிகளது வாகனங்கள் சிலவும் விதிமுறைகளை மீறிவிடுகின்றன என்றும் கருத்துக்கள் உள்ளன. அவர்கள் எதுவித பயமும் இல்லாது பொலிஸாரினது தலையீடும் இருக்காது என்ற நம்பிக்கையிலோ என்னவோ இருக்கிறார்கள் போலும் என்றும் பாதிக்கப்படுபவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

விதிமுறைகளைப் பின்பற்ற முக்கிய சந்திகளில் பொலிஸாரின் கண்காணிப்பு தீவிரமாக்கப்படல் வேண்டும். குறிப்பாக காலை, மாலை நேரங்களில் கட்டாயம் பொலிஸார் சந்திகளில் கடமையில் இருத்தல் வேண்டும். அவர்களது அறிவுறுத்தலும், சட்ட நடவடிக்கையும் எதிர்காலத்தில் இங்கு போக்குவரத்து விதிமுறைகளை உரிய முறையில் அனைவரும் பின்பற்றக் கூடியதாக இருத்தல் வேண்டும். மீறுபவர்கள் நீதிமன்றங்களில் முற்படுத்தப்படல் வேண்டும். தண்டிக்கப்படுவது பற்றி ஊடகங்களில் செய்தி வெளியாக வேண்டும். செய்திகளைப் படித்தாவது என்றாலும் விதிமுறைகளைப் பின்பற்ற, தூண்ட வழிகுக்க வேண்டும். அறிவுறுத்தப்பட வேண்டும்.

இங்கு முக்கியமாக கவனிக்கப்பட வேண்டிய விடயம் போக்குவரத்து விதிமுறைகள், அடையாளங்கள், அறிவுறுத்தல்கள், உரிய இடங்களில் உரிய முறையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளனவா? அமைக்கப்பட்டுள்ளனவா? என்பதே.

நகர்ப்புறங்களிலும் வீதிகளிலும் வீதியைக் கடப்பதற்காக மஞ்சள்கோடு அமைக்கப்படவில்லை. வீதியின் எந்த இடத்தால் வீதியைக் கடப்பது என்பது தெரியாத பாதசாரிகள் தாம் நினைத்தபடி நடக்க முற்படும் போதே பல நேரங்களில் தம்மை அறியாமலே விதிமுறைகளை மீற முற்பட வேண்டியவர்களாகின்றனர். அறிவுறுத்தல்களைக் காட்சிப்படுத்த வேண்டிய அதிகாரிகள் இதற்குப் பொறுப்புக் கூற வேண்டியவர்கள்.

இதை விடுத்து பொதுமக்கள் விதிமுறைகளை மீறுகிறார்கள் என்று எந்த ஆதாரத்தில், எந்த அடிப்படையில் பொலிஸர் பொதுமக்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பது? வீதிக்குறியீடுகளை உடனடியாக அமைக்க உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். பொலிஸார் தமது கண்காணிப்பைத் தீவிரப்படுத்த வேண்டும்.

# மொழிக் கொள்கை அவசியம்

சோபனா

தமிழர்களின் உரிமைகள் இலங்கை அரசால் எந்தளவுக்கு சூறையாடப்படுகின்றன என்பதற்கு எடுத்துக்காட்டாக வடக்கு, கிழக்கில் மக்கள் பேசும் தமிழ் மொழிப் பயன்பாட்டில் ஏற்படுகின்ற பிறழ்வு நடவடிக்கைகள் அமைந்துள்ளன.

தமிழர்களின் மொழி உரிமையாகவும், அரச கரும மொழியாகவும், செந்தமிழ் எனவும் போற்றப்படும் தமிழ் மொழி உள்ளபோதும் இதனை அங்கீகரிக்கப்பட்ட ஒரு மொழியாக உலக நாடுகளுக்கோ ஏனைய இனமொழியை சார்ந்தவர்களுக்கோ எடுத்துக் கூற இலங்கை அரசு இடம்கொடுக்கவில்லை.

தமிழர்களை அடக்கி ஒடுக்குவதற்குப் போரை ஆயுதமாகப் பயன்படுத்தி இன அழிப்பை சுமுகமாக மேற்கொண்ட இலங்கை அரசு தற்போது எஞ்சியுள்ள மக்களின் மொழி உரிமையையும் சுதந்திரமாகப் பெற்றுக் கொள்ள ஏற்ற தருணங்களை வழங்காமல் ஆட்சியின் அடக்கு முறைக்குள் பெரும்பான்மை இன மொழியைப் புகுத்தும் கைங்கரியங்களை மேற்கொண்டு வருகிறது.

சிங்கள மொழி பேசும் இனத்தவர்கள் கூட தமிழ் உரிமைக்காக குரல் கொடுக்கும் தருணத்தில் அவர்களின் கோஷங்களைத் தட்டிக் கழிப்பதிலேயே குறியாக உள்ளது.

இலங்கை அரசின் ஆட்சி முறையில் அங்கீகரிக்கப்பட்ட அரச கரும மொழியாக சிங்களம், தமிழ் ஆகிய இரு மொழிகளும் பகிரங்கமான முறையில் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. இருந்த போதும் முதன்மை மொழியாக சிங்கள மொழியையும் இரண்டாம் மொழியாக ஆங்கில மொழியையும் நிலைநிறுத்தும் செயற்பாடுகளே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

குறிப்பாக வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தமிழர்கள் அதிகம் வதியும் இடங்கள் எனத் தெரிந்தும் இந்த மாகாணங்களில் தமிழ் மொழியை அடக்கி ஏனைய பிற மொழிகளைப் புகுத்திக் கொண்டிருக்கின்றனர்.

அரச கரும பீடங்களில் சிங்கள மொழியைப் பேசக் கூடிய (தமிழைக் கொச்சையாகப் பேசக் கூடிய) அரச உத்தியோகத்தர்கள் பலர் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டு மக்கள் மத்தியில் சலனத்தை உண்டு பண்ணும் ஒரு செயலை அரசு மேற்கொண்டு வருவதாகவும் துறை சார்ந்த அதிகாரிகள் சுட்டிக்காட்டாமல் இல்லை.

ஆனால் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் முக்கியமாக தமிழ் மொழி பயன்படக் கூடிய தேவை அதிகமாக இருப்பதால் சாதாரண மக்களில் இருந்து பட்டம் பெற்ற பல்துறை மேதைகளுக்கும் இது பாதிப்பை உண்டு பண்ணுவதாகவே அமையும். மக்கள் தங்கள் தேவைகளை நிறைவேற்றச் செல்லும் இடங்களில் மொழிப் பயன்பாடு ரீதியாக எதிர்கொள்ளும் இடர்பாடுகள், அசௌகரியங்கள் கருத்தில் கொள்ளப்படவில்லை.

மும்மொழிச் செயற்றிட்டம் எனும் தொனிப் பொருளில் அரச உத்தியோகத்தர்களுக்கு முதற்கட்டமாக சிங்கள மொழியைத் திணிக்கும் அரசு தமிழ் மொழிப் பயன்பாட்டைக் கருத்தில் கொள்ளாதது ஏன்? அரச உத்தியோகத்தர்கள் மக்களுக்கு சேவை செய்ய பணிக்கப்பட்டவர்கள். ஆனால், மொழிப் பயன்பாட்டால் விழி பிதுங்கி நிற்கும் வேற்று மொழி அரச உத்தியோகத்தர்களால் மக்கள் எவ்வாறு நன்மை அடைய முடியும்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இடம் பெறும் மொழித் திணிப்பு நடவடிக்கைகளுக்கு இது எடுத்துக்காட்டு. அரசு தனது சுய ஆட்சியில் எழுந்தமானமான நடைமுறைகளை மேற்கொள்வது இன ரீதியில் விரிசலை ஏற்படுத்தும் என்பதை ஏன் கருத்தில் கொள்ளவில்லை. தனது கட்டுப்பாட்டுக்குள் தமிழர்களை அடக்கி ஒடுக்கி பெரும்பான்மை இனமாக சிங்களவர்களை பிரகடனப்படுத்தி திட்டமிட்டு தமிழர்களின் உரிமைகளை கொஞ்சம் கொஞ்சமாகப் பறித்தெடுத்துக் கொண்டிருக்கின்றது.

இதற்கு வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கிராம ரீதியாக மொழிச் சங்கங்கள் உருவாக்கப்பட வேண்டும். இந்த மொழிச் சங்கங்கள் ஊடாக சாதாரண மக்களுக்கும் அறிவுறுத்தல் வழங்கப்பட வேண்டும். தமக்கான உரிமைகள் எவை என்பதை அவர்கள் உணரக் கூடிய வகையில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும். இதற்குத் துறை சார்ந்த அதிகாரிகள் முன்னேற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மும்மொழி தொடர்பான கருத்தமர்வுகளில் இதுபோன்ற பல விடயங்கள் அலசி ஆராயப்பட்டன.

இந்த நிலையத்தை தலைமைத்துவம் செய்யும் அதிகாரிகள் சிங்கள மொழி இனத்தைச் சார்ந்தவர்கள். மொழி உரிமைகள் தொடர்பாகச் சட்டக் கொள்கைகளுடன் செயற்பாடுகளை முன்னெடுக்கும் இவர்களுக்கு ஏற்பட்ட துணிவு தமிழர்களாகிய எமக்கு எமது மொழியைப் பாதுகாப்பதில் ஏன் வரவில்லை.

தென்னிலங்கையைச் சேர்ந்தவர்கள் மொழிப் பிறழ்வு நடவடிக்கைகளைச் சுட்டிக்காட்டி நீதிமன்றங்களை நாடும் போது வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வதியும் தமிழர்கள் தமது மொழி உரிமையை விட்டுக் கொடுக்காமல் அதை நிலையாகத் தக்க வைக்க உறுதிகொள்ள வேண்டும்.


தமிழர்களின் இன அழிப்பு முடிவடைந்து மொழி உரிமையும் பறிக்கப்பட்டால் வேறு என்ன மீதியாக இருக்கப் போகிறது. இதை ஏன் நாம் உணர மறுக்கின்றோம்?.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யார் இவர்கள்.....?












முல்லைத்தீவு மாவட்டம் கோப்பாபிலவு மக்களை மீளக்குடியமர்த்துமாறு கோரி கடந்த வெள்ளிக்கிழமை முல்லைச் செயலகத்தின் முன்பாக தமிழ்த் தேசிய முன்னணி சார்பில் போராட்டம் நடத்தப்பட்டது. ஆர்ப்பாட்டம் செய்தவர்கள் கலைந்துபோன 5 நிமிடங்களில் 25 இளைஞர்கள் அந்த இடத்தில்கூடி ஆர்ப்பாட்டக்காரர்களை நோக்கி கூச்சலிட்டும் விசில் அடித்தும் நையாண்டி செய்தார்கள். கொச்சைத் தமிழில் எழுதப்பட்ட சுலோக அட்டைகளையும் வைத்திருந்தார்கள். அங்கிருந்த மக்களைக் கேட்டால் அவர்களில் பலரைச் சீருடையுடன் சந்திக்குச் சந்தி தாங்கள் கண்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அவர்களை அணுகி தமிழில் கதைத்தபோது அவர்களால் பதில் சொல்லவும் முடிந்திருக்கவில்லை. சில நிமிடங்களின் பின்னர் அவர்கள் அங்கிருந்து கலைந்தார்கள். இந்த முகங்களில் எதையாவது எங்காவது நீங்கள் பார்த்திருந்தால் உதயனுடன் தொடர்புகொண்டு அவர்களை அடையாளப்படுத்துங்கள். அந்தச் சுலோக அட்டைகளில் இருந்தவற்றை உதயன் மிகச் சிரமப்பட்டு தமிழ்ப் படுத்தியிருக்கிறது; இவை இப்படித்தான் இருந்திருக்கக்கூடும் என்ற வகையில்.



''முலதிவு பதேசத் ராணுவத்திக்கு இருக்கு விடுங்க''
(முல்லைத்தீவுப் பிரதேசத்தில் இராணுவத்தை இருக்க விடுங்கள்.)
''காசுக்கு சேகிர போரற்றக்த்கு நம்முடய விரோதம்''
(காசுக்காகச் செய்கிற போராட்டம் நமக்கு (தமிழர்களுக்கு) விரோத மானது.)
''கொலம்பத வன்த போராற்றம் நமக்கு வேன்டாம்''
(கொழும்பிலிருந்து வந்தவர்களின் போராட்டம் எமக்கு வேண்டாம்.)
''போராற்றம எனக்கு வேன்டாம்''
(போராட்டம் எனக்கு வேண்டாம்.)



''பொய் போராற்றம், முலத்திய நம்முடய போராற்றம்''
(முல்லைத்தீவில் நடத்திய போராட்டம், பொய்ப் போராட்டம்.)




## தீர்ந்து... (சூரியகாந்தி முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டர்கள் போல முக்காடிட்டு அதிகாரத்தவர்கள் சென்றாலும் கூட முகர்ந்து மோப்பம் பிடித்து சட்டென எரியத் தொடங்கும் ஆர்ப்பாட்ட நெருப்புகள் பற்றிய கனவுகளே அடிக்கடி மஹிந்தரின் தூக்கத்தைக் கெடுக்கத் தொடங்கின.

''பரதேசம் போனால் தானே பற்றியெரிவார்களின் பிரச்சினை பேசாமல் ஒரு நடை பாரதத்துக்கு போய்விட்டு வருவோம்''

சாஞ்சிக்கு செல்ல நினைத்தவரை வாசலிலேயே தடுத்தது விஜயராஜ் என்ற மனித நெருப்பு. இவனின் பெயரும் சிங்களத்தில் மூதாதையரின் பெயர்தான். இவனின் சாவு நியாயப்படுத்தப்பட முடியாததுதான். எனினும் இவனின் உயிராயுதம் தட்டிக்கழிக்கப்படக் கூடியதுமல்ல. தன்னால் ஒரு சர்வாதிகாரத்தின் வருகையை நிறுத்த என்ன செய்ய முடியுமோ அதை தனக்குத் தெரிந்த வழியில் செய்ய முயற்சித்தான் விஜயராஜ். தீ மென்று துப்பிய அவனை வெந்த இறைச்சியாக அள்ளிக்கொண்டு வைத்தியசாலைக்கு ஓடினார்கள்.

இதற்கு முன்னரும் தீ ஆயுதங்களாக உணர்வுள்ள தமிழ் இளைஞர்கள் தமிழகத்தில் வெந்து மடிந்திருக்கிறார்கள். ஆனால் அவர்களின் போராட்டத்தை கொச்சைப்படுத்த, ''மன நலம் பாதிக்கப்பட்டவர்'', ''காதலில் தோல்வி'', ''பணத்துக்காக உயிரை விட்டவர்'' என்ற பட்டங்கள் பறக்கவிடப்பட்டிருந்தன. அவ்வாறு முத்துக்குமார், செங்கொடி போன்றோரின் தீயாலான தியாகங்கள் மீது வீணர்களால் போர்த்தப்பட்ட கரும்புள்ளிகள் தன் மீதும் தனது போராட்டத்தின் குறிக்கோள் மீதும் குத்தப்பட்டு விடக்கூடாது என்பதில் விஜயராஜ் குறியாக இருந்தான்.

வைத்தியர்கள் தடுத்தும் கூட அதை பொருட்படுத்தாமல், தன்னுடைய போராட்டத்தின் நோக்கத்தை ஊடகங்கள் மூலம் உரத்துச் சொல்லிவிட்டே உயிரைத் துறந்தான்.

இனியும் நிறையத் தேசங்கள் இருக்கின்றன. அங்கும் அதிகாரத்தின் பயணங்கள் நிகழும் போதெல்லாம் அவர்களின் பாதங்களைச் சுட்டெரிக்க ஆயிரமாயிரம் சூரியன்களின் வலவோடு போராட்ட நெருப்புகள் காத்திருக்கின்றன. அதற்காக தீக் குளிப்பது மட்டும் தான் எதிர்ப்பாகாது. இலட்சியத் தீயை மனதில் கொண்டு ஒன்றிணைந்து குரல் எழுப்புதல் கூட தீக் குளிப்பை விட சர்வ வல்லமை பொருந்திய ஆயுதமாக மாறிவிடலாம். எகிப்து, டுனிசியா நாடுகளில் எரிந்த கலவரத் தீ போன்று இங்கும் எழுந்தால் அதிகாரம் பொசுங்கிப் போய்விடும்.

நெருப்பாகி,
நெருப்பாகி,
நெருப்பாகி நிமிர்வோம். ★

# வசைத் தமிழ்...

(சூரியகாந்தி 04 ஆம் பக்கத் தொடர்ச்சி)

செய்யாவிட்டால் அந்த அரசுக்கு அளிக்கிற ஆதரவைத் திரும்பப் பெறுவோம் எனக்கூறி இருந்தாலே போதும்; இந்திய அரசுக்கு வேறு வழி இருந்திருக்க முடியாது. ஆனால், அவ்வாறு செய்ய கருணாநிதி துணிய வில்லை.

'டெசோ' மாநாட்டிற்கு காவல்துறை தடை விதித்ததையும் அதை எதிர்த்து உயர்நீதிமன்றத்தில் அனுமதி பெற்றதையும் பெரும் சாதனையாகவும், அ.தி.மு.க. அரசின் ஜனநாயக விரோதப் போக்கிற்கு எடுத்துக் காட்டாகவும் கருணாநிதி சுட்டிக்காட்டியிருக்கிறார். மாநாட்டிற்கு தடைவிதிக்கப்பட்டது தவறு என நான் கண்டித்து அறிக்கை வெளியிட்டிருக்கிறேன். அந்த சனநாயக விரோத நடவடிக்கையை நான் ஆதரிக்க வில்லை. ஆனால் அதைக்கூறும் தகுதி கருணாநிதிக்கு இல்லை. ஏன் என்றால் நாங்கள் நடத்த இருந்த 8 இற்கும் மேற் பட்ட தமிழீழ ஆதரவு மாநாடுகளுக்குத் தடைவிதித்தவர் கருணாநிதியே. உயர் நீதிமன்றத்தில் நீதியை நிலைநிறுத்தி அதற்குப் பிறகுதான் அந்த மாநாடுகளை நடத்தினோம்.

1985இல் நான் ரகசியமாக இலங்கைக்கு செல்ல முன்னர் டெசோவின் அவசியம் பற்றி அவருக்கு விளக்கியிருந்தேன். ஆனால், இவர் என்ன செய்தார்? எனக்கும் வீரமணிக்கும் தெரியாமல் 'டெசோ' இயக்கம் இனி செயல்படாது என அறிவித்துவிட்டு ஒதுங்கிக்கொண்டார். அப்போது ஏன் அவ்வாறு செய்தார்? இப்போது ஏன் மீண்டும் 'டெசோ'வைத் தூக்கிப் பிடிக்கிறார்? என்பதற்குரிய விளக்கத்தை இதுவரை அவர் கூறவில்லை.

ஈழத் தமிழர்களுக்காக ஆதரவாகப் பேசுபவர்கள், எழுதுபவர்கள், செயற்படுபவர்கள் மீது பொய்யான வழக்குகளைத் தொடுத்துக் கைது செய்தவர். பல தோழர்கள்மீது தேசியப் பாதுகாப்புச் சட்டம் ஏவப் பட்டது. ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாகப் பேசப்படும் கூட்டங்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டது. கூட்டங்களுக்கு இடமளிக்கக்கூடாது என மண்டப உரிமையாளர்களை காவல்துறை மிரட்டியது. சுவரொட்டிகள், துண்டறிக்கைகள் ஆகியவற்றை அச்சிடக் கூடாது என அச்சகங்கள் பயமுறுத்தப்பட்டன. மொத்தத்தில் தமிழ் நாட்டில் அறிவிக்கப்படாத அவசரநிலை இவர் முதலமைச்சராக இருந்த காலத்தில் நிலவியது.

23-4-2009இல் ஒரு நாள் கடை அடைப்பும் வேலை நிறுத்தமும் செய்ததைச் சுட்டிக்காட்டியிருக்கிறார். ஆனால் அதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்பு 04-2-2009 அன்று இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கத்தின் சார்பில் வேலை நிறுத்தமும் கடை அடைப்பும் நடத்த நாங்கள் முற்பட்டபோது தலைமைச் செயலாளரை விட்டு அது சட்ட விரோதம் என அறிவிக்கச் செய்தார். அது மட்டுமல்ல இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கத் தலைவர்கள் அனைவருக்கும் சட்ட விரோத நடவடிக்கையில் ஈடுபடுவதாக எச்சரிக்கை அறிவிப்பு கொடுக்க வைத்தார். அவரின் இந்த கெடுபிடிகளை எல்லாம் மீறித்தான் நாங்கள் அந்தக் கடையடைப்புப் போராட்டத்தை வெற்றிகரமாக நடத்தினோம். எதைச் சட்டவிரோதம் எனக் கூறினாரோ அதே கடையடைப்புப் போராட்டத்தை இவரும் நடத்த நேர்ந்தது.

''பிரணாப்பை நம்பித்தான் நான் உண்ணா விரதத்தை நிறுத்தினேன்'' என இப்போது புலம்புகிற கருணாநிதி, ஜனாதிபதித் தேர்தலில் பிரணாப் போட்டியிட்டபோது வரிந்துகட்டிக்கொண்டு முதல் ஆளாக அவரை ஆதரித்துக் களத்தில் இறங்கியது ஏன்? இந்த கேள்விக்காவது அவர் பதில் கூறவேண்டும்.

3 ஆண்டுகளுக்கு முன்பு உண்ணாவிரதத்தை முடித்து வைப்ப தற்கு மத்திய அமைச்சர் ப. சிதம்பரம் கூறிய செய்திதான் காரணம் என்று அப்போது கூறினார். ஆனால் 3 ஆண்டுகளுக்குப் பிறகு இப்போது பிரணாப் முகர்ஜியை நம்பித்தான் உண்ணாவிரதத்தை நிறுத்தினேன் என்று புலம்புகிறார். எது உண்மை? இவருக்கு வாக்குறுதி அளித்தது சிதம்பரமா? பிரணாப் முகர்ஜியா? என்ற கேள்விகள் அடுக்கடுக்காக எழுகின்றன. அவற்றுக்கு இதுவரை எந்தப் பதிலையும் அவர் கூற வில்லை.

2009ஆம் ஆண்டு போர் நெருக் கடியான காலகட்டத்தில் போர் நிறுத்தம் குறித்துப் பொய்யான வாக்குறுதிகளையும் செய்திகளையும் கூறித் தமிழக மக்களை கருணாநிதி ஏமாற்றினார் என்பது பின்னர் அம்பலமாகி விட்டது. இப்போதும் அதைப்போல முற்றிலும் உண்மைக்குப் புறம்பான செய்திகளை மக்களிடையே கூறி வருகிறார். அதைச் சுட்டிக்காட்டி கண்டிப்பவர்கள்மீது பாய்கிறார். வசைமாரி பொழிகிறார். பொது வாழ்க்கைக்குப் பொன்விழா கொண் டாடிய மூத்த தலைவர் ஒருவர் தன்னிலை பிறழ்ந்து ஆத்திர வயப்பட்டு வார்த்தைகளை அள்ளிக்கொட்டுவது அவரின் உண்மையான உருவத்தை வெளிப்படுத்தியிருக்கிறது. அவருடைய தொண்டர்கள் அவருக்கு முத்தமிழ் அறிஞர் என்ற பட்டத்தை சூட்டியிருக் கிறார்கள். ஆனால் உண்மையில் வசைத் தமிழ் வல்லவர் என்ற பட்டமே அவருக்கு மிகமிக பொருத்தமானதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர் இன்னும் முடியவில்லை..

**அமெரிக்காவினால் பயங்கரவாதிகள் எனப் பெயரிடப்பட்ட சதாம் ஹுசைன், ஒஸாமா பின்லேடன், முகமது கடாபி போன்றோர் அழிக்கப்பட்டாலும் உலகில் பயங்கரவாதம் முற்றாக ஒழிக்கப்படவில்லை. அதற்கெதிரான போரும் இன்னும் முடியவில்லை.**

எஸ்.திருச்செந்தூரன்,
முதுகலைமாணி மாணவன், சர்வதேச உறவுகள் கற்கைநெறி, கொழும்புப் பல்கலைக்கழகம்.

பயங்கரவாதத்திற்கு எதிரான போர் 2001ஆம் ஆண்டில் அமெரிக்காவால் ஆரம்பிக்கப்பட்டது. நியூயோர்க்கில் நின்றிருந்த இரட்டைக் கோபுரங்களை ஊடறுத்து இரு பயணிகள் விமானங்கள் பாய்ந்ததைத் தொடர்ந்து இந்தப் போர் அறிவிக்கப்பட்டது. ஒரு தசாப்தத்தின் பின்னர் இந்த பயங்கரவாதத்துக்கு எதிரான போரின் நிலை என்ன?

அதாவது செப்.11 தாக்குதலைத் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்ட பயங்கரவாதத்திற்கு எதிரான போர், இந்த ஆண்டுடன் 11 ஆண்டுகளைக் கடக்கிறது. இந்த இடைப்பட்ட காலப் பகுதிக்குள் ஆப்கானிஸ்தானை அமெரிக்கா தலைமையிலான படைகள் ஆக்கிரமித்தன. ஈராக்கை ஆக்கிரமித்தன. சதாமைத் தூக்கிலிட்டன. பின்லேடனைக் கொன்றன. இதன் பின்னரும் இந்தப் போர் தொடர்கிறதா? அதில் அமெரிக்காவின் செயற்பாடுகள் என்ன என்பதே இந்தக் கேள்வியின் விரிந்த அர்த்தமாகும்.

சமகாலத்தில் ஆராயப்பட வேண்டிய ஒரு வினாவாக இது காணப்படுகின்றது. காரணம் அமெரிக்காவின் இத்தகைய போர் எத்தகைய முன்கூட்டிய திட்டமுமின்றி ஆரம்பிக்கப்பட்டு ஒரு தசாப்தத்தைக் கடந்துள்ளது. இதனால் இக்காலப் பகுதியில் இவ்வினாவிற்கு விடை காண்பதனூடாக அமெரிக்கா தற்போது பயங்கரவாதத்திற்கு எதிரான போரில் எத்தகைய நிலைப்பாட்டினைக் கொண்டுள்ளது என்பதனைப் புரிந்து கொள்ள முடிகின்றது.

பயங்கரவாதத்திற்கு எதிரான போரில் அமெரிக்கா வென்றுவிட்டதா? அல்லது தோற்றுவிட்டதா என்பதனைக் கூறமுடியாதுள்ளது. ஆனால் அந்தப் போர் இன்னும் பல ஆண்டுகளுக்குத் தொடரும் என எதிர்வு கூறமுடியும். அத்தோடு பயங்கரவாதத்திற்கு எதிரான போரில் இனிவரும் காலங்களில் அமெரிக்காவின் நேரடிய இராணுவத் தலையீடுகள் குறைக்கப்படும். அதற்குப் பதிலாக ஜனநாயக மயமாக்கல், மனித உரிமைப் பாதுகாப்பு என்ற புதிய வழிமுறைகள் ஊடாக அது நகர்த்தப்படும். அமெரிக்கா அண்மைக் காலமாகத் தனது அடாவடித்தனத்தை நியாயப்படுத்துவதற்காக இத்தகைய காரணங்களில் ஒன்றையே தொடர்ச்சியாகச் சுட்டிக்காட்டி வருகின்றது.

ஒரு தசாப்தத்துக்கு முன்னர் 'பயங்கரவாதத்திற்கு எதிரான போரை அமெரிக்கா அறிவிக்க பல காரணங்கள் காணப்படவே செய்தன. அதில் அப்போதைய ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷின் தனிப்பட்ட தேவையும் உள்ளடங்கும். அதாவது தனது தனிப்பட்ட ஆளுமையை அமெரிக்காவிலும் உலகத்திலும் அவர் வெளிப்படுத்த விரும்பியதால் போரை அவர் தனது முதல் தெரிவுக்குள் கொண்டு வந்தார்.

அமெரிக்க ஜனாதிபதிகளின் வரலாற்றினைப் பின்னோக்கிப் பார்க்கும்போது ஜனாதிபதிகள் ஒவ்வொருவரும் தமது நான்கு ஆண்டு பதவிக் காலத்திற்குள் ஆகக்குறைந்தது ஓரிரு போர்களையாவது நடத்தியிருப்பதைக் காணலாம். இதனை அவர்கள் தமது ஆளுமையின் வெளிப்பாடாக அணுகுகிறார்கள் போலுள்ளது.

போர்களை நடத்தியவர்களே வரலாற்றில் பெயர் குறிப்பிடக் கூடிய ஜனாதிபதிகளாக இருந்துள்ளனர் என்பது கவனத்துக்குரியது. அந்தப் பாணியிலேயே புஷ்ஷும் களத்தில் இறங்கினார். அதற்காக அவர் தேர்ந்தெடுத்தது 'பங்கரவாதத்துக்கு எதிரான போர்'.

இந்தப் போருக்கான மற்றொரு காரணம், அமெரிக்கா எப்பொழுதுமே உலகத் தலைமைத்துவத்தை ஏற்க விரும்புபவது. இதற்காகக் காலத்துக்குக் காலம் அது சில திட்டங்களை முன்னிறுத்தி வந்துள்ளது. எடுத்துக்காட்டாக பனிப்போர்க் காலத்தில் சோசலிசத்துக்கு எதிரான நிலைப்பாட்டை எடுத்து உலக நாடுகளில் தன்னைத் தலைமையாகக் கொண்டு சோசலிச எதிர்ப்பு நாடுகளை அல்லது முதலாளித்துவ ஆதரவு நாடுகளை அணியாக ஒன்று திரட்டியது.

பயங்கரவாதத்துக்கு எதிரான போரிலும் தலைமைத்துவத்தை அமெரிக்காவே ஏற்றது. பின்னர் ஐரோப்பிய, ஆசிய, ஆஸ்திரேலிய நாடுகளைக் கூட்டுச் சேர்த்துக் கொண்டது.

இவை ஒருபுறம் இருக்க, மத்திய கிழக்கின் எண்ணெய் வளத்தைக் கையகப்படுத்தும் நோக்கம், இந்தப் பயங்கரவாதத்துக்கு எதிரான போரில் காத்திரமான பங்கை வகித்தது என்ற உண்மையும் எல்லோருக்கும் தெரிந்ததே. அதாவது எண்ணெய் வளத்தில் பெரும்பாலானவை மத்திய கிழக்கு நாடுகளிலேயே காணப்படுகின்றன. அவை இஸ்லாமிய நாடுகளாகும்.

அமெரிக்கா பயங்கரவாதத்திற்கு எதிரான போர் என்ற அடிப்படையில் தாக்குதலை மேற்கொள்ளப் பட்டியலிட்டுள்ள பயங்கரவாத அமைப்புக்களும் அவற்றுக்கு ஆதரவு வழங்குகின்ற நாடுகளும் பெரும்பாலானவை இப்பிராந்தியத்திலேயே காணப்படுகின்றன. இதன் அடிப்படையையும் அமெரிக்காவே ஏற்படுத்தியது. 1990களில் இஸ்லாமிய அடிப்படைவாதத்துடன் இணைந்த இளைஞர்களுக்கு ஆயுதம் வழங்கி பயிற்சியும் அளித்த ஆயுதக் கலாசாரம் ஒன்றினை இப்பிராந்தியத்தில் தூண்டிவிட்டதும் அமெரிக்காவே தான். அதன் விளைவுகளை இப்போது அது அறுவடை செய்ய ஆரம்பித்துள்ளது. ஜனாதிபதி றேகன் காலத்தில் வெள்ளை மாளிகையில் தங்கி விருந்துண்ட ஒஸாமா பின்லேடன் இன்று உலகப் பயங்கரவாதிகளின் பட்டியலில் முதலாவதாகப் பெயர் குறிப்பிடப்பட்டுக் கடந்த வருடம் சுட்டுக் கொல்லப்பட்டார் என்ற ஒரு உதாரணம் இதற்குப் போதுமானது.

அமெரிக்காவின் மத்திய புலனாய்வுத் துறை ஆண்டுதோறும் சர்வதேசப் பயங்கரவாதப் பட்டியல் ஒன்றை வெளியிட்டு வருகின்றது. கடந்த வருடம் வெளியிடப்பட்ட பட்டியலில் 51 அமைப்புக்கள் இடம்பெற்றிருந்தன. அவற்றில் மிகவும் ஆபத்தானவை என ஹமாஸ், ஹார்த்தி உல் முஜாகிதீன், ஹிஸ்புல்லா, அல்-குவைதா, ஹமா அல் இஸ்லாமியா ஆகிய அமைப்புக்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

இந்த அமைப்புக்களை அழிக்கவும் அவற்றின் தலைவர்களைக் கொல்லவும் என மத்திய கிழக்கில் அமெரிக்கா தனது இராணுவப் பாதத்தை ஆழப் பதித்தது. இதன் ஆரம்பக் கட்டமாக அல்-குவைதாவையும் அதன் தலைவரான பின்லேடனையும் இலக்கு வைத்து 2001ஆம் ஆண்டு ஆப்கானிஸ்தான் மீது அமெரிக்கா படையெடுத்தது. எட்டு ஆண்டுகள் நீடித்த இந்தப் போரின் பின்னர் கடந்த வருடம் ஒஸாமா பின்லேடன் சுட்டுக்கொல்லப்பட்டார். இதனால் ஆப்கானிஸ்தானின் நிலைமை ஓரளவு கட்டுக்குள் வந்தது. இதன் காரணமாக 2014ஆம் ஆண்டு அமெரிக்கா ஆப்கானிஸ்தானை விட்டு வெளியேறப்போவதாக அறிவித்துள்ளது.

அதேபோன்று 2002ஆம் ஆண்டு ஈராக் மீது சதாம்ஹுசைனை இலக்காகக் கொண்டு அமெரிக்கா இரண்டாவது போரைத் தொடுத்தது. இரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்துவதாக சதாம் மீது குற்றம் சாட்டப்பட்டது. மேலும் மத்திய ஆசியாவில் காணப்படுகின்ற இஸ்லாமிய பயங்கரவாத அமைப்புக்களுக்கு சதாம் ஹுசைன் தொடர்ச்சியாக ஆதரவு வழங்கி வருவதாகவும் அமெரிக்காவின் மற்றுமொரு குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது.

ஐந்து வருடங்களின் பின்னர் 2008ஆம் ஆண்டு சதாம் அமெரிக்காவினால் தூக்கிலிடப்பட்டார். இறந்து சிறிது காலம் கழிந்து அமெரிக்கா ஈராக்கிலிருந்து முற்றாக வெளியேறியது.

எனவே கடந்த 10 வருடங்களாக உண்மையில் பயங்கரவாதத்திற்கு எதிரான அமெரிக்காவின் போர் எதனைச் சாதித்துள்ளது என அவதானிக்கையில் அமெரிக்காவும் ஜனாதிபதிகள் புஷ், ஒபாமா போன்றவர்களும் இஸ்லாமிய மதத்தை முதன்மைப்படுத்தும் பயங்கரவாதத்தினைத் தோற்கடிக்கவில்லை என்ற உண்மை புலனாகும். மாறாக அவை புதிய வடிவம் எடுத்துள்ளன.

அமெரிக்காவினால் பயங்காரவாத அமைப்புக்களாகப் பெயர் குறிப்பிடப்பட்டவை அமெரிக்காவிற்கு எதிராகத் தீவிரமாகச் செயற்பட ஆரம்பித்துள்ளன. அத்தோடு அமெரிக்காவுடன் சேர்ந்து பயங்கரவாதத்திற்கு எதிரான போருக்கு ஆதரவளித்த ஏனைய நாடுகளும் இஸ்லாமிய பயங்கரவாத அமைப்புக்களுக்கு எதிரிகளாக மாறியுள்ளன. அண்மைக் காலங்களில் இடம்பெறுகின்ற குண்டுவெடிப்புச் சம்பவங்களினூடாக இவை புலனாகின்றன. எனவே பயங்கரவாதத்திற்கு எதிரான போரானது அமெரிக்காவிற்கு எதிராக எதிரிகள் பலரைத் தோற்றுவித்துள்ளது.

தொகுத்து நோக்கும்போது பயங்கரவாதத்திற்கு எதிரான போர் ஆரம்பமாகி தசாப்தம் ஒன்று கழிந்து விட்டாலும் உலகில் இருந்து அமெரிக்காவினாலோ அல்லது ஏனைய நேசநாடுகளாலோ பயங்கரவாதத்தினை முற்றாக ஒழிக்க முடியவில்லை. அது உடனடியாகச் சாத்தியப்படக்கூடிய காரியமும் அல்ல.

அமெரிக்காவினால் சர்வதேச பயங்கரவாத அமைப்புக்களாகப் பட்டியலிடப்பட்டவை இஸ்லாமிய மத அடிப்படையிலான நோக்கமாகக் கொண்டவையாகவே காணப்படுகின்றன. எனவே பயங்கரவாதத்திற்கு எதிரான போர் என்பது ஒருவகையில் அமெரிக்க எதிர்ப்பு இஸ்லாமியர்களிடம் மேலும் வளர்ந்து கொழுந்துவிட்டு எரியக் காரணமாக அமைந்தது.

அமெரிக்காவின் முன்னாள் நிதியமைச்சரான ஹென்றி கீசிங்கரின் கூற்று இந்த இடத்தில் பொருத்தமானது. 3ஆம் உலக மகா யுத்தம் கிறிஸ்தவம் - இஸ்லாமிய மத அடிப்படையிலேயே ஆரம்பமாகும் என்றார் அவர். புஷ்சினுடைய 8 வருட ஆட்சிக்காலத்தில் பயங்கரவாதத்திற்கு எதிரான போர் மிகச் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டது. ஆனால் ஒபாமாவினுடைய நான்கு வருட ஆட்சிக்காலப் பகுதி நிறைவுபெறும் இச்சந்தர்ப்பத்தில் பார்த்தால் புஷ்ஷினுடைய வேகம் ஒபாமாவிடம் இல்லை என்று கூறிவிடமுடியும். ஆனால் ஒபாமா தன்னுடைய பாணியில் புதிய திட்டங்களான ஜனநாயக மயமாக்கல், மனித உரிமைப் பாதுகாப்பு என்றரீதியில் ஆரம்பித்து செயற்பட்டு வருகின்றார்.

மனித உரிமை விடயத்தில் ரஷ்யாவையும், சீனாவையும் சாடுகின்ற இவர், ஜனநாயகமயமாக்கல் விடயத்தில் எகிப்து, லிபியா, சிரியாவில் மறைமுகமாகக் கால் பதித்துள்ளார். எனவே பராக் ஒபாமா கூட பயங்கரவாதத்திற்கு எதிரான போர் என்ற ஒரு திட்டத்தினை ஒருபுறம் ஆமை வேகத்தில் முன்னெடுக்க மறுபுறம் தனது மேற்குறிப்பிட்ட திட்டங்களைத் தீவிரமாக முன்னெடுத்து வருகின்றார்.

எது எவ்வாறாயினும் பயங்கரவாதத்திற்கு எதிரான போர் என்ற அடிப்படையிலேயே ஒபாமாவின் புதிய இரண்டு திட்டங்களும் அமைகின்றன. எனவே 21ஆம் நூற்றாண்டின் முதற் தசாப்தமானது அமெரிக்காவிற்கும் அதில் பதவி வகிக்கும் ஜனாதிபதிகளுக்கும் உலகப் பயங்கரவாதத்தினை ஒழிக்கும் தசாப்தமாகும். அமெரிக்காவினால் பயங்கரவாதிகள் எனப் பெயரிடப்பட்ட சதாம் ஹுசைன், ஒஸாமா பின்லேடன், முகமது கடாபி போன்றோர் அழிக்கப்பட்டாலும் உலகில் பயங்கரவாதம் முற்றாக ஒழிக்கப்படவில்லை. அதற்கெதிரான போரும் இன்னும் முடியவில்லை. எனவே அமெரிக்கா இந்தத் தசாப்தத்தில் பயங்கரவாதிகள் பலரை ஒழித்துள்ளதே அன்றி பயங்கரவாதத்தை அல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org